# சங்கத் தமிழ்

# 5

குறிஞ்சிப் பாட்டு

பட்டினப் பாலை

சிறுபாணாற்றுப் படை

முனைவர் ச. அகத்தியலிங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சாங்கத் தமிழ்

# 5

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்
நுட்பப்பயிலக வளாகம், தரமணி, சென்னை-600113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Cankat Tamil - 5 |
| Author | : | Dr.S.Agathiyalingom (Late)<br>Former Director<br>Centre of Advanced Study in Linguistics<br>Annamalai University |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 659 |
| Language | : | Tamil |
| Edition | : | Second, First 1984 |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | 257 |
| No. of Copies | : | 1000 |
| Price | : | Rs.110/-<br>(Rupees One Hundred and Ten Only) |
| Printed by | : | Bharathi Printers<br>Triplicane, Chennai-5 |
| Subject | : | The Language of Sangam Literature |

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

தமிழில் தொடர் அமைப்புக் குறித்த சிந்தனை கொள்ளும்போது தமிழ் இலக்கண விதிகள் குறித்த பார்வை தேவைப்படுகிறது. குறிப்பாக, வினைச்சொற்கள் வினையாற்றும் விதங்கள் குறித்து இந்த நூலில் பேராசிரியர் அகத்தியலிங்கனார் விரிவுறப் பேசுகின்றார். மேலை நாட்டு அறிஞர்கள் பலரும் குறிப்பிட்டுள்ள முறைமை குறித்து விளக்கியதோடு வினையெச்சங்கள் செயல்படும் விதங்கள் குறித்து இந்நூலில் தொல்காப்பியர் வழிநின்றும் உரையாசிரியர்கள் வழிநின்றும் பல்வேறு எடுத்துக்காட்டுகளைத் தந்து விளக்கிச் செல்வது சிறப்பாக அமைகின்றது.

> **செய்து செய்யூச் செய்பு செய்தெனச்**
> **செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென**
> **அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி**
>
> (தொல். 73)

பழந்தமிழில் வினையெச்ச வாய்பாடு குறித்துக் குறிப்பிட்டுக் குறையெச்சம், குறையெச்ச விகுதிகள், காலஎச்ச விகுதிகள், நிபந்தனையெச்சம், கூட்டுக்காலவெச்சங்கள் எனுமாறு பல்வேறு எடுத்துக்காட்டுகளைத் தந்து இந்நூல் முழுதும் நூலாசிரியர் விளக்கியுள்ளார். நோக்கப்பொருள், தாக்கப்பொருள், காரணப்பொருள், வரிசைப்பொருள் எனுமாறு பல நிலைகளில் உரையாசிரியர்கள் வழிநின்று பேராசிரியர் அகத்தியலிங்கனார் எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குகிறார். காட்டாக, செய, செய்யிய, செய்யியர், செய்மார் ஆகிய குறையெச்சங்கள் குறித்து விளக்கும்போது மூன்று காலங்களிலும் அவை செயல்படும் விதங்கள் குறித்துப் பின்வருமாறு விளக்குகிறார்.

**மழை பெய்யக் குளம் நிறைந்தது**

**இராதை ஆட, கண்ணன் பாடினான்**

**இராமன் பாட வந்தான்**

ஆகியவற்றில் காணப்படும் செயவென் வாய்பாட்டு எச்சம் மூன்று காலங்களையும் காட்டி நிற்றல் வெளிப்படை. பெய்யும் தொழில்

நிறையும் தொழிலுக்கு முன்னர் வருவதும், ஆடும் தொழிலும் பாடும் தொழிலும் ஒரே நேரத்தில் நிகழ்வதும் பாடும் தொழில் வரும் தொழிலுக்குப் பின்னர் வருவதும் இங்கு உணரற்பாலன எனும்படி அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளத் தக்கவகையில் நூல் முழுவதும் ஆசிரியரால் விளக்கிச்செல்லப்படுகிறது. மொழியியல் நோக்கில் எழுதப்பட்டுள்ள இந்த நூல் இலக்கண அறிவு தேடும் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைகிறது. நோக்கப்பொருள் குறித்து விளக்கும் இதன் நூலாசிரியர் இன்றைய தமிழில் நோக்கப்பொருளில் செயவென் வாய்பாட்டு எச்சங்கள் வருவதோடு குகர வேற்றுமையை இணைத்து அத்துடன் ஆக என்பதையும் சேர்த்து நோக்கப்பொருள் காட்டுதல் காணலாகும்.

**ஆடுவதற்காக வந்தேன்**

**பாடுவதற்காக வந்தேன்**

போன்றவை இதற்கு உதாரணங்களாகும். இத்தகைய நிலை பண்டைத் தமிழிலும் ஓர் இடத்தில் காணப்படுவது குறிப்பிடுவதற்குரியதாகும்.

சிலப்பதிகாரத்தில் வரும்

**கஞ்சன் வஞ்சம் கடத்தற் காக**
**அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்**

**(சிலம்பு 6-46)**

என்பதில் "கடத்தற்காக" என வருதல் காண்க. எனுமாறு பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும் சான்றுகாட்டி விளங்க வைத்து வாசிப்போரைத் தன்னுடன் புரிதலோடு கூட்டிச் செல்கின்றார்.

பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் எனும் தலைப்பில் பழந்தமிழில் -அ, இய, -இயர், -மார், -வான், -பான் ஆகிய விகுதிகள் குறையெச்ச விகுதிகளாகக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் உடன்பாட்டிலேயே வருதல் காணத்தக்கது என ஐங்குறுநூறு, நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டி விளக்குகின்றார். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் போன்றோர் எவ்விதம் வாய்பாட்டு எச்சம் குறித்து விளக்குகின்றனர் என அறியமுடிகிறது. அவர்கள் எடுத்துக்காட்டும் விதங்கள் பின்வருமாறு அமைகின்றன.

**மழைபெய்யப் பயிர் எழுந்தது - இளம்பூரணர்**

**மழைபெய்யக் குளம் நிறைந்தது - சேனாவரையர்**

மழைபெய்யக் குளம் நிறைந்தது - நச்சினார்க்கினியர்

மழைபெய்யப் புகழ்பெறும் - தெய்வச்சிலையார்

மழைபெய எழுந்தது - கல்லாடனார்

எனுமாறு இலக்கண விளக்கம் தந்து நூலாசிரியர் எளிமையாகக் கருத்தாழம் மிக்க சான்றுகள் காட்டி விளக்கும் இந்த நூல் இலக்கணக்காரர்களுக்கும் மொழியியலாளர்களுக்கும் பல்வேறு கோணங்களில் துணை செய்யும். சங்கத் தமிழ் வரிசை நூல்களை வெளியிடும் எம் நிறுவனம் இத்தகைய அரிய நூல்களை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாரதி அச்சகத்தார்க்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

# முன்னுரை

சங்கத்தமிழ் என்ற வரிசை நூல்களில் இது ஐந்தாவது நூல். முதல் நூல் பழந்தமிழ் நூல்களில் சொல்லப்படும் செய்திகள், குகைத்தமிழ், தொல்காப்பியம், முன்பழந்தமிழ் நூல்கள், பின்பழந்தமிழ் நூல்கள் ஆகியவற்றையும் அவற்றுள் குறிப்பாகப் பழந்தமிழ் நூல்கள் தொகுக்கப்பட்ட கால வரிசை முறை, அவற்றிற்குரிய காரணங்கள் போன்ற இன்னோரன்ன செய்திகளை விளக்கிநிற்கும். இரண்டாவது நூல் பழந்தமிழில் காணப்படும் பலவேறு இலக்கணக்கூறுகளில் வினைமுற்றுக் களில் காணப்படும் தன்மை, முன்னிலை விகுதிகளைப் பற்றிப் பரக்க ஆராய்ந்து நிற்பது.

பொதுவாக, விகுதிகளைப் பற்றி ஆராயும்போது அவற்றின் எண்ணிக்கை, அவை வரும் இடங்கள், தொல்காப்பியத்தில் அவை பற்றிக் கூறப்படும் செய்திகள், உரையாசிரியர்களின் கருத்துக்கள், அவைகளை ஒட்டிப் பின்னர் எழுந்த இலக்கணங் கள் கூறும் செய்திகள், மொழியியல் கருத்துக்கள் போன்ற பல செய்திகள் விளக்கப்படுகின்றன.

இதைப் போன்றே மூன்றாவது நூல் பழந்தமிழ் நூல்களில் காணப்படும் படர்க்கை விகுதிகளைப் பற்றி ஆராய்வது. தமிழ்மொழியில் காணப்படுகின்ற இடம், திணை, பால் பகுப்புக்களின் அடிப்படை, அதுபற்றிக் கூறும் இலக்கண, மொழியியல் ஆசிரியர்களின் கருத்துக்கள், பழந்தமிழ் இலக்கியங் களில் காணப்படும் உயர்வு ஒருமை, ஆண், பெண், பலர்பால் விகுதிகள், அஃறிணை ஒருமை, பன்மை விகுதிகள் போன்றவை மொழியியல் கண்ணோட்டத்தோடு ஆராயப்படுகின்றன.

நான்காவது நூல் வினையெச்சம் பற்றி ஆராய்வது. பொதுவாக, தொல்காப்பியம் பலவேறு எச்சங்களை வினையெச்சம் என்ற ஒரு தலைப்பின் கீழ் அடக்கினும் இதனைக் காலவெச்சம், குறையெச்சம், நிபந்தனை எச்சம் எனப்பிரிக்கலாம். வினையெச்சங்களில் காலவெச்சமே நான்காவது நூலின் கருவாக அமைந்து உள்ளது. அதிலும் குறிப்பாக செய்து, செய்யூ, செய்பு, செய்யா, செய்யாமை, செய்யாமல் ஆகிய வாய்பாட்டுக் காலவெச்சங்களே விரிவாக விளக்கப்படுகின்றன.

'சங்கத் தமிழ்' என்ற வரிசை நூல்களில் இது ஐந்தாவது நூல். வினையெச்சங்கள் செயவென் வாய்பாட்டு எச்சத்தைப் பற்றியும் செயின் வாய்பாட்டு எச்சத்தைப் பற்றியும் பரக்க ஆராய்வது இது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் இவ்வெச்சங்கள் பற்றியும் அவை காட்டும் பொருள்கள் பற்றியும் சொல்லியல் அடிப்படையிலும் பொருளியல் அடிப்படையிலும் ஆராய்ந்து நிற்கும்.

இந்நூல் ஐந்து இயல்களைக் கொண்டது. முதல் இயல் குறையெச்சம் பற்றியும் பொதுவாக அதன் பண்புகள் பற்றியும் அது கொண்டு வரும் எழுவாய், பொருள் பற்றியும் கூறுவது. இரண்டாவது இயல் பழந்தமிழில் காணப்படும் குறையெச்ச விகுதிகள் பற்றிப் பேசுகின்றது. மூன்றாவது இயல் நிபந்தனையெச்சம் பற்றி ஆராய்கிறது. நான்காவது இயல் நிபந்தனை நடப்பு பற்றியது. ஐந்தாவது இயல் கூட்டுக் காலவெச்சங்கள் பற்றியது. இவ்வயனைத்தும் பரக்க இவ்வியல்களின் கண் ஆராயப்படுகின்றன.

முன் வரிசை நூல்களில் குறிப்பிட்டது போன்று பழந்தமிழ் இலக்கியங்களுக்கு ஒருசேர நல்லதொரு இலக்கணம் இல்லையே என்ற ஏக்கத்தில் எழுந்தனவே இவ்வரிசை நூல்கள். மேலும் தமிழ்மொழி வரலாறு எழுதுவதற்கும் இந்நூல்கள் துணை புரியும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் மொழியின் அமைப்பினை அறுதியிட்டுக் கூறுவதற்கும் இந் நூல்கள் துணைபுரியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இத்தகைய வரிசை நூல்கள் உருவாக்குதல் ஒரு தனி மனிதனால் முடியாத ஒன்றாகும். எத்தனையோ அறிஞர்கள் ஆக்கித் தந்த டாக்டர் பட்ட ஆய்வேடுகள், அவற்றோடு இணைந்த சொல்லடைவுகள், பல அறிஞர்களின் கட்டுரைகள், விளக்கங்கள் இவையெல்லாம் இருந்த நிலையில் தான் இத்தகைய வரிசை நூல்கள் உருவாகின்றன. இவர்களுக் கெல்லாம் என் நன்றியைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன்.

இதைப்போன்றே இந்நூல் உருவாவதற்கு இரவு பகலாக உழைத்தவர்கள் பலர். எனினும் சிலர் குறிப்பிடத்தக்கவர். டாக்டர் செ. வை. சண்முகம், டாக்டர் B. குமாரசாமி ராஜா, டாக்டர் திருமதி எம். சுசிலா சேகரன் போன்றவர்களின் உழைப்பும் உறுதுணையும் குறிப்பிடத்தக்கவை. இவர்களுக்கு என் நன்றியும் கடப்பாடும் என்றும் உரியன.

இவர்களைப் போன்றே என் ஆய்வு மாணவர்கள் பலரும் அயராது உழைத்தனர். அவர்களுள் ஆ. கோ. நடராசன். அ. பூலோகரம்பை ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள், இந் நூலினை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீவேலன் அச்சகத்தினருக் கும் என் நன்றி.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்க்கும் தனிப் பெரும் கழகம். இக்கல்விக் கோயிலில் பயிலவும் மட்டுமின்றிப் பணிபுரியும் மாபெரும் பேற்றினையும் பெற்றவன் தான். என் சிந்தனைக்கும் செயலுக்கும் வாழ்வும் வளமும் அளித்து வேராகவும் விதையாகவும் மட்டுமின்றிக் காயாகவும் கனி ஆகவும் நிற்கும் கன்னித்தமிழ்க்கோயில் இது. இக்கோயிலில் நாளும் வலம்வரும் நான் இதற்கு என்றும் கடமைப்பட்டவன். இத்தகைய கழகத்திற்கு, கலங்கரை விளக்கத்திற்கு, என் நன்றியைக் காணிக்கையாக்கி நிற்பதில் பெருமை அடைகிறேன்

இதுபோன்றே தமிழ்ப்பல்கலைக்கழகமும் என்னை வாழ வைக்கும் தெய்வம். அதனை வணங்கி மகிழ்வதில்தான் எத்தனை மகிழ்ச்சி; எத்தனை பெருமை

புத்தம் புதிய கலைகளுக்கும் ஆய்வு எண்ணங்களுக்கும் ஆராய்ச்சி உணர்வுகளுக்கும் தமிழகத்தில் என்றுமே வரவேற்பும் வாழ்வும் உண்டு என்பதற்கு என் அனுபவமே சான்றாக நிற்கும். என்னால் எழுதப்பட்ட அத்தனை நூல்களுக்கும் தமிழகம் தந்த ஆசியும் ஆதரவும் மறக்கமுடியாதன. இந்நிலையில் இவ்வரிசை நூல்களுக்கும் உங்கள் அன்பும் ஆசியும் என்றும் உண்டு என்ற நம்பிக்கையில் இவற்றை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமையோடு பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

**ச. அகத்தியலிங்கம்**

# உள்ளுறை


**முன்னுரை**

**சொற் சுருக்க அடைவு**

**உள்ளுறை**

| | | |
|---|---|---|
| **1.** | **குறையெச்சம்** | **1—30** |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | எச்சங்கள் | 1 |
| 1.2.1 | குறையெச்சம் | 2 |
| 1.2.2 | விளக்கம் | 2 |
| 1.2 3 | வெவ்வேறு பெயர்கள் | 3 |
| 1.2.4 | கால இடைநிலைகள் | 4 |
| 1.2.5 | உரையாசிரியர்கள் | 5 |
| 1.2.6 | மாரீற்றெச்சங்கள் | 6 |
| 1.2.7 | தொல்காப்பியமும் குறையெச்சமும் | 6 |
| 1.2.8 | செயற்கு என்பது குறையெச்சமா? | 7 |
| 1.2.9 | குறையெச்ச அமைப்பு | 10 |
| 1.2.10 | குறையெச்சம் காட்டும் பொருள்கள் | 10 |
| 1.2.10.1 | நோக்கப் பொருள் | 11 |
| 1.2.10.2 | உடனிகழ்ச்சிப் பொருள் | 13 |
| 1.2.10.3 | தாக்கப் பொருள் | 14 |
| 1.2.10.4 | காரணப் பொருள் | 16 |
| 1 2.10.5 | வினையடைப் பொருள் | 18 |
| 1.2.10.6 | வரிசைப் பொருள் | 19 |
| 1.2.10.7 | தலைமை வினை | 20 |
| 1.2 11 | குறையெச்சமும் எழுவாயும் | 23 |
| 1.2.11.1 | பொருளும் எழுவாயும் | 25 |

# சொற் சுருக்க அடைவு

| | |
|---|---|
| அகம் | அகநானூறு |
| இ. எ. | இரண்டு எழுவாய்கள் |
| இளம் | இளம்பூரணர் |
| எழுத்து | எழுத்ததிகாரம் |
| ஐங் | ஐங்குறுநூறு |
| ஒ. எ. | ஒரு எழுவாய் |
| கல் | கல்லாடனார் |
| கலி | கலித்தொகை |
| குறள் | திருக்குறள் |
| குறு | குறுந்தொகை |
| சிலம்பு | சிலப்பதிகாரம் |
| சூத் | சூத்திரம் |
| சேனா | சேனாவரையர் |
| சொல் | சொல்லதிகாரம் |
| தெய்வ | தெய்வச்சிலையார் |
| நச் | நச்சினார்க்கினியர் |
| நற் | நற்றிணை |
| பத்து | பத்துப்பாட்டு |
| பதி | பதிற்றுப்பத்து |
| பரி | பரிபாடல் |
| புறம் | புறநானூறு |
| மணி | மணிமேகலை |
| முல்லை | முல்லைப்பாட்டு |
| வினை | வினையியல் |

| | | |
|---|---|---|
| 1.2,12 | குறையெச்சமும் காலமும் | 27 |
| 1.2.12.1 | பொருளும் காலமும் | 28 |
| **2.1** | **பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் 1,—அ—** | **31—105** |
| 2.1.1 | பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் | 31 |
| 2.1.1.1 | தொல்காப்பியமும் உரையாசிரியர்களும் | 31 |
| 2.1.2 | தொல்காப்பியப்பிற்சி | 32 |
| 2.1.3 | பெரும்பான்மை விகுதி | 33 |
| 2.1.4.1 | உரையாசிரியர்கள் | 35 |
| 2 1.4.1.1 | உரையாசிரியர்களும் காலமும் | 36 |
| 2.1.4.1.2 | சூழல் | 37 |
| 2.1.4 2.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 37 |
| 2.1.4.2.1.1 | மெல்வினைகளுக்குப் பின்னர் | 39 |
| 2.1.4.2.1.2 | வல்வினைகளுக்குப் பின்னர் | 39 |
| 2.1.4.2.2 | பிற வினைகளுக்குப் பின்னர் | 40 |
| 2.1.4.2.3 | காரண வினைகளுக்குப் பின்னர் | 40 |
| 2.1.4.3. | பொருள் | 40 |
| 2.1.4.3.1 | தாக்கப் பொருள் | 41 |
| 2.1.4.3.2 | உடனிகழ்ச்சிப் பொருள் | 44 |
| 2.1.4.3.3 | நோக்கப் பொருள் | 48 |
| 2.1.4.3.4 | காரணப் பொருள் | 52 |
| 2.1.4.3 5 | வினையடைப் பொருள் | 56 |
| 2.1.4.3.6 | வரிசைப் பொருள் | 59 |
| 2.1.4.3.7 | தலைமை வினை | 63 |
| 2.1.4.3.7.1 | படு | 63 |
| 2.1.4.3.7.2 | செய் | 71 |
| 2.1.4.3.7.3 | பண்ணு | 72 |
| 2.1.4.3.7.4 | வை | 73 |
| 2.1.4.3.7.5 | ஆக்கு | 74 |
| 2.1.4 3.7.6 | கூடு | 74 |
| 2.1.4.3.7.7 | மாட்டு | 75 |
| 2.1.4.3.7.8 | வேண்டு | 75 |
| 2.1.4.3.8 | தொழிற் பெயர் | 77 |

2.1.4.3.9 நோக்க வேற்றுமைச் சொல் 79
2.1.4.4.4 எழுவாய் 79
2.1.4.4.1 தாக்கப் பொருள் 79
2.1.4.4.1.1 இருவேறு எழுவாய்கள் 80
2.1.4.4.2 உடனிகழ்ச்சிப் பொருள் 83
2.1.4.4.2.1 இரு வேறு எழுவாய்கள் 83
2.1.4.4.3 நோக்கப் பொருள் 87
2.1.4.4.3.1 ஒரே எழுவாய் 87
2.1.4.4.3.2 இரு எழுவாய்கள் 91
2.1.4.4.4 காரணப் பொருள் 94
2.1.4.4.4.1 ஒரே எழுவாய் 94
2.1.4.4.4.2 இரு எழுவாய்கள் 95
2.1.4.4.5 வரிசைப் பொருள் 99
2.1.4.5 காலம் 102
2.1.4.5.1 இறந்த காலம் 103
2.1.4.5.2 நிகழ் காலம் 103
2.1.4.5 3 எதிர் காலம் 104

## 2.2 பழந்தமிழில் காலவெச்ச விகுதிகள் —2, —இய - 106—130

2.2.1 இய 106
2.2.1.1 உரையாசிரியர்கள் 107
2.2.1.2 சூழல்கள் 108
2.2.1.2.1 வினை அடிகளுக்குப் பின்னர் 108
2.2.1.2.1.1 மெல் வினைகளுக்குப் பின்னர் 108
2.2.1.2.1.2 வல்வினைகளுக்குப் பின்னர் 109
2.2.1.2.1.2 ககர ஒற்றுக்குப் பின்னர் 109
2.2.1.2.2 பிறவினை அடிகளுக்குப் பின்னர் 109
2.2.1.3 காரண வினைகளுக்குப் பின்னர் 109
2.2.1.3 பொருள் 109
2.2.1.3.1 நோக்கப் பொருள் 109
2.2.1.3.2 தாக்கப் பொருள் 112
2.2.1.3.3 காரணப் பொருள் 114
2.2.1.4 எழுவாய் 116

| | | |
|---|---|---|
| 2.2.1.4.1 | நோக்கப் பொருள் | 117 |
| 2.2.1.4.1.1 | ஒரே எழுவாய் | 117 |
| 2.2.1.4.1.2 | இரு எழுவாய்கள் | 120 |
| 2.2.1.4.2 | தாக்கப் பொருள் | 122 |
| 2.2.1.4.2.1 | இரு எழுவாய்கள் | 122 |
| 2.2.1.4.3 | காரணப் பொருள் | 125 |
| 2.2.1.4.3.1 | ஒரே எழுவாய் | 125 |
| 2.2.1.4.3.2 | இரு எழுவாய்கள் | 125 |
| 2.2.1.4.4 | பொருளும் எழுவாயும் | 126 |
| 2.2 1.5 | காலம் | 127 |
| 2.2.1.5.2 | எதிர்காலம் | 129 |

**2.3 பழந்தமிழில் காலவெச்ச விகுதிகள் 3 —இயர் - 131—147**

| | | |
|---|---|---|
| 2.3.1 | —இயர் | 131 |
| 2.3.1.1 | உரையாசிரியர்கள் | 132 |
| 2.3.1.2 | சூழல் | 134 |
| 2.3.1.2.1 | வினை அடிகளுக்குப் பின்னர் | 134 |
| 2.3.1.2.2 | பிறவினை ஒட்டுகளுக்குப் பின்னர் | 134 |
| 2.3.1.3 | பொருள் | 134 |
| 2.3.1.3.1 | நோக்கப் பொருள் | 135 |
| 2.3.1.3.2 | வரிசைப் பொருள் | 137 |
| 2.3.1.3.3 | தலைமை வினை | 139 |
| 2.3.1.3.4 | தொழிற் பெயர் | 140 |
| 2.3.1.4 | எழுவாய் | 140 |
| 2.3.1.4.1 | நோக்கப் பொருள் | 141 |
| 2.3.1.4.1.1 | ஒரே எழுவாய் | 141 |
| 2.3.1.4.1.2 | இரு எழுவாய்கள் | 143 |
| 2.3.1.4.2 | வரிசைப் பொருள் | 144 |
| 2.3.1.4.2.1 | ஒரே எழுவாய் | 145 |
| 2.3.1.4.2.2 | இரு எழுவாய்கள் | 145 |
| 2.3.1.5 | காலம் | 146 |
| 1.3.1.5.1 | இறந்த காலம் | 146 |
| 2.3.1.5.2 | எதிர் காலம் | 147 |

**2.4. பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் —4 —மார் 148—160**

| | | |
|---|---|---|
| 2.4.1 | —மார் | 148 |
| 2.4.1.1 | உரையாசிரியர்கள் | 149 |
| 2.4.1.2 | சூழல் | 149 |
| 2.4.1.2.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 149 |
| 2.4.1.2.2 | பிறவினை உருபுகளுக்குப் பின்னர் | 150 |
| 2.4.1.3 | பொருள் | 150 |
| 2.4.1.3.1 | நோக்கப் பொருள் | 150 |
| 2.4.1.4 | எழுவாய் | 153 |
| 2.4.1.4.1 | ஒரே எழுவாய் | 154 |
| 2.4.1.4.2 | இரு எழுவாய்கள் | 156 |
| 2.4.1.5 | காலம் | 159 |

**2.5 பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் —5 —வான் 161—166**

| | | |
|---|---|---|
| 2.5.1 | — வான் | 161 |
| 2.5.1.1 | உரையாசிரியர்கள் | 161 |
| 2.5.1 | சூழல் | 162 |
| 2.5.1.2.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 162 |
| 2.5.1.2.2 | பிறவினைகளுக்குப் பின்னர் | 162 |
| 2.5.1.3 | பொருள் | 163 |
| 2.5.1.3.1 | நோக்கப் பொருள் | 163 |
| 2.5.1.3.2 | தாக்கப் பொருள் | 164 |
| 2.5.1.4 | எழுவாய் | 165 |
| 2.5.1.4.1 | தாக்கப் பொருள் | 165 |
| 2.5.1.4.1.1 | இரு எழுவாய்கள் | 165 |
| 2.5.1.4.2 | நோக்கப் பொருள் | 166 |
| 2.5.1.4.2.1 | ஒரே எழுவாய் | 166 |
| 2.5.1.4.2.2 | இரு எழுவாய்கள் | 166 |
| 2.5.2.5 | காலம் | 166 |

**2.6 பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் —6 —பான் 167—169**

| | | |
|---|---|---|
| 2.6.1 | — பான் | 167 |
| 2.6.1.1 | உரையாசிரியர்கள் | 167 |

| | | |
|---|---|---|
| 2.6.1.2 | சூழல் | 168 |
| 2.6.1.2.1 | வினை அடிக்குப் பின்னர் | 168 |
| 2 6.1.3 | பொருள் | 168 |
| 2.6.1.4 | எழுவாய் | 169 |
| 2.6.1.4.1 | நோக்கப் பொருள் | 169 |
| 2.6.1.4.1.1 | ஒரே எழுவாய் | 169 |
| 2.6.1.5 | காலம் | 169 |
| 2.6.1.5;1 | எதிர்காலம் | 169 |
| **3.** | **நிபந்தனை எச்சம்** | **170—183** |
| 3.1 | பழந்தமிழில் நிபந்தனை எச்சங்கள் | 170 |
| 3.2 | தொல்காப்பியமும் நிபந்தனை எச்ச விகுதிகளும் | 171 |
| 3.3 | தொல்காப்பியப் பயிற்சி | 173 |
| 3.4 | பெரும்பான்மை விகுதி | 173 |
| 3.5 | நிபந்தனை உருபுகள் | 174 |
| 3.5.1 | —இன் | 174 |
| 3.5.1.1 | உரையாசிரியர்கள் | 174 |
| 3.5.1.2 | சூழல்கள் | 175 |
| 3.5.1.2.1 | வினையடிகளுக்குப் பின்னர் | 175 |
| 3.5.1.2.2 | ஒற்றுகளுக்குப் பின்னர் | 175 |
| 3.5.2 | —இல் | 176 |
| 3.5.2.1 | உரையாசிரியர்கள் | 177 |
| 3.5.2.2 | சூழல் | 177 |
| 3.5.2.2 | வினை அடிகளுக்குப் பின்னர் | 177 |
| 3.5.2.2.2 | —ப்(ப்)— ஒற்றுக்களுக்குப் பின்னர் | 178 |
| 3.5.3.1 | உரையாசிரியர்கள் | 178 |
| 3.5.3.2 | சூழல் | 179 |
| 3.5.3.2.1 | இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் | 179 |
| 3.5.4 | —ஏல் | 179 |
| 3.5.4.1 | உரையாசிரியர்கள் | 180 |
| 3.5.4.2 | சூழல் | 180 |
| 3.5.4.2.1 | வினை முற்றுக்களுக்குப் பின்னர் | 180 |
| 3.6 | எதிர்மறை நிபந்தனை | 180 |

| | | |
|---|---|---|
| 3.6.1 | பழந்தமிழில் எதிர்மறை நிபந்தனை | 181 |
| 3.6.1.1 | எதிர்மறை முற்று நிபந்தனை உருபுகள் | 181 |
| 3.6.1.2 | எதிர்மறை வினையெச்சம் + துணை வினை விடு + நிபந்தனை எச்சம் | 182 |

4. நிபந்தனை (Concessive) — 184-187

| | | |
|---|---|---|
| 4.1 | பழந்தமிழில் (Concessive) | 184 |
| 4.2 | தொல்காப்பியப் பயிற்சி | 185 |
| 4.3 | உரையாசிரியர்கள் | 186 |
| 4.4 | சூழல் | 186 |
| 4.4.1 | நிபந்தனைகாட்டும் - இன் எச்சத்திற்குப் பின்னர் | 186 |
| 4.5 | எதிர்மறை | |

5. கூட்டுக் காலவெச்சங்கள் 188-213

| | | |
|---|---|---|
| 5.1 | தொல்காப்பியமும் கூட்டுக்கால வெச்சங்களும் | 188 |
| 5.2 | செய்தென வெச்சம் | 189 |
| 5.2.1 | தொல்காப்பியப் பயிற்சி | 190 |
| 5.2.2 | உரையாசிரியர்கள் | 191 |
| 5.2.3. | பழந்தமிழில் செய்தென எச்சம் | 195 |
| 5.2.4 | பொருள் | 195 |
| 5.2.5 | எழுவாய் | 198 |
| 5.2.6 | காலம் | 202 |
| 5.2.6.1 | இறந்த காலம் | 203 |
| 5.3 | பெயரெச்ச அடிப்படையில் கால வெச்சங்கள் | 204 |
| 5.3.1 | பின் | 205 |
| 5.3.2 | பின்றை | 208 |
| 5.3.3 | பின்னர் | 208 |
| 5.3.1 | பிற்பாடு | 208 |
| 5.3.5 | முன் | 209 |
| 5.3.5.1 | உரையாசிரியர்கள் | 209 |
| 5.3.5.2 | சூழல் | 210 |

5.3.5.2.1. உடன்பாட்டுப் பெயரெச்சத்திற்குப் பின்னர் 210

5.3.5.2.2. எதிர்மறைப் பெயரெச்சத்திற்குப் பின்னர் (உடன்பாட்டுப் பொருளில்) 210

5.3.6 கால் 210

5.3.6.1 காலப் பொருள் 211

5.3.7 கடை 212

5.3.8 இடத்து 212

5.3.9 வழி 212

5.3.10 கண் 213

கூட்டுக் காலவெச்சங்கள் 214

பட்டியல் —1. பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் 215

பட்டியல் —2. சூழல் 216

பட்டியல் —3. அ (பொருள்) 217

பட்டியல் —4. —இய (சூழல்) 218

பட்டியல் —5. —இய (பொருள்) 219

பட்டியல் —6. —இயர் (சூழல்) 220

பட்டியல் —7. —இயர் (பொருள்) 221

பட்டியல் —8. —மார் (சூழல்) 222

பட்டியல் —9. —வான் (சூழல்) 222

பட்டியல் —10. —பான் (பொருள்) 223

பட்டியல் —11. —மார் (சூழல்) 223

பட்டியல் —12. —வான் (பொருள்) 224

பட்டியல் —13. —பான் (பொருள்) 224

பயன்படுத்திய இலக்கிய இலக்கண நூல்கள் 225

உதவிய நூல்களும் கட்டுரைகளும் 228

சொல்லடைவு 234

# 1

# குறையெச்சம்

## 1.1 முன்னுரை

தமிழ் வாக்கிய அமைப்பில் வினைச்சொற்கள் மிக முக்கிய மான இடத்தைப் பெறும் என்பதும், இவ்வினைச் சொற்களும் முற்றுவினை, எச்சவினை, தொழிற்பெயர் போன்று பல நிலைகளில் வாக்கியங்களில் வரும் என்பதும் முன்னரே (சங்கத்தமிழ், பகுதி 4) எடுத்துக் கூறப்பட்டது.

## 1.2 எச்சங்கள்

எச்சம் என்ற சொல் பொதுவாக வினையெச்சம் என்ற பொருளைத் தந்து நிற்பது. இதனைப் பண்டைய இலக்கண நூலோர் வினையெஞ்சுகிளவி எனக் குறிப்பிடுவர். தொல் காப்பியம் இவ்வினையெச்சங்கள் பற்றிப் பலவேறு நூற் பாக்களில் (707, 710, 713, 718, 722, 724) குறிப்பிடுவதும், இவற்றுள்,

> "செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென்
> அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி"
>
> சூத். 713

என்ற நூற்பா வினையெச்ச வாய்பாடுகள் பற்றிக் கூறுவது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன.

### 1.2.1 குறையெச்சம்

மேலே குறிப்பிட்ட நூற்பா பலவேறு வினையெச்சங்களைப் பற்றிக் குறிப்பிடுதலைக் காணலாம். முன்னர்க் குறிப்பிட்டபடி (சங்கத்தமிழ் 4) இவ்வினையெச்சங்களைக் காலவெச்சம் (verbal participle), குறையெச்சம் (infinitive), நிபந்தனை எச்சம் (conditional) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

தொல்காப்பியர் வினை கொண்டு முடிகின்ற பண்பினாலும், பிற ஒருசில் பண்புகளினாலும் இவற்றையெல்லாம் தொகுத்து வாய்பாடுகளாகக் குறிப்பிட்டுச் செல்லுகின்றாரே யன்றிப் பொருள் அடிப்படையிலோ அல்லது பிற அடிப்படைகளிலோ பாகுபாடு செய்யவில்லை. மரபிலக்கண அறிஞர்களும் மிகத் தெளிவாக இவற்றைப் பகுத்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு வாய்பாட்டு வினையெச்சமும் தம்முள் மாறுபட்டு நிற்கின்றன எனக் கூறித் தொல்காப்பியர் வினையெச்சங்க்ளை வெவ்வேறு வாய்பாடுகளாகக் கூறியதற்குக் காரணம் கற்பிக்க முயல்கின்றனரே அன்றிச் செய்து, செய்யூ, செய்பு போன்றவை ஒரு பிரிவின என்றும், செய, செய்யிய, செய்யியர் ஆகிய வாய்பாட்டு எச்சங்கள் மற்றொரு பிரிவின என்றும், செய, செய்யிய, செய்யியர் ஆகிய வாய்பாட்டு எச்சங்கள் மற்றொரு பிரிவின என்றும் பிரித்துக் காணவில்லை எனலாம். ஆனால் பின்னர் வந்த சாஸ்திரி போன்ற இலக்கண அறிஞர்கள் இவற்றைப் பகுத்தும் வகுத்தும் நிற்கக் காணலாம்.

செய, செய்யிய, செய்யியர், செய்மார் (இதனையும் ஒரு வாய்பாடாகக் கொள்ள வேண்டும்) ஆகிய வாய்பாட்டு எச்சங்கள் அமைப்பிலும் அவை காட்டும் பொருளிலும் ஒன்றாக இருக்கும் நிலையில் இவற்றை இணைத்து இவை ஒரு பிரிவினைச் சார்ந்தன எனக் கருதலாம். இவற்றைக் குறையெச்சம் எனக் குறிப்பிடுகிறோம்.

### 1.2.2 விளக்கம்

செய்து, செய்யூ, செய்பு போன்றவை காலம் காட்டும் இடைநிலையைக் கொண்டு இருப்பவை. ஆனால் செய,

செய்யிய, செய்யியர், செய்மார் ஆகியவற்றில் கால இடைநிலைகள் இல்லாமல் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதனால்தான் முன்னர் உள்ளவை காலவெச்சம் என்று குறிப்பிடப்பட்டன. மேலும் அவற்றின் அமைப்பிலும் வேறுபாட்டினைக் காணமுடியும்.

இத்தகைய கால இடைநிலைகளை அல்லது எதிர்மறை காட்டும்(செய்யாது போன்றவை)இடைநிலைகளைக் கொண்ட வினையெச்சங்களையே கால்டுவெல் (1857) போன்றவர்கள் 'Verbal Participle' எனப் பிரித்துக் கூறுவர்.

ஆனால் செய, செய்யிய, செய்யியர் போன்றவை எல்வகையான கால இடைநிலைகளையும் கொண்டிருக்கவில்லை எனவே இதன் அமைப்பை

வினை அடி + விகுதி (செய் + அ)

எனக் குறிப்பிடலாம். காலவெச்சத்திற்கும், குறையெச்சத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு காலவெச்சத்தில் காலம் காட்டும் இடைநிலை இருப்பதும், குறையெச்சத்தில் கால இடைநிலை இல்லாதது மட்டுமன்றிக் காட்டும் பொருளிலும் (மாறுபாடு இருப்பதும்) காணலாம். கால இடைநிலைகள் இல்லாமல் குறைந்து காணப்படுகின்ற நிலையில்தான் இவற்றைக் குறையெச்சங்கள் என்கிறோம்.

### 1.2.3 வெவ்வேறு பெயர்கள்

இவ்வெச்சங்களை ஆராய்ந்த மேனாட்டு அறிஞர்கள் பலவேறு பெயர்களால் இவற்றை அழைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. பெஸ்கி (1822) இதனை 'Infinitive' என அழைப்பர். இவரைப் பின்பற்றி போப் (1759) ஆர்டன் (1891), கால்டுவெல் (1856) போன்றவர்கள் இதனை '*infinitive'

*"This infinitive refers to present time or to indefinite time Lazarus calls 'The indefinite participle' because it signifies much more than present time' — என் ஆர்டன் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது (Arden, 1891)

என்றே குறிப்பிடுவர். சாஸ்திரி இதனை 'Gerunds' 1934:189) எனக் குறிப்பிடுவார். இன்னும் சிலரோ இவற்றைப் பிரித்துக் காட்டாமல் 'Verbal Participle' என ஒரு தலைப்பின் கீழேயே அடக்கி நிற்பர் (S.V. Subramaniam 1972).

### 1.2.4. கால இடைநிலைகள்

முன்னர்க் குறிப்பிட்டபடி காலவெச்சங்கள் எனக் குறிக்கப் பட்டவை தம்முள் கால இடைநிலைகளைக் கொண்டிருக்க, குறையெச்சங்கள் எனக் கருதப்படும் செய, செய்யிய, செய்யியர், செய்மார் ஆகிய வாய்பாட்டு வினையெச்சங்கள் எந்தவிதமான கால இடைநிலைகளையும் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் இவை செய்து, செய்ய, செய்யா, ஆகிய வாய்பாட்டு வினை யெச்சங்களிலிருந்து மாறுபட்டுள்ளன. செய்ய, செய்யா ஆகிய வற்றில் கால இடைநிலைகள் வெளிப்படையாக இல்லாவிடினும் கால இடைநிலை அவற்றில் இருப்பதாகக் கருதலாம். ஆனால் இந்நிலை குறையெச்சங்களில் இல்லை. தனிப்பட்ட கால இடைநிலை இல்லாத காரணத்தால்தான் இவை மூன்று காலங் களிலும் வரும் எனக் கருதலாம்.

மழை பெய்யக் குளம் நிறைந்தது
இராதை ஆட, கண்ணன் பாடினான்
இராமன் பாட வந்தான்

ஆகியவற்றில் காணப்படும் செயவென் வாய்பாட்டு எச்சம் மூன்று காலங்களையும் காட்டி நிற்றல் வெளிப்படை. பெய்யும் தொழில் நிறையும் தொழிலுக்கு முன்னர் வருவதும், ஆடும் தொழிலும் பாடும் தொழிலும் ஒரே நேரத்தில் நிகழ்வதும், பாடும் தொழில் வரும் தொழிலுக்குப் பின்னர் வருவதும் இங்கு உணரற்பாலன. இதனால்தான் செய்து போன்ற கால வெச்சங்கள் பற்றிப் பேசும் உரையாசிரியர்கள் அவை இறந்த காலம் பற்றி வரும் என்பர்.

சேனாவரையர்

"உகரம், கடதறவூர்ந்து இயல்பாயும், ஏனையெழுத் தூர்ந்து இகரமாய்த் திரிந்தும், நெடிலீற்று முதனிலை முன்னர் யகரம் வரத் தான் கெட்டும் இறந்தகாலம் பற்றி வரும்"

(சூத். 228) என்பார். ஆனால் அதே நேரத்தில் செய என்னும் குறையெச்சம் பற்றிக் கூறும்போது

'அகரம், மழை பெய்யக் குளம் நிறைந்தது; ஞாயிறு பட வந்தான்;

உண்ண வந்தான்; என மூன்று காலமும் பற்றி வரும்'

என்பார்.

இதே நிலையினைத்தான் பல உரையாசிரியர்களிடமும் காண்கிறோம். நச்சினார்க்கினியரும் இதே கருத்தையே கொண்டுள்ளார். இதே கருத்தினைத்தான் தெய்வச்சிலையார், கல்லாடர் போன்றவர்களிடமும் காண்கிறோம். இது பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

### 1.2.5 உரையாசிரியர்கள்

செய்யிய, செய்யியர் பற்றிக் கூறும்போது இவை செய என்னும் வாய்பாட்டினின்றும் வேறுபட்டன எனக் கருதினும் இவை மூன்றும் ஒன்றே எனக் கருதலாம். பல உரையாசிரியர்கள் செய்யிய, செய்யியர் ஆகியவை எதிர்காலத்தில் மட்டுமே வரும் எனக் கருதினும் இவையும் செயவென் வாய்பாட்டைப் போன்றே வருதல் இங்கு குறிப்பிடத்தக்கது. தெய்வச்சிலையார் (225)

மழை பெய்யிய எழுந்தது
மழை பெய்யியர் எழுந்தது
மழை பெய்யப் புகழ் பெற்றது

என்பவற்றைத் தந்து இவை இறந்த காலம் எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் காலத்தை அடிப்படையாக வைத்து இவற்றை வேறுபடுத்துவது பொருந்தாத ஒன்று. இவற்றைப் பின்னர் விவரமாகக் காணலாம்.

பொருள் வகையிலும் செய, செய்யிய, செய்யியர் ஆகியவை செய்து போன்ற காலவெச்சங்களிலிருந்து மாறுபட்டவை. காரணப்பொருளில் இவை அனைத்தும் வரினும்

செய்து போன்றவை நோக்கப் பொருள், தாக்கப்பொருள் போன்றவற்றில் அதிகமாக வருவதில்லை. ஆனால் குறை யெச்சங்களோ இப்பொருள்களில்தான் பெரும்பான்மையும் வருதல் குறிப்பிடத்தக்கது (சாஸ்திரி 1934 : 190). இதனையும் பின்னர் ஒவ்வொரு வாய்பாட்டு எச்சங்கள் பற்றிக் காணும் போது விளக்கமாகக் காணலாம். இந்நிலையிலும் இவை பிற எச்சங்களிலிருந்து மாறுபட்டுள்ளன.

இதனால்தான் இவற்றைப் பிற எச்சங்களிலிருந்து பிரித்துத் தனியொரு பிரிவாக்கி ஆராய்கிறோம். இது பற்றியும் பின்னர் காண்போம்.

### 1.2.6 மாரீற்றெச்சங்கள்

பல மாரீற்றுச் சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. மாரீறு, தோழிமார், போன்ற சொற் களில், பெயர்களில் காணப்படும் பன்மை உருபாகவும் 'பாடன்மார்' போன்ற சொற்களில் மாரீற்று, வினைமுற்றாக வும் வருவதோடு மட்டுமன்றி

''நல்விருந் தயர்மார் ஏமுற'' (அகம் 205)

போன்ற இடங்களில் எச்சமாக வருகின்றன என்றும், எனவே இவற்றையும் எச்சமாகவும் கொள்ளவேண்டும் என்றும் முன்னரே (சங்கத்தமிழ்-3, 95-105) கூறப்பட்டது. இவ்வெச் சங்கள் செய, செய்யிய, செய்யியர் ஆகிய எச்சங்களைப் போன்று பல்வேறு பொருள்களில் வராவிடினும் அவை காட்டும் பொருள்களில் மிக முக்கியமானதாக உள்ள நோக்கப் பொருளில் வருதல் குறிப்பிடத்தக்கது.

### 1.2.7 தொல்காப்பியமும் குறையெச்சமும்

குறையெச்சத்தையும் வினையெச்சங்களில் ஒன்றாகவே கருதுகிறார் தொல்காப்பியர். இதனால்தான் செய்யியர், செய்யிய, செய ஆகிய வாய்பாட்டு எச்சங்களை வினையெச் சங்களோடு இணைத்துக் குறிப்பிட்டுச் செல்லுவார் இவர். இவையனைத்தையும் ஒரு சேர அடக்கி வினையெஞ்சுகிளவி

என்பார் அவர் என்பதும் முன்னரே சுட்டிக் காட்டப் பட்டது.

> "செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
> அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி"

என்பது தொல்காப்பியம். இவற்றுள் செய்யியர், செய்யிய, செய, செயற்கென நான்கையும் ஒரு பிரிவில் அடக்குவர் இலக்கண அறிஞர்கள். செய என்பது பற்றிக் கூறும்போது இதுவும் செய்யியர், செய்யிய, செய்தென ஆகியவையும் ஒரே பொருளில் வரும் என சாஸ்திரி (1934:190) கூறுவது மீண்டும் இங்கு நினைவு கூரத்தக்கது.

### 1.2.8 செயற்கு என்பது குறையெச்சமா ?

இவற்றுள் செயற்கு என்பது வினையெச்சமா அல்லது செயல் என்னும் வாய்பாட்டுத் தொழிற்பெயருக்குப் பின்னர்க் குகர வேற்றுமை உருபு வந்ததால் ஏற்பட்ட வேற்றுமைச் சொல்லா என்பது ஆராய்தற்குரியது.
இது பற்றிக் கூறும் சேனாவரையர்,

> "செயற்கென்னும் வினையெச்சம் நான்க ஞருபேற்று நின்ற தொழிற்பெயரின் வேறாதல் கிளவியாக்கத்துட்
> கூறினாம்"

(228) என்க் கூறுவதும் கிளவியாக்கத்துள் சுட்டு முதலாகிய காரணக் கிளவியைப் பற்றிக் கூறும்போது (சூத். 40)

> "செயற்கென்னும் வினையெச்சம், உருபேற்று நின்ற தொழிற்பெயரோடு ஒப்புடைத்தாயினும், உருபும் பெயரும் ஒன்றாகாது பகுக்கப் பிளவு பட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான், அதனின் வேறாயினாற் போல, இதுவும் உருபேற்ற சுட்டுப் பெயரோடு ஒப்புமையுடைத்தாயினும் பிளவுபட்டிசையாது ஒன்று பட்டிசைத்தலான், வேறாகவே கொள்ளப்படு மெனபது"

எனக் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. செயற்கு என்பது பிளவுபட்டு இசையாது ஒன்றுபட்டு இசைத்தாலும் இதனை வேற்றுமையாகக் கொள்ளுவதில் தவறெதுவும் இல்லை. வேறு எந்த வேற்றுமைச் சொல்லும் பிளவுபட்டு வாராமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே பிளவுபட்டு இசைக்காமையைக் காரணமாகக் காட்டி இதனை வேற்றுமைச்சொல் அன்று எனக் கூறுதல் பொருந்தாது.

சேனாவரையர் கருத்தையே நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளார்.

> "உணல் என்னும் வினைப்பெயர் குகரம் அடுத்துழி உண்டலைச் செய்தற்கு என்னும் பொருள் தந்து எச்சப் பொருட்டாயே நிற்றலின், வினைப்பெயர் நான்கன் உருபு பெற்று நின்றது என்னும் மயக்கம் இதற்கு இன்மையும் உணர்க"

(23) எனக் கூறுவது காண்க. தெய்வச்சிலையார் இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

கல்லாடனாரும் (230) இதுபற்றிக் கூறுதல் காணலாம். பிற உரையாசிரியர்கள் நான்காம் உருபேற்ற தொழிற்பெயர் எனத் தெளிவாக மறுத்துக் கூற, கல்லாடனாரோ அதுவும் ஓர் வழக்குண்டு எனக் கூறுதலான் அவ்வாறு வருதலும் உண்டு என ஒத்துக்கொள்வதைக் காணலாம். மேலும் இவர் பெயர்ப் பொருண்மை நோக்கிய வழி அதுவாகவும், காலம் நோக்கியவழி வினையெச்சமாகவும் கொள்க எனவும் கூறுவார். இந்நிலையில் வேற்றுமைப்பொருள் தரும் நிலையில் (செய்வதற்கு, போவதற்கு, இருத்தற்குப் போன்று) இதனை வேற்றுமை ஏற்ற தொழிற்பெயராகவும், "காலம் நோக்கியவழி (230) வினையெச்சமாகவும் கொள்ளலாம் என்பது கல்லாடனார் கருத்து. எவ்வாறு இது காலம் காட்டுகிறது எனத் தெரியவில்லை.

முன்னரே குறிப்பிட்டபடி உரையாசிரியர்கள் பலரும் இதனை வினையெச்சமாகக் கொள்ளினும் நான்கன் உருபேற்ற

தொழிற்பெயராகக் கொள்ளுதலே பொருத்தம் எனத் தோன்று கிறது.

இதனால்தான் நன்னூல் (சூத் 343), இலக்கண விளக்கம் (சூத் 246) ஆகிய இலக்கண நூல்கள் எச்சங்களைக் குறிப்பிடும் போது இதுபற்றிக் குறிப்பிடவில்லை. நேமிநாதம் (சொல் 43) எல்லாவற்றிலும் தொல்காப்பியத்தைப் பின்பற்றுகின்ற நிலை யில் செயற்கு என்னும் வாய்பாட்டைக் கூறுவதில் வியப்பு எதுவுமில்லை. இதே நிலையைத்தான் (நேமிநாதம்போன்று) முத்துவீரியத்திலும் (வினை-29) காண்கிறோம். வீரசோழியம் (சூத் 67) தற்கு எனக் கூறி செய்தற்கு (செயற்கு) போதற்கு ஆகியவற்றை அடக்கியிருந்தாலும் பொருட்டு என்பதையும் (உண்ணுதற்பொருட்டு) கூறும் நிலையில் இவற்றை வினை யெச்சமாகக் கருத இயலாது.

உண்ணுதற்பொருட்டு, போதற்கு ஆகியவை உண்ணுதல் போதல் ஆகிய தொழிற்பெயர்களிலிருந்து வருவன என்பார் சாஸ்திரி (1934:191).

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறுமுக் காலமு முறைதரும்

(நன்னூல்-343)

எனவும்

செய்து செய்யூச் செய்யாச் செய்பு
செய்தெனச் செயச் செயின் செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கின வினையெச்சம் பிற
ஐந்தொன்று ஆறும் முக்காலமும் முறைதருமே

(இலக்கண விளக்கம் 246)

எனவும் கூறும் வாய்பாடுகளில் செயற்கு என்பது இடம் பெறாமை கவனித்தற்பாலது.

எனவே செய்யியர், செய்யிய, செய ஆகிய மூன்றினையும் குறையெச்ச வாய்பாடுகளாகக் கருதலாம். இவை தம்மிடையே காணப்படும் உறவினைப் பின்னர்க் காண்போம்.

## 1.2.9 குறையெச்ச அமைப்பு

காலவெச்சங்களைப் போன்றே இவ்வெச்சங்களும் குறிப்பிட்ட ஒரு அமைப்பைக் கொண்டுள்ளன. தொல்காப்பியம் போன்ற மரபிலக்கணங்கள் வாய்பாடு கூறி அமைப்பை விளக்க முற்பட்டுள்ளன எனக் கருதலாம். தற்கால மொழியியல் அறிஞர்கள் பலவேறு இலக்கணக் கூறுகளின் அமைப்பை அவை குறிப்பிட்ட நிலையில் வரும் முறையைக் காட்டிநிற்பர். குறையெச்சங்களும்

வினை அடி + விகுதி

என்ற அமைப்பை உடையன.

காலவெச்சங்களில் காலம், எதிர்மறை ஆகியவை (கண்டு, காணாது) வர இவ்வெச்சங்களில் இரண்டும் வாராமை குறிப்பிடத்தக்கது. வினையடிகளுக்குப் பின்னர் அ, இய, இயர், மார், வான், பான் ஆகிய குறையெச்ச விகுதிகள் வரும்போது அவை குறையெச்சங்களாக நிற்கும்.

செய் + { அ, இய, இயர், மார், வான் }

காண் + { அ, இய, இயர், மார், பான் }

போன்று குறையெச்சங்கள் வரும்.

## 1.2.10 குறையெச்சம் காட்டும் பொருள்கள்

குறையெச்சம் பலவேறு பொருள்களைக் காட்டி நிற்பதைக் காணலாம். தாக்கப்பொருள், உடனிகழ்ச்சிப் பொருள்,

நோக்கப் பொருள், காரணப்பொருள், வினையடைப் பொருள், வரிசைப்பொருள் போன்ற பல பொருள்களில் இது வரக் காணுகிறோம். மட்டுமன்றி இது துணைவினையின் தலைமை வினையாகவும் வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் இது ஒருசில இடங்களில் தொழிற்பெயராகவும் பயன்படுதல் உண்டு.

### 1.2.10.1 நோக்கப் பொருள்

இன்றைய தமிழில் குறையெச்சம் நோக்கப் பொருளிலேயே அதிகமாகப் பயன்படுதல் காணத்தக்கது.

நான் காண வந்தேன்
நான் சாப்பிடப் போனேன்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் குறையெச்சங்கள் இப் பொருளிலேயே வந்துள்ளன. கால்டுவெல், ஆர்டன் போன்ற வர்கள் இது பற்றிக் குறிப்பிட்டிருப்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. மேலும் இவற்றை

நான் காண்பதற்கு வந்தேன்
நான் காண்பதற்காக வந்தேன்

என வேற்றுமை உருபுகளை இட்டுக் கூறுவதும் இங்கு உணரத் தக்கது. பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செயவென் வாய்பாட்டுக் குறையெச்சம் மிகக் குறைவாகவே இப்பொருளில் வந்திருப்பினும் செய்யிய, செய்யியர், செய்மார் போன்ற வாய் பாட்டு எச்சங்கள் இப்பொருளிலேயே மிக அதிகமாக வந்துள்ளன. செய்யிய வாய்பாட்டு எச்சம் ஐங்குறுநூற்றில் காணப்படும் பதினேழு இடங்களிலும் இப்பொருளிலேயே வந்திருப்பதும், செய்யியர் வாய்பாட்டு எச்சம் பதிற்றுப்பத்தில் காணப்படும் பன்னிரண்டு இடங்களிலும், செய்மார் வாய் பாட்டு எச்சம் அகநானூற்றில் காணப்படும் இருபத்து மூன்று இடங்களிலும் இப்பொருளிலேயே வந்திருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

ஐங்குறுநூற்றில்

ஆறுவனப் பெய்த வலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவிரைந் தனவே
முன்னுறக் கடவுமதி பாக
நன்னுத லரிவை தன்னலம் பெறவே (ஐங். 483)

என வரும் பாடலில் பெற என்னும் குறையெச்சம் நோக்கப் பொருளில் வந்திருத்தல் காண்க. இதற்கு உரை எழுதும் உரையாசிரியர் 'எய்தும் பொருட்டு' என எழுதுவது இங்கு நோக்கத்தக்கது.

இன்றைய தமிழில் நோக்கப்பொருளில் செயவென் வாய்பாட்டு எச்சங்கள் வருவதோடு குகர வேற்றுமையை இணைத்து அத்துடன் ஆக என்பதையும் சேர்த்து நோக்கப்பொருள் காட்டுதல் காணலாம்.

ஆடுவதற்காக வந்தேன்
பாடுவதற்காக வந்தேன்

போன்றவை இதற்கு உதாரணங்களாகும். இத்தகைய நிலை பண்டைத் தமிழிலும் ஒரு இடத்தில் காணப்படுவது குறிப்பிடுவதற்குரியதாகும்.

சிலப்பதிகாரத்தில் வரும்

"கஞ்சன் வஞ்சம் கடத்தற் காக
அஞ்சன் வண்ணன் ஆடிய ஆடலுள்'
(சிலம்பு 6-46)

என்பதில் "கடத்தற்காக" என வருதல் காண்க.

### 1.2.10.2 உடனிகழ்ச்சிப்பொருள்

குறையெச்சம் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வருதல் குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக உரையாசிரியர்கள் செயவென் வாய்பாட்டு எச்சத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது இவை உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும் எனக் கூறி

ஞாயிறு பட வந்தான்

போன்ற உதாரணங்களைத் தருவர். மேலும்

அவன் ஆட நான் பாடினேன்

போன்ற உதாரணங்கள் இப்பண்பினைக் காட்டும். பொதுவாக இவ்வெச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்போது

அவன் ஆடும்போது நான் பாடினேன்
அவன் ஆடுகையில் நான் பாடினேன்

என மாற்றிக் கூற முடியும். இதனால்தான் இன்றைய தமிழில் இவ்வெச்சங்கள் இப்பொருளில் வருவது குறைவாக உள்ளது. மேலும் ஒரே எழுவாயாக உள்ளபோது

அவன் ஆடிக்கொண்டே பாடினான்

என்பது போன்ற வாக்கியங்கள் வருவதைக் காணுகிறோம்.

ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களை நோக்கின் குறையெச்சங்களே, அதிலும் குறிப்பாகச் செயவென் வாய்பாட்டு எச்சங்களே மிக அதிகமாக உடனிகழ்ச்சிப் பொருளில் வரக் காணுகிறோம். எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில் கால எச்சங்கள் 518 இடங்களில் வந்துள்ளமையும் ஆனால் உடனிகழ்ச்சிப் பொருளை எண்பத்திரண்டு இடங்களில் மட்டுமே சுட்டி நிற்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. ஆனால் குறையெச்சங்களோ இந்நூலின்கண் 340 இடங்களில் வர 130 இடங்களில் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளன. இதே நிலையினைத்தான் பிற பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணுகிறோம்.

உடனிகழ்ச்சிப் பொருள்

| | காலவெச்சங்கள் | குறையெச்சங்கள் |
|---|---|---|
| பதி | 82 | 130 |
| ஐங் | 40 | 59 |
| அகம் | 271 | 392 |
| நற் | 105 | 176 |
| குறு | 68 | 73 |
| புறம் | 104 | 340 |
| பத்து | 119 | 256 |

| | | |
|---|---|---|
| பரி | 48 | 195 |
| கலி | 294 | 196 |
| குறள் | 77 | 43 |
| சிலம்பு | 220 | 260 |
| மணி | 106 | 111 |

ஐங்குறு நூற்றில்

''அவிர்தொடி கொட்பக் கழுதுபுக வயரக்
கருங்கட் காக்கையொடு கழுகுவிசும் பகவச்
சிறுகண் யானை யாள்வீழ்த்துத் திரிதரு
நீளிடை யருஞ்சுரம்.........'' (ஐங். 314)

என வரும் அடிகளில் கொட்ப, அயர, அகவ ஆகிய குறை யெச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளமையைக் காண்கிறோம்.

உரையாசிரியர்

''விளங்குகின்ற தொடியணிந்த பேய்மகள் இரையை விரும்பிச் சுழலா நிற்பவும், கரிய கண்ணையுடைய காக்கை களோடு கழுகுகளும் வானத்தே சுத்திக்கொண்டு பறவா நிற்பவும், சிறிய கண்ணையுடைய யானைகள் ஆறு செல்வோரை நாடிக் கண்டு கொன்று வீழ்த்தி யாண்டும் திரிதற்கு இடமான நீண்ட இடைநிலம்'' என எழுதிச் செல்லு தல் காணலாம்.

### 1.2.10.3 தாக்கப்பொருள்

குறையெச்சங்கள் மேலே குறிப்பிட்ட இரு பொருள்களில் மட்டுமின்றித் தாக்கப் பொருளிலும் வருதல் காணலாம். ஒரு செய்கையின் தாக்கம் இன்னொரு செயலுக்கு வழிவகுக்கு மானால் அதனையே தாக்கப் பொருள் என்கிறோம். அதிலும் கொண்டு முடியும் வினையின் தாக்கம் குறையெச்சச் செயல் களில் காணப்படும்போது இதனைத் தாக்கப்பொருள் எனக் குறிப்பிடுகிறோம்.

அவன் விழத் தள்ளினேன்
அவன் குருதி சொரியப் புடைத்தான்

போன்றவற்றில் இப்பண்பினைக் காணுகிறோம். இவற்றை முறையே

அவன் விழுமாறு தள்ளினேன்
அவன் விழும்படி தள்ளினேன்

எனவும்

அவன் குருதி சொரியுமாறு புடைத்தான்
அவன் குருதி சொரியும்படி புடைத்தான்

எனவும் கூறுதல் முடியும்.

மேலும் இவ்வெச்சங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் தாக்கப்பொருளில் மிக அதிகமாக வருதல் காணத்தக்கது. புல இலக்கியங்களில் இப்பொருளே மிக அதிகமாகக் காணப் படுகிறது. செயுஷென் எச்சம் பதிற்றுப்பத்தில் 122 இடங்களி லும் ஐங்குறுநூற்றில் 152 இடங்களிலும் அகத்தில் 599 இடங்களிலும் இப்பொருளில் வரக் காணலாம். இந்நிலையைக் கீழே வரும் பட்டியல் நன்கு காட்டும்.

**தாக்கப்பொருள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பதி | 122 | புறம் | 264 | சிலம்பு | 209 |
| ஐங் | 152 | பத்து | 356 | மணி | 122 |
| அகம் | 599 | பரி | 100 | | |
| நற் | 238 | கலி | 341 | | |
| குறு | 128 | குறள் | 64 | | |

''தந்தயிலை வாழை முழுமுத லசைய
வின்னா வாடையு மலைக்கும்'' (ஐங். 460-3)

என வரும் ஐங்குறுநூற்று அடிகளில் 'அசைய' என்னும் குறையெச்சம் தாக்கப் பொருளில் வந்துள்ளது. உரையாசிரியர்

''துன்பத்தையே செய்யுமியல்புடைய வாடைக் காற்றும் செறிந்த இலைகளையுடைய வாழையின் பரிய அடிப் பகுதி அசையும்படி வீசிப் பெரிதும் வருத்தா நிற்கும்'

என எழுதுதல் காண்க. இங்கு அசைய என்பது அசையும்படி என்னும் பொருளில் வந்திருப்பது உற்று நோக்கத்தக்கது.

### 1.2.10.4 காரணப்பொருள்

காலவெச்சங்களைப் போன்று குறையெச்சங்களும் காரணப் பொருளிலும் வருவது குறிப்பிடத்தக்கது.

மழை பெய்யக் குளம் நிறைந்தது
அவன் சொல்ல நான் போனேன்

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இன்றைய தமிழிலும் குறையெச்சங்கள் காரணப் பொருளில் வருவதைக் காட்டி நிற்கும்.

பழந்தமிழிலும் குறையெச்சங்கள் காரணப் பொருள் காட்டி நிற்கக் காணலாம். இவை இப்பொருளில் பல இடங்களில் வந்துள்ளன. தாக்கப் பொருளுக்கும் உடனிகழ்ச்சிப் பொருளுக்கும் அடுத்தபடியாக இப்பொருளிலேயே அதிகமாக இவ்வெச்சங்கள் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, ஐங்குறுநூற்றில் இவ்வெச்சங்கள் தாக்கப்பொருளில் 152 இடங்களிலும், உடனிகழ்ச்சிப் பொருளில் 59 இடங்களிலும் வந்திருக்க, காரணப்பொருளில் 26 இடங்களில் வந்துள்ளன. இதே நிலையைத்தான் பிற இலக்கியங்களிலும் காணுகிறோம்.

| | தாக்கப்பொருள் | உடனிகழ்ச்சிப்பொருள் | காரணப்பொருள் |
|---|---|---|---|
| பதி | 123 | 130 | 33 |
| ஐங் | 152 | 59 | 28 |
| அகம் | 604 | 392 | 115 |
| நற் | 241 | 176 | 70 |
| குறு | 130 | 73 | 18 |
| புறம் | 264 | 340 | 67 |
| பத்து | 356 | 256 | 50 |
| பரி | 100 | 195 | 23 |
| கலி | 345 | 196 | 113 |
| குறள் | 64 | 43 | 15 |

| | | | |
|---|---|---|---|
| சிலம்பு | 211 | 260 | 69 |
| மணி | 123 | 111 | 72 |

காலவெச்சங்களும் காரணப்பொருள் காட்டும் என்பது முன்னரே கூறப்பட்டது. (சங்கத்தமிழ் பகுதி 4, பக்கம் 55). பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் இன்னொரு உண்மையும் விளங்கும். இவ்விரு எச்சங்களும் காரணப்பொருள் காட்டி நிற்கக் காணலாம்.

**காரணப்பொருள்**

| | காலவெச்சம் | குறையெச்சம் |
|---|---|---|
| பதி | 34 | 33 |
| ஐங் | 25 | 28 |
| அகம் | 73 | 115 |
| நற் | 26 | 70 |
| குறு | 50 | 18 |
| புறம் | 29 | 67 |
| பத்து | 40 | 50 |
| பரி | 21 | 23 |
| கலி | 23 | 113 |
| குறள் | 13 | 15 |
| சிலம்பு | 30 | 69 |
| மணி | 22 | 72 |

முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று எல்லா இலக்கியங்களி லும் இவ்வெச்சங்கள் இப்பொருளில் வரக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஐங்குறுநூற்றில்

“மாபுதல் சேர வரகிணர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித் தலைப்பப்
பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்
தோடுணை யாக வந்தனர்
போதவிழ் கூந்தலும் பூவிரும் புகவே” (ஐங். 496)

என வரும் பாடலில் ‘அலைப்ப’ என்னும் செயவென் எச்சம் காரணப்பொருளில் வந்திருத்தல் காண்க.

"கார் கலித்து அலைப்ப" என்ற தொடருக்கு உரை எழுதப்போந்த உரையாசிரியர் "மழை பெரிதும் ஆரவாரித்துப் பெய்து வருத்துதலான்" என எழுதுவது காண்க.

காலவெச்சங்களும் குறையெச்சங்களும் காரணப்பொருளில் வருமாயினும் குறையெச்சங்களே காரணப் பொருளில் வருவதற்கு உரியன எனக் கருதினர் பண்டைய இலக்கண ஆசிரியர்கள். இதனால்தான் காலவெச்சங்கள் காரணப் பொருளில் வரும்போது இவற்றைக் குறையெச்சமாகத் திரிக்க வேண்டும் எனக் கூறுவர் உரையாசிரியர்கள். எடுத்துக் காட்டாக,

"புதுப்புன லாடி யமர்த்த கண்ணள்
யார்மக ளிவள்........."　　(ஐங்-79)

என வரும் ஐங்குறுநூற்றடிகளுக்கு உரை எழுதிய உரை யாசிரியர்

"புதிய நீரிலே நெடிது ஆடியமையாலே மாறுபட்ட கண்ணையுடைய இவள் யார் மகள்?" என எழுதுவதுடன் பின்னர் "ஆடி: எச்சத்திரிபு. ஆடியமையாலே எனக் காரணப் பொருட்டாக்குக" என எழுதுவது குறிப்பிடத்தக்கது.

### 1.2.10.5 வினையடைப்பொருள்

குறையெச்சங்கள் வினையடைப்பொருளிலும் வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவன் மிகக் கூறினான்
அவன் நிறையச் சொன்னான்

போன்ற வாக்கியங்களில் காணப்படும் மிக, நிறைய போன்ற குறையெச்சங்கள் வினையடைப்பொருளில் வருதல் காணலாம். பொதுவாக இவ்வெச்சங்கள் தம் எச்சப்பண்பை இழந்து வினையடையாகவே பயன்படுதல் இங்கு குறிப்பிடத்தக்கது. மிக என்பதை மிகும்படி எனவும், நிறைய என்பதை நிறையும் படி அல்லது நிறைவாக எனவும் பொருள் கொள்ளின் அது வினையெச்ச நிலையைக் காட்டுவதை உணர முடியும்.

இத்தகைய நிலையைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் காணலாம். மிக, நிறைய, செல, கூடிய, ஆர போன்ற சொற்கள் வினையடைப்பொருளில் வருதல் உண்டு.

ஐங்குறுநூற்றில் காணப்படும்

''மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ''

(ஐங். 42-1)

என்ற அடியில் வரும் மிக என்பது மிகுதியாக என்ற வினையடைப்பொருளில் வருதல் காண்க.இதற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் ''ஒரோவழி கள்ளுண்ட வெறி மிகவும் சிறத்தலாலே அறிவு மயங்கி அங்ஙனம் விலகியிருப்பளோ?'' என எழுதுவார். இதைப்போன்றே பதிற்றுப்பத்தில் வரும்

''துறையி னெஞ்சாமை நிறையக் கற்று'' (பதி. 90-4)

என வரும் அடியில் காணப்படும் நிறைய என்பதும் இப் பொருளிலேயே (நிரம்ப) வந்துள்ளது. மட்டுமன்றி, ஆகு (ஆ) என்ற வினைச்சொல்லின் குறையெச்சச் சொல்லான ஆக என்பது பலவேறு சொற்களுடன் இணைந்து வினையடைப் பொருளைக் காட்டி நிற்பதைக் காணலாம்.

அழகாக

வலிமையாக

விரைவாக

இதே நிலையினைப் பண்டைத் தமிழ் இலக்கியமான அக நானூற்றிலும் காண முடிகிறது. அகத்தில்

''புள்ளுப்புணர்ந் தினிய வாக...'' (அகம் 136-3)

என வருவதும் இதற்கு உரை எழுதும் ஆசிரியர் ''புள் நிமித்தம் இனிதாகக் கூட'' என எழுதுவதும் காணத்தக்கது.

### 1.210.6 வரிசைப்பொருள்

குறையெச்சம் காட்டும் பொருள்களில் வரிசைப்பொருளும் ஒன்றாகும். காலவெச்சங்களும் வரிசைப்பொருள் காட்டும் என்பது முன்னரே கூறப்பட்டது (சங்கத்தமிழ், பகுதி 4). எனினும் காலவெச்சங்கள் காட்டும் வரிசைப்பொருளுக்கும், குறையெச்சம் காட்டும் வரிசைப்பொருளுக்கும் இடையில்

வேற்றுமை காணலாம். குறையெச்சம் காட்டும் நிகழ்ச்சி நடந்த உடனேயே அடுத்த நிகழ்ச்சியும் நடைபெறும் நிலையைக் காண முடியும்.

அவன் வர நான் சென்றேன்

என்று கூறும்போது வருதல் தொழில் நடந்த உடனே செல்லுதல் தொழில் நடப்பதையே இது குறிப்பிடுகிறது. இதனால் இதை

அவன் வந்தவுடன் நான் சென்றேன்

என்று குறிப்பிடவும் முடியும். இதனால்தான் இன்றைய தமிழில் முதல் வகை வாக்கியங்கள் காணப்படுவதில்லை. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இப்பொருளில் இவ்வகை எச்சங்கள் வருதல் உண்டு. எடுத்துக்காட்டாக, ஐங்குறுநூற்றில்

''இலங்குவளை தெளிர்ப்ப வலவ னாட்டி
முகம்புதை கதுப்பின ளிறைஞ்சிநின் றோளே
புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே'' (ஐங். 197)

என வரும் பாடல் அடிகளில் ''மாலை மறைய நலங்கேழாக நல்குவ ளெனக்கே'' என்ற வரிக்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் ''மாலைப்பொழுது மறைந்தவுடன் இன்பம் கெழுமிய தனது மார்பினை எனக்கு வழங்கியருள்வாளல்லளோ?'' என எழுதுதல் காண்க. இப்பண்பினை வேறு பல இலக்கியங்களிலும் காணலாம்.

### .2.10.7 தலைமை வினை

பல உலகமொழிகளில் காணப்படுவது போலவே தமிழ் மொழியிலும் பலவேறு துணை வினைகள் காணப்படுகின்றன. இன்றைய தமிழில் மட்டுமின்றிப் பழங்காலத் தமிழிலும் துணை வினைகள் காணப்படுகின்றன. தமிழ் மொழியை ஆராய்ந்த மேனாட்டு அறிஞர்கள் பலர் தமிழில் துணை வினைகள் புதியவாகத் தோன்றியவை எனக் கருதினாலும் மிகப் பழங்

காலம் தொட்டே துணை வினைகள் தமிழில் உண்டு என்பதை நாம் அறிவோம். பேராசிரியர் சிதம்பரநாதன் போன்றவர்கள் குறிப்பாக, படு என்னும் துணை வினை பற்றிப் பேசும் போது இதுபற்றிக் குறிப்பிடுதல் காணலாம். இந்நிலையில் பலவேறு துணை வினைகள் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. காலப்போக்கில் இவை அதிகமாகப் பயன்பட்டன என்று கூறலாமே அன்றித் தமிழுக்கு இவை புதியன எனக் கூறுதல் பொருந்தாது.

ஒரு காலத்தில் முழுவினைகளாகப் (Main Verbs) பயன் பட்ட வினைகள் பின்னர் தமக்குரிய சொற்பொருளை இழந்து இலக்கணப் பொருளைக் காட்டத்தொடங்கிய நிலையில் இவை துணை வினைகளாகக் கருதப்படுகின்றன. எனவே முழு வினைகள் சொற்பொருளைக் காட்டும் என்பதும், துணை வினைகள் இலக்கணப் பொருளைக் காட்டும் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கவை. இது பற்றிய செய்திகளைப் பலவேறு நூல்களில் காணலாம்.

பொதுவாக, தமிழில் காணப்படும் துணை வினைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பல துணை வினைகள் காலவெச்சத்தோடு வரும் என்பதும், மேலும் பல துணை வினைகள் குறையெச்சங்களோடு வரும் என்பதும், வரலாம், போகலாம் போன்ற சொற்களில் காணப்படும் ஆம் (ஆகும்) என்ற துணைவினை தொழிற்பெயரோடு வரும் என்பதும் முன்னரே குறிப்பிடப்பட்டது (சங்கத்தமிழ். பகுதி-4).

தமிழ்மொழியில் செய்வினை, செயப்பாட்டு வினை என்ற வகைப்பாடு உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும் திராவிட மொழிகளைப் பற்றி ஆராய்ந்த மேனாட்டு அறிஞர் கள் இவற்றில் செயப்பாட்டுவினை இல்லையென்றும், செய் வினையே செயப்பாட்டு வினையாகச் செயல்படும் எனவும் தவறாகக் கூறிச் சென்றுள்ளனர். கால்டுவெல் தம்முடைய நூலில்

"The Dravidian verb is entirely destitute of a passive voice properly so called, nor is there any reason to suppose that it ever had a passive"

(1961 Reprint : 463) என்று கூறிச் சென்றுள்ளார். இதே நிலையைத்தான் பிற இலக்கண ஆசிரியர்களிடமும் காணு கிறோம். போப் (1911), கோல், ஹோட்சன் (1864) ஆர்டன் (1942, 1960 Reprinted) போன்ற அறிஞர்களும் இதே கருத்தினையே கொண்டுள்ளனர். ஆனால் முன்னர்க் குறிப்பிட்டபடி, தொல்காப்பியம் போன்ற பல நூல்களில் செயப்பாட்டு வினை வரக் காணலாம்.

இது தவிர இன்றைய தமிழில் ஏராளமான துணை வினை கள் காணப்படுகின்றன.

வரவேண்டும்

வரச்செய்

வரக்கூடும்

வரமாட்டேன்

வரப்பண்ணு

வரவை

வரப்பார்

கொல்லப்படு

வரமுடியும்

கொல்லப்பெறு

போன்ற சொற்களில் பலவேறு துணை வினைகள் வருதல் காணலாம். இவற்றுள் படு, பெறு ஆகியவை செயப்பாட்டு வினையைக் காட்டும் துணை வினைகளாகும். இவை எழுத்துத் தமிழிலும் இலக்கியத்தமிழிலும் மட்டுமே காணப்படுவன. பேச்சு வழக்கில் இவை வருவதில்லை.

எழுத்தெனப் படுப

போன்ற பல ஆட்சிகளைத் தொல்காப்பியத்தில் காண முடியும்.

### 1.2.11 குறையெச்சமும் எழுவாயும்

வினையெச்சங்கள் வாக்கியங்களில் வரும்போது அவற்றின் எழுவாய்களும் அவை கொண்டு முடியும் வினையின் எழுவாய் களும் ஒன்றாகவோ அல்லது வெவ்வேறாகவோ இருக்கலாம்.

கண்ணன் உண்டு வந்தான்
கண்ணன் உண்ண வந்தான்

போன்றவற்றில் ஒரே எழுவாய்களையே காணுகிறோம்.

ஆனால்

அவன் சொல்லி நான் போனேன்
மழை பெய்யக் குளம் நிறைந்தது.

போன்றவற்றில் வெவ்வேறு எழுவாய்களைக் காண்கிறோம் இத்தகைய ஆராய்ச்சியைப் பண்டைத்தமிழ் இலக்கண நூல் களில் காண முடியும்.

பண்டைத்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இது பற்றிப் பேசுவது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். வினையெச்ச வாய்பாடுகள் பலவற்றைத் தந்துவிட்டுப் பின்னர்

''அவற்றுள்,
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின''

சூத் - 715

எனக் கூறுவார் தொல்காப்பியர். செய்து, செய்யூ, செய்பு ஆகிய காலவெச்சங்களும் அவை கொண்டு முடியும் வினைச் சொற்களின் எழுவாயையே கொண்டு முடியும் என்பது இதன் கருத்து. ஆனால் பிற எச்சங்கள் ஒரே எழுவாயையோ அல்லது இருவேறு எழுவாய்களையோ கொண்டு வரும் என்பதை

''ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானுந்
தாமியல் மருங்கின் முடியும் என்ப''

சூத் - 727

எனக் கூறுவார். இந்நிலையில் செய்யியர், செய்யிய, செய போன்ற குறையெச்சங்கள் அவற்றிற்கே உரிய வினைமுதலைக் கொண்டும் அல்லது அவை கொண்டு முடியும் வினைச்சொற் களுக்குரிய வினைமுதலைக் கொண்டும் வரும் என்பது புலனாகும். இவற்றிற்கு உதாரணம் தரப்போந்த உரையாசிரியர் கள்

| | |
|---|---|
| மழை பெய்யப் பயிர் எழுந்தது | (இளம்) |
| மழை பெய்யிய ரெழுந்தது | |
| மழை பெய்யியர் பலி கொடுத்தார் | |
| மழை பெய்யிய முழங்கும் | |
| மழை பெய்யிய வான் பழிச்சுதும் | (சேனா : நச்) |
| மழை பெய்யியர் மாதவர் அருளினர் | |
| மழை பெய்யிய மாதவரருளினர் | |
| மழை பெய்யக் குளம் நிறைந்தது | |
| மழை பெய்ய வந்தான் | |
| மழை பெய்யப் பலி கொடுத்தும் | (தெய்.) |
| மழை பெய்யிய எழுந்தது | |
| மழை பெய்யிய மாதவர் அருளினார் | |
| மழை பெய்யியர் எழுந்தது | |
| மழை பெய்யியர் மாதவர் அருளினார் | |
| மழை பெய்ய எழுந்தது | |
| மழை பெய்யக் குளம் நிறைந்தது | (கல்) |

ஆகியவற்றைத் தந்து நிற்பர்.

பண்டைத்தமிழ் இலக்கியங்களை ஆராயின் குறையெச்சங் கள் இரு நிலைகளிலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, செயவென்னும் வாய்பாட்டு எச்சம் ஒரே எழுவாயையும், இரு எழுவாய்களையும் கொண்டு வரக் காணலாம்.

**செயவென் வாய்பாட்டு எச்சம்**

| | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் |
|---|---|---|
| பதி | 7 | 292 |
| ஐங் | 10 | 249 |

| | | |
|---|---|---|
| அகம் | 27 | 1120 |
| நற் | 13 | 512 |
| குறு | 13 | 223 |
| புறம் | 18 | 700 |
| பத்து | 6 | 669 |
| பரி | 19 | 318 |
| கலி | 17 | 659 |
| குறள் | 1 | 122 |
| சிலம்பு | 23 | 742 |
| மணி | 29 | 452 |

இப்பட்டியலை நோக்கின் உண்மை ஒன்று புலப்படும். செயவென் வாய்பாட்டு எச்சமும் கொண்டு முடியும் வினையும் ஒரு எழுவாயையோ அல்லது இருவேறு எழுவாய்களையோ எடுத்துவரினும் பெரும்பான்மையாக இருவேறு எழுவாய் களையே கொண்டு வருதல் கவனித்தற்பாலது. இதனால் தான் கால எச்சங்களையும், குறையெச்சங்களையும் பற்றிக் குறிப் பிடும்போது காலவெச்சங்கள் பொதுவாக ஒரே எழுவாயையும், குறையெச்சங்கள் இருவேறு எழுவாய்களையும் கொண்டு வரும் என்று குறிப்பிடுவர்

இதே நிலையைப் பிற வாய்பாட்டுக் குறையெச்சங்களிலும் காணலாம். (காண்க. பட்டியல்கள் 3, 5, 7, 11, 12, 13).

### 1.2.11.1 பொருளும் எழுவாயும்

எனினும் இவற்றைக் கூர்ந்து நோக்கின் இன்னொரு உண்மையும் தெரியவரும். இவ்வெச்சங்கள் காட்டும் பொருளுக் கும், இவை ஏற்கும் எழுவாய்களுக்குமிடையே ஒரு தொடர்பு இருப்பதைக் காண முடியும். இவை காட்டும் பொருளுக் கேற்பவே இவை ஏற்கும் எழுவாய் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். எடுத்துக்காட்டாக, இவ்வெச்சங்கள் தாக்கப் பொருளில் வரும்போது இரு எழுவாய்களையே எடுத்து வருதல் நோக்கத்தக்கது. செயவென் வாய்பாட்டு எச்சம் பதிற்றுப்பத்தில் தாக்கப்பொருளில் வரும் 120 இடங்களிலும்

இரு எழுவாய்களையே கொண்டு வந்துள்ளமை கவனித்தற்பாலது. இதே நிலையினைத்தான் பிற இலக்கியங்களிலும் காணுகிறோம். இதுபோன்றே உடனிகழ்ச்சிப் பொருளிலும், காரணப்பொருளிலும் வரிசைப்பொருளிலும் உள்ளது. ஆனால் நோக்கப்பொருளில் ஓரிரு இடங்களைத் தவிர்த்துப் பிற இடங்கள் அனைத்தும் ஒரே எழுவாயையே கொண்டு வந்துள்ளன.

**பட்டியல்**

| தாக்கப் பொருள் | உடனிகழ்ச்சிப் பொருள் | | நோக்கப் பொருள் | | காரணப் பொருள் | | வரிசைப் பொருள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒ. எ. | இ. எ. | ஒ. எ. | இ. எ. | ஒ. எ. | இ. எ. | ஒ. எ. | இ. எ. | ஒ. எ. | இ. எ. |
| பதி | — | 182 | — | 130 | 7 | 1 | — | 32 | — | 7 |
| ஐங் | — | 152 | — | 59 | 10 | 6 | — | 28 | — | 4 |
| அகம் | — | 599 | — | 392 | 26 | 2 | 1 | 113 | — | 14 |
| நற் | — | 238 | — | 176 | 13 | — | — | 70 | — | 28 |
| குறு | — | 128 | — | 73 | 13 | — | — | 18 | — | 4 |
| புறம் | — | 264 | — | 340 | 18 | 1 | — | 67 | — | 28 |
| பத்து | — | 356 | — | 256 | — | — | — | 50 | — | 7 |
| பரி | — | 100 | — | 195 | 19 | 1 | — | 22 | — | — |
| கலி | — | 341 | — | 196 | 17 | — | — | 113 | — | 9 |
| குறள் | — | 64 | — | 43 | 1 | — | — | 15 | — | — |
| சிலம்பு | — | 209 | — | 260 | 23 | — | — | 69 | — | 204 |
| மணி | — | 122 | — | 111 | 29 | 5 | — | 72 | — | 142 |

மிகப் பெரும்பான்மையான இடங்களில் இருவேறு எழுவாய்களையே கொண்டு வருதல் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக ஐங்குறுநூற்றில்

"அம்ம வாழி தோழி நாமழ
நீல விருங்கழி நீலங் கூம்பு
மாலை வந்தன்று மன்ற" (ஐங். 116-1)

எனவரும் அடிகளில் அழ என்னும் குறையெச்சத்தின் எழுவாயாக நாம் என்ற பதிலிடுபெயரும், அது கொண்டு

முடியும் வந்தன்று என்னும் வினைமுற்றின் எழுவாயாக மாலை என்ற பெயரும் வந்திருத்தலைக் காண்கிறோம். ஆனால்

> ''பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்
> தோடுணை யாக வந்தனர்'' (ஐங். 496-4)

''பெரிய அமர்த்த விழிகளையுடையாய்! நின்னைப் பிரிந்து வேற்று நாட்டகத்தே உறைந்தவராகிய நம் பெருமான் மெலிந்த நின் தோள்கட்கு ஆக்கஞ்செய்யும் துணையாதற்கு மீண்டு வந்தனர்.'' என வரும் அடிகளில் ஆக என்னும் குறையெச்சமும், அது கொண்டு முடியும் வந்தனர் என்னும் வினைமுற்றும் உறைநர் எனனும் ஒரே எழுவாயையே கொண்டு வந்துள்ளமையைக் காண்கிறோம். எனவே குறையெச்சங்களும் அவை கொண்டு முடியும் வினைகளும் ஒரே எழுவாயைக் கொண்டும், இரு எழுவாய்களைக் கொண்டும் இருவகையாகவும் வருதல் கண்கூடு.

## 1.2.12 குறையெச்சமும் காலமும்

குறையெச்சங்களில் கால இடைநிலைகள் இல்லையென்பதும், ஆனால் காலவெச்சங்களில் கால இடைநிலைகள் உள்ளன என்பதும் முன்னரே கூறப்பட்டது. இதனால்தான், இவை முறையே குறையெச்சங்கள் என்றும், காலவெச்சங்கள் என்றும் குறிக்கப்பட்டன என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் குறையெச்சங்கள் கால இடைநிலைகள் இல்லையாயினும் காலம் காட்டும் என்பதனை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். உரையாசிரியர்கள் பலரும் இதுபற்றிக் குறிப்பிடுதல் காணலாம்.

செயவென் வாய்பாட்டு எச்சங்களைப் பற்றிப் பேசும் போது இதுபற்றி அவர்கள் குறிப்பிடுவர். தெய்வச்சிலையார்

> ''செயவென்பது மூன்று காலத்திற்கும் பொதுவாகி பொருள் வேறுபாடுடைத்து''

என்பார். இதுபற்றிப் பின்னர் விரிவாகக் குறிப்பிடப்படும்.

மழை பெய்யக் குளம் நிறைந்தது
மழை பெய்யப் புகழ் பெற்றது

போன்றவற்றில் வரும் குறையெச்சம் இறந்தகாலத்தையும்

ஞாயிறு படவந்தான் (சேனா.)
மழை பெய்ய வந்தான் (தெய்.)

போன்றவை நிகழ்காலத்தையும்

உண்ண வந்தான் (சேனா.)
மழை பெய்ய எழுந்தது (தெய்.)

போன்றவை எதிர்காலத்தையும்காட்டும் எனக் கூறி நிற்பர். எனவே கால இடைநிலைகள் இவற்றில் இல்லையாயினும் இவை மூன்று காலத்தையும் காட்டுதல் குறிப்பிடத்தக்கது.

### 1.2.12.1 பொருளும் காலமும்

குறையெச்சங்கள் காட்டும் பொருளுக்கும் அவை காட்டும் காலத்துக்குமிடையேயும் மிகுந்த தொடர்புண்டு. குறையெச்சங்கள் தாக்கப்பொருள் அல்லது நோக்கப்பொருளில் வரும் போது எதிர்காலத்தைக் காட்டி நிற்கும்.

குளம் நிறைய மழை பெய்தது
குருதி வர அடித்தான்

போன்று தாக்கப்பொருளில் வரும்போதும்

அவன் உண்ண வந்தான்
அவன் உண்ண வருவான்

போன்று நோக்கப்பொருளில் வரும்போதும் எதிர்காலத்தைக் காட்டும்.

ஆனால் உடனிகழ்ச்சிப்பொருளில் வரும்போது நிகழ் காலத்தைக் காட்டும்.

அவள் ஆட நான் பாடினேன்
அவன் வாசிக்க நான் எழுதினேன்

போன்றவற்றில் நிகழ்காலத்தைக் காணலாம்.

காரணப்பொருள், வரிசைப்பொருள் போன்றவற்றில் வரும்போது இறந்தகாலத்தைக் காட்டி நிற்கும்.

மழை பெய்யக் குளம் நிறைந்தது
காற்று வீச மலர் உதிர்ந்தது

போன்று காரணப்பொருளிலும்

அவன் கேட்க கேட்க நான் கூறினேன்

என வரிசைப்பொருளில் வரும்போதும் இவ்வெச்சங்கள் இறந்த காலத்தைக் காட்டி நிற்கும். எடுத்துக்காட்டாக, ஐங்குறு நூற்றில்

''வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
யுளர வொழிந்த தூவி...... (ஐங். 153-2)

என வரும் அடிகளில் ''உளர வொழிந்த தூவி'' என்னும் அடி ''தனது சிறகைக் கோதுதலானே உதிர்ந்த இறகு'' என்ற பொருளைத் தருவது. எனவே உளர என்னும் குறையெச்சம் காட்டும் தொழில் முன்னரும், அதுகொண்டு முடியும் ஒழிந்த என்னும் பெயரெச்சம் காட்டும் தொழில் பின்னரும் நடை பெறும் நிலையில் இக் குறையெச்சம் இறந்தகாலத்தைக் காட்டுவதாக உள்ளது.

செயவென் எச்சம்

''மயில்க ளாலக் குடிஞை யிரட்டுந்
துறுகல் லடுக்கத் ததுவே பணைத்தோ
ளாய்தழை நுடங்கு மல்குற்
காதலி யுறையு நனிநல் லூரே'' (ஐங். 291)

என வரும் அடிகளில் நிகழ்காலத்தைக் காட்டி நிற்கும். ஆல என்னும் குறையெச்சம் உணர்த்தும் தொழிலும், அது கொண்டு முடியும் வினையான இரட்டும் என்னும் பெயரெச்சம் உணர்த்தும் தொழிலும் ஒரே காலத்தில் நிகழ்வதைக் காண கிறோம்.

இனி,

"சுரும்புணக் களித்த புகர்முக வேழம்" (ஐங்.239-1)

(வண்டுகள் உண்டு மகிழும்படி காமவேகத்தாலே மதம் சொரியாநின்ற புள்ளிகளையுடைய முகமுடைய களிற்றி யானை)

எனத் தாக்கப்பொருளை உணர்த்தும் இடங்களில் எல்லாம் இவ்வெச்சம் காட்டும் தொழில் பின்னரும், இது கொண்டு முடியும் வினை காட்டும் தொழில் முன்னரும் நிகழ்ந்து எதிர் காலத்தைக் காட்டி நிற்கும்.

எனவே செயவென் எச்சம் மூன்று காலங்களையும் காட்டி வரும் என்பதும், அவை எச்சங்கள் காட்டும் பொருளை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் தெளிவு.

# 2

# 2.1 பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் -1, -அ

### 2.1.1 பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள்

பழந்தமிழில் —அ, இய, —இயர், —மார், —வான், —பான் ஆகிய விகுதிகள் குறையெச்ச விகுதிகளாகக் காணப் படுகின்றன. இவை அனைத்தும் உடன்பாட்டிலேயே வருதல் காணத்தக்கது.

### 2.1.1.1 தொல்காப்பியமும் உரையாசிரியர்களும்

தொல்காப்பியர் காலவெச்சங்கள் என்றும், குறையெச் சங்கள் என்றும் பிரித்துக் காணவில்லை என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது.

> "செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
> அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" சூத் 713

என்ற சூத்திரத்திலேயே இவர் எல்லா வினையெச்சங்களையும் அடக்குவார். இச் சூத்திரத்தில் செய்யிய, செய்யியர், செய என்ற மூன்று வாய்பாட்டுக் குறையெச்சங்களையும் குறிப் பிட்டுச் செல்லுவார் அவர். செய்மார் பற்றி அவர் இச் சூத்திரத்தில் குறிப்பிடவில்லை என்பதும், இதனால் இது

குறையெச்சமா என்ற வினா அறிஞர்களிடையே உண்டு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க செய்திகள். அகத்தியலிங்கம் (1972. 206-232. 1984: 94-102) சித்திரபுத்திரப்பிள்ளை (1981) போன்றவர்கள் செய்மார் போன்றவை முற்றுவினையாகவும், எச்சவினையாகவும் கொள்ளப்படவேண்டியவை எனக் கருது வர். ஆனால் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இதனை முற்றுவினை என்றே கருதுகின்றனர். எச்சவினையாக அவர் கள் கருதுவதில்லை. இது பற்றிப் பின்னர்க் காண்போம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் செய்யிய, செய்யியர், செய, செய்மார் ஆகிய எச்சங்கள் காணப்படுவதோடு தொல்காப்பியர் கூறிச் செல்லாத செய்வான், காண்பான் போன்ற குறையெச் சங்களும் காணப்படுகின்றன. ஆனால் இவ்வெச்சங்கள் மிக மிகக் குறைவாகவே உள்ளன. வான், ஐங்குறுநூறு, (1), நற்றிணை (1) பரிபாடல் (2), கலித்தொகை (1) சிலப்பதிகாரம் (1) ஆகியவற்றிலும், -பான் கலித்தொகையிலும் (1) காணப் படுகின்றன. இதனால்தான் தொல்காப்பியர் இது பற்றிக் குறிப்பிட்டுச் செல்லவில்லை போலும்.

எனினும் உரையாசிரியர்கள் அனைவரும் இவ்வீற்றெச்சங் கள் பற்றிப் பேசுவர். இது பற்றி முன்னரே (சங்கத்தமிழ், பகுதி 4, பக்கம் 34-49) விளக்கமாகக் குறிப்பிடப்பட்டது.

## 2.1.2 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியம் மேலே குறிப்பிட்ட மூன்று வாய்பாடு களையும் குறிப்பிடினும் செய்யிய, செய என்ற இரு வாய் பாட்டு வினையெச்சங்களே இதன்கண் காணப்படுகின்றன. எனவே அ, -இய என்ற இரு உருபுகளே இவ்விலக்கண நூலில் காணப்படுவதாகக் (க. பாலசுப்பிரமணியன், 1981) கொள்ள லாம்.

இவற்றுள்

-அ

(1) பல்வேறு வினையடிகளுக்குப் பின்னர் வருதல் காணலாம். இந்நிலையில் இது வல்வினையாயின் பகர ஒற்றுகளுக்குப் பின்னரும் சிறுபான்மை ககர ஒற்றுக்குப் பின்னரும் வரும்.

| | | |
|---|---|---|
| அட | பொருள் | 266.3 |
| அடங்க | பொருள் | 148.7 |
| அடைய | எழுத்து | 99.2 |
| உணர | எழுத்து | 35.2 |
| கொள்ள | பொருள் | 568.2 |

வல்வினைகளில் ககர (நிற்க போன்று) ஒற்று வருவது இயற்கையே. ஆனால் இடைவினைகளில் ககரம் வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இது சங்க இலக்கியங்களி லிருந்து மாறுபட்டிருத்தல் காணலாம். பதிற்றுப்பத்து ஒழிந்த எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் ககர ஒற்றுடன் இது வருகின்றது.

-இய

இதுவும்

(2) பல்வேறு வினையடிகளுக்குப் பின்னர் வருகின்றது எனினும் அகரத்தைப் போன்று இது பகர, ககர ஒற்றுக்களை அடுத்து வருவதில்லை. தொல்காப்பியத்தில் இரு இடங்களில் மட்டுமே இவ்வெச்சம் பயின்று வருதல் இங்குக் குறிப்பிடத் தக்கது.

| | | |
|---|---|---|
| ஆடிய | பொருள் | 113-5 |
| கருதிய | பொருள் | 88-1 |

### 2.1.3 பெரும்பான்மை விகுதி

பழந்தமிழ் இலக்கியங்களில் -அ, -இய, -இயர், -மார், -வான், -பான் ஆகிய ஆறு உருபுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில் முன்னூற்று இருபத்தாறு இடங்களில் அகரம் காணப்பட, பன்னிரண்டு இடங்களில் -இயர் காணப்படுகிறது. இதுபோன்றே -இய குறைவாக வருவதும் (7) கவனிக்கத்தக்கது. இந்நிலையை முன்பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் காணலாம். -இயர், -இய,

-மார், -வான், பான் ஆகியவை பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படினும் அகரத்தை நோக்க இவை மிகக் குறைவாகவே உள்ளன. இதனைக் கீழ்வரும் பட்டியல் காட்டும்.

| —அ | —இய | —இயர் | —வான் | —பான் | —மார் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 7037 | 159 | 55 | 6 | 1 | 78 |

இந்நிலையில் செய என்னும் வாய்ப்பாட்டு எச்சம் மிக அதிகமாக வருவதும் அதனைத் தொடர்ந்து முறையே —இய —மார், —இயர் போன்றவை வருவதும் காணத்தக்கன. —வான், —பான் ஆகியவை மிக மிகக் குறைவாகவே உள்ளன.

2 1 4.—அ

குறையெச்சம் காட்டும் உருபுகளில் மிக அதிகமாகக் காணப்படுவது இதுவேயாகும். எடுத்துக்காட்டாக, பதிற்றுப் பத்தில் இது 326 இடங்களில் வர —இயர் 12 இடங்களிலும் —இய 7 இடங்களிலும் — மார் 3 இடங்களிலும் மட்டுமே வருதல் இங்கு குறிப்பிடத்தக்கது. இதே போன்றுதான் பிற இலக்கியங்களிலும் இவ்வுருபு காணப்படுகிறது. முன் பழந் தமிழ் நூல்களில் மட்டுமன்றிப் பின் பழந்தமிழ் நூல்களிலும் இந்நிலையைக் காணுகிறோம். பின் பழந்தமிழ் நூல்களில் அகரம் மிக அதிகமாக்க் காணப்படுவதோடு மட்டுமன்றிப் பிற வாய்பாட்டு எச்சங்கள் அருகிப்போவதையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாகக் கலித்தொகையில் செயவென் வாய்பாட்டு எச்சம் 762 இடங்களில் காணப்பட, செய்யிய எச்சங்கள் 30 இடங்களிலும் செய்யியர் ஒரு இடத்திலும் செய்ம்மார் 12 இடங்களிலும் வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இது போன்றே இடைக்காலத் தமிழிலும் செயவென் வாய்பாட்டு எச்சத்தின் ஆதிக்கத்தினைக் காண முடிகிறது. அப்பர் தேவாரத்தில் இவ்வாய்பாட்டு எச்சம் 1627 இடங்களில் காணப் பட, பிற வாய்பாட்டு எச்சங்கள் 200-க்கும் குறைவாகவே உள்ளன. இதே நிலையினைத்தான் கம்பராமாயணத்திலும் காணுகிறோம். 8671 இடங்களில் இவ்வாய்பாடு காணப்பட மீதி வாய்பாட்டு எச்சங்கள் 200-க்கும் குறைவாகவே உள்ளன

இந்நிலையில் தமிழ்மொழியில் இவ் எச்சத்தின் பங்கினை நன்கு உணரமுடியும்.

### 2.1.4.1 உரையாசிரியர்கள்

தொல்காப்பியர் இவ்வாய்பாட்டு எச்சம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை முன்னரே கூறப்பட்டது,

இதற்கு உதாரணம் கூற வந்த இளம்பூரணர் (228)

மழை பெய்யப் பயிர் எழுந்தது

எனவும் சேனாவரையர் (228)

மழை பெய்யக் குளம் நிறைந்தது
ஞாயிறு பட வந்தான்
உண்ண வந்தான்

என்பவற்றையும், நச்சினார்க்கினியர் (230)

மழை பெய்யக் குளம் நிறைந்தது
குளம் நிறைய மழை பெய்தது
ஞாயிறு பட வந்தான்
வாழச்செய்த நல்வினை உலகம்
உண்ண வந்தான்

என்பவற்றையும், தெய்வச்சிலையார் (225)

மழை பெய்யப் புகழ் பெறும்
மழை பெய்யப் புகழ் பெற்றது
வாழச் செய்த நல்வினை அல்லா, தாழுங்காலை
புணை பிறிதில்லை.
மழை பெய்ய எழுந்தது
மழை பெய்யக் குளம் நிறைந்தது
மழை பெய்ய வந்தான்
மழை பெய்யப் பலி கொடுத்தும்

என்பவற்றையும், கல்லாடர் (230)

மழை பெய எழுந்தது
மழை பெய்யக் குளம் நிறைந்தது
மழை பெய்யக் குளம் நிறையும்

என்பவற்றையும் தருவர்.

### 2.1.4.1.1 உரையாசிரியர்களும் காலமும்

இவ் உரையாசிரியர்கள் அனைவரும் எச்சம் பலவேறு காலங்களில் வரும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இவற்றைத் தருவதும், இவை என்னென்ன காலங்களைக் காட்டும் எனக் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சில நேரங்களில் இவர்கள் முன்னர்க் குறிப்பிட்டது போன்று இவ்வெச்சம் காரணப் பொருளாயும் காரியப் பொருளாயும் அதற் பொருட்டாயும் (நச்.230) வரும் எனக் கூறுவர். எனினும் இவர்கள் காலம் பற்றிக் கூறுவதை முக்கியமாகக் கொண்டனர் எனக் குறிப்பிடலாம்.

இதனைத் தெய்வச்சிலையார் 221-ஆம் சூத்திரத்திற்குப் பொருள் கூறும்போது "வினையெச்சமாவது மற்றொரு வினைச் சொல்லோடல்லது முற்றுப்பெறாது நிற்கும். வினைச் சொல்லாவது பால் உணர்த்தாது காலம் காட்டி நிற்கும். செய்து என்பது இறந்தகாலம் காட்டும்......செய என்பது மூன்று காலத்திற்கும் பொதுவாகிப் பொருள் வேறுபாடு உடைத்து" என்றெல்லாம் கூறிச் செல்லுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

இளம்பூரணர் காலத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை.

ஆனால் சேனாவரையரோ ஒவ்வொரு எச்சத்தையும் பற்றிக் குறிப்பிடும்போது காலம் பற்றிக் குறிப்பிடுதல் காணலாம். செய்ய எனும் வாய்பாட்டு எச்சத்தைப் பற்றிக் குறிப்பிடும்போதும்

"மழை பெய்யக் குளம் நிறைந்தது;

ஞாயிறு பட வந்தான்; என மூன்று காலமும் பற்றி வரும்" எனக் குறிப்பிடுவதும், நச்சினார்க்கினியர்,

"இனி அகரம் இறந்தகாலத்துக்கண்; மழை பெய்யக் குளம் நிறைந்தது எனக் காரணப்பொருளையும்......இனி நிகழ் காலத்துக்கண்,ஞாயிறுபட வந்தான் என்பது..." என்றெல்லாம் கூறிச் செல்லுவதும் இங்கு நினைவு கூரத்தக்கன.

தெய்வச்சிலையாரும் செயவென் எச்சம் மூன்று காலத்தையும் காட்டும் எனக் குறிப்பிடுவார். இதற்கு உதாரணம் தரும் போது

> மழை பெய்யப் புகழ் பெற்றது
> வாழச்செய்த நல்வினை அல்லா தாழுங்காலை புணை பிறிதில்லை
>
> மழை பெய்ய எழுந்தது

என்பவற்றைத் தருவார். கல்லாடரும்

> மழை பெய்யக் குளம் நிறைந்தது
> மழை பெய்யக் குளம் நிறையும்
> மழை பெய்யச் சாத்தன் வந்தான்

ஆகியவற்றை உதாரணமாகத் தருவார். இந்நிலையில் உரையாசிரியர்கள் இவ்வாய்பாட்டு வினையெச்சம் எல்லாக் காலங்களிலும் வரும் என்று கருதினர் என எண்ணலாம்.

## 2.1.4.1.2 சூழல்

இது

1. வினையடிகளுக்குப் பின்னரும்
2. பிறவினை காட்டும் உருபுகளுக்குப் பின்னரும்
3. காரண வினை உருபுகளுக்குப் பின்னரும் வருதல் காணலாம்.

## 2.1.4.2.1 வினையடிகளுக்குப் பின்னர்

இவ்வுருபு மெல்வினையாயின் வினையடிகளுக்குப் பின்னரும், வல்வினையாயின் பகர ஒற்றுகளை அடுத்தும், சிறுபான்மை ககர ஒற்றுகளை அடுத்தும் வருதல் காணலாம். தொல்காப்பிய உரையாசிரியர்களும் இதுபற்றிக் கூறிச் செல்லுதல் இங்கு குறிப்பிடத்தக்கது. சேனாவரையர் (228) "உரைப்ப, உரைக்க என ஏற்றவழி பகரமும் ககரமும் பெறுதல் கொள்க" எனவும் நச்சினார்க்கினியர் இவரை ஒட்டி (230) "உரைப்ப, உரைக்க என ஏற்புழி பகரமும் ககரமும் வரும்" எனவும் கூறுதல் காண்க.

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் எடுத்து நோக்கின் வல்வினைகளில் பகர ஒற்றே அதிகமாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, அகநானூற்றில் ஆயிரத்து இருநூற்று எழுபது இடங்களில் இவ்வாய்பாட்டு எச்சம் வர 1031 இடங்கள் மெல்வினையாக உள்ளன. எஞ்சி உள்ள 184 இடங்களில் 182 இடங்களில் பகரம் வர, இரு இடங்களில் நிறுக்க 198-2 (பரணர்) பரக்க 15-14 (மாமூலனார்) மட்டுமே ககர ஒற்று வருகிறது. இதே நிலையினைத்தான் பிற இலக்கியங்களிலும் காணுகிறோம். ஐங்குறுநூற்றில் இவ்விகிதம் 44:1 ஆகவும், நற்றிணையில் 82:1 ஆகவும், குறுந்தொகையில் 27:2, புறநானூற்றில் 117:11 ஆகவும் இருக்கக் காண்கிறோம். பதிற்றுப் பத்தில் 45 இடங்களில் பகர ஒற்று வர, ககர ஒற்றே காணப்படுவதில்லை.

முன்பழந்தமிழ் நூலில் நிலைமை இவ்வாறு இருக்க, பின் பழந்தமிழ் நூல்களிலோ நிலைமை சிறிது மாறி இருக்கக் காணலாம். திருக்குறளில் 19 இடங்களில் பகர ஒற்று வர, ஒன்பது இடங்களில் ககர ஒற்று வருகிறது. இந்நிலையைச் கீழ்வரும் பட்டியல் நன்கு காட்டும்.

—அ

| | -ø- | -ப்(ப்)- | -க்(க்)- |
|---|---|---|---|
| பதி | 258 | 54 | 0 |
| ஐங் | 225 | 44 | 1 |
| அகம் | 1031 | 182 | 2 |
| நற் | 492 | 82 | 1 |
| குறு | 216 | 27 | 2 |
| புறம் | 638 | 117 | 11 |
| பத்து | 649 | 151 | 1 |
| பரி | 298 | 38 | 4 |
| கலி | 622 | 106 | 2 |
| குறள் | 189 | 19 | 9 |
| சிலம்பு | 665 | 95 | 12 |
| மணி | 453 | 68 | 12 |

### 2,1.4.2.1.1 மெல்வினைகளுக்குப் பின்னர்.

| | | |
|---|---|---|
| அழிய | கெடுமாறு | பதி 13—10 |
| கலங்க | கலங்கும்படி | ஐங் 376—3 |
| உக | உதிர | அகம் 21—11 |
| அகல | நீங்க | நற் 18—1 |
| தூங்க | பெய்யாநிற்ப | குறு 205—1 |
| அவிய | அடங்க | புறம் 98—1 |
| இயம்ப | கூவ | பத்து 6—673 |
| காண | காணும்படியாக | பரி, 20—59 |
| கொள்ள | கொள்ளும்படி | கலி 27—17 |
| உணர | அறியும் வண்ணம் | குறள் 650 |
| பூசலிட | புலம்புதலால் | சிலம்பு 19—33 |
| கெட | திரும்படி | மணி 12—120 |

### 2.1.4.2.1.2 வல்வினைகளுக்குப் பின்னர்

#### அ. பகர ஒற்றுக்களுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| ஒலிப்ப | ஒலிக்க | பதி 31—4 |
| பூப்ப | மலரும்படி | ஐங் 448—3 |
| அகைப்ப | தளிர்க்குமாறு | அகம் 345—13 |
| காப்ப | காத்து நிற்ப | நற் 399—7 |
| ஆர்ப்ப | ஒலிக்க | குறு 15 1 |
| அழைப்ப | அழைக்கும்படி | புறம் 98—8 |
| உவப்ப | மகிழும்படி | பத்து 6—219 |
| ஆர்ப்ப | முழங்காநிற்ப | பரி 7· 79 |
| இசைப்ப | ஒலியாநிற்க | கலி 34—16 |
| மோப்ப | முகர | குறள் 90 |
| இருப்ப | இராநிற்ப | சிலம்பு 22—11 |
| கொடுப்ப | கொடுத்து ஏவ | மணி 23—48 |

#### ஆ. ககர ஒற்றுக்களுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| மறக்க | மறந்திருக்க | ஐங் 470 - 5 |
| நிறுக்க | அடக்க | அகம் 198—2 |
| நடக்க | நடக்க | நற் 384—8 |

| | | |
|---|---|---|
| ஆர்க்க | ஆரவாரிக்க | குறு 17—3 |
| உரைக்க | சொல்ல | புறம் 28—7 |
| எடுக்க | சுமக்க | பத்து 6—215 |
| சிந்திக்க | நினைக்குமளவில் | பரி 20—68 |
| கரும்பு ஈர்க்க | கரும்பை எழுத | கலி 143—32 |
| நிற்க | பார்த்துநிற்க | குறள் 708 |
| கடக்க | கடந்து போதற்கு | சிலம்பு 16—57 |
| அனுமிக்க | துணிய | மணி 29—101 |

### 2.1.4.2.2. பிறவினைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| மாற்ற | மாற்ற | பதி 51—35 |
| அலைப்ப | வருத்துதலான் | ஐங் 496—2 |
| அடக்க | தணிக்க | அகம் 126—14 |
| (நாறுமுடி) அழுத்த | (நாற்றுமுடிகளை) நடுதற்கு | நற் 60—7 |
| ஆட்ட | அலைக்க | குறு 316—5 |
| அகற்ற | அகலச்செய்ய | புறம் 26—3 |
| காட்ட | காட்டிச்செல்ல | பத்து 7—177 |
| அவிழ்ப்ப | அவிழ்த்தலால் | பரி 18—36 |
| கூட்ட | கூட்டுகையினாலே | கலி 31—7 |
| மாற்ற | ஒழிக்க | குறள் 609 |
| ஒழிக்க | ஒழிக்க | சிலம்பு 10—173 |
| அடக்க | அடக்கி மறைத்துக் கொள்ளுதலாலே | மணி 5—124 |

### 2.1.4.2.3. காரணவினைகளுக்குப் பின்னர்

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் நோக்க இரு இடங்களில் மட்டுமே இவ்வுருபு காரணவினைகளுக்குப் பின்னர் வரக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| (விளி) ஏற்பிக்க | (கேட்கும்படி) கூவாநிற்ப | பரி 19—61 |
| உறுவிக்க | புணர்த்துதற்கு | மணி 30—87 |

### 2. 1. 4. 3. பொருள்

குறையெச்சம் என்னென்ன பொருள்களில் வருகின்றது என்பது ஆராயத் தக்கதாகும். இது பற்றி இளம்பூரணரோ

சேனாவரையரோ எதுவும் கூறுவதில்லை. ஆனால் நச்சினார்க்கினியர் இது காரணப் பொருளிலும் காரியப் பொருளிலும் உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும் என்று குறிப்பிடுவார். "இனி அகரம் இறந்த காலத்துக்கண் மழை பெய்யக் குளம் நிறைந்தது எனக்காரணப் பொருளாயும், குளம் நிறைய மழை பெய்தது எனக்காரியப் பொருளாயும் வரும்" எனக் கூறிக் காரணப் பொருள், காரியப்பொருளைக் காட்டுவார். உடனிகழ்ச்சிப் பொருள் என இவர் குறிப்பிடவில்லை. எனினும் "இனி, நிகழ்காலத்துக்கண் ஞாயிறு படவந்தான் என்பது, நிகழாநிற்க வந்தான் என்னும் பொருட்டாய் வரும்" எனக்குறிப்பிடுவார். இதே நிலையினைக் கல்லாடனாரிடமும் காணலாம்.

இது சங்க இலக்கியங்களில் பல்வேறு பொருள்களில் வரும். தாக்கப்பொருள், நோக்கப் பொருள், உடனிகழ்ச்சிப் பொருள், காரணப்பொருள். வரிசைப்பொருள், வினையடைப் பொருள் ஆகிய பொருள்களில் வருதல் காணலாம். மட்டுமன்றி இவ்வெச்சம் தலைமைவினையாகவும், தொழிற்பெயராகவும் சில இடங்களில் வந்துள்ளமையைக் காண்கிறோம்.

### 2.1.4.3.1. தாக்கப்பொருள்

பல்வேறு பொருள்களில் இது வரினும் தாக்கப்பொருளிலும் உடனிகழ்ச்சிப் பொருளிலுமே மிக அதிகமாக வந்துள்ளது. எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் தாக்கப்பொருளில் 122 இடங்களிலும், உடனிகழ்ச்சிப் பொருளில் 130 இடங்களிலும், காரணப்பொருளில் 32 இடங்களிலும் இது வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பட்டியல் 3). இதுபோன்றே ஐங்குறுநூற்றில் தாக்கப் பொருளில் 152 இடங்களில் வர அதனை அடுத்து 59 இடங்களில் உடனிகழ்ச்சிப் பொருளிலும், 28 இடங்களில் காரணப்பொருளிலும், 16 இடங்களில் நோக்கப் பொருளிலும் வந்துள்ளது.

பதிற்றுப்பத்தில்

"மன்னுயி ரழிய யாண்டுபல மாறித்
தண்ணிய லெழிலி தலையா தாயினும்"
(பதி. 20-25)

என வரும் அடிகளில் இவ்வெச்சம் தாக்கப்பொருளைக் காட்டி நிற்கும். உரையாசிரியர்.

"குளிர்ப்பினைச் செய்யும் மழை முகில் நிலைபெற்ற உயிர்கள் அழியுமாறு பல யாண்டுகள் பெய்து குளிர்ப்பிக்கும் செயலின் நீங்கி மழையினைப் பெய்யா தொழியுமாயினும்" எனப் பொருள் எழுதுதல் காண்க.

இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

"இருநிலங் குளிர்ப்ப வீசி யல்கலு
மரும்பனி அளைஇய வற்சிரக் காலை" (ஐங். 47-01)

என வரும் அடிகளுக்குப் பொருள் எழுதும் உரையாசிரியர்

"பெரிய இந்நிலம் குளிர்ந்து போகும்படி மழையையும் காற்றையும் வீசி நாடோறும் பொறுத்தற்கரிய பனியும் கலக்கப் பெற்ற இந்த பனிப்பருவம்" எனப் பொருள் எழுதுவார். இங்கும் குளிர்ப்ப என்னும் குறையெச்சம் தாக்கப் பொருள் காட்டுவதைக் காண்கிறோம்.

இதுபோன்றே அகநானூற்றில்

"உயங்குபடர் அகல முயங்கித் தோள்மணந்
தின்சொல் லளைஇப் பெயர்ந்தனன் தோழி"
(அகம். 102-14)

(வருந்தும் துன்பம் நீங்க அணைத்துத் தோளினைக் கூடி இன்சொற்களைக் கலந்து பேசிச் சென்றனன்) எனவும், நற்றிணையில்

"முளிகொடி வலந்த முள் அரை இலவத்து
ஒளிர்சினை அதிர வீசி விளிபட
வெவ்வளி வழங்கும் வேய்பயில் மருங்கின்"
(நற். 105-1)

(காய்ந்த கொடிகள் சுற்றிய முட்கள் பொருந்திய அடியையுடைய இலவமரத்தின் விளங்கிய கிளைகள் நடுங்கும்படி வீசி அவை முறியுமாறு கொடிய காற்று மோதியடிக்கின்ற மூங்கிற்புதர் நெருங்கிய இடங்களிலே) எனவும், குறுந்தொகையில்

"அமிழ்துபொதி செந்தா அஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையை
(குறு. 14-1)

(அமிழ்தத்தின் தன்மையைத் தன்னிடத்தே கொண்ட செவ்விய நாவானது அஞ்சும்படியாக முளைத்தெழுந்த ஒழுங்குபட்டு விளங்காநின்ற கூர்த்த பற்களையும்)
எனவும், புறநானூற்றில்

"இரும்புமுகஞ் சிதைய நூறி யொன்னார்
இருஞ்சமங் கடத்த லேனோர்க்கு மெளிதே"
(புறம். 309-1.)

(இரும்பாலாகிய வேல், வாள் முதலிய படைகள் வாய் மடிந்து ஒடியும்படியாகப் பகைவரைக் கொன்று அவரது கடத்தற்கரிய போரை வஞ்சியாது செய்து வெல்லுதல் ஏனை வீரர் எல்லார்க்கும் எளிதாகும்) எனவும்,
பத்துப்பாட்டில்

"அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்"
(பத்து. 1-59)

(அவுணருடைய நல்ல வெற்றி இல்லையாம்படி கீழ்நோக்கின பூங்கொத்துகளையுடைய மாமரத்தை வெட்டின குற்றமில்லாத வெற்றியினையும், ஒருவராலும் அளந்தறிய வொண்ணாத நல்ல புகழினையும், செவ்விய வேலையும் உடைய முருகக்கடவுள்)
எனவும், பரிபாடலில்

"மூவகை, ஆரெயில் ஓரழல் அம்பின் முளிய
மாதிரம் அழலவெய் தமரர் வேள்விப்
பாக முண்ட பைங்கண் பார்ப்பான்"
(பரி 5-25)

(வெள்ளியும் பொன்னும் இரும்புமாகிய மூவகை உலோகங் களாலாகிய வெல்லுதற்கரிய முப்புரம் என்னும் மதில்கள் ஒப்பற்றதொரு தீக்கணையை வேகும்படியும் திசைகள் வெதும் பும்படியும் எய்து அழித்து, தக்கன் தேவர்க்குச் செய்த வேள்விக்

கண் அவியுணவை உண்டபசிய கண்ணையுடைய சிவபெருமான்) எனவும், கலித்தொகையில்

"அன்னையோ, மண்டமரட்ட களிறன்னான் தன்னையொரு
பெண்டிரருளக் கிடந்த தெவன்கொலோ"

(கலி.61-19)

(அம்மவோ! மிக்குச் செல்கின்ற போரிலே பகைவரைக் கொன்ற களிறு போல்வான்றன்னை ஒரு மகளாயிருக்கின்றவள் அருளும் படியாகக் கிடந்த குறை எத்தன்மையதோ தான்?)
எனவும், திருக்குறளில்

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள்.67)

(தந்தை புதல்வனுக்குச்செய்யும் நன்மையாவது கற்றாரவையின்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியுடையனாக்குதல்)
எனவும், சிலம்பில்

"வேந்துதலை பனிப்ப ஏந்துவாட் செழியன்"

(சிலம்பு 15-5)

(பகையரசர்கள் தலை நடுங்கும் வண்ணம் வாளினை ஏந்திய பாண்டியனது)

### 2.1.4.3.2 உடனிகழ்ச்சிப் பொருள்

இப்பொருளிலும் செயவென் வாய்பாட்டு எச்சம் அதிகமாக வருதல் உண்டு. உரையாசிரியர்கள் பலரும்

ஞாயிறு பட வந்தான்

போன்ற உதாரணங்களைத் தந்து நிற்பது நோக்கத்தக்கது. பொதுவாக இவர்கள் உடனிகழ்ச்சிப் பொருள் என்று கூறாவிடினும் நிகழ்காலத்திற்காக இவ்வுதாரணங்கள் தந்து நிற்பர். சேனாவரையர்

ஞாயிறுபட வந்தான்

என்பதையும், அவரை அடுத்து நச்சினார்க்கினியர் அதே உதாரணத்தையும், தெய்வச்சிலையார்

மழை பெய்ய வந்தான்

என்பதையும் தந்து நிற்பர். கல்லாடனார் இவ்வெச்சத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பல்வேறு பொருள்களைக் குறிப்பிடுவதும்

மழை பெய்ய சாத்தன் வந்தான்

என்ற உதாரணத்தைத் தந்து, பின்னர் "உடனிகழ்ச்சியாய் நிகழ்த்தற்கண் இடப்பொருட்டாயும் பிறவாற்றாயும் வரும என்பது". எனக் கூறி நிற்பர். பிற உரையாசிரியர்கள் உடனிகழ்ச்சிப் பொருள் என்று குறிப்பிட்டுக் கூறாவிடினும் இதனை நன்கு மனத்தில் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகும்.

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் உடனிகழ்ச்சிப் பொருள் பெருவாரியாக வருதல் காணலாம். இதனைக் கீழ்வரும் பட்டியல் நன்கு காட்டும்,

| | | | |
|---|---|---|---|
| பதி | 130 | பத்து | 256 |
| ஐங் | 59 | பரி | 195 |
| அகம் | 392 | கலி | 196 |
| நற் | 176 | குறள் | 43 |
| குறு | 77 | சிலம்பு | 260 |
| புறம் | 340 | மணி | 111 |

கீழ்வரும் எடுத்துக்காட்டுக்களில் செயவென் எச்சம் உடனிகழ்ச்சிப் பொருளில் வருவதைக் காணலாம்.

"பாண்டில் விளக்குப் பருஉச்சுட ரழல
நன்னுதல் விறலிய ராடும்
தொன்னகர்... ... ..." (பதி. 47-6)

என வரும் பதிற்றுப்பத்து அடிகளில் அழல, ஆடும் ஆகிய இரு வினைகளும் உடன் நிகழ்ச்சியாய் வந்துள்ளன.

"கால் விளக்கினது பருத்த திரியானது பேரொளி காட்டி
எரிய நல்ல நெற்றியையுடைய விறலியர் கூத்தாடும்
பழைமையான மாளிகையையுடைய ஊர்..."

எனப் பொருள் எழுதுவார் உரையாசிரியர்

இது போன்றே ஐங்குறுநூற்றிலும்

"பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுத லரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே" (ஐங். 408)

எனவரும் அடிகளில் பாட, மலைய இருந்தனன் ஆகிய வினைகள் ஒரே சமயத்தில் நிகழும் செயல்களைக் குறிப்பிடுதல் காணலாம்,

இதுபோன்றே அகநானூற்றில்

"ஈன்றணி இரும்பிடி தழீஇக் களிறுதன்
தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப
... ... ... ... ... ...கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்மழை உரறக்
கானவர் மடிந்த கங்குல்" (அகம். 168-9)

(களிறு ஈன்ற அணிமையையுடைய பெரிய பிடியினைத் தழுவிக் கொண்டு தனது அசைந்த நடையினையுடைய குழவி உறங்குகின்ற இடத்தைக் காத்திருக்க, தறுகண்மையையுடைய வாள் போன்ற வரியினையுடைய வலிய புலி... ... ...மலையின் குகையிடத்தில் முழங்க வேட்டுவரும் துயிலும் நள்ளிரவில்) எனவும், நற்றிணையில்

"கழைபாடு இரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று"
(நற். 95-1)

(பக்கத்திலே குழலொலிப்பப் பல வாச்சியங்களுமுழங்க ஆடுகின்ற கழைக்கூத்தி நடந்த முறுக்குண்ட புரியையுடைய வலிய கயிற்றின் மீது)

எனவும், குறுந்தொகையில்

"குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்" (குறு. 167-3)

(குவளை மலர் போன்ற மையுண்ட கண்களிலே தாளிப்பாலுண்டாய புகை கதுவாநிற்பத் தானே துழாவிச் சமைத்த புளிப்பையுடைய குழம்பை)

எனவும், புறநானூற்றில்

"... ... ... விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே" (புறம். 109-16)

(விறலியர் பின்னே வர ஆடினிராய்ப் பாடினிராய்ச் செல்லின் அவன் நுமக்கு நாட்டையும் மலையையும் கூடத் தருவன்)
எனவும், பத்துப்பாட்டில்

"குழலகவ யாழ்முரல்
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து" (பத்து. 9-156)

(வங்கியம் இசைப்ப யாழ் ஒலிப்ப முழவு முழங்க முரசு முழங்க எடுத்த திருநாள் நீங்காத அகன்ற அங்காடித் தெருவின்கண்)
எனவும், பரிபாடலில்

"..........மடமயில் அகவக்
குருகிலை உதிரக் குயிலினங் கூவப்
பகர்குழல் பாண்டில் இயம்ப அகவுநர்
நாநவில் பாடல் முழவெதிர்ந் தன்ன
சிலம்பிற் சிலம்பிசை ஓவா தொன்னார்க்
கடந்தட்டான் கேழிருங் குன்று"... (பரி. 15-40)

(மயில்கள் இருந்து அகவாநிற்ப, குயில்கள் குருக்கத்தியின் இலைகள் உதிரும்படி அதன்கட் புகுந்திருந்து கூவாநிற்ப சுருதியை உணர்த்துகின்ற குழலும் தாளமும் இயம்ப அவ்வோசையினைப் பாடுவாரது மிடற்றுப்பாடல் முழவு என்னும் இவற்றின் இசை சென்று எதிர்ந்தாற் போன்று அவுணரை நேர்நின்று போர் செய்து கொன்றவனது நிறத்தை யுடைய குன்றத்தின்கண் முழைஞ்சில் முழங்குகின்ற எதிரொலி ஒழியாது).

எனவும், கலித்தொகையில்

"தொய்யில் துறந்தா ரவரெனத் தம்வயின்
நொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் னுயிர்" (கலி. 24-15)

("அவன் மார்பிற் றொய்யிலை நீங்காதவர் இப்போது துறந்தா' ரென்று நொய்ய மகளிர் கூறும் பழி தம்மிடத்தே நிற்ப, என்னுயிர் தம்மோடே கூடப் போயிற்றென்று சொல்) எனவும், திருக்குறளில்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள். 100)

(அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன்கூறுதல் இனிய கனிகளும் தன்கைக்கணுளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோ டொக்கும்)

எனவும், சிலம்பில்

"பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி"
(சிலம்பு. 7-2 6-1)

(பூக்கள் நிறைந்த சோலையில் மயில்கள் ஆடவும், குயில் கள் விரும்பி இசை பாடவும், விருப்பம்பொருந்திய மாலைகள் அருகில் அசையவும் நடந்தாயாகலாற் காவேரி நீவாழ்வாயாக) எனவும், மணிமேகலையில்

"வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர் ...——— (மணி. 19-59)

(குயில்கள் இனிய மிடற்றுப் பாடலைப் பாடாநிற்பவும் நீல மயில்கள் விறலியர் போன்று கூத்தாடுகின்ற நறுமணம் கமழ் கின்ற மலர்க்கொடிகளாலியன்ற ஆடலரங்கு போன்ற பந்தர்) எனவும்' வரும் இடங்களில் எல்லாம் இவ்வெச்சம் உட னிகழ்ச்சிப் பொருளைக் காட்டி வந்துள்ளது.

### 2.1.2.3.3. நோக்கப்பொருள்

செயவென் எச்சம் நோக்கப்பொருளிலும் வருதல் காணலாம் இதனைக் கல்லாடர் "அதற்பொருட்டென்னும் பொருட்டாயும்" என்று கூறி

மழை பெய எழுந்தது"

என்ற உதாரணத்தைத் தருவார். வேறு உரையாசிரியர்கள் இது பற்றிக் கூறுவதில்லை. செயவென் எச்ச வாய்பாடு இப் பொருளில் ஏனைய பொருள்களைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையிலேயே வந்துள்ளது. (காண்க. பட்டியல்-3) பதிற்றுப்பத்தில்

''மன்பதை காப்ப வறிவு வலியுறுத்தும்'' (பதி. 72-5)

என வரும் அடியில் காப்ப என்னும் குறையெச்சம் நோக்கப் பொருளை உணர்த்துவதாக உள்ளது ''மக்கட் கூட்டத்தைப் புரத்தற்கு வேண்டும் நெறிமுறைகளை அறிவுறுத்தும்'' என உரையாசிரியர் பொருள் எழுதுதல் காண்க. இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

''நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே'' (ஐங். 294-4)

என வரும் அடிகளுக்குப் பொருள் எழுதும் உரையாசிரியர் ''எம்பெருமாட்டியின் நல்ல மங்கலமனைக் கண்ணே இம் மங்கலச் செயல் நிகழ்தற்கு ஏதுவாகப் பண்டு களவின்கண் பிறர் அறியாமல் இவளுடைய பின்னப்பட்ட கரிய கூந்தலிலே மலர் அணிந்த நீயே'' என்று எழுதிச் செல்லுவார்- எனவே இங்கும் இவ்வெச்சம் நோக்கப்பொருளைத் தருதலைக் காண் கிறோம்.

அகநானூற்றில்

''கரியாப் பூவிற் பெரியோர் ஆர
அழலெழு தித்தியம் மடுத்த யாமை''

(அகம். 361-10)

(வாடாத பூவினையுடைய தேவர் உண்டற்பொருட்டு அழல் ஓங்கிய வேள்விக் குண்டத்தின்கண் இடப்பெற்ற யாமை) எனவும், நற்றிணையில்

''நெய்த்தலைக் கொழுமீன் அருந்த இனக்குருகு
குப்பை வெண்மணல் ஏறி அரைசர்
ஒண்படைத் தொகுதியின் இலங்கித் தோன்றும்''

(நற். 291-2)

(நிணமிக்க தலைமையுடைய கொழுத்த மீனை அருந்தவேண்டி நாரையினம் குவிந்த வெளிய மணல்மேட்டில் ஏறியிருந்து அரசரது ஒள்ளிய காலாட்படையின் கூட்டம் போல இலங்கித் தோன்றும்)

எனவும், குறுந்தொகையில்

"அன்னள் அளியள் என்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் இன்னுயிர் குறித்தே"

(குறு. 216-5)

(கரிய முகில் அத்தகைய துன்பநிலையினள். இரங்கத்தக்காள் என்று கருதாது எனது இனிய உயிரைக் கொள்ள எண்ணி மழை பெய்தற்கு முழங்கி மின்னுதலைச் செய்யாநிற்கும்)

எனவும், புறநானூற்றில்

"இனைய லகற்றவென் கிணைதொடாக் குறுகி"

(புறம். 377-3)

(யான் எனது வறுமை வருத்தம் நீக்கக் கருதி என் தடாரிப் பறையை இசைத்துக் கொண்டு சென்று)

எனவும், பத்துப்பாட்டில்

"துகிலணி அல்குல் துளங்கியல் மகளிர்
அகிலுண விரித்த அம்மென் கூந்தலின்"

(பத்து. 3-262)

(மெல்லிய தோளினையும் துகில் சூழ்ந்த அல்குலினையும் அமைந்த சாயலினையும் உடைய மகளிர்கள் அகிற் புகையை ஊட்டுதற்கு விரித்த அழகும் மென்மையுமுடைய கூந்தல் போலே)

எனவும், பரிபாடலில்

"ஏரணி யணியி னிளைஞரு மினியரும்
— — ... — — — ... — ... — ... —
— — — ... — — — — ... — ... — ...
அடுபுன லது செல வவற்றை யிழிவர்" (பரி. 6-27)

(அழகாக அணியப்பட்ட அணிகலன்களை இளமையுடைய ஆடவரும் அவர்க்கு இனியராகிய மகளிரும் கரை முதலியவற்றை இடிக்கும் அவ் வையையாற்றின் வெள்ளத்தினூடே புகுதற் பொருட்டு அவ்வணிகலன்களை நீக்கி) எனவும், கலித்தொகையில்

''ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு
காலத்தில் தோன்றிய கொண்மூப்போல்...'
(கலி. 82-1)

(உலகம் வற்கடம் நீங்கும்படி பெய்தற்குக் கிழக்கே எழுந்து கூதிர்காலத்தே தோன்றிய மேகம் போல)
எனவும், திருக்குறளில்

''கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்'' (குறள். 1021)

(தன் குடிசெய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமம் முடியாமையின் எண்ணிய கருமஞ் செய்தற்கியான் கையொழியேனென்னும் ஆள்வினைப் பெருமைபோல ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை)

எனவும், சிலப்பதிகாரத்தில்

''இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென''
(சிலம்பு. 5-212)

(பெரிய நிலத்தினையுடைய அரசர்க்குத் தனது பெரிய வளத்தினைக் காட்ட வேண்டிஇலக்குமி வந்து புகுந்திருப்பது இந்தச் செழுமையுடைய நகராகுமெனக் கருதி)
எனவும், மணிமேகலையில்

''பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்
தீவினை உருத்தலின் செருக்கொடு சென்றேன்''
(மணி. 17-32)

(பூக்கள் மணக்கின்ற பொய்கையின்கண் நீராடச் சென்றானாக தீய என் பழவினை தன் பயனையூட்டுஞ் செவ்வி பெற்று வந்துற்றமையாலே அளியேன் வழியைப் பார்த்துப் போகாமல் களிப்பொடு அங்குமிங்கும் பார்த்துச் சென்றேனாதலின்)

எனவும் வரும் இடங்களில் இது நோக்கப்பொருளில் வருதல் காணலாம்.

இப்பொருளில் செயவென் வாய்பாட்டு உருவு வரும்போது செயவென் வாய்பாடும் அது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டும் வெவ்வேறு எழுவாய்களைக் கொண்டும் நிற்றல் காணலாம். எனினும் பிற பொருள்களில் ஒரே எழுவாயைக் கொண்டு வருதல் குறைவாகக் காணப்பட இப்பொருளில் சிறிது கூடுதலாக வரக் காண்கிறோம். இதனைப் பட்டியல் 2 நன்கு காட்டும். எடுத்துக்காட்டாக ஐங்குறு நூற்றில்

''நீயினிது முயங்க வந்தனர்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே'' (ஐங்.353-3)

என வரும் அடிகளில் முயங்க என்பதன் எழுவாயாக நீ என்ற சொல்லும், வந்தனர் என்ற சொல்லின் எழுவாயாக மலையிறந் தோர் என்பதும் வருதல் காண்க. ஆனால் அகநானூற்றில்

''செல்விருந் தாற்றித் துச்சி லிருத்த
நுனைகுழைத் தலமரு நொச்சி
மனைகெழு பெண்டியான் ஆகுக மன்னே''
(அகம். 203-16)

என வரும் அடிகளில் உள்ள இருத்த, ஆகுக ஆகிய இரு வினைகளின் எழுவாயாகவும் யான் வருதல் காண்க. இது பற்றிப் பின்னர் எழுவாய் என்னும் தலைப்பின்கீழ் விரிவாகக் காணலாம்.

### 2.1.4.3.4 காரணப் பொருள்

செய என்னும் வாய்பாட்டுக் குறையெச்சம் காரணப் பொருளிலும் வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதுபற்றி உரையாசிரியர்களும் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். கல்லாடனார்.

''மழை பெய்யக் குளம் நிறைந்தது''

என்ற உதாரணத்தைத் தந்து இது காரணப்பொருட்டாய்

வந்தது எனக் குறிப்பிடுவார். இதே நிலையை நச்சினார்க்கினியரிடமும் காணலாம்.

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் இது இப்பொருளில் எல்லா இலக்கியங்களிலும் வருதல் காணத் தக்கது. எனினும் இது வரவு எண்ணிக்கையில் தாக்கப்பொருள். உடனிகழ்ச்சிப் பொருள் ஆகியவற்றை அடுத்தே வந்துள்ளது. இப்பொருளில் வரும்போது செயவென் வாய்பாட்டு எச்சத்தால் குறிக்கப்படும் தொழில் பிறவினையால் குறிக்கப்படும் தொழில்களுக்கு முன்னரே குறிக்கப்படுவதாக, அதற்குக் காரணமாக உள்ளது. இதனால்தான் இது காரணப்பொருளைக் காட்டி நிற்கிறது.

மழை பெய்யக் குளம் நிறைந்தது

என்ற எடுத்துக்காட்டில் பெய்யும் தொழில் நிறையும தொழிலுக்கு முன்னர் அதனை விளைவிப்பதாக வருதல் கவனிக்கத்தக்கது.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இப் பொருளில் இவ்வெச்சம் வரக் காண்கிறோம். எடுத்துக் காட்டாகப் பதிற்றுப்பத்தில்

"புனல்பாய் மகளி ராட வொழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்"
(பதி. 86-10)

என வரும் அடிகளுக்கு "நீரில் விளையாட்டயரும் மகளிர் பாய்ந்தாடுதலால் அவர் காதினின்றும் வீழ்ந்த பொன்னாற் செய்த அழகிய குழையானது மேலே நன்றாகக் தெரியும்" என்று பொருள் எழுதுவதும், தோன்றும் என்ற வினை முற்றிற்குக் காரணப் பொருளாய் ஆட என்ற எச்சம் வருவதும் குறிப்பிடத்தக்கது. இதுபோல் ஐங்குறுநூற்றில்

"காமம் கடவ வுள்ள மினைப்ப
யாம்வந்து காண்பதோர் பருவம்" (ஐங். 237-1)

என வரும் அடிகளில் கடவ என்ற எச்சத்திற்கு "செலுத்து

தலானே'' என்று பொருள் எழுதுவதைக் காண்கிறோம். மேலும் அகநானூற்றில்

''விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென வறியாப் பணைபயில் இருக்கை''
(அகம். 91-13)

(இறுகப் பிணித்த முழவினையுடைய குட்டுவன் என்பான் புரத்தலால் பசிக்களைலை அறியாத மருதவளம் மிக்க ஊர்களை யுடைய)

எனவும், நற்றிணையில்

''சுடர்முழு தெறிப்பத் திரங்கிச் செழுங்காய்
முடமுதிர் பலவி னத்தம்... ... ... ... (நற். 26-5)

(ஆதித்த மண்டிலம் முற்றும் தன் வெயிலை வீசுதலானே செழுங்காய்கள் திரங்கப் பெற்று முடம்பட்ட முதிர்ந்த பலா மரங்கள் நிரம்பிய கொடிய காட்டில்)
எனவும், குறுந்தொகையில்

''எழுகுளிர் மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென் றவ்வே'' (குறு. 24-4)

(ஏழு நண்டுகள் பற்றிக் குழைத்த ஒற்றைப்பழம் குழையு மாறு போல யான் குழையாநிற்ப, புறங் கூறுவோர் நாவானவை காதலர் அகன்றமை காரணமாக அலர் தூற்றிக் கல்லென்று முழங்கா நின்றன)

எனவும், புறநானூற்றில்

''களிறணைப்பக் கலங்கின, காஅ
தேரோடத் துகள்கெழுமின, தெருவு'' (புறம். 345-1)

(காவிலுள்ள மரங்கள் களிறுகளைக் கட்டுவதால் அவற்றால் திமிரப்பட்டு நிலைகலங்கின; தேர்கள் செல்லுவதால் தெருக்கள் புழுதியால் நிரம்பின) எனவும், பத்துப்பாட்டில்

''சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறு போலப் பரந்தொழுகி

ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும் (பத்து. 9-44)

(சோற்றை வடித்தொழுக்கிய கொழுவிய கஞ்சி யாறுகள் போலே எங்கும் பரந்து ஒழுகி, காளைகள் தம்மிற் பொருதலாலே பின்பு சேறாகி, பல தேர்களும் ஓடுகையினால் தூளியாய்ப் பொருந்தி, புழுதியை மேலே பூசிக்கொண்ட களிறு போல வேறுபட்ட தொழில்களையுடைய ஓவியம் வரையப்பட்ட வெள்ளிய அரண்மனையை அழுக்கூட்டும்)

எனவும், பரிபாடலில்

''மனமகிழ் தூங்குநர் பாய்புட னாடச்
சுனைமலர்த் தாதூதும் வண்டூத லெய்தா
அனையபரங் குன்றின் அணி''

(பரி. 17-37)

(மகளிரும் ஆடவரும் மனத்தின்கண் மகிழ்ச்சிமிக்கு பாய்ந்து ஒரு சேர நீராடுதலானே தாதூதும் இயல்புடைய வண்டுகள் அஞ்சி அச்சுனையின்கண் உள்ள மலரின்கட் சென்று தாதூதப் பெறா, திருப்பரங்குன்றினது அழகுகள் அத்தன்மையன)

எனவும், கலித்தொகையில்

''வாடை தூக்க வணங்கிய தாழை
ஆடுகோட் டிருந்த அசைநடை நாரை'' (கலி. 128-2)

(வாடைக் காற்று அசைக்கையினாலே வளைந்த தாழையின் அசைகின்ற கொம்பிலே இருந்த அசைந்த நடையினையுடைய நாரை)

எனவும், குறளில்

''செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்'' (குறள் 466)

அரசன் தன் வினைகளுட் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலாற் கெடும். இனி அதனானேயன்றிச் செய்யத்தக்கன வற்றைச் செய்யாமை தன்னானுங் கெடும்)

எனவும், சிலப்பதிகாரத்தில்

''புல்லென் மருள்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் ஒலிபடைத்த தூர்'' (சிலம்பு 19-33)

(புல்லென்ற மருட்சியையுடைய மாலைக்காலத்தே பூத்து உதிர்ந்த கொடி போன்ற கண்ணகி தன் கணவனிடத்திருந்து அழுது அரற்றலான் அவ்வூர் ஒல்லென்னும் ஒலியினைப் படைத்தது)

எனவும், மணிமேகலையில்

''தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
வெவ்வினை உருப்ப விளிந்துகே டெய்தி
மாதவி யாகியுஞ் சுதமதி யாகியுங்
கோதையஞ் சாயல் நின்னொடுங் கூடினர்''

(மணி. 12-15)

(முற்பிறப்பிலே உனக்குத் தமக்கைமாரா யிருந்த தாரை என்பவளும் வீரை என்பவளும், தாம் முற்செய்த தீய ஊழ் வினை உருத்து வந்தூட்டுதலாலே இறந்து அவ்வுடம்பு ஒழிந்த் பின்னர் நின் தாயாகிய மாதவியும், தாயன்பு சான்ற சுதமதியு மாகப் பிறப்புற்று மணிமேகலாய் நின்னோடும் தொடர் புடையராயினர்) எனவும் வரும் இடங்களில் எல்லாம் இவ் வெச்சம் காரணப்பொருள் காட்டி வந்துள்ளது.

### 2.1.4.3.5 வினையடைப்பொருள்

செயவென் எச்சம் வினையின் அடையாக வந்து வினை யடைப் பொருளையும் தருகின்றது என்பதை முன்னரே கண்டோம். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இவ்வெச்சம் இப்பொருளில் வருவதைக் காணலாம். எடுத்துக் காட்டாகப் பதிற்றுப்பத்தில்

''நகைல ரார நன்கலஞ் சிதறி'' (பதி. 37-4)

என வரும் அடியில் ஆர என்னும் எச்சம் நிரம்ப என்னும் வினையடைப் பொருளில் வந்துள்ளதைக் காண்கிறோம். இவ்வடிக்குப் பொருள் எழுதும் உரையாசிரியர் ''பாணர் முதலாயினார்க்கு நிரம்பவும் நல்ல கலங்களை வழங்கி'' என எழுதுதல் காண்க. இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

''நினைத்தொறுங் கலிழு மென்னினு
மிகப்பெரிது புலம்பின்று தோழிநம் மூரே''

(ஐங். 398-4)

என வரும் அடிகளிலும் இவ்வெச்சம் (மிக) வினையடைப் பொருளையே தருகிறது. ''நின்னுடைய மெல்லியல்பையும் வன்பாலையின் வழியின்னாமையையும் எண்ணுந்தோறும் கண் கனிந்து அழாநின்ற என்னையுங் காட்டிற் பன்மடங்கு மிகுதியாக நம்மூரின்கண் வாழும் மக்கள் அழுது வருந்தா நின்றனர், காண்'' என உரையாசிரியர் பொருள் எழுதுதல் காண்க.

அகநானூற்றில்

''இறப்ப எண்ணினிர் என்பது சிறப்பக்
கேட்டனள் கொல்லோ தானே...'

(அகம். 161-8)

(கடந்து செல்ல எண்ணினீர் என்பதை அவள் முன்னரே நன்கு கேட்டுள்ளாளோ)

எனவும், நற்றிணையில்

''மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்'.

(நற். 83-5)

(யாம் யாட்டினிறைச்சியுடனே ஆய்ந்தமைத்த நெய்யைக் கலந்த வெள்ளிய சோற்றினை வெள்ளெலியின் சூட்டிறைச்சியோடு சேர்விட்டு நின்னை விரும்பி நிரம்பக் கொடா நிற்பேம்)

எனவும், குறுந்தொகையில்

"மிகநன் றம்ம மகிழ்நநின் சூளே" (குறு. 384-4)

(தலைவ, நீ அவர்க்கு மொழிந்த சூள்மொழி மிகவும் நன்றாக இருந்தது)

எனவும், புறநானூற்றில்

"கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கத்ழு நெடுவரைப் படப்பை" (புறம். 202-2)

(தனக்குப் புகலிடங் காணாத கடமாவினது நல்ல ஏறு வரைச் சாரல் மணி மேலே கிளம்பவும், சிதறிய பொன் விளங்கவும் விரையவோடும் மலைப்பக்கத்து)

எனவும், பத்துப்பாட்டில்

"மேதக மிகப்பொலிந்த
ஓங்குநிலை வயக்களிறு" (பத்து. 6-14)

(மிகவும் பொலிவு பெற்ற உலகத்தைத் தாங்குமாறு உயர்ந்த நிலையை உடைய வலி மிக்க திசை யானைகள் தம் பொறை நீங்கி வருத்தமற்று மேம்பாடுதக)

எனவும், பரிபாடலில்

"கண்ணொளி எஃகிற் கடிக மின்னியவன்
வண்மைபோல் வானம் பொழிநீர்..." (பரி. 22-7)

(அவன் ஏந்திய கண்ணுக்கு ஒளிரும் வேல் போன்று கடிதாக மின்னுதலைச் செய்து அப் பாண்டியனது வள்ளன்மையைப் போன்று அவ்வானத்தினின்றும் பொழியப்பட்ட மழை நீர்)

எனவும், கலித்தொகையில்

"நலமிக நந்திய நயவரு தடமென்றோள்" (கலி 113-1)

(நன்மை மிகப் பெருகிய விருப்பம் வருகின்ற பெருமையை யுடைய மெல்லிய தோளினையும்)

எனவும், திருக்குறளில்

"கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்

கொள்ளார் அறிவுடை யார்'' (குறள். 404)

(கல்லாதவன தொண்மை ஒரோவழி மிக நன்றாயிருப்பினும் அறிவுடையார் அதனை யொண்மையாகக்கொள்ளார்)

என்வும், சிலம்பில்

''தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பேரின்பம் தருமது கேளாய்'' (சிலம்பு, 15-149)

(தவமுடையோர் தரும் அடைக்கலப்பொருளைக் காக்கும் காவல் எளிதாயினும் மிகப் பெரிய இன்பத்தினை அளிக்கும் அதனை நீ கேட்பாயாக)

என்வும், மணிமேகலையில்

''முற்ற உணர்ந்த முதல்வா என்கோ'' (மணி. 5-105)

(முழுதும் ஓதாமலே உணர்ந்திட்ட முழு முதல்வனே என்றும் பாராட்டுவேனோ?)

எனவும் பல்வேறு எடுத்துக்காட்டுகளில் இவ்வெச்சம் வினையடைப்பொருளை உணர்த்தி நிற்கும்.

## 2.1.3.4.6. வரிசைப்பொருள்

வரிசைப்பொருளை உணர்த்தும் தன்மை காலவெச்சத்திற்கே உரியதாயினும் குறையெச்சமும் ஒருசில இடங்களில் ஒன்றன்பின் ஒன்றாக நடக்கும் நிகழ்ச்சிகளைக் காட்டுவதாய் வரிசைப்பொருளை உணர்த்திவரும் என்பது முன்னரே கூறப்பட்டது. பரிபாடல், திருக்குறள் ஒழிந்த பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் இவ்வெச்சம் இப்பொருளில் வந்துள்ளது. ஆயினும் சிலம்பிலும், மணிமேகலையிலும் மிக அதிகமான எண்ணிக்கையில் இவ்வெச்சம் இப்பொருளில் வரக்காண்கிறோம், (காண்க. பட்டியல் 3.)

பதிற்றுப்பத்தில்,

''படுகண் முரச நடுவட் சிலைப்பத்
தோமர வலத்தர் நாமஞ் செய்ம்மார்
ஏவல் வியங்கொண் டிளையரொ டெழுதரும்

ஒல்லார் ... ... ... ... ... ... ... ...'' (பதி. 54-13)

என வந்துள்ள அடிகளில் சிலைப்ப என்னும் எச்சம் காட்டும் தொழிலுக்குப் பின்னர் அது கொண்டு முடியும் எழுதரும் என்னும் வினைகாட்டும் தொழில் நடைபெறும் நிலையில் இது வரிசைப் பொருளைக் காட்டி நிற்கும்.

''ஒலிக்கின்ற கண்ணையுடையபோர்முரசம் பாசறை நடுவே முழங்கி வீரரையேவ வலக்கையில் தண்டேந்திப் போரினைச் செய்தற்காக அம் முரசொலியின் ஏவலை மேற் கொண்டு அணிவகுக்கப் பெற்ற இளைய வீரருடன் செல்லும் தானைத் தலைவர் முதலாகிய பகைவேந்தருடைய'' என ஆசிரியர் இதற்குப் பொருள் எழுதுதல் காண்க. இதைப் போன்றே ஐங்குறுநூற்றில்

''வேனி னீங்கக் கார்மழை தலைஇக்
காடுகவின் கொண்டன்று... ...'' (ஐங். 484-1)

என வரும் அடிகளில் நீங்க என்பது நீங்கிய பின்னர் என்னும் பொருளில் வந்துள்ளதை ''முதுவேனிற் பருவம் கழியவும் பின்னர்க் கார்ப்பருவத்து மழையைத் தலைப்பட்டுக் காடு அழகுற்று விளங்காநின்றன காண்'' என உரையாசிரியர் எழுதிச் செல்லும் உரை தெளிவாக உணர்த்தும்.

அகநானூற்றில்

''ஈயல்பெய் தட்ட இன்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புறத் துருக
இளையர் அருந்தப் பின்றை நீயும்
இடுமுள் வேலி முடக்காற் பந்தர்ப்
புதுக்கலத் தன்ன செவ்வாய்ச் சிற்றில்
புனையிருங் கதுப்பினின் மனையோ ளயரப்
பாலுடை அடிசில் தொடீஇய ஒருநாள்
மாவண் தோன்றல் வந்தனை சென்மோ''

(அகம். 394-5)

(மிக்க வண்மையுடைய தலைவனே! ஈயலையும் இட்டுச் சமைத்த இனிய புளிப்பு வாய்ந்த விருப்பம் தரும் சோற்றினைச் சிவந்த

பசுவின் வெண்ணெய் அச்சோற்றின் மேலே கிடந்து உருக அதன்மேற் பெய்து நின் ஏவலர் முன்பு உண்ண, அதன்பின்பு நீயும் முள்ளிட்டுக் கட்டிய வேலியினகத்தே வளைந்த கால் களையுடைய பந்தரையுடையதும், புதுக்கலம் போன்ற செம் மண் பூசியதுமாகிய சிறிய இல்லில் புனைந்த கரிய கூந்தலையுடைய நின் மனைவி விருந்தயர பால் பெய்த உண வினை உண்ணுதற்கு ஒருநாள் வந்து செல்வாயாக)

எனவும், நற்றிணையில்

"உயவினென் சென்றியான் உள்நோய் உரைப்ப
மறுமொழி பெயர்த்தல் ஆற்றாள்........." (நற்.106-5)

(இப்பொழுது வருந்துகின்றேனாகிய யான் சென்று என் உள்ளத்தின்கண்ணே யுள்ள வினைவயிற் செல்ல வேண்டிய கவற்சியைக் கூறிய அளவிலே மறுமொழி கூறுதற்கு நாவெ ழாமையால் ஆற்றாளாய்)

எனவும், குறுந்தொகையில்

"குருகு கொளக் குளித்த கெண்டை..." (குறு.127-1)

(அன்னம் தன் அலகாற் கௌவ அதற்குத் தப்பி நீரினுள்ளே மூழ்கி உய்ந்த கெண்டை மீன்)

எனவும், புறநானூற்றில்

"......இருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக" (புறம்.144-1)

(மாலைக்காலம் வந்த அளவிலே சிறிய யாழை இரங்கற் பண் ணாகிய செவ்வழி யென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசு பண்ணி நின்து மழையை யேற்றுக்கொண்ட காட்டைப் பாடி னேமாக)

எனவும், பத்துப்பாட்டில்

"தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை ஆமான் கயமுனிக் குழவி" (பத்து.10-499)

(தன் இனமெல்லாம் ஓடிவிட ஓடமாட்டாது வலிய அகப்பட்ட

மடப்பத்தையுடைய ஆமானினது கன்றும் யானையின் இளமையுடைய கன்றும்)

எனவும், கலித்தொகையில்

"இனக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தயல்
ஊசலூர்ந் தாட ஒருஞான்று வந்தானை
ஐய சிறிதென்னை யூக்கி யெனக்கூறத்
தையால் நன்றென் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன்மார்பின்..."

(கலி, 37-13)

(தினைப்புனங்களில் இனமாகிய கிளியை விழாமல் ஓட்டி யாம் பாதுகாக்கும் புனத்துக்கு அயலிலிட்ட ஊசலை ஏறி ஆடா நிற்க, ஒருநாள் வந்தவனை "ஐயனே! சிறிதுபொழுது என்னை ஊசலாட்டுவாயாக" வெனச் சொல்ல, அவனும் அகற்குடம் பட்டுத் "தையால்! நீ கூறியது நன்" றென்று ஊசலாட்டா நிற்க, அவன் மார்பின் கண்ணே கைநெகிழ்ந்து பொய்யுண்டாக வீழந்தேன்)

எனவும், சிலம்பில்

"யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே..."

(சிலம்பு. 20-69)

(எம்முடைச் சிலம்பினது பரல் முத்தே எனத் தம்முட் கருதி அச்சிலம்பினைக் கொண்டு வருகவென ஏவலரிடைக் கூறி வருவித்துத் தானே அதனைக் கண்ணகியின் முன்பு வைத்தனனாக, கண்ணகி தான் அணியும் அழகிய அச் சிலம்பினை உடைத்த காலை, அதனின்றும் எழுந்த மாணிக்கப் பரல் பாண்டியனது முகத்தினிடத்துத் தெறித்து வீழ்ந்தது)

எனவும், மணிமேகலையில்

"ஆள்பவர் கலக்குற மயங்கிய நன்னாட்டுக்
காருக மடந்தை கணவனுங் கைவிட

ஈன்ற குழவியொடு தான்வே றாகி
மான்றோர் திசைபோய் வரையாள் வாழ்வுழி''

(மணி. 23-104)

(நாட்டை யாளும் அரசர் கொடுங்கோன்மையால் கலக்குறப் பட்டு அறம் தலைதடுமாறிய நல்ல நாட்டின்கண் பண்டு இல்லற நங்கை ஒருத்தி தன் கணவனாலும் கைவிடப்பட்டுத் தான் ஈன்ற குழவியையும் கைவிட்டுத் தான் தமியளாய்ப் பிரிந்து போய் மயங்கி மனம் போனதொரு திசையிலே போய் ஆங்கோர் ஊரின்கண் வரைவின் மகளாய் வாழ்கின்ற காலத்திலே) எனவும் வரும் இடங்களில் இவ்வெச்சம் வரிசைப் பொருளை உணர்த்துவதாக உள்ளது.

## 2.1.4.3.7. தலைமை வினை

பதிற்றுப்பத்து, பரிபாடல் ஒழிந்த பிற பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் செயவென் எச்சம் தலைமைவினையாகப் பல்வேறு துணைவினைகளுடன் வருதலைக் காணமுடிகின்றது. இவ்விலக்கியங்களில் படு, செய், பண்ணு, வை, ஆக்கு, கூடு, மாட்டு, வேண்டு ஆகிய துணைவினைகளுடன் வந்துள்ளது.

### 2.1.4.3.7.1. படு

இத்துணைவினை ஐங்குறுநூறு (3), அகநானூறு (1), நற்றிணை (1), குறுந்தொகை (2), புறநானூறு (4), பத்துப் பாட்டு (1), கலித்தொகை (17), குறள் (54), மணிமேகலை (57) ஆகிய நூல்களில் வந்துள்ளது.

ஐங்குறுநூற்றில்

''சிறந்தன போலுங் கிள்ளை பிறங்கிய
பூக்கமழ் கூந்தற் கொடிச்சி
நோக்கவும் படுமவ ளோப்பவும் படுமே''

(ஐங்: 290-2)

என வரும் அடிகளில் 'நோக்கவும் படும்', 'ஓப்பவும் படும்' என்பன செயப்பாட்டு வினைகளாக வருதல் காணத்தக்கது. இதற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் ''எம் பெரு

மாட்டியாலே நாளை முதலாக நோக்கப்படும், மேலும் அவளாலேயே கடியவும் படும் ஆதலான் என்பதாம்'' என எழுதுவது காண்க.

பொதுவாக இன்றைய தமிழில் படு போன்றவை செயப்பாட்டு வினை குறித்து வரும்போது அவளால் அல்லது எம் பெருமாட்டியால் என எழுவாய்ச்சொற்கள் ஆல் பெற்று வருதலே வழக்கம். ஆனால், இங்கு 'கொடிச்சி நோக்கவும் படும்' எனவும் அவள் ஒப்புவும் படுமே'' எனவும் வருவதில் கொடிச்சி, அவள் ஆகிய சொற்கள் ஆல் விகுதி பெறாமல் வந்திருத்தல் கவனித்தற்பாலது. இதே நிலையினை,

''வன்சினைக் கோங்கின் றண்கமழ் படலை
யிருஞ்சிறை வண்டின் பெருங்கிளை மொய்ப்ப
நீநயந் துறையப் பட்டோள்
யாவ ளோவெம் மறையா தீமே'' (ஐங். 370)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலிலும் காணுகிறோம், 'நீ நயந்து உயைப்பட்டோள்' என்பதற்குப் பொருள் எழுதும் ஆசிரியர் ''நின்னால் உடனுறையப்பட்ட பரத்தை மகள்'' என எழுதுவார்.

அகநானூற்றில்

''தண்ணருங் கதுப்பிற் புணர்ந்தோர் புனைந்தவென்
பொதிமாண் முச்சி காண்டொறும் பண்டைப்
பழவணி யுள்ளப் படுமால் தோழி'' (அகம்.391-6)

(எனது தண்ணிய நறிய கூந்தலிடத்தே துயின்ற தலைவர் (பண்டு) புனைந்த எனது நிறைந்த மாண்புள்ள கூந்தல் முடியைக் காணுந்தோறும் முன்புள்ள எனது பழைய அழகு நினைக்கப்படுகின்றது)

எனவும், நற்றிணையில்

''தோடமை தூவித் தடந்தாள் நாரை
நலனுணப் பட்ட நல்கூர் பேடை'' (நற்.178-3)

(தொகுதியமைந்த சிறகுகளையும் நீண்ட கால்களையுமுடைய நாரையினால் இன்பம் நுகரப் பெற்ற 'செயலற்ற பேடை)
என்வும், குறுந்தொகையில்

"மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே" (குறு.17 S)

(உலகத்து ஆடவர் காமநோய் நனிமுதிர்ந்தால் குதிரையல்லாத பனைமடலைக் குதிரையாகக் கொண்டும் செலுத்துவர்; சூடும் மரபில்லாததாயினும் சூடும் மரபுடைய பூவாகக் கொண்டு குவிந்த அரும்பையுடைய எருக்கம் பூமாலையினையும் தலையிலே சூடிக்கொள்வர்; இவற்றோடமையாது தெருவிடத்தே நின்று பலராலும் தூற்றி ஆரவாரிக்கவும் படுவர்; இவ்வாற்றால் தங்கருத்து முற்றாதாயின் சாதற்குரிய செயலையும் துணிந்து செய்வாரும் ஆவர்)

எனவும், புறநானூற்றில்

"பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே" (புறம்.1-10*)

(பிறை திருநுதற்கு அழகாயது. அப்பிறைதான் பெரியோன் சூடுதலாற் பதினெண்கணங்களாலும் புகழவும் படும்)
எனவும், பத்துப்பாட்டில்

"கருதியது முடித்தலுங் காமுறப் படுதலும்
ஒருவழிப் படாமையும் ஓடிய துணர்தலும்
அரியோர் உண்கண் அரிவையர் ஏத்த" (பத்து. 3-213)

(தன்னெஞ்சு கருதிய புணர்ச்சியைக் குறைகிடவாமல் முடிக்க வல்ல தன்மையும், தான் வீழும் மகளிர் தன்னைப் பெரிதும் விரும்பப்பட்டிருத்தலும், அங்ஙனம் விரும்பிய வழியும் அம் மகளிர் வயத்தனாகாதே தன்வயத்தனே ஆதலும், அவர் வருந்திய தன்மையை உணர்ந்து அவர்க்கருளிப் பாதுகாத்தலும் ஆகிய சிறப்புக்களை அழகிய மையுண்ட கண்ணினையுடைய மகளிர் புகழாநிற்ப)

எனவும் வந்திருத்தல் காண்க.

---

S குறு. 263-5
* புறம் 1-6, 122-1 197-9

இன்றைய தமிழில் செயப்பாட்டு வினைகளில் பெயர்கள் -ஆல் விகுதி பெற்று வருவதே வழக்கம். எனினும் பழந்தமிழ் நூல்களில் இப்பெயர்கள் —ஆல் விகுதி இன்றி வருவதை மேற்கூறிய எடுத்துக்காட்டுக்கள் நன்கு காட்டும். ஆயினும் கலித்தொகை, குறள், மணிமேகலை ஆகிய பின்பழந்தமிழ் நூல்களில் இப்பெயர்கள் —ஆல் விகுதி பெற்று வரும் பண்பினைக் காண்கிறோம். கலித்தொகையில் இரு இடங்களில் (15-13, 48-16) இவை —ஆல் விகுதி பெற்றும், நான்கு இடங்களில் (23-10, 12, 80-20, 147-32) —ஆல் விகுதி பெறாமலும், எஞ்சியுள்ள இடங்களில் இவை தோன்றா எழுவாயாகவும் வந்துள்ளன. இது போன்றே குறளில் நான்கு இடங்களில் (524, 525, 896, 922) — ஆல் விகுதி பெற்றும், இரு இடங்களில் (310,920) —ஆல் விகுதி இன்றியும், மணிமேகலையில் மூன்று இடங்களில் (6-201, 22-79, 30-25) —ஆல் விகுதி பெற்றும், ஒரு இடத்தில் (22-170) —ஆல் விகுதி இன்றியும் வந்துள்ளன. இந்நிலையில்செயப்பாட்டு வினையில் வரும் பெயர்கள் — ஆல் விகுதி பெற்று வரும் பண்பினை ஒரு பின் பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

கலித்தொகையில்

"பன்னாளும் படரடப் பசலையால் உணப்பட்டாள்"
(கலி. 48-16)

(பல நாளும் நினைவு வருத்துகையினாலே பசலையாலே நுகரப் பட்டவளுடைய) எனவும்,

" ...... — — — — — — — — — — அந்நலம்
பசலையா லுண்பட்டு பண்டைநீ ரொழிந்தக்கால்"
(கலி. 15-13)

(அத்தன்மைத்தாகிய நிறம் பசலை நிறத்தாலே கைக்கொள்ளப் பட்டு பண்டை நீர்மை போனக்கால்)

எனவும் வந்துள்ள இடங்களில் பெயர்கள் -ஆல் விகுதி பெற்று வந்துள்ளமையைக் காண்கிறோம். ஆனால்

"நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோர்" (கலி. 23-10)

(மனம் விரும்பி யருளின கணவரால் நலத்தை நுகர்ந்து விடப் பட்ட மகளிர். நல்குநர் என்பது கணவர் என்பதுபட நின்றது)

எனவும்.

',கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்'' (கலி. 23-12)

(மனம் விரும்பிக் கூடின கணவராற் றங்குணத்தை நுகர்ந்து விடப்பட்ட மகளிர்)

எனவும்,

''நல்காது நுந்தை புறமாறப் பட்டோர்'' (கலி, 80-20)

(நுந்தை அருளாதே தனக்குப் புறஞ்சொல் உண்டாக அருளைக் கைவிடப்பட்ட மகளிருடைய

எனவும்,

''ஆரிருள் நீக்கும் விசும்பின் மதிபோல
நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே அவ்வழித்
தேரை தினப்படல் ஓம்பு'' (கலி. 147-30)

(ஞாயிறே! போக்கற்கு அரிய இருளைப் போக்கும் விசும் பிடத்து மதி தோன்றுமாறு போல நீயும் நீருள்ளேயுந் தோன்றுவை; அங்ஙனந் தோன்றினவிடத்து ஆண்டு வாழுந் தேரை இரை என்று தின்னப்படுதலைப் பரிகரித்துக் கொள்) எனவும் வந்துள்ள இடங்களில் பெயர்கள் -ஆல் விகுதி இன்றி வந்துள்ளமையும், உரையாசிரியர் ஓரிரு இடங்களில் -ஆல் விகுதியிட்டும், ஓரிரு இடங்களில் -ஆல்விகுதி இன்றியும் உரை எழுதிச் செல்லுவதும் குறிப்பிடத்தக்கன.

கலித்தொகையில் எஞ்சியுள்ள 11 இடங்களிலும் இவை தோன்றா எழுவாயாக வந்துள்ளன. எடுத்துக்காட்டாக

''கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ - ...'' (கலி. 69-7*)

(சிறியவளே! நீ என்னாலே அகப்படுத்திக்கொள்ளப்பட்டாய்) எனவரும் அடியில் செயப்பாட்டு வினையின் எழுவாய் தோன்றா எழுவாயாக உள்ளமையும், ஆசிரியர் என்னால் என்ற எழுவாயை வருவித்துப் பொருள் எழுதியுள்ளமையும் காணத் தக்கன.

* கலி. 23-8, 47-21, 93-15, 133-8, 9, 10, 11, 12, 13, 14,

இதுபோன்றே திருக்குறளில் நான்கு இடங்களில் பெயர்கள் -ஆல் விகுதி பெற்று வந்துள்ளன.

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்" (குறள். 524)

(செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனாவது தன் சுற்றத்தால் தான்சூழப்படும் வகை அதனைத் தழீஇ யொழுகுதல்)

எனவும்,

"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்" (குறள். 525)

(ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன் சொற் சொல்லுதலையும் வல்லனாயின் தம்மிற் றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும்)

எனவும்,

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்" (குறள்.896)

(காட்டிடைச் சென்றான் ஒருவன் ஆண்டைத் தீயாற் சுடப் பட்டானாயினும் ஒருவாற்றான் உயிருய்தல் கூடும்; தவத்தாற் பெரியாரைப் பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உய்யார்)

எனவும்,

"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்" (குறள். 922)

எனவும் வந்துள்ள குறட்பாக்களில் பெயர்கள் —ஆல் விகுதி பெற்று வந்துள்ளமையைக் காண்க. இரு இடங்களில் இவை —ஆல் விகுதியின்றி வந்துள்ளன.

திருக்குறளில்

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு" (குறள். 920)

(கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூது மென இம் மூன்றும் திருமகளால் துறக்கப்பட்டார்க்கு நட்பு)

எனவரும் அடிகளில் நீக்கப்பட்டார் என்னும் செயப்பாட்டு வினை வருகையில் திரு என்ற பெயரே வந்திருப்பதும், உரை யாசிரியர் அதற்குத் திருமகளால் என -ஆல் விகுதியையிட்டு உரை எழுதுவதும் குறிப்பிடத்தக்கன. இதுபோன்றே

''விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்'' குறள். (810)

(பழைய நட்டார் பிழை செய்தாராயினும் அவர்மாட்டுத் தம் பண்பினீங்காதார் பகைவராயினும் விரும்பப் படுவர்)

என வரும் அடிகளில் விழையார் என்றே வந்திருப்பதையும், ஆசிரியர் பகைவரானும் என்று உரை எழுதிச் செல்வதையும் காண்க.

குறளில் எஞ்சியுள்ள 46 செயப்பாட்டுவினை அடிகளிலும் பெயர்கள் வருவித்துக் கொள்ள வேண்டியவையாக வந்திருக்கக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக,

''தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்'' (குறள். 202*)

என வரும் குற்ட்பாவில் பெயர்கள் எதுவும் வாராமையும், இப்பாடலுக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் ''தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான் அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனால் தீயினும் அஞ்சப்படும்'' என ஒருவனால் என்ற பெயரை வருவித்து எழுதுதலும் காணத்தக்கன.

மணிமேகலையிலும் மூன்று இடங்களில் செயப்பாட்டு வினையில் வரும் பெயர்கள் -ஆல் விகுதி பெற்று வந்துள்ளதைக் காண்கிறோம்.

---

* குறள் 50, 105, 114, 131, 154, 169, 185, 191, 265, 291, 298, 314, 324, 349, 388, 412, 438, 453, 501, 511, 524, 525, 575, 589, 591, 665, 698, 699, 722, 801, 810, 824, 826, 844, 850, 866, 895, 896, 920, 922, 927, 936, 967, 989, 1004, 1008, 1047, 1096,

"......... மயனால் இழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங் கிதுகாண்" (மணி. 6-201

(மயனால் இயற்றப்பட்ட சக்கரவாளக்கோட்டமே இங்குள்ள இக்கோட்டம் என்றறிதி)

எனவும்,

"... . .........ஆங்கவன்
தாதை வாளால் தடியவும் பட்டனன்" (மணி 22-78)

(அவ்வரசிளங்குமரன் தன் தந்தையாகிய சுகந்தனது வாளால் வெட்டுண் டொழிந்தான்)

எனவும்,

" .. ... .. இலக்கணத் தொடர்பாற்
கருதப் பட்டும் ——.... .. ... — —" (மணி. 30-24)

(இலக்கு அணுகுவதாகிய தொடர்பினாலே ஆராய்ந்து கூறப் பட்டும்) எனவும் வந்துள்ள மணிமேகலை அடிகள் இப்பண் பினை நன்கு காட்டும். மணிமேகலையில் ஒரே ஒரு இடத்தில் தான் -ஆல் விகுதியின்றி, பெயர்ச்சொல் வருவதைக் காண் கிறோம்.

"முடிபொரு ளுணர்ந்தோர் முதுநீ ருலகில்
கடியப் பட்டன வைந்துள..........." (மணி. 22-169)

என வரும் மணிமேகலை அடிகளில் உணர்ந்தோர் என -ஆல் விகுதி இன்றியே பெயர்ச்சொல் வருவது காணத்தக்கது. உரை யாசிரியரும்" மெய்ப்பொருளை யுணர்ந்த சான்றோர்கள் கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தின்கண் விலக்கப்பட்டன வாகிய தீவினைகள் ஐந்துள்ளன" என்று -ஆல்விகுதியின்றியே பொருள் எழுதிச் சென்றுள்ளார்.

மணிமேகலையில் எஞ்சியுள்ள 53 இடங்களிலும் இப் பெயர்கள் வருவித்துக் கொள்ள வேண்டிய நிலையிலேயே அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

''நல்வினை தீவினை யென்றிரு வகையால்
சொல்லப் பட்ட கருவினுட் டோன்றி''

(மணி. 24-119*)

என வரும் அடிகளில் என்னால் என்ற பெயர் வருவித்துக் கொள்ள வேண்டிய நிலையிலேயே உள்ளது. ஆசிரியரும் ''அவ்வுயிர்கள் நல்வினை என்றும் தீவினை என்றும் தாம் தாம் செய்கின்ற இருவகை வினை காரணமாக முன் கூறப் பட்ட மக்கள் முதலிய அறுவகைப் பிறப்பில் கருவாகிப் பிறந்து'' என பெயர் எதுவும் இன்றியே எழுதிச் செல்கிறார். எனினும் இங்கு என்னால் என்ற பெயரை வருவித்துக் கூற இயலும்.

### 2.1.4.3.7.2 செய்

இத்துணைவினை நற்றிணை (1), கலித்தொகை (1), சிலம்பு (1) ஆகிய மூன்று இலக்கியங்களில் மட்டுமே ஒவ்வொரு இடத்தில் வந்துள்ளது. இது காரணவினைகளில் துணைவினை யாகப் பயன்படும்

நற்றிணையில்

''கதழ்பரி நெடுந்தேர் வரவாண்டு அழுங்கச்
செய்ததன் தப்பல் அன்றியும்
உயவுப்புணர்ந் தன்றிவ் வழுங்கல் ஊரே''

(நற்.203-9)

(விரைந்த செலவினையுடைய குதிரை பூட்டிய அவரது நெடிய தேரின் வருகையை இனி அக்கானலிடத்து வாராது அவரால் மறிக்கப்பட்டு வருந்தச் செய்த தன்னுடைய தவறு களை வெளிக்காட்டாதிருப்பதன்றியும் இப் பழிமொழியாகிய

---

1193, 1194, 1327

* மணி 6-201, 22-79, 170, 23-18, 25-228, 27-61, 75,119, 129, 141,229, 29-70, 72,75, 105,119, 130,132 138, 219, 220, 226, 227, 257, 272, 283,284, 285, 312, 321, 328, 350, 355, 360, 370, 391, 409, 420, 424, 436, 453, 455, 30-25, 34, 39, 60, 82, 92, 93, 95, 98, 139, 166, 162, 169, 182

பேரிரைச்சலையுடைய ஊரானது இங்ஙனம் ஒரு தேர் வருவதன் காரணந்தான் யாதோவென்று ஆராய்ந்து அதனால் வருத்தமும் அடைகின்றது. இஃதென்ன கொடுமையுடையது காண்!)

எனவரும் அடிகளில் 'அழுங்கச் செய்த' என்ற தொடருக்குப் பொருள் எழுதும் உரையாசிரியர் "வருந்தச் செய்த" என்று எழுதுதல் நோக்கத்தக்கது.

இதுபோன்றே கலித்தொகையில்

"மருளூறு நோயொடு மம்மர் அகல
இருளூறு கூந்தலாள் என்னை
அருளூறச் செயின்நுமக் கறனுமா ரதுவே"

(கலி. 140-32)

(மயக்கமுறுங் காமநோயா லுண்டாகிய என் மயக்கம் நீங்கும் படி இருட்சியுறுகின்ற கூந்தலையுடையாள் என்னை அருளுத லுறும் படி பண்ணுவீராயின், அது நுமக்கு அறனும் புகழுமா மென்றான்)

எனவரும் அடிகளில் 'கூறச்செயின்' என்பதற்கு "உறும்படி பண்ணுவீராயின்" என உரை எழுதுதலும்,

சிலம்பில்

"மன்குளிரச் செய்யு மறவேல் நெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்த திதுவென்கொல்"

(சிலம்பு. 19-21

(நிலவுலகினைக் குளிரச் செய்யும் மறம் பொருந்திய வேலை யுடைய சிறந்த தகுதியை யுடையானது தண்குடை வெம்மையை உண்டாக்கிற்று. இது யாது காரணத்தானிகழ்ந்ததோ)

என வரும் அடிகளில் 'குளிரச் செய்யும்' என்னும் தொடர் வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கன.

### 2 1.4.3.7.3 பண்ணு

இதுவும் காரணவினைகளில் பயன்படும் துணைவினை யாகும். இது அகநானூறு (3), புறநானூறு (1), கலித்தொகை (1) ஆகிய நூல்களில் மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

அகநானூற்றில்

"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை..." (அகம். 45-9)

(அன்னி என்பான் குறுக்கைப் போர்க்களத்தில் திதியன் என்பானது பழையதாகிய நிலையையுடைய புன்னை மரத்தின் அடியை வெட்டித் துண்டித்த காலத்தே) என வரும் அடிகளில் 'துமியப் பண்ணி' என்னும் தொடரில் செயவென் எச்சம் தலைமைவினையாகவும், பண்ணி என்பது துணைவினை யாகவும் வந்திருத்தலைக் காண்கிறோம்.

இதுபோன்றே புறநானூற்றில்

"உடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப்
பிணியுறு முரசங் கொண்ட காலை" (புறம். 25-5)

(பகைத்தற்கரிய வலிமையுடைய வஞ்சினங் கூறிய இரு வேந்தரை வருத்துதற்கரிய போர்க்களத்தின்கண்ணே மாயப் பொருது)

என்று வரும் அடிகளில் உணங்கப் பண்ணி எனவும், கலித் தொகையில்

"இணர்ததை தண்காவின் இயன்றநின் குறிவந்தாள்
புணர்வினிற் புகன்றாங்கே புனலாடப் பண்ணியாய்"
(கலி. 69-16)

(பூங்கொத்து நெருங்கின குளிர்ந்த பொழிலிலே நீ செய்த குறியிடத்தே வந்தவளைப் புணர்ச்சியிடத்தே கொண்டாடி அப்பொழுதே கூடப் புனலாடும்படி பண்ணின நீ)

என வரும் அடிகளில் 'அடப் பண்ணியாய்' எனவும் இத் துணைவினை வந்துள்ளது.

### 2.1.4.3.7.4 வை

இதுவும் காரணவினையில் ஒரு துணைவினையே. இத் துணைவினை செயவென் வாய்பாட்டு எச்சத்துடன் மணி

மேகலையில் மட்டுமே ஒரே ஒரு இடத்தில் வரக் காண்கிறோம்.

''இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்''

(மணி. பதி. 95)

எனவரும் மணிமேகலை அடிதளில் அறிய என்னும் வினை முற்றில் அறிய வைத்தனன்என்னும் செயவென் எச்சம் தலைமைவினையாகவும், வைத்தனன் என்னும் முற்றுவினை துணைவினையாகவும் வந்துள்ளன.

### 2.1.4.3.7.5. ஆக்கு

இத்துணைவினையும் பழந்தமிழில் காரணவினைகளில் பயன்படும் ஒரு துணைவினையாக வந்துள்ளது. ஆயினும் இன்றைய தமிழில் இது துணைவினையாக வருவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்துணைவினை மணிமேகலையில் மட்டுமே இரு இடங்களில் வந்துள்ளது.

''... ... ... வேற்றுரு வெய்தவும்
அந்தரந் திரியவும்ஆக்குமிவ் வருந்திறன்''

(மணி. 10-80)

(வேற்றுருவம் எடுத்துக்கொள்ளவும் விசும்பினூடு திரியவும் செய்யும் பெறற்கரிய தன்மை)

என வரும் மணிமேகலை அடிகளில் எய்த ஆக்கும், திரிய ஆக்கும் எனப் பொருள் தரும் நிலையில் இத்துணைவினை இருமுறை பயின்று வருவதாகக் கொள்ளலாம். இவ்விரு வினைகளையும் இணைக்கையில் எய்த என்னும் தலைமை வினையுடன் இணைந்த துணைவினை மறைந்து ''எய்தவும் திரியவும் ஆக்கும்'' என வந்துள்ளமையைக் காண்கிறோம்.

### 2.1.4.3.7.6 கூடு

இத்துணைவினை சிலப்பதிகாரத்தில் மட்டுமே ஒரே ஒரு இடத்தில் வந்துள்ளது.

''கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையின் அறிவஞ ரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவும் கூடும்''

(சிலம்பு 10-83)

(கரும்பின்கண் வைத்த மிகுந்த தேன்கூ டழியப் பெற்றொழுகி வண்டுகள் சூழ்ந்த வாவிகளின் தூய நீரொடு கலந்துவிடும்; தணியா நீர்வேட்கையானே, அறிவு சோர்ந்து அத்தகைய நீரை இவள் தன் அங்கையான் முகந்து உட்கொள்ளவுந் தகும்) என வரும் சிலப்பதிகார அடிகளில் 'கொள்ளவுங் கூடும்' என, இவ்வினை துணை வினையாக வந்துள்ளதைக் காண்கிறோம்.

### 2.1.4.3.7.7 மாட்டு

இத் துணைவினையும் சிலப்பதிகாரத்தில் மட்டுமே ஒரே ஒரு இடத்தில் வந்துள்ளது.

''அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்''

(சிலம்பு. 7-32-3)

(அழகிய மென்மையாகிய கொத்துக்களையுடைய அடும்புகளே, அன்னங்களே, நம்மை அவர் மறந்தனராயினும், நாம் அவரை மறப்பேமல்லேம்) என்று வரும் அடிகளில் 'மறக்க மாட்டேமால்' என வந்துள்ள தொடரில் மாட்டு என்னும் துணைவினை வரக் காணலாம்.

### 2.1.4.3.7.8 **வேண்டு**

இத் துணைவினை புறநானூறு (4), கலித்தொகை (1), குறள் (2), மணிமேகலை (3), ஆகிய நூல்களில் எல்லாம் வந்துள்ளமையைக் காணலாம்.

புறநானூற்றில்

''நில்லா வுலகத்து நிலையா மைநீ
சொல்லவேண்டா............''

(புறம். 361-20*)

---

புறம். 70-19, 101-10, 339-11

என வரும் அடிகளில் 'சொல்ல வேண்டா' என்னும் தொடரில் வேண்டா என இத்துணைவினை வரக் காண்கிறோம். இவ் வடிகளுக்குப் பொருள் எழுதும் உரையாசிரியர் "நிலைபேறில்லாத உலகியலின் நிலையாமை யியல்பை நீ எடுத்துச் சொல்லவேண்டா" என எழுதுதல் காண்க.

இதுபோன்றே கலித்தொகையில்

"கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ மற்றிகா
அவன்கண்ணி யன்றோ அது" (கலி. 107-13)

(தோழீ! அக்கண்ணி வரைந்துகோடல் தாழாத அவனுடைய கண்ணியன்றோ? அதனாற் பின்னை யாய் கேட்டால் என்ன பரிகாரம் யாஞ் செய்யவேண்டும்? அதற்கு ஒன்றும் வேண்டா) எனவும், குறளில்

"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்" (குறள். 922*)

(அறிவுடையராயினார் அஃதிலாததற்கு ஏதுவாய கள்ளினை உண்ணாதொழிக; அன்றியே உண்ணல் வேண்டுவார் உளரா யின் நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க)

எனவும், மணிமேகலையில்

"மேனோக் கிக்கறுத் திருப்பபகைத் திருப்ப
தாமே நெருப்பைச் சாதிக்க வேண்டும்" (மணி 29-94 S)

(மேல் நோக்கிச் சென்று கறுத்திருப்பனவும், இவ்வாறு மேல் நோக்கிச் செல்லுதிலினின்றும் மாறுபட்டு வளைந்து சென்று வெளுத்திருப்பனவும் ஆகிய காரியங்களால் உண்டான பொருள்கள் தாமும் தாம் தோன்றிய நிலைக்களத்தே நெருப் புண்மையை அறிவித்தல் வேண்டும் அன்றோ?)

எனவும் வரும் இடங்களில் எல்லாம் வேண்டு என்னும் துணை வினை ஆட்சி பெற்றுள்ளதைக் காண்கிறோம்.

---

* குறள் 357

S. மணி 29-101, 190

### 2.1.4.3.8 தொழிற்பெயர்

பழந்தமிழ் இலக்கியங்களில் செயவென் வாய்பாட்டு எச்சம் பல இடங்களில் தொழிற்பெயர் போன்றும் வந்துள்ளது. இவ்வாறு அவை வருமிடங்கள் பலவற்றில் உரையாசிரியர்கள் தொழிற்பெயரை இட்டே உரை எழுதிச் செல்லுவதையும் காண்கிறோம். எடுத்துக் காட்டாக பதிற்றுப்பத்தில்

''ஆங்குமதி மருளக் காண்குவல்'' (பதி. 73-16)

என வரும் அடியில் இது தொழிற்பெயரின் பண்பினைக் கொண்டு வந்துள்ளமையைக் காணலாம். இவ்வடிக்கு உரை எழுதும் ஆசிரியர் ''அப்போழ்தும் அவர் அறிவு மயங்கியிருப் பதையே கண்டேன்'' எனத் தொழிற்பெயராக உரை எழுது வதும் இங்குக் கவனிக்கத்தக்கது. இதுபோன்றே ஐங்குறு நூற்றில்

''... ... ... ... ... ... ... ... ... பாசிலைச்
செருந்தி தாய விருங்கழிச் சேர்ப்பன்
றான்வரக் காண்குவ நாமே'' (ஐங். 112-1)

(பசிய தழை கெழுமிய செருந்தி மரங்கள் பரவிய கரிய கழிக் கரையினையுடைய எம்பெருமான் தானே விரைந்து வரை வொடு வருதலை ஒருதலையாகக் கண்டு மகிழ்வேம் காண்)

எனவும், அகநானூற்றில்

''அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச் சென்ற என் நெஞ்சே''
(அகம். 9-25)

(அழகிய இனிய சொல்லினையுமுடைய இளையோளது மெல்லிய தோளை அடைதற்கு விரும்பிச் சென்ற என் நெஞ்சம்)

எனவும், நற்றிணையில்

'' ... ... ... கடுங்கண் யானை
அணையக் கண்ட அங்குடிக் குறவர்'' (நற். 108-2)

(கொடிய களிற்றுயானை வந்து புகுந்ததை நோக்கிய அழகிய குடியிலுள்ள குறவர்)

எனவும், குறுந்தொகையில்

"ஓரை யாயங் கூறக் கேட்டும்" (குறு, 48-3)

(விளையாட்டு மகளிர் சொல்லுதலைக் கேட்டிருந்தும்)

எனவும், புறநானூற்றில்

"இரப்பச் சிந்தியேன் ... ... ... ..." (புறம், 376-18)

(இரத்தலை நிலையேனாயினேன்)

எனவும், பத்துப்பாட்டில்

"பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்கு" (பத்து. 4-448)

(பொறிகளையுடைய வண்டுகள் மொய்க்கும் புள்ளிகளையுடைய யானையைப் பாய்ந்த அரிமா பின்னர்ப் புலிக்குட்டியைப் பாய்ந்து கொள்ள விரும்பினாற் போன்று)

எனவும், கலித்தொகையில்

"துன்னரூஉந் தகையவே காடென்றார் .." (கலி. 1-15)

(காடுகள் செல்வார்க்குச் சேருதலரிய தகைமையினையுடைய வாயே இருக்குமென்று சொன்னார்)

எனவும், குறளில்

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" (குறள். 1118)

(மதியே, வாழ்வாயாக; இம்மாதர் முகம்போல் யான் மகிழும் வகை ஒளிவீச வல்லையாயின், நீயும் என் காதலையுடையை யாதி)

எனவும், சிலம்பில்

"ஆங்குப் பிலம்புக வேண்டுதி ராயின்" (சிலம்பு. 11-104)

(அவ்விடத்து அப்பிலத்தின்கண் நுழைய விரும்புவீராயின்)

எனவும், மணிமேகலையில்

"அடில்லாய்ச் சுடலை தின்னக் கண்டும்" (மணி. 6-101)

(இந்த நெருப்பையே வாயாகக் கொண்ட ஈமப்புறங்காடு கொன்று போகட்ட உடல்களைத் தின்று தீர்ப்பதனைக் கண்

கூடாகக் கண்டு வைத்தும்) எனவும் வரும் இடங்கள் செயவென் வாய்பாட்டு எச்சம் தொழிற்பெயர் போன்று வரும் பண்பினை நன்கு காட்டும்.

### 2.1.4.3.9 நோக்க வேற்றுமைச்சொல்

முன்னரே குறிப்பிட்டபடி ஆக என்னும் செயவென் வாய்ப்பாட்டுச் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரே ஒரு இடத்தில் நோக்க வேற்றுமைச் சொல்லாக வந்துள்ளமையைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரத்தில்

''கஞ்சன் வஞ்சம் கடத்தற் காக
அஞ்சன் வண்ணன் ஆடிய ஆடலுள்'' (சிலம்பு. 6-46)

என வரும் அடிகளில் ஆக என்பது நோக்க வேற்றுமையைக் குறிக்கும் இடைச் சொல்லாக வந்திருத்தல் காணத்தக்கது. ''கடத்தற்காக'' என்பது கடத்தற்கு என்னும் பொருள் தருவதும், எனவே இங்கு இவ்வெச்சம் வேற்றுமைச் சொல்லாகவே பயன்படுவதும் கவனிக்கத்தக்கன, பின்பழந்தமிழ் நூலான சிலம்பில் மட்டுமே இவ்வெச்சம் வேற்றுமைச் சொல்லாக முதன்முதலில் காணப்படுவதும், இன்றைய தமிழில் இவை மிக அதிகமாக வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

### 2.1.4.4.4 எழுவாய்

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் ஒரு சில உண்மைகள் காணக் கிடைக்கின்றன. செயவென் வாய்பாட்டுச் சொற்களும் அவை கொண்டு முடியும் வினைகளும் ஒரே எழுவாயை எடுத்துவரும் சில இடங்கள் காணப்பட்டாலும், இரு வினைகளும் இருவேறு எழுவாய்களை எடுத்து வருதலே மிக அதிகமாகக் காணப்படுகிறது.

### 2.1.4.4.1. தாக்கப்பொருள்

தாக்கப் பொருளில்தான் இவ்வெச்சம் மிக அதிகமான இடங்களில் வந்துள்ளது என்பதை முன்னரே கண்டோம். இப்பொருளில் வரும் எச்சச்சொற்களும் இவைகொண்டு

முடியும் வினைகளும் அனைத்து இடங்களிலும் இருவேறு எழுவாய்களைக் கொண்டே வந்துள்ளன.

### 2.1.4.4.1.1 இருவேறு எழுவாய்கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் 2695 இடங்களில் இவ்வெச்சம் இப்பொருளில் வர இவ்விடங்கள் அனைத்திலும் இவ்வெச்சச் சொற்களும், அவை கொண்டு முடியும் வினைகளும் வெவ்வேறு எழுவாய்களைக் கொண்டே வரக்காண்கிறோம். எடுத்துக் காட்டாக,

''பாயிரு ணீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதற் றோன்றி யாஅங்கு'' (பதி.59-5)

என வரும் பதிற்றுப்பத்து அடிகளில் நீங்க என்னும் எச்சமும், அதுகொண்டு முடியும் பரப்பி என்ற எச்சமும் இருவேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளன. நீங்க என்னும் எச்சத்தின் எழுவாயாக ஞாயிறும் வந்துள்ளமையைக் காண கிறோம். ''உலகமெங்கும் பரந்துள்ள இருள் நீங்கும் வண்ணம் ஞாயிறானது பலவாகிய தன் கதிர்களைப் பரப்பிக் கீழ்த் திசையிலே தோன்றியது போல'' என ஆசிரியர் இவ்வடி களுக்குப் பொருள் எழுதிச் செல்லுதல் காண்க. இதுபோன்றே

''இருஞ்சா யன்ன செருந்தியொடு வேழங்
கரும்பி னலமருங் கழனி யூரன்
பொருந்துமல ரன்னவென் கண்ணழப்
பிரிந்தன னல்லனோ பிரியலெ னென்றே'' (ஐங். 18)

(கரிய தண்டான் கோரையோடும் அதனை ஒத்த பஞ்சாய்க் கோரையோடும் புல்லிய கொறுக்கைச்சி இனிய கரும்பு போலச் சுழலுதற்குக் காரணமான ஊரையுடைய தலைவன் நின்னை ஒருபொழுதும் பிரிந்துறையேன் என்று உறுதிமொழி கூறி யிருந்தும் மணம் பொருந்திய தாமரை மலரை ஒத்த என் கண்கள் அழும்படி இப்பொழுது பிரிந்துறைகின்றனன் அல்லனோ? அத்தகையன் இனிப் பிரியான் என்று யான் எவ்வாறு தெளிதல் கூடும்?)

என வரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் அழ என்ற எச்சத்தில் எழுவாயாகக் கண் என்ற பெயரும், பிரிந்தனன் என்ற வினை

முற்றின் எழுவாயாக ஊரன் என்ற பெயரும் வருதலைக் காண்கிறோம்.

இதுபோன்றே அகநானூற்றில்,

''பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்
புயலேறு உரைஇய வியலிருள் நடுநாள்''
(அகம். 218-5)

(பெரிய மலையின் உச்சி அதிரச் சூழ்ந்துகொண்டு மேகமானது இடியேற்றுடன் பரந்த மிக்க இருள் கொண்ட ஒருநாள் இரவில்)

எனவும், நற்றிணையில்

''இரும்பனிப் பருவத்த மயிர்க்காய் உழுந்தின்
அகலிலை அகல வீசி அகலாது
அல்கலும் அலைக்கும் நல்கா வாடை'' (நற். 89-5)

(மிக்க முன்பனிப் பருவத்தில் மயிர்கள் அமைந்த உழுந்தின் அகன்ற இலைகளெல்லாம் சிதையும்படி வீசி நம்மை விட்டு நீங்காது நாள்தோறும் வருத்துகின்ற அன்பு செய்யாத வாடைக் காற்றானது)

எனவும், குறுந்தொகையில்

''முரம்புகண் உடைய வேகிக் கரம்பைப்
புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்''
(குறு. 400-4)

(பருக்கைகளையுடைய மேட்டுநிலமாகிய இடம் நுறுங்கும்படிச் சென்று கரம்பை நிலத்தில் புதிய வழியை உண்டாக்கிய அறிவுடைய வலவனே !)

எனவும், புறநானூற்றில்

''வேங்கை மார்ப னிரங்க வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே'' (புறம். 21-9)

(வேங்கைமார்பன் வருந்த நாடோறும் வென்றி கொளத் தழைத்த தும்பையுடைய புலவர் பாடப்படும் துறைகளை முடித்த வெற்றியினையுடைய வேந்தே)

எனவும், பத்துப்பாட்டில்

''பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்''

(பத்து. 1-45)

(பாறை நிலம் முதிர்வு பெற்ற குளிர்ந்த கடல் தன் நிலை குலையும்படி உள்ளே சென்று சூரபன்மாவாகிய தலைவனைக் கொன்ற ஒளிருகின்ற இலைத் தொழிலையுடைய நெடு வேலாலே)

எனவும், பரிபாடலில்

''மலைமாசு கழியக் கதழுமருவி யிழியும்
மலிநீர்... ... ... ... ... ...'' (பரி. 6-5)

(மலைகளின் மேற் படிந்துள்ள அழுக்குகள் தீரும்படி விரையும் அருவியாய் வீழ்கின்ற வெள்ளம்)

எனவும், கலித்தொகையில்

''நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை''

(கலி. 31-15)

(நீண்ட கரும்பில் ஓங்கின பூவை நிறங் கெடும்படி காற்றாற் றூற்றித் தோள்கள் குளிரால் நடுங்கி நம் ஆகத்தைச் சேரும் படி துவற்றுகின்ற இச் சிலவாகிய மழை)

எனவும், குறளில்

''ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை உயிர்க்கு'' (குறள். 231)

(வறியார்க் கீக; அதனாற் புகழுண்டாக வாழ்க; அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லையாதலான்)

எனவும், சிலம்பில்

''ஆர்வமுஞ் செற்றமு மகல நீக்கிய
வீர னாகலின் விழுமம் கொள்ளான்''

(சிலம்பு. 10-168)

(விருப்பினையும் வெறுப்பினையும் தன்னை விட்டு அகலும் படி போக்கிய வீரனாகலாலே இவர்க்கு வருந்துன்பத்திற்கு வருத்தங் கொள்ளானாகி)

எனவும், மணிமேகலையில்

"ஆம்பலுங் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுண மலர்ந்த குண்டுநீ ரிலஞ்சி" (மணி. 8-7)

(ஆம்பலும் குவளையுமாகிய கொடிகள் தம்முள் விரவிப் படர்ந்து கலந்து பசித்து வருகின்ற வண்டுகள் தாதுண்டு மகிழுமாறு மலர்ந்திருக்கின்ற ஆழமான நீரையுடைய பொய்கைக்கரையினையும்)

எனவும் வரும் இடங்களில் இவ்வெச்சங்களும் இவைகொண்டு முடியும் வினைகளும் வெவ்வேறு எழுவாய்களைக்கொண்டு வந்துள்ளமையைக் காண்கிறோம்.

## 2.1.4.4.2 உடனிகழ்ச்சிப்பொருள்

உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் அனைத்து இடங்களும் இருவேறு எழுவாய்களையே கொண்டு வருதலும், ஒரு இடம் கூட ஒரே எழுவாயைக் கொண்டு வாராமையும் இங்குக் குறிப் பிடத்தக்கன. எடுத்துக் காட்டாகப் பதிற்றுப்பத்தில் வரும் 130 இடங்களும் இருவேறு எழுவாய்களையே கொண்டு வந்துள்ளன.

### 2.1.4.4.2.1 இரு எழுவாய்கள்

"புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
தொலையாக் கொள்கைச் சுற்றஞ் சுற்ற
வேள்வியிற் கடவு ளருத்தினை..." (பதி. 70-16)

எனவரும் பதிற்றுப்பத்து அடிகளில் சுற்ற என்ற எச்சத்தின் எழுவாயாகச் சுற்றம் என்ற சொல்லும், அது கொண்டு முடியும் வினையான அருத்தினை என்ற சொல்லின் எழுவாயாக நீ என்ற தோன்றா எழுவாயும் வரக் காண்கிறோம். இதே நிலையைத்தான் ஐங்குறுநூற்றிலும் காண்கிறோம்.

"எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண்டுளி வீசிப்
பயலை செய்தன பனிப்டு துறையே" (ஐங். 141)

(குளிர்ச்சியைத் தோற்றுவிக்கின்ற நம் தண்கடற்றுறைகள் தம் பக்கலிலே உள்ள எக்கராகிய மணற்பரப்புகள் ஞாழல் மலர்களின் மணமும் செருந்திமலரின் மணமும் கமழாநிற்ப, துவலையாகிய குளிர்ந்த துளிகளை என்மேல் வீசி எனக்கிந்தப் பசலைநோயை உண்டாக்கின)

என வரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் கமழ என்ற எச்சத்தின் எழுவாயாக எக்கர் என்ற பெயரும், பயலைசெய்தன என்ற வினைமுற்றின் எழுவாயாகப் பனிபடுதுறை என்றபெயரும் வந்துள்ளன.

இதுபோன்றே அகநானூற்றில்

"உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்
பைதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்" (அகம், 102-2)

(பூசிய மயிர்ச் சாந்தினையுடைய பரந்த கரிய கூந்தலை மெல்லென அசைந்து வரும் காற்றுப் புகுந்து புலர்த்த, தழைத்து நீண்ட அக்கூந்தலைத் தன் கையாற் பெயர்த்துக் கோதிக் கொண்டு அவன் மனைவி அப்பெரிய வரையின் பக்கத்தே குறிஞ்சிப் பண்ணைப் பாடாநிற்க, தான் கொண்ட தினைக் கதிரினையும் உட்கொள்ளாது, நின்ற நிலையினின்றும் அகலாது துயில் வரப்பெறாத அழகிய கண் துயில் வரப்பெற்று வீரத்தினை விரும்பிய இளைய களிறு விரைந்து தூங்கும் நாட்டையுடையனாகிய நம் தலைவன்)

எனவும், நற்றிணையில்

"மனைவாய் ஞமலி ஒருங்குபுடை ஆட
வேட்டுவலம் படுத்த உவகையன் காட்ட

நடுகாற் குரம்பைத்தன் குடிவயிற் பெயரும்
குன்ற நாடன் ... ... ... ... ...'' (நற். 285-5)

(வேட்டையிலே தான் பெற்ற வென்றியாலாய உவகையுடைய வனாகி மனையகத்துள் நாய்கள் எல்லாம் ஒருசேரப் பக்கத்திலே வந்து குரைத்து விளையாட, காட்டகத்துள்ள நட்ட காலிலே கைசேர்த்துப் பிணித்த தானிருக்கும் குடிசையையுடைய சேரியின்கண்ணே செல்லாநிற்குங் குன்ற நாடன்)

எனவும், குறுந்தொகையில்

''மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறை நிவந்தாங்கு'' (குறு. 205-1)

(மின்னுதலைச் செய்யும் தொகுதிகளையுடைய பெய்தலை யுடைய மழை பெய்யா நிற்ப வானத்தின்கண்ணே அசைதலை யுடைய அன்னப்பறவை பறத்தலில் உயர்ந்தாற் போன்று) எனவும், புறநானூற்றில்

''புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னா தம்மவில் வுலகம்'' (புறம். 194-3)

(காதலரொடு கூடிய மகளிர் பூவணியை யணிய பிரிந்த மகளிரது வருத்தத்தையுடைய உண்கண் நீர் வார்ந்து துளிப்ப இப்பரிசு ஒத்து ஒவ்வாமைப்படப் படைத்தோன் நிச்சிதமாக அப் பண்பில்லாதோனாகிய நான்முகன்;கொடிது இவ்வுலகினது இயற்கை.)

எனவும், பத்துப்பாட்டில்

''நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகி
... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ...
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்''

(பத்து. 4-155)

(செறிந்த இருள் போகின்ற விடியற்காலத்தே பறவைகள் துயிலெழாநிற்ப எழுந்து தன் தொழிலிடத்தே சென்று...... புதிய மோரை விற்கும் நன்றாகிய மாமை நிறத்தையுடைய மேனியையும், தாளுருவி என்னும் அணிகலன் அசையா நின்ற காதினையும், மூங்கில் போன்ற தோளினையும், குறிதாகிய அறலைத் தன்னிடத்தே கொண்ட மயிரினையும் உடைய ஆய்ச் சாதியிற் பிறந்த மகள்)

எனவும், பரிபாடலில்

"வலிய ரல்லோர் துறைதுறை யயர
மெலிய ரல்லோர் விருந்துபுன லயரச்
சாறுஞ் சேறு நெய்யு மலரும்
நாறுபு நிகழும் யாறுவர லாறு" (பரி. 6-39)

(மெலியோர் உள்ளே புகுத மாட்டாமையாலே துறையை விரும்பாநிற்ப, வலியவர் புதுநீரின்கட் புகுந்து ஆடுதலானே, பத்துத்துவர் முதலாயின ஊறின நீரும் சந்தன முதலியவற்றின் குழம்பும் நறுமண எண்ணெயும் சூடிய பூக்களும் மணக்கும்படி இவ் வையையாறு வருகின்றவாறு நிகழாநிற்கும்)

எனவும், கலித்தொகையில்

"இனக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தயல்
ஊசலூர்ந் தாட ஒருஞான்று வந்தானை" (கலி.37-13)

(தினைப்புனங்களில் இனமாகிய கிளியை விழாமல் ஓட்டியாம் பாதுகாக்கும் புனத்துக்கு அயலிலிட்ட ஊசலை ஏறி ஆடாநிற்க, ஒருநாள் வந்தவனை)

எனவும், குறளில்

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்" (குறள். 96)

(பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை மனத் தானாராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுமாயின் அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும்)

எனவும, சிலம்பில்

"மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி"
(சிலம்பு. 7-25-1)

(இரு பக்கத்தும் வண்டுகள் மிக்கொலிக்க அழகிய பூவாடையைப் போர்த்துக் கரிய கயற்கண் விழித்து அசைந்து நடந்தா யாகலால் காவேரி நீ வாழ்வாயாக)

எனவும், மணிமேகலையில்

"வெண்டிரை பிரிந்த வெண்ணிறச் சாமரை
கொண்டிரு மருங்குங் கோதையர் வீச
இருந்தோன் - — — — - ... (மணி. 18-49)

(வெள்ளிய பாற்கடலின் அலைகள் போல விரிந்து புரள்கின்ற வெண்ணிறமான சாமரைகளைச் செங்கையிலேந்தி "அக்கட்டி லின் இரண்டு பக்கத்தேயும் அழகிய மங்கல மகளிர் நின்று வீசாநிற்ப வீற்றிருந்த அரசிளங்குமரனாகிய உதயகுமரன்)

எனவும் வரும் இடங்களில் செயவென் எச்சமும் அது கொண்டு முடியும் வினையும் வெவ்வேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளமையைக் காண்க.

### 2.1.4.4.3 நோக்கப்பொருள்

ஆனால் இவ்வெச்சம் நோக்கப்பொருளில் வரும்போது நிலைமை மாறியிருக்கக் காண்கிறோம். செயவென் எச்சமும் அது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டு வரும் இடங்களே விகிதாசாரத்தில் அதிகமாகக் காணப்படு கின்றன. இருப்பினும் இரு எழுவாய்களைக் கொண்டு வரும் இடங்களும் சில (16) காணப்படுகின்றன.

### 2.1.4.4.3.1 ஒரே எழுவாய்

பதிற்றுப்பத்தில் எட்டு இடங்களில் இவ்வெச்சம் நோக்கப் பொருளைக் காட்டி நிற்க, அவற்றில் ஏழு இடங்களில் இவ் வெச்சமும் இது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயையே கொண்டு வந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

"... — — ... ... — ...நார்முடிச் சேரல்
— — — — — — — — — — — —
— ... — — ... — ... — ... ... —
தான்றர வுண்ட நனைநறவு மகிழ்ந்து
நீரிமிழ் சிலம்பி னேரி யோனே" (பதி. 40-16)

என வரும் பதிற்றுப்பத்து அடிகளில் தர என்னும் எச்சமும் அதுகொண்டு முடியும் உண்ட என்னும் வினையும் நார்முடிச் சேரல் என்னும் ஒரே எழுவாயையே கொண்டுள்ளமையைக் காண்கிறோம், பிற பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதே நிலையைத்தான் காண்கிறோம். ஐங்குறுநூற்றில் 10 இடங்களில் ஒரே எழுவாயும், 6 இடங்களில் இருவேறு எழுவாய்களும் வந்துள்ளன. ஐங்குறுநூற்றில்

"அந்தீங் கிளவி தான்றர வெம்வயின்
வந்தன்று மாதோ காரே......" (அகம்' 94-9)

(இக் கார்ப் பருவமானது அழகிய இனிய சொற்களையுடைய எங் காதலியை எம்மிடத்தே தருதற்பொருட்டு வந்தது காண்) என வரும் அடிகளில் தர என்னும் ஒரே எழுவாயையே கொண்டுள்ளன. இதுபோன்றே அகநானூற்றில்

"சிறுகட் பன்றிப் பெருநிரை கடிய
முதைப்புனங் காவலர் நினைத்திருந் தூதும்
கருங்கோட் டோசை... " (அகம். 94-9)

(சிறிய கண்ணினையுடைய பன்றியின் பெருங்கூட்டத்தை ஓட்டற்கு முற்றிய தினைப்புனங் காத்திருப்போர் அவை வருங்காலத்தை எண்ணியிருந்து ஊதும்பெரிய கொம்பின் ஓசை)

எனவும், நற்றிணையில்

"அரும்பவிழ் அலரிச் சுரும்புண் பல்போது
அணிய வருதுநின் மணியிருங் கதுப்பெனன
எஞ்சா வஞ்சினம் நெஞ்சுணக் கூறி" (நற். 214-4)

(நின்னுடைய நீலமணிபோலுங் கரிய கூந்தலுக்குக் கார்காலத்து அரும்பு மலர்ந்த இதழ்களில் வண்டுகள் தேனைப் பருகாநின்ற பலவாய மலர்களை அணியும்பொருட்டு யாம் வருகின்றோம்,

என்று என் மனம் கொள்ளுமாறு குறையாத கடுஞ்சூள் பலம்வு கூறி)

எனவும், குறுந்தொகையில்

''பல்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழிநங் காத லோரே'' (குறு. 118-3)

(விருந்தினரை வினவியறிவோர் எத்தகைய விருந்தினரும் தடையின்றிப் புகுவதற்குத் திறந்து கிடந்த வாயிலை அடைத்தற் பொருட்டு இன்னும் விருந்தினிர் யாரும் உள்ளே வரவேண்டு வீர் இருந்தனிரோ என்று ஆராயும்பொழுதும் தம் தலைவர் வந்திலர்)

எனவும், புறநானூற்றில்

''வன்கை வினைஞர் புன்றலைச் சிறாஅர்
தெங்குபடு வியன்பழ முனையிற் றந்தையர்
குறைக்க ணெடும்போ ரேறி விசைத்தெழுந்து
செழுங்கோட் பெண்ணைப் பழந்தொட முயலும்
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன் (புறம். 61-8)

(வலிய கையையுடைய உழவர் புல்லிய தலையையுடைய சிறுவர் தெங்கு தரும் பெரிய பழத்தை வெறுப்பின் தந்தையருடைய தலை குவியாமல் இடப்பட்ட குறைந்த இடத்தையுடைய நெடிய போரின்கண்ணே யேறி உகைத்தெழுந்து வள்விய கோட்புக்க பனையின்து பழத்தைத் தொடுதற்கு முயலும் நாடோறும் புது வருவாயையுடைய நல்ல நாட்டிற்கு வேந்தனாகிய)

எனவும், பத்துப்பாட்டில்

''மென்மொழி மேவலர் இன்னரம் புளர
— ... — ... — — — — — — —
— ... — — ... ... — ... ... —
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்க'' (பத்து. 1-142)

(எக்காலமும் மெல்லிய மொழியே பேசுதல் பொருந்திய கந்தருவர் இனிய யாழ் நரம்பை இயக்குதற் பொருட்டு —

குற்றமில்லாத கந்தருவ மகளிரோடே தாமும் குற்றமின்றி விளங்காநிற்ப)

எனவும், பரிபாடலில்

"பனிமலர்க் கண்ணாரோ டாட நகைமலர்
மாலைக்கு மாலை வரூஉம் வரைசூணில்
காலைப்போய் மாலை வரவு" (பரி. 8-48)

(நீ குளிர்ந்த மலர்போன்ற கண்ணினையுடைய அம்மகளிரோடே கூடி ஆடும்பொருட்டே நாள்தோறும் காலைப்பொழுதிலே பிரிந்துபோய் மாலை பொழுதிலே ஈண்டு வரும் வருகை ஒளிமலரையுடைய 'மாலைதோறும் நிகழாநின்றது. இங்ஙன மாதலின் நீ பண்டு நின்னிற் பிரியேன் பிரியின் உயிர் வாழேன் என வரைந்து கூறிச் செய்த சூண்மொழியைத் தவிர்வாயாக)

எனவும், கலித்தொகையில்

"பொருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன்........." (கலி. 98-10)

(தன்னிடத்தே சூழ்ந்த பூக்கள் மிக்க நீர் பொருகின்ற கரையை யுடைய வையையாற்றில் வருகின்ற நீரையாடுதற்குத் தங்கினேன்)

எனவும், திருக்குறளில்

"கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்" (குறள். 1021)

(தன் குடி செய்தற்பொருட்டுத் தொடங்கிய கருமம் முடியாமை யின் எண்ணிய கருமஞ் செய்தற்கியான் கையொழியேனென் னும் ஆள்வினைப்பெருமை போல ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை)

எனவும், சிலம்பில்

"நன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்" (சிலம்பு. 27-110)

(தூய நீரினையுடைய கங்கையில் நீராட வந்தேன்)

என்வும், மணிமேகலையில்

"ஊர்துயி லெடுப்ப உரவுநீ ரழுவத்துக்
காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தலும் (மணி. 1-25)

(இவ்வாறு அம் மூதூரில் வாழ்வாரையெல்லாம் உறக்கத்தினின்றும் எழுப்புவதற்கு வலிமை மிக்க நீர்ப்பரப்பாகிய குணகடலினின்றும் கரிய இருளைத் துரந்து கதிரவன் றோன்றாநிற்பவும்)

எனவும் வரும் எடுத்துக்காட்டுக்களில் இவ்வெச்சம் அது கொண்டு முடியும் ஒரே எழுவாயையே கொண்டுள்ளமையைக் காண்கிறோம்.

## 2.1.4.4.3.2 இரு எழுவாய்கள்

செயவென் எச்சம் நோக்கப் பொருளில் வரும் இடங்களில் இதுவும் இதுகொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டிருத்தலே பெரும் பான்மையாகக் காணப்படினும், இருவேறு எழுவாய்களைக் கொண்டு வரும் இடங்களையும் காண்கிறோம். எடுத்துக் காட்டாக, பதிற்றுப்பத்தில்

"... .........நின்
முன்றிணை முதல்வர்க் கோம்பின ருறைந்து
மன்பதை காப்ப வறிவு வலியுறுத்து
நன்றறி யுள்ளத்துச் சான்றோ ரன்னநின்
பண்பு... ... ... ... — ... ... ... ... ... (பதி. 72-3)

என் வரும் அடிகளில் காப்ப என்ற எச்சத்தின் எழுவாயாக முதல்வர் என்ற பெயரும், அதுகொண்டு முடியும் வினையான வலியுறுத்தும் என்ற சொல்லுக்கு எழுவாயாகச் சான்றோர் என்ற பெயரும் வந்துள்ளன. இதுபோன்றே ஐங்குறுநூற்றில் வரும் 16 இடங்களில் 6 இடங்கள் வேறு எழுவாய்களைக் கொண்டுவரக் காண்கிறோம். ஐங்குறுநூற்றில்

"மயங்கு மலரகல நீயினிது முயங்க
வருவர் வாழி தோழி" (குறு. 332-2)

என வரும் அடிகளில் முயங்க என்ற எச்சத்தின் எழுவாயாக நீ என்ற பதிலிடுபெயர் வர வருவர் என்ற வினைமுற்றின்

எழுவாயாகக் காதலர் என்ற பெயர் (தோன்றா எழுவாய்) வந்துள்ளமை காணலாம். இதுபோன்றே

"ஆய்தொடி யரிவை கூந்தல்
போதுகுரல் அணிய வேய்தந் தோயே"

(அகம். 1(4-16)

என வரும் அகநானூற்று அடிகளிலும் அணிய என்பதன் எழுவாயாக அரிவை என்ற பெயரும், தந்தோய் என்ற வினையின் எழுவாயாக நீ (தோன்றா எழுவாய்) என்ற பதிலிடு பெயரும் வந்துள்ளன.

இதுபோன்றே நற்றிணையில்

"பயநிரைக்கு எடுத்த மணிநீர்ப் பத்தர்
புன்தலை மடப்பிடி கன்றோடு ஆர
வில்கடிந்து ஊட்டின பெயரும்
கொல்களிற்று ஒருத்தல் சுரன்இறந் தோரே"

(நற். 92-6)

(பயனைத் தருகின்ற ஆனிரை யுண்ணுமாறு எடுத்து வைத்த தெளிந்த நீர்ப் பத்தரைப் புல்லிய தலையையுடைய இளம்பிடி தன் கன்றுடனே நீர் உண்ண வேண்டி அப் பத்தரின் வாயை மூடியவிற்பொறியை முறித்துப்போகட்டு அவற்றை உண்பித்துச் செல்லா நிற்கும் கொல்லுந் தொழிலையுடைய களிற்றொருத் தலையுடைய சுரத்தின்கண்ணே சென்ற தலைவர்)

எனவும், குறுந்தொகையில்

"நோய்நீத் தரும்படர் தீரநீ நயந்து
கூறின் எவனோ தோழி... ..." (குறு. 332-2)

(தோழி, வருத்தத்திலே உழல்கின்ற பொறுத்தற்கரிய துன்பம் நீங்கும் பொருட்டு நீயே விரும்பிக் கூற வேண்டியதனை எடுத்துக் கூறின் அதனால் வருங்குற்றம் யாது ?)

எனவும், புறநானூற்றில்

"மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்கு"

(புறம். 161-6)

(உயிர்ப்பன்மைகளெல்லாம் சென்று நீருண்டற்குக் கங்கை யினது கரையைப் பொருள் மிக்க வெள்ளம் நிறைந்து தோன்றியவாறு போல)

எனவும், பத்துப்பாட்டில்

> "மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
> பல்கதிர் விரிந்தன் றொருமுகம்... ..." (பத்து. 1-91)

(ஒருமுகம் பெருமையுடைத்தாகிய இருளாலே மறைக்கப்பட்ட உலகம் குற்றமின்றாய் விளங்கும் பொருட்டுப் பலவாகிய சுடர் களையும் தோற்றுவியா நின்றது)

எனவும், பரிபாடலில்

> "விரும்பிய வீரணி மெய்யீரந் தீரச்
> சுரும்பார்க்குஞ் சூர்நறா வேந்தினாள்..."
> (பரி. 7-61)

(இங்ஙனம் விரும்பப்பட்ட நீராட்டிற்கேற்ற ஈர அணியை உடைய உடல் ஈரம் உலர்ந்து வெப்பமுடையதாகும் பொருட்டுத் தலைவி வண்டுகள் சூழ்ந்து ஆரவாரித்தற்குக் காரணமான கடுப்புடைய கள்ளைப் பருகுதற்குத் தன் கையின் கண் ஏந்தினாள்)

எனவும், கலித்தொகையில்

> "மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
> கண்ணிதந் திட்ட தெனக்கேட்டு..." (கலி, 107-31)

(கழுவி அழுக்கற்ற நின்னுடைய மயிரிடத்தே ஏற அவன் கண்ணியைத் தந்ததென்று பிறர் சொல்லக்கேட்டு)

எனவும், சிலம்பில்

> "பத்தினி யொருத்தி படிற்றுரை எய்த
> மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
> அறியாக் கரிபொய்த்து... ... ... ..." (சிலம்பு. 15-76)

(ஒரு கற்புடை மகள் பொய்ப் பழியினை எய்துதற்கு அவளுடைய கணவனுக்கு அறிவிலான் ஒருவன் „ கண்டு தெளியாத சான்று கூறிப்பொய்த்தலான்)

எனவும், மணிமேகலையில்

"சம்பா பதிதன் ஆற்றல் தோன்ற
எங்குவாழ் தேவருங் கூடிய இடந்தனில்"

(மணி. 6-186)

(சம்பாபதி என்னும் அக்காவற்றெய்வத்தின் ஆற்றல் கோதமை முதலிய உலகமாந்தர்க் கெல்லாம் நன்கு விளங்கும் பொருட்டு அத்தெய்வத்தின் ஆணை வழியே நிலவுலக முதலாக மேலுள்ள இருபத்தேழுலகங்களிலும் உறைகின்ற தேவரெல்லாம் ஒருங்குடன் வந்து கூடிய சிறப்பினையுடைய இந்தச் சுடுகாட்டுக் கோட்டத்திலே)

எனவும் வரும் இடங்களில் எல்லாம் செயவென் எச்சமும் அது கொண்டு முடியும் வினையும் இருவேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளமையைக் காண்க.

## 2.1.4.4.4 காரணப்பொருள்

ஆனால் காரணப்பொருளில் நிலைமை மாறியிருக்கக் காண்கிறோம். இவ்வெச்சம் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் பெருவாரியான இடங்களில் காரணப்பொருள் காட்டி வந்திருப்பினும் ஒரே ஒரு இடத்தில்மட்டுமே இதுவும் இது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டு வந்துள்ளன. எஞ்சிய 669 இடங்களிலும் இருவேறு எழுவாய் களே வந்துள்ளன.

## 2.1.4.4,4.1 ஒரே எழுவாய்

முன்னரே குறிப்பிட்டபடி பழந்தமிழ் நூல்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே செயவென் எச்சமும் அதுகொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டு வந்துள்ளன. இது அகநானூற்றில் 145ஆம் பாடலில் காணப்படுகிறது.

"வற்றல் மரத்த பொன்தலை ஓதி
வெயில்கவின் இழந்த வைப்பில் பையுள்கொள
நுண்ணிதின் நிவக்கும் வெண்ஞெமை வியன் காட்டு"

(அகம். 145-3)

என வரும் அகநானூற்றுப் பாடல் வரிகளில் கொள என்னும் எச்சமும் அது கொண்டு முடியும் நிவக்கும் என்னும் வினை முற்றும் ஓதி என்னும் ஒரே எழுவாயையே கொண்டுள்ளன. "வற்றல் என்னும் மரத்தினிடத்தவாகிய பொன்னிறம் வாய்ந்த தலையையுடைய ஓந்தி வெய்யிலால் அழகு ஒழிந்த ஊர்களில் வருத்தங்கொள்ளுதலின் மெல்லெனத் தாவும் வெள்ளிய ஞெமை மரங்களுடைய அகன்ற காட்டகத்தே" என உரையாசிரியர் பொருள் எழுதுதல் காண்க.

### 2.1.4.4.4.2 இரு எழுவாய்கள்

முன்னரே குறிப்பிட்டதுபோல பழந்தமிழ் நூல்களில் ஒரே ஒரு இடம் தவிர்த்துப் பிற இடங்கள் அனைத்திலும் செயவென் எச்சமும் அது கொண்டு முடியும் வினையும் இரு எழுவாய்களையே கொண்டு வருதலைக் காண்கிறோம். எடுத்துக் காட்டாக, பதிற்றுப்பத்தில்

> "ஊரெரி கவர வுருத்தெழுந் துரைஇப்
> போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப" (பதி. 71-9)

"போரின்கண்ணே சுடுவதற்காக எடுத்த தீயானது பகைவர் ஊர்களைக் கவர்ந்துண்டலால் சுடுநாற்றம் நாறுகின்ற புகை மிக்கெழுந்து பரந்து திசைகளை மறைக்க" என்று உரையாசிரியர் உரை எழுதுவதும், கவர என்னும் செயவென் எச்சத்தின் எழுவாயாக எரி என்ற சொல்லும், அது கொண்டு முடியும் வினையான மறைப்ப என்னும் எச்சத்தின் எழுவாயாகப் புகை என்ற சொல்லும் வந்திருப்பதும் குறிப்பிடத்தக்கன. இதுபோன்றே ஐங்குறுநூற்றில் வரும் 28 இடங்களும் இருவேறு எழுவாய்களையே கொண்டு வந்துள்ளன. ஐங்குறுநூற்றில்

> "வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
> காணிய சென்ற மடநடை நாரை
> யுளர வொழிந்த தூவி" (ஐங். 153-2)

(வெள்ளைக் கொக்கின் பார்ப்பு இறந்துபட்டதாகத் தன்னினமென்று கருதி இழவு கொண்டாடச் சென்ற மெல்லிய நடையையுடைய நாரையானது தனது சிறகைக் கோதுதலானே

உதிர்ந்த இறகினை) எனவரும் அடிகளில் உரை என்ற எச்சத்தின் எழுவாயாக நாரை என்ற பெயரும், அது கொண்டு முடியும் வினையான ஒழிந்த என்ற பெயரெச்சத்தின் எழுவாயாகத் தூவி என்ற சொல்லும் வந்திருத்தலைக் காண்க. இதுபோன்றே அகநானூற்றில்,

"வயற்சுறா எறிந்தென வலவன் அழிப்ப
எழில்பயங் குன்றிய சிறையழி தொழில
நிரைமணிப் புரவி விரைநடை தவிர"

(அகம். 190-12)

(வலிய சுறாமீன் தம் உடம்பிற் பொருந்தத் தாக்கி எறிந்ததாக தேர்ப்பாகன் செலவினை நிறுத்தலால் எழுச்சியும் பயனும் குன்றியனவும், பூட்டு அழிந்த செய்கையையுடையனவுமாகிய நிரைத்த மணிமாலை பூண்ட குதிரைகள்)
எனவும், நற்றிணையில்

"பல்லோர் பழித்தல் நாணி வல்லே
காழிற் குத்திக் கசிந்தவர் அலைப்பக்
கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரும்
முனியுடைக் கவளம் போல... ... ... ..."

(நற். 360-6)

(பலரும் இகழ்ந்து கூறுதல் பொறாது வெஃதி விரைவாக வருந்திய பாகர் இருப்பு முள்ளாலே குத்தி அலைத்தலாலே துன்புற்றுத் தன் துதிக்கையிடை வைத்ததனை மெய்யின மேல் வாரி இறைத்துக் கொள்ளுகின்ற யானைக் கன்றுக்கு இட்ட கவளம் போல)
எனவும் குறுந்தொகையில்

"நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்றம் நண்ணிக் குறவர் ஆர்ப்ப
மன்றம் போழு நாடன் தோழி" (குறு. 346-1)

(தோழி! இளமையுடைய பிடியானையை விரும்பி மூங்கிலின் முளை போன்ற [கொம்பினையுடைய இளங்களிற்றியானை மலையின்கண் பொருந்தி ஏறி ஆண்டுள்ள குறவர் ஆரவாரித்

தலாலே ஊரம்பலத்தை ஊடறுத்துப் போகாநிற்கும் நாட்டை யுடைய நந்தலைவன்)

எனவும், புறநானூற்றில்

"நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லி னல்லக நிறையப் பல்பொறிக்
கான வாரண மீனும்" (புறம்- 52-14)

(முற்காலத்து நரையையுடைய முதியோர் சூதாடுங்கருவியை இடுதலாற் குழிந்த அச்சூது கருவியினது நல்ல மனையாகிய இடம் நிறையப் பல பொறியையுடைய காட்டுக்கோழி முட்டை யிடும்)

எனவும் பத்துப்பாட்டில்

நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்"
(பத்து 2-31)

(நாணம் வருத்தலாற் பிறரை நோக்காது கவிழ்ந்த நன்மை விளங்குகின்ற கழுத்தினையும்)

எனவும், பரிபாடலில்

"பருக்கோட்டி யாழ்ப்பக்கம் பாடலோ டாடல்
அருப்ப மழிப்ப அழிந்தமனக் கோட்டையர்"
(பரி. 10-56)

(பரிய தண்டையுடைய யாழ்க்கூறும் மிடற்றுப் பாடலும் ஆடலும் ஆகிய இவை தன் மனத்திண்மையை அழித்து விட்டமையானே அழிந்தொழித்த நெஞ்சமாகிய அரணத்தை யுடைய மைந்தரும் மகளிரும்)

எனவும், கலித்தொகையில்

"நோயட வருந்தியும் நீ செய்த அருளின்மை
ஆயமும் மறைத்தாளென் றோழி...'. (கலி. 44-14)

(என்னுடைய தோழி காமநோய் வருத்துகையினாலே வருந்தியும் நீ செய்த அருளில்லாமையை ஆயத்தையும் மறைத்தாள்).
எனவும், குறளில்

''நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து'' (குறள். 1128)

(காதலர் எந் நெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலை அஞ்சாநின்றேம்; அவர் அதனான் வெய்துறலை யறிந்து)

எனவும், சிலப்பதிகாரத்தில்

''மோது முதுதிரையான் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுதழிப்ப மாழ்கி யைய''
''கோதை பரிந்தசைய மெல்விரலாற்
கொண்டோச்சும் குவளை.....'' (சிலம்பு. 7-7-1)

(மோதுகின்ற பெரிய அலையாலே தாக்குண்டு அசைந்து போந்த ஒலிக்கின்ற வாயையுடைய சங்கம் சிறுமியர் மணலின் மீது இயற்றிய சிற்றில் முதலியவற்றை உழுது அழித்தலால், ஐயனே அவர்கள் மயங்கித் தாம் அணிந்திருந்த மாலையை அறுத்து அசைந்து செல்லும்படி மெல்லிய விரல்களால் வீசியெறிந்ததிற் சிதறிய நீலமலர்கள்)

எனவும், மணிமேகலையில்

''அன்னச் சேவல் அயர்ந்துவிளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்
டோங்கிருந் தெங்கின் உயர்மட லேற'' (மணி. 5-123)

(சேவலன்னமானது பெரிதும் தன்னை மறந்து காதல் விளையாடல் நிகழ்த்திய தனக்குரிய பெடையன்னத்தைக் கதிரவன் மேலைக் கடலில் மறைதலாலே ஆட்டத்திற்குக் களமாயிருந்த

தாமரை மலரானது இதழ் குவித்துத் தன்னுள்ளே அடக்கி மறைத்துக் கொள்ளுதலாலே அத்தாமரையின் இதழ்களாலி யன்ற பொதி சிதைந்தழியும்படி கிழித்து அச் சேவலன்னம் தன் பெடையன்னத்தை எடுத்துக்கொண்டு உயர்ந்து நிற்கின்ற தெங்கினது உயர்ந்த மடலினூடே ஏறியிருப்பவும்)

எனவும் வரும் இடங்களில் இவ்வெச்சமும் இதுகொண்டு முடியும் வினையும் இருவேறு எழுவாய்களைக் கொண்டு வருதலைக் காண்கிறோம்.

### 2.1.4.4.5 வரிசைப் பொருள்

செயவென் எச்சம் வரிசைப் பொருளை உணர்த்தி வரும் இடங்கள் அனைத்திலும் இதுவும் இது கொண்டு முடியும் வினையும் இருவேறு எழுவாய்களையே கொண்டு வருதலைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில்

''படுகண் முரச நடுவட் சிலைப்பத்
தோமர வலத்தர் நாமஞ் செய்ம்மார்
ஏவல் வியங்கொண் டிளையரொ டெழுதரும்
ஒல்லார்... ... ... ... ... ... ...'' (பதி. 54-13)

என வரும் அடிகளில் சிலைப்ப என்னும் எச்சத்தின் எழுவா யாக முரசமும், அது கொண்டு முடியும் எழுதரும் என்னும் வினையின் எழுவாயாக ஒல்லார் என்னும் பெயரும் வந்திருக்கக் காண்கிறோம். இதுபோன்றே, ஐங்குறுநூற்றில்

''புலம்புகொண் மாலை மறைய
நலங்கே ழாக நல்குவ ளெனக்கே'' (ஐங். 97-3)

(தனிமைத் துயரத்தைத் தன்னோடு கொண்டிருக்கின்ற இந்த மாலைப்பொழுது மறைந்தவுடன் இன்பம் கெழுமிய தனது மார்பினை எனக்கு வழங்கியருளுவாளல்லளோ) என வரும் அடிகளில் மறைய என்னும் எச்சத்தின் எழுவாயாக மாலை யும், அது கொண்டு முடியும் நல்குவள் என்னும் வினைமுற்றின் எழுவாயாகத் தலைவியும் (வருவித்த எழுவாய்) வந்திருத்தலைக் காண்கிறோம். இதுபோன்றே, அகநானூற்றில்

''ஈயல்பெய் தட்ட இன்புளி வெஞ்சோறு
... ... ... ... ... ... ... ... ... ...
இளையர் அருந்தப் பின்றை நீயும்
... ... ... ... ... ... ... ... ...
பாலுடை அடிசில் தொடீஇய ஒருநாள்
மாவண் தோன்றல் வந்தனை சென்மோ''

(அகம். 394-5)

(மிக்க வண்மையுடைய தலைவனே! ஈயலையும் இட்டுச் சமைத்த இனிய புளிப்பு வாய்ந்த விருப்பம் தரும் சோற்றினை நின் ஏவலர் முன்பு உண்ண அதன் பின்பு நீயும் பால் பெய்த உணவினை உண்ணுதற்கு ஒருநாள் வந்து செல்வா யாக) எனவும், நற்றிணையில்

''காமர் நெஞ்சந் துரப்ப யாந்தன்
முயங்கல் விருப்போடு குறுகினே மாகப்
பிறைவனப்பு உற்ற மாசறு திருநுதல்
நாறிருங் கதுப்பின் எம் காதலி வேறுணர்ந்து
வெரூஉமான் பிணையின் ஒரீஇ
யாரை யோவென்று இகந்துநின் றதுவே''

(நற். 250-5)

(விருப்பம் வரும் எம்முள்ளம் எம்மைச் செலுத்த யாம் எம் காதலியை முயங்க வேண்டிய விருப்பத்துடனே அருகில் சென்றேமாக அங்ஙனஞ் சென்றவுடன் பிறைத்திங்களைப் போன்ற அழகு பொருந்திய, மாசற்ற சிறப்புடைய நெற்றியையும் மணங் கமழும் கரிய கூந்தலையும் உடைய அவள் தன் உள்ளத்து வேறாகக் கருதி, பிணைமான் போல வெருண்டு எம்மை நீங்கி அயலே சென்று நின்று நீ என்னருகிலே வருவதற்கு யாவனாந்தன்மையை யுடையை என்று இகழ்ந்து நின்றதை)

எனவும், குறுந்தொகையில்

''குருகு கொளக் குளித்த கெண்டை'' (குறு. 127-1)

(அன்னம் தன் அலகாற் கௌவ அதற்குத் தப்பி நீரினுள்ளே மூழ்கி உய்ந்த கொண்ட மீன்)

எனவும், புறநானூற்றில்

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ லயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்" (புறம். 152-1)

(ஆனையைக் கொன்று வீழ்த்த சிறந்த தொடையையுடைய அம்பு பெரிய வாயையுடைய புலியை இறந்துபாட்டை உறுவித்துத் துளை பொருந்திய கோட்டையுடையதாகிய தலையினையுடைய புள்ளிமான்கலையையுருட்டி உரல்போலுந் தலையையுடைய கேழலாகிய பன்றியை வீழச் செய்து அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கட் கிடக்கின்ற உடும் பின்கட் சென்று செறியும்)

எனவும், பத்துப்பாட்டில்

"தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை ஆமான் கயமுனிக் குழவி (பத்து. 10-449)

(தன் இனமெல்லாம் ஓடிவிட ஓடமாட்டாது வலிய அகப்பட்ட மடப்பத்தையுடைய ஆமானினது கன்றும், யானையின் இளமையுடைய கன்றும்)

எனவும், கலித்தொகையில்

விரைவனர் காதலர் புகுதர
நிரைதொடி துயரம் நீங்கின்றால் விரைந்தே
(கலி. 134-26)

(இவள் காதலர் விரைந்து புகுதர இடும்பை யாவதும் விரைந்து போயிற்று)

எனவும், சிலம்பில்

"ஊர்மடி கங்குல் ஒருவன் தோன்றக்
கைவாள் உருவஎன் கைவாள் வாங்க
எவ்வாய் மருங்கினும் யானவற் கண்டிலேன்"
(சிலம்பு. 16-207)

(ஊரரெல்லாம் உறங்கிய இராக் காலத்தே ஒரு கள்வன் வந்து தோன்ற யான் என் கைவாளினை உறையினின்றும் உருவினேனாக அவன் எனது அக்கைவாளினைப் பற்ற அதன் பின்னர் அவனை யான் எவ்விடத்தும் காண்கில்லேன்)

எனவும், மணிமேகலையில்

"ஈன்ற குழவிக் கிரங்கா ளாகித்
தோன்றாத் துடவையின் இட்டனள் நீங்கத்
தாயில் தூவாக் குழவிதுயர் கேட்டோர்
ஆவந் தணைந்தாங் கதன்றுயர் தீர
நாவால் நக்கி நன்பா லூட்டி" (மணிமேகலை. 13-9)

(தான் ஈன்ற மகவிற்கும் இரங்காதவளாய்ப் பிறர் பார்வைக்குக் காணப்படாத மறைவிடமானதொரு தோட்டத்தினூடே அம் மகனைப் போகட்டுப் போக, தாயில்லாமையாலே பாலுண்ணாத அக் குழவி ஒழியாது கூப்பிடுகின்ற துயரமான அழுகை யொலியைச் செவியுற்று ஒரு கறவைப் பசு வந்து அவ்விடத்தே அக் குழவியின் துன்பம் தீரும்படி தனது நாவினாலே நக்கியும், நல்ல பாலை அதன் வாயிலே பிலிற்றி ஊட்டியும்) எனவும் வரும் பழந்தமிழ் இலக்கிய எடுத்துக் காட்டுக்கள் அனைத்திலும் செயவென் எச்சமும் அது கொண்டு முடியும் வினையும் இரு வேறு எழுவாய்களையே கொண்டு வருதலைக் காண்கிறோம்.

### 2.1.4.5 காலம்

குறையெச்சங்களில் கால இடைநிலை இல்லை என்பது முன்னரே கூறப்பட்டது. எனினும் இவை காலம் காட்டும் என உரையாசிரியர்களும் பிறரும் கருதுகின்றனர். தனியொரு கால இடைநிலை இவற்றில் இல்லாத காரணத்தினால்தான் இவை வரும் இடத்திற்கேற்ப எல்லாக் காலங்களையும் காட்டி நிற்கக் காணுகிறோம். பொதுவாக இவ்வெச்சங்களைக் கூர்ந்து ஆராயின் அவை காட்டும் பொருளுக்கேற்ப இவற்றின் காலமும் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நாம் உணரலாம். இந்நிலை யில்தான் செயவென் வாய்பாட்டு எச்சம் காரணப்பொருள், வரிசைப்பொருள் ஆகியவற்றில் வரும்போது இறந்தகாலத்தை

யும், உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்போது நிகழ் காலத்தையும், நோக்கப்பொருள், தாக்கப்பொருள் ஆகியவற்றில் வரும்போது எதிர்காலத்தையும் காட்டி நிற்கின்றது.

### 2.1.4.5.1 இறந்த காலம்

"விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்"
(ஐங். 352-1)

என வரும் அடியில் இட என்னும் செயவென் வினையெச்சம் காரணப்பொருளில் வருவதும், இந்நிலையில் அது இறந்த காலத்தைக் காட்டி நிற்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வடிகளுக்கு உரை எழுதும் உரையாசிரியர்கள் "நன்மறவர் தம் வில்லின்கண் அம்பு தொடுத்து எய்தமையானே மார்பினும் முகத்தினும் கண்ணினும் அம்புகளை ஏற்று உயிர் நீத்த பெருமையுடைய வீரர்" என எழுதுதல் காணலாம்.

இதே நிலையினை

"காதலர் அகலக் கல்லென் றவ்வே" (குறு. 14-6)

என வரும் குறுந்தொகை அடியிலும் காணலாம். "காதலர் அகன்றமை காரணமாக அலர் தூற்றிக் கல்லென்று முழங்கா நின்றன" என உரை எழுதுவதும் குறிப்பிடத்தக்கது. இதே நிலையினை முன்னர் காரணப்பொருள் வரிசைப் பொருள் காட்டும் உதாரணங்களிலும் காணலாம்.

### 2.1.4.5.2 நிகழ் காலம்

ஆனால் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்போது இவ் வினையெச்சம் நிகழ்காலத்தில் வருவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக,

"கார் தொடங்கின்றே காலை
நேரிறை முன்கைநின் னுள்ளியாம் வரவே"
(ஐங். 493-2)

என வரும் ஐங்குறுநூற்று அடிகளுக்கு "அழகிய கோடு களமைந்த முன்கையினையுடைய நங்காய்! நின்னை நினைந்து

யாம் மீண்டு வரும்பொழுது... ... ... ...காலமானது கார்ப் பருவத்தைத் தொடங்கிற்று'' என உரை எழுதுவதும், வர என்ற எச்சமும் தொடங்கிற்று என்ற வினைமுற்றும் நிகழ் காலத்தில் உடனிகழ்ச்சியாய் நிகழ்தலும் இங்குக் குறிப்பிடத் தக்கன.

### 2.1.4.5.3 எதிர் காலம்

ஆனால் நோக்கப்பொருள், தாக்கப்பொருள் ஆகியவற்றில் வரும்போது இவ்வெச்சம் எதிர்காலத்தைக் காட்டிநிற்கின்றது. எடுத்துக்காட்டாக

''சுடர்ப்பூண் விளங்கு மேந்தெழி லகல
நீயினிது முயங்க வந்தனர்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே''

(ஐங். 353-2)

என வரும் ஐங்குறுநூற்று அடிகளில் முயங்க என்னும் வினை எச்சத்திற்குத் 'தழுவிக் கோடற்கு'' எனப் பொருள் எழுது வதும், அது நோக்கப்பொருளை உணர்த்தி எதிர்காலத்தில் வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கன. இதுபோன்றே குறுந்தொகையிலும்

''அன்னள் அளியள் என்னாது மாமழை
இன்னும் இன்னும் முழங்கி
மின்னும் தோழியென் இன்னுயிர் குறித்தே''

(குறு. 216--5)

எனவரும் அடிகளில் 'பெய்தற்கு முழங்கி' என நோக்கப் பொருள் உணர்த்தி எதிர்காலத்தில் வருவதைக் காண்கிறோம்.

இதே நிலையில்தான் தாக்கப்பொருளிலும் காணக்கூடிய தாக இருக்கிறது. இவ்வெச்சம் தாக்கப் பொருளை உணர்த்தி வரும் போது எதிர்காலத்திலேயே வந்துள்ளது. எடுத்துக் காட்டாக,

''பெய்ம்மணன் முற்றங் கவின்பெற வியற்றி
மலைவான் கொண்ட சினைஇய வேலன்'' (ஐங். 248-1

என ஐங்குறுநூற்று அடிகளில் கவின்பெற என்னும் எச்சம் தாக்கப் பொருளை உணர்த்துவதும், எதிர்காலத்தில் வருவதும் காண்க. இதே போன்று கீழ்வரும் குறுந்தொகை அடிகளிலும் இவ்வெச்சம் தாக்கப் பொருளை உணர்த்துவதாய் எதிர்காலத்தில் வருவதைக் காணலாம்-

> ''எல்லாரும் அறிய நோய்செய் தனவே
> ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
> ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
> ......... ...பெருமழைக் கண்ணே'' (குறு, 72-2)

என்பது குறுந்தொகை

# 2.2

# பழந்தமிழில் காலவெச்ச விகுதிகள்-2, -இய

## 2.2 1. இய

பழந்தமிழ் நூல்களில் காணப்படும் குறையெச்ச உருபு களில் அகரத்தை அடுத்து அதிகமாகக் காணப்படுவது-இய என்னும் உருபாகும். இது பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்நிலை -இயர் போன்ற உருபுகளுக்கு இல்லை.

—இய—

| | | | |
|---|---|---|---|
| பதி | 7 | பத்து | 3 |
| ஐங் | 19 | பரி | 1 |
| அகம் | 41 | கலி | 30 |
| நற் | 17 | குறள் | 3 |
| குறு | 15 | சிலம்பு | 8 |
| புறம் | 8 | மணி | 7 |

அகர உருபு வல்வினையாயின் பகர ஒற்றுக்களையும் ககர ஒற்றுக்களையும் எடுத்து வரும் எனக் கண்டோம். ஆனால் -இய உருபோ பெரும்பாலும் மெல்வினைகளையடுத்தே வருதல் காணலாம். எனினும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் வல்வினை யுடன் வருதலைக் காண முடிகிறது. குறுந்தொகையில் வரும்.

குடிக்கிய (பருகுதற்கு) (குறு. 356-4)

என்ற சொல் மட்டுமே ககர ஒற்றை அடுத்து வந்துள்ளது.

### 2.2 1.1 உரையாசிரியர்கள்

இதற்குப் பலவேறு எடுத்துக்காட்டுகளை உரையாசிரியர்கள் தந்து செல்வர். இளம்பூரணர் செய என்னும் வாய்பாட்டிற்கு உதாரணம் தருகிறாரே ஒழிய செய்யிய, செய்யியர் ஆகியவற்றிற்கு எவ்வித உதாரணமும் தருவதில்லை. ஆனால் சேனாவரையரோ (228)1

உண்ணிய தின்னிய
போகிய

ஆகியவற்றைத் தந்து நிற்பார். மேலும் 232-ஆம் சூத்திரத்தில்

மழை பெய்யிய முழங்கும்
மழை பெய்யிய வான் பழிச்சுதும்

என்பவற்றையும் தந்து நிற்பார். நச்சினார்க்கினியர்

உண்ணிய தின்னிய
போகிய

ஆகியவற்றையும்

மழை பெய்யிய முழங்கும்
மழை பெய்யிய வான் பழிச்சுதும்

ஆகிய சேனாவரையர் தந்த உதாரணங்களையும் தந்து நிற்பார். தெய்வச்சிலையார் (225)

மழை பெய்யிய மாதவர் அருளினர்
மழை பெய்யிய எழுந்தது

ஆகியவற்றைத் தருவார். கல்லாடர் (230, 234)

மழை பெய்யிய எழுந்தது
மழை பெய்யிய மாதவர் அருளினர்

எனத் தெய்வச்சிலையார் தந்து சென்ற உதாரணங்களைத் தர, சாஸ்திரியார்

வையகம் வெலீஇய செல்வோய் (முல்லை. 57)

என்பதைத் தந்து செல்வார்.

### 2.2.1.2 சூழல்கள்

இது

1. வினை அடிகளுக்குப் பின்னரும்
2. பிறவினையடிகளுக்குப் பின்னரும்
3. காரணவினைகளுக்குப் பின்னரும்

வரும்.

#### 2.2.1.2.1 வினை அடிகளுக்குப் பின்னர்

##### 2.2.1.2.1.1 மெல்வினைகளுக்குப் பின்னர்

பொதுவாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் இது மெல்வினைகளுக்குப் பின்னரே காணப்படுகிறது. எனினும் குறுந்தொகையில் ஒரு இடத்தில் இது வல்வினைக்குப் பின்னர் வருதல் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| இரைஇய | இரத்தற்பொருட்டு | பதி | 52-1 |
| செல்லிய | போக | ஐங் | 378-1 |
| உணீஇய | உண்டற்கு | அகம் | 119-17 |
| உணீஇய | உண்ணவேண்டி | நற் | 73-3 |
| காணிய | காணும்பொருட்டு | குறு | 111-7 |
| வெலீஇய | வெல்லும்பொருட்டு | பத்து | 5-57 |
| காணிய | கண்ட அளவில் | பரி | 10-46 |
| ஏறிய | ஏறுதற்கு | கலி | 96-39 |
| வந்தீய | வர | கலி | 93-3 |
| தினிய | தின்னுவதற்கு | குறள் | 1296 |
| காணிய | காண்பதற்கு | சிலம்பு | 16-159 |
| உணீஇய | உண்ணும்பொருட்டு | மணி | 18-60 |

### 2.2.1.2.1.2 வல்வினைகளுக்குப் பின்னர்

### 2.2.1.2.1.2 ககர ஒற்றுக்குப் பின்னர்

வல்வினைகளுக்குப் பின்னர் ககர ஒற்றுகளுக்குப் பின்னர் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே முன்னர்க் குறிப்பிட்டபடி இது இச்சூழலில் வரக் காணுகிறோம்.

குடிக்கிய பருகுதற்கு (குறு. 356-4)

### 2.2.1,2.2 பிறவினை அடிகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| காட்டிய | காட்டுதற்கு | ஐங் | 394-5 |
| தீரிய | தீர்த்தற்பொருட்டு | அகம் | 357-3 |
| ஒடுக்கிய | போக்கவேண்டி | நற் | 332-6 |
| உணர்த்திய | உணர்த்துவதற்கு | புறம் | 28-9 |
| தேற்றிய | தேற்றுதற்கு | கலி | 73-7 |
| காட்டிய | காட்டுவதற்கு | குறள் | 1313 |
| காட்டிய | அறிவிக்கும்பொருட்டு | மணி | 7-94 |

### 2.2.1.3 காரணவினைகளுக்குப் பின்னர்

இவ்வெச்சம் இரு இடங்களில் மட்டுமே காரண வினைகளுக்குப் பின்னர் வரக் காணுகிறோம்.

| | | |
|---|---|---|
| அயர்ப்பிய-கையறவெய்துவிக்க | கலி | 120-12 |
| அறீஇய-அறிவித்தற்கு | கலி | 84-27 |

### 2.2.1.3 பொருள்

பொதுவாக இவ்விகுதி நோக்கப் பொருளிலேயே வரும் என்பது குறிப்பிடத்தக்கது, இராமஸ்வாமி அய்யர் (1936), சாஸ்திரி (1954 189 1979 211), மீனாட்சிசுந்தரம் (1965. 116) ஆகியோர் இது இப்பொருளிலேயே வரும் எனக் கூறிச் செல்லுகின்றனர். வேறு பொருள்களிலும் இது வருதல் உண்டு. (காண்க- பட்டியல் 3) ஆனால் உரையாசிரியர்கள் எவரும் இது பற்றிக் குறிப்பிடுவதில்லை.

### 2.2.1.3.1 நோக்கப்பொருள்

பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் ஆராயின் இப் பொருளிலேயே இது பெரும்பாலும் வந்திருத்தல் காணலாம்.

எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் வரும் (15-2, 24-27, 52-11, 64-5, 66-8, 81-31, 86-5) ஏழு இடங்களில் ஐந்தில் இது நோக்கப் பொருளிலேயே வந்துள்ளது.

> "... ... ... ... ... — ... ... — ...தடக்கை
> இரப்போர்க்குக் கவித லல்லதை யிரைஇய
> மலர்பறி யாவெனக் கேட்டிகும் — — —" (பதி. 52-18)

என்ற அடிகளுக்கு "பெரிய கை இரவலர்க்கு ஈதலை அறியுமே யன்றிப் பிறர் எவரையும் இரத்தற் பொருட்டு மலர்தலை அறியாது" என உரையாசிரியர் எழுதிச் செல்வது காணத்தக்கது. ஐங்குறுநூற்றில் காணப்படும் 19 இடங்களிலும் இது நோக்கப் பொருளிலேயே வந்துள்ளது. அகநானூற்றில் காணப்படும் 41 இடங்களில் 35 இடங்களில் நோக்கப்பொருளிலேயே வருவது குறிப்பிடத் தக்கது. இதே நிலையினைத்தான் பத்துப்பாட்டு புறம் ஆகிய நூல்களிலும் காணுகிறோம்.

### ஐங்குறுநூற்றில்

> "வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
> காணிய சென்ற மடநடை நாரை
> பசிதின வல்கும் பனிநீர்ச் சேர்ப்ப" (ஐங். 159-1)

(வெள்ளைக் கொக்கின் பார்ப்பு இறந்துபட்டதாக அக் கொக்கினைக் காணச்சென்ற மெல்லிய நடையையுடைய நாரை தனது பசி தன்னை நலியவும் பொருட்படுத்துதலின்றி ஆண்டே தங்குகின்றதற்குக் காரணமான)

எனவும், அகநானூற்றில்

> "ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
> இருங்களி றட்ட பெருஞ்சின உழுவை"

(கருவுற்றிருக்கும் பெண்புலியின் வேட்கை மிக்க பசியினைப் போக்கப் பெரிய ஆண் பன்றியினைக் கொன்ற மிக்க சினம் பொருந்திய ஆண்புலி)

எனவும், நற்றிணையில்

"மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய
புலிபார்த் துறையும் புல்லதர்ச் சிறுநெறி"

(நற். 29-4)

(மயங்கிய மாலைப்பொழுதில் நெறியிற் செல்பவரைக் கொல்லும் பொருட்டு ஆண்புலி அந்நெறியை நோக்கியிருக்கும் புல்லிய அதராகிய சிறுநெறியில்)

எனவும், குறுந்தொகையில்

"மண்ணிய சென்ற ஒண்ணுத லரிவை"

(குறு. 292-1)

(நீராடற் பொருட்டு யாற்றிற்குச் சென்ற ஒள்ளிய நுதலையுடைய மகளொருத்தி)

எனவும், புறநானூற்றில்

"வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூஉம்" (புறம். 28-9)

(வட்டமாகிய வரியையுடைத்தாகிய செம்பொறியையுடைய காட்டுக்கோழிச் சேவல் தினைப்புனங் காப்போரைத் துயிலுணர்த்துவதற்காகக் கூவும்)

"எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்"

(பத்து. 5-5)

எனவும், பத்துப்பாட்டில்

(திரை எறிகின்ற கடல் சூழ்ந்த உலகத்தே பகைவரை வெல்லுதற்குச் செல்கின்றவனே)

எனவும், கலித்தொகையில்

"மாலைநீ, உள்ளங்கொண் டகன்றவர் துணைதாராப் பொழுதின்கண்
வெள்ளமான் நிறம்நோக்கிக் கணைதொடுக்குங் கொடியான் போல்
அல்லற் பட்டிருந் தாரை அயர்ப்பிய வந்தாயோ"

(கலி. 120-10)

(இங்ஙனங் கடிய நீ என்னெஞ்சத்தைத் தம்மிடத்தே கொண்டு நீங்கினவர் எனக்குத் துணையாந்தன்மையைத் தாராத காலத்திலே வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானினது மருமத்தைப் பார்த்து அம்பைத் தொடுக்குங் கொடிய வனைப் போல அல்லலிலே அழுந்தியிருந்த என்னைக் கையற வெய்துவிக்க வந்தாயோ?)

எனவும், குறளில்

"இரத்திலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்" (குறள். 229)

(பொருட்குறை நிரப்பவேண்டி, வறியார்க்கீயாது தாமே தனித்துண்டல் ஒருவர்க்குப் பிறர்பாற் சென்று இரத்தலினும் இன்னாது ஒருதலையாக)

எனவும், சிலப்பதிகாரத்தில்

"சிலம்பு காணிய வந்தோர் இவரென"
(சிலம்பு. 16-159)

(இவர்கள் சிலம்பினைக் காண்பதற்கு வந்தனர்...எனச் சொல்லி)

எனவும், மணிமேகலையில்

"தென்றிசைக் குமரி யாடிய வருவோள்" (மணி. 13-7)

(தென்திசையின் கண்ணதாகிய கன்னியாகுமரித் துறையில் நீராடுதற் பொருட்டு வருபவள்)

எனவும் வரும் இடங்களில் இவ்வெச்சம் நோக்கப்பொருளைச் சுட்டி நிற்றலைக் காண்க,

### 2.2.1,3.2 தாக்கப்பொருள்

செய்யிய எச்சம் நோக்கப்பொருளிலேயே பெரும்பான்மையும் வந்திருப்பினும் வேறுசில பொருளிலும் வருதல் உண்டு. ஒருசில இடங்களில் (பதி 1, அகம் 5, நற்றிணை 2, குறு 2, சிலம்பு 1, மணி 1) இது தாக்கப் பொருளில் வந்திருக்கக் காணலாம். எடுத்துக்காட்டாக, கீழ்வரும் பதிற்றுப்பத்து

அடிகளில் இவ்வெச்சம் தாக்கப்பொருளைத் தரக் காண்கிறோம்.

"தொன்று திறைதந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிய
ஆர்பத நல்கு மென்ப......... (பதி. 66-7)

(தோற்ற வேந்தர் பழையதாகிய திறையாகத் தந்த யானையோடு தன் வாய் விரிந்து அதனைச் சுற்றிலும் புறத்தேயிட்ட செப்புறை தேய்ந்து கழன்றோடுமாறு நெல்லாகிய உணவை நிறைய அளந்து கொடுப்பன் என்று சொல்லுவார்கள்)

இதுபோன்றே அகநானூற்றில்

"... ... ... ... ... ...தொல்கவின் பெறீஇய
... ... ... ... ... ... .. ... ... ... ...
முயங்கல் இயைவது மன்னோ தோழி"
(அகம். 242-15)

என வரும் அடிகளிலும் இப்பொருளையே காண்கிறோம். இதற்கு "பழைய அழகினைப் பெறுமாறு தழுவுதல் தக்கது" என உரையாசிரியர் உரை எழுதிச் செல்லுவது காணத் தக்கது. இதுபோன்றே நற்றிணையில்

"மாலை அந்தி மாலதர் நண்ணிய
பருவஞ் செய்த கருவி மாமழை" (நற். 238-4)

(அந்திமாலையில் யான் காமநோய் மிகக் கொள்ளுமாறு கார்ப்பருவத்தைச் செய்த மின்னல் முதலாகிய தொகுதியை யுடைய கரிய மேகமே)

எனவும், குறுந்தொகையில்

"நீடின வரம்பின் வாடிய விடினும்" (குறு. 309-3)

(நெடிய கழனி வரம்பிலே வாடும்படி இட்டு வைத்தாலும்)

எனவும்,

"காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை யுருத்தென்"
(சிலம்பு. 16-216)

(அக்காவலனுடைய செங்கோல் வளையும் வண்ணம் முன்னைத் தீவினை முதிர்தலான் கோவலன் வெட்டுண்டு வீழ்ந்தனன்)

எனவும், மணிமேகலையில்

> "நிரப்பின் றெய்திய நீணில மடங்கலும்
> பரப்பு நீரால் பல்வளம் சுரக்கென" (மணி. 14-51)

(அவனுறைகின்ற நெடிய இந்நாவலந்தீவு முழுவதும் வறுமை சிறிதும் இன்றி இருக்குமொரு நிலைமை அடையும் வண்ணம் தன்னுடைய முகில்கள் குறையும் மிகையுமின்றிப் பொழிந்து பரப்புகின்ற நீரினாலே பல்வேறு வளங்களையும் பெருக்குக என்று முகில்களுக்குப் பணிக்குமாற்றாலே)

எனவும் வரும் இடங்களில் செய்யிய வாய்பாட்டு எச்சம் நோக்கப்பொருளை உணர்த்துவதைக் காண்கிறோம்.

### 2.2.1.3.3 காரணப்பொருள்

பதிற்றுப்பத்து, அகநானூறு, பரிபாடல் ஆகிய நூல்களில் இவ்வெச்சம் ஒவ்வொரு இடத்தில் காரணப்பொருளில் வருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

பதிற்றுப்பத்தில்

> " ... அந்தண ரருங்கல மேற்ப நீர்பட்
> டிருஞ்சே றாடிய மணன்மலி முற்றத்துக்
> களிறுநிலை முனைஇய ............ (பதி 64-5)

எனவருவதும், இதற்கு "அந்தணர்கள் அரிய கலன்களை நீர் வார்த்துக் கொடுக்கப் பெறுவதால் அந் நீரொழுகி மிக்க சேறாகியதால் களிறுகள் நிற்பதற்கு வெறுத்த மண் நிறைந்த முற்றம்" எனப் பொருள் எழுதுவதும்,

அகநானூற்றில்

> "வேனில் நீடிய வானுயர் வழிநாள்
> வறுமை கூரிய மண்ணீர்ச் சிறுகுளத்
> தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்

கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு''

(அகம். 121-2)

(கோடை நீண்ட மிக உயர்ந்த நெறியில் நாளும் தன் வறுமை மிக, குளிக்கும் நீராகிய சிறு குளத்தில் தோண்டப் பெற்ற குழியின்கண் உண்ணற் காகாத கலங்கிய நீரால் கன்றினை யுடைய இளமை வாய்ந்த பிடியின் மெல்லிய தலையை முதலிற் கழுவிப்பின் எஞ்சிய சேற்றினைக்கொண்டு அளைந்துகொண்ட நிறம் வேறுபட்ட வலிய ஆண்யானை)

எனவும், பரிபாடலில்

'' வேங்கை காணிய வெருவுற்று'' (பரி. 10-46)

(வேங்கையினது உருவத்தைக் கண்டவளவிலே அஞ்சி)

எனவும், வருதல் காண்க

இவ்விகுதி காட்டும் பொருள்

| | காரணப் பொருள் | நோக்கப் பொருள் | தாக்கப் பொருள் |
|---|---|---|---|
| பதி | 1 | 5 | 1 |
| ஐங் | — | 19 | — |
| அகம் | 1 | 35 | 5 |
| நற் | — | 15 | 2 |
| குறு | — | 13 | 2 |
| புறம் | — | 8 | — |
| பத்து | — | 3 | — |
| பரி | 1 | — | — |

| | காரணப் பொருள் | நோக்கப் பொருள் | தாக்கப் பொருள் |
|---|---|---|---|
| கலி | — | 30 | — |
| குறள் | — | 3 | — |
| சிலம்பு | — | 7 | 1 |
| மணி | — | 6 | 1 |

## 2.2.1,4 எழுவாய்

வினையெச்சங்கள் பற்றிக் கூறும் தொல்காப்பியர் பலவேறு வினையெச்சங்களைக் குறிப்பிட்டுப் பின்னர் அவை ஏற்கும் எழுவாய் பற்றியும் குறிப்பிடுவார் என்பது முன்னரே கூறப் பட்டது. குறையெச்சங்களுள் செய்யிய என்னும் வாய்பாட்டு எச் சமும் அது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயையோ, அலலது வெவ்வேறு எழுவாய்களையோ கொண்டு வரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இதற்குரிய பலவேறு உதாரணங்களைத் தந்து செல்வர். இளம்பூரணர் உதாரணங் கள் எதுவும் தருவதில்லை, ஆனால் சேனாவரையரோ (232)

மழை பெய்யிய முழங்கும் (ஒரே எழுவாய்)
மழை பெய்யிய வான் பழிச்சுதும் (வெவ்வேறு எழுவாய்)

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (234) அவரைப் பின்பற்றி அவர் தந்த அதே உதாரணங்களையும் தெய்வச்சிலையார் (225)

மழை பெய்யிய எழுந்தது (ஒரே எழுவாய்)
மழை பெய்யிய மாதவர் அருளினர் (வெவ்வேறு எழுவாய்)

ஆகிய தெய்வச்சிலையார் தந்த உதாரணங்களையும் தந்து செல்வார்.

இந்நிலையில் சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் ஒருசில உண்மைகள் தெரியவரும். - இவ் வாய்பாட்டு வினை யெச்சச் சொற்கள் இருவேறு எழுவாய்களை எடுத்துவரும் நிலை காணப்பட்டாலும் தன் வினை எழுவாயை (ஒரே எழுவாய்) எடுத்து வருதலே மிக அதிகமாக உள்ளது. என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதாவது இவ்வெச்சமும் அது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண் டிருத்தலே மிகப் பெரும் பான்மையாக (பட்டியல் 5) உள்ளது.

### 2.2.1.4.1 நோக்கப்பொருள்

நோக்கப்பொருளில்தான் இவ்வெச்சம் அதிகமாகப் பயன் படுகிறது என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இப்பொருளில் வரும் வினைஎச்சங்களும் கொண்டு முடியும் வினைகளும் பெரும்பாலான இடங்களில் ஒரே எழுவாயையே கொண்டு வந்துள்ளன, 129 இடங்கள் ஒரே எழுவாயைக் கொண்டு வர 15 இடங்கள் மட்டுமே வெவ்வேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளன. அதுவும் அகம், நற்றிணை, குறுந் தொகை, கலித்தொகை, சிலம்பு ஆகிய நூல்களில் மட்டுமே காணப்படுகின்றன. பிற நூல்களில் காணப்படும் அனைத்தும் ஒரே எழுவாயையே கொண்டு காணப்படுகின்றன.

### 2.2.1.4.1.1 ஒரே எழுவாய்

பதிற்றுப்பத்தில் காணப்படும் ஐந்து இடங்களும் ஒரே எழுவாயைக் கொண்டே உள்ளன.

> ''பெருந்தகைக் கமர்ந்த மென்சொற் றிருமுகத்து
> மாணிழை யரிவை காணிய வொருநாட்
> பூண்க ... ... ... ... ... ... ... (பதி 81-30)

எனவரும் அடிகளில் காணப்படும் காணிய, பூண்க ஆகிய வற்றின் எழுவாயாக (தோன்றா எழுவாய்) நீ என்ற சொல் உள்ளமை காண்க. இதைப் போன்றே ஐங்குறுநூற்றில் வரும் பத்தொன்பது இடங்களிலும் ஒரே எழுவாயாக உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக

> வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
> காணிய சென்ற மடநடை நாரை'' (ஐங். 151-1)

என்பதில் நாரை என்பதே காணிய, சென்ற என்ற வினைகளின் எழுவாயாக உள்ளது. இத்தகைய உதாரணங்கள் எல்லா நூல்களிலும் காணப்படுகின்றன.

> ''பழம்போல் சேற்ற தீம்புனல் உணீஇய
> கருங்கோட்டு இருப்பை ஊரும்
> பெருங்கை எண்கின் ... ... ...'' (அகம் 171-13)

எனவரும் அகநானூற்று அடிகளில், உணீஇய என்ற எச்சத் திற்கும் ஊரும் என்ற வினைக்கும் எழுவாயாக எண்கின் என்ற சொல் வருதல் காண்க.

இதுபோன்றே நற்றிணையில்

"அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்"

(நற். 12-5)

(பருக்கைக்கற் போகடப்பட்ட சிலம்பைக் கழற்றிப் பல மாட் சிமைப்பட்ட வரிந்த புனைந்த பந்தோடு சேர ஓரிடத்தில் வைக்கச் செல்பவள்)

எனவும், குறுந்தொகையில்

" – ... – யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள் ..." (குறு.269-4)

(நம்மன்னையும் உப்பைவிற்று வெள்ளிய நெல்லைக் கொணரும் பொருட்டு அவ்வுப்புப்படுகின்ற அளத்திற்குப் போய்விட்டாள்) எனவும், புறநானூற்றில்

"ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கடல்வயிற் குழீஇய வண்ணலங் கொண்மூ"

(புறம். 205-10)

(இடியினது மிக்க ஓசையையுடைய புதுப்பெயலைத் தர வேண்டிக் கால்வீழ்த்துக் கடலிடத்தே திரண்ட தலைமையை யுடைய முகில்)

எனவும், பத்துப்பாட்டில்

"கனிபொழி கானம் கிளையோ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளினம்..... (பத்து. 10-54)

(பழங்களைச் சொரிகின்ற காட்டத்தே அவற்றைச் சுற்றத் தோடே சென்று தின்றற்கு விரைந்த பறத்தற் றொழிலிலே ஓங்கும் பறவைத்திரள்)

எனவும், கலித்தொகையில்

"காய்ந்த நோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ"
(கலி. 120-18)

(மெய்வெதும்புதற்குக் காரணமான காம நோயிலே அழுந்து கின்ற என்னை யுள்ளி உள்ள அறிவையும் கலங்குவிக்க வந்தாயோ?)

எனவும், குறளில்

"கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று" (குறள், 1313)

(யான் கோடுதலைச் செய்யும் மாலையைச் சூடினேனாயினும் நும்மாற் காதலிக்கப்பட்டாள் ஒருத்திக்கு இப்பூவணி காட்ட வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்)

எனவும், சிலம்பில்

"வதுவை வேண்மாள் மங்கல மடந்தை
மதியேர் வண்ணங் காணிய வருவழி"
(சிலம்பு. 28-52)

(பட்டத்துத் தேவியாகிய வதுவை வேண்மாள் திங்களின் அழகினைக் காணவந்த காலை)

எனவும், மணிமேகலையில்

"விராடன் பேரூர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்" (மணி. 3-147)

(விராடனுடைய தலைநகரத்து வீதியிலே செல்லாநின்ற விசயனாகிய பேடியைக் காணுதற்கு அளாவிச் சூழ்ந்து கொண்ட ஆரவாரமுடைய அந்நகரத்து மாந்தரைப் போன்று)

எனவும் வரும் இடங்கள் இவ்வெச்சமும் இது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டு வந்துள்ளமையைக் காட்டி நிற்கும்.

**2.2.1.4.1.2 இரு எழுவாய்கள்**

நோக்கப்பொருளில் பெரும்பாலான இடங்கள் ஒரே எழுவாயைக் கொண்டிருப்பினும் ஒரு சில இடங்களில் (அகம் 5, நற் 5, குறு 1, கலி 3, சிலம்பு 1) வெவ்வேறு எழுவாய்களும் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, அகநானூற்றில்

"கதிர்க்கால் அம்பிணை உண்ீஇய புகலேறு
குதிர்க்கால் இருப்பை வெண்பூ உண்ணாது
ஆண்குரல் விளிக்கும் சேண்பால்......" (அகம்.321-4)

என வரும் அடிகளில் உணீஇய என்னும் எச்சத்தின் எழுவாயாகப் பிணையும் அது கொண்டு முடியும் விளிக்கும் என்ற பெயரெச்சத்தின் எழுவாயாக ஏறும் வந்துள்ளமையும், இவ்வடிகளுக்கு உரையெழுதும் ஆசிரியர் "மெலிந்து நீண்ட காலினையுடைய அழகிய பெண்மான் உண்ணுதற்கு அதன் பால் விருப்பம் மிக்க கலைமான் குதிர் போன்ற அடிமரத்தினையுடைய இருப்பை மரத்தின் வெள்ளிய பூவினைத் தான் உண்ணாது, தனது ஆண்குரல் தோன்ற அதனை அழைக்கும் சேய்மைக்கண்ணுள்ள" எனப் பொருள் எழுதுவதும் காணத்தக்கன. இது போன்றே நற்றிணையில்

"வண்புறப் புறவின் செங்கால் சேவல்
... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ...
வயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம்
மாணில் சேய்நாட்டு அதரிடை......——" (நற். 384-1)

(வளவிய புறத்தையும் சிவந்த காலையுமுடைய புறவின் சேவல் ......வருந்திய நடையையுடைய பேடையாகிய புறவு உண்ணும் பொருட்டு வேற்றரசர் படையொடு வந்து பொருது பகைமுனையிலே சென்று எல்லாவற்றையும் கவர்ந்து சென்றொழிந்த தனாலே மாந்தர் யாருமின்றி முதிர்ந்த பாழ் நிலத்திலே தானே விளைந்து உதிர்ந்த நெற்கதிர்களைப் பெற்றுக் கொணர்ந்து கொடுக்காநின்ற மாண்பு சிறிதும் இல்லாத

நெடுந்தூரத்திற்கு அப்பாலுள்ள நாட்டுக்குச் செல்லும் நெறியின்கண்)

எனவும், குறுந்தொகையில்

"வெறியென உணர்ந்த வேல னோய்மருந்
தறியா னாகுதல் அன்னை காணிய
அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி........
... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ...
இலங்குமலை நாடன் இரவி னானே" (குறு. 360-1)

(பொறுத்தற்கரிய நினைவானுண்டாகிய துன்பத்தை இன்று யாம் நுகர்ந்தாலும்...விளங்குகின்ற மலைநாட்டையுடைய நம் தலைவன் என் நோய்க்கு மருந்தாவது வெறியாட்டெடுத்தலே என்று கருதிய வேலன் எனக்குற்ற நோயின் காரணத்தையும், அது தீரும் மருந்தையும் அறியானாவதனை நம் அன்னை உணர்ந்து கொள்ளும் பொருட்டு இரவுக்குறியின் கண் இவண் வாராதொழிக)

எனவும், கலித்தொகையில்

"மண்டாத சொல்லித் தொடாஅல் தொடீஇயநின்
பெண்டி ருளர்மன்னோ ஈங்கு" (கலி. 90-2)

(யான் விரும்பாதனவற்றைக் கூறி என்னைத் தீண்டாதே கொள்; நீ தீண்டுதற்கு இவ்விடத்து நினக்குப் பெண்டிராயிருப்பார் உளரோ)

எனவும், சிலம்பில்

"... ... ... ... ... ...வளரிள வனமுலை
தோள்நலம் உணீஇய தும்பை போந்தையொடு
வஞ்சி பாடுதும் மடவீர் யாமெனும்"
(சிலம்பு. 27-247)

(நம்முடைய வளர்கின்ற அழகிய இளங் கொங்கைகள் அவனுடைய தோளின் நலத்தை நுகர்தற் பொருட்டு மடப் பத்தையுடையீர் அவன் முடித்த தும்பை வஞ்சிகளைப் பனைமாலையுடன் யாம் பாடக்கடவேம் என்னும்)

எனவும் வரும் இடங்களில் செய்யிய வாய்பாட்டு எச்சமும் அது கொண்டு முடியும் வினையும் இரு வேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளமை காண்க.

எனவே இதுகாறும் கூறியவற்றால் நோக்கப் பொருளில் வரும்போது பெரும்பான்மையும் செய்யிய வாய்ப்பாட்டு எச்சமும், அதுகொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டிருத்தலே பெரும்பான்மை என்பது நன்கு விளங்கும்.

### 2.2.1.4.2 தாக்கப் பொருள்

செய்யிய என்னும் வாய்ப்பாட்டு எச்சம் தாக்கப்பொருளி லும் வரும் என்பது முன்னரே கூறப்பட்டது. இப்பொருளில் இது 12 இடங்களில் வந்துள்ளது. இப்பன்னிரண்டு இடங்களும் இரு வேறு எழுவாய்களையே கொண்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

#### 2.2.1.4.2.1 இரு எழுவாய்கள்

முன்னரே குறிப்பிட்டதுபோன்று பழந்தமிழ் இலக்கியங் களில் செய்யிய வாய்பாட்டு எச்சம் தாக்கப்பொருள் காட்டி வரும் இடங்கள் அனைத்திலும் இதுவும் இது கொண்டு முடி யும் வினையும் இரு வேறு எழுவாய்களையே கொண்டு வந் துள்ளன. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில்

"தொன்று திறைதந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிய
ஆர்பத நல்கு மென்ப.........................
... ... ... ... ... ... ... ... ... ... ... ...
அகன்கண் வைப்பி னாடுகிழ வோனே" (பதி. 66-7)

என வரும் அடிகளில் போகிய என்னும் எச்சத்தின் எழுவா யாக உறை என்ற சொல்லும், அது கொண்டு முடியும் நல்கும்

என்னும் வினைமுற்றின் எழுவாயாக நாடு கிழவோன் என்பதும் வந்திருத்தலைக் காண்கிறோம். இவ்வடிகளுக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் "இடம் அகன்ற ஊர்களையுடைய நாட்டிற்கு உரிய தலைமகனான செல்வக் கடுங்கோ வாழியாதன் தோற்ற வேந்தர் பழையதாகிய திறையாகத் தந்த யானையோடு நெல்லையளக்கும் மரக்கால் தன் வாய் விரிந்து அதனைச் சுற்றிலும் புறத்தேயிட்ட செப்புறை தேய்த்து கழன்றோடுமாறு நெல்லாகிய உணவை நிறைய அளந்து கொடுப்பன் என்று அறிந்தோர் சொல்லுவார்கள்" என்று எழுதிச் செல்லுதல் காண்க.

இது போன்றே அகநானூற்றில்

"......நின் வையெயி றுணீஇய
தண்மழை யொருநாள் தலைஇய......" (அகம். 325-11)

எனவரும் அடிகளில் "எயிறு" என்பதும் மழை என்பதும் எழுவாய்களாக வரக்காண்கிறோம். இதற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர்

"நின் கூரிய பற்கள் நீர் பருகுமாறு குளிர்ந்த மழை
ஒரு நாள் பெய்வதாக"

என் உரை எழுதுதல் காண்க.

இதுபோன்றே நற்றிணையில்

"கருங்கால் வேங்கை செவ்வீ வாங்குசினை
வடுக்கொளப் பிணித்த விடுமுறி முரற்சிக்
கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென
விசும்பாடு ஆய்மயில் கடுப்பயான் இன்று
பசுங்கா ழல்குல் பற்றுவன் ஊக்கிச்
செலவுடன் விடுகோ............—
... ... ... ... ... ... ... ... — ... ...
பெருங்களிறு பிளிறுஞ் சோலையவர்
சேணெடுங் குன்றங் காணிய நீயே" (நற்.222-1)

"பெரிய களிற்றுயானை பிளிறாநிற்கும் சோலையையுடைய அவரது உயர்ந்த நெடிய மலையை நீ பார்த்தேனும் நினது

கவலை தணியும்படியாகக் கரிய அடியையுடைய வேங்கையின் சிவந்த மலர்களையுடைய வளைந்த கிளையிலே தழும்புபடக் கட்டிய வளையவிட்ட கயிற்றினாலாகிய, கைவன்மையாலே செய்த சிறிய முடக்கத்தையுடைய ஊசலை யிழுத்து மெல்ல நின்னை ஏற்றி வைத்துயான் அப்பொழுது நின்னுடைய அல்குலின் மேலே கிடந்த பசிய பொன்னாலாகிய வடத்தைப் பற்றி ஆகாயத்திலே பறக்கின்ற அழகிய மயிலைப் போல நின்னை ஆட்டி நீனச் சென்று மீளும்படி விடுவேனோ?) என வரும் அடிகளும் இப்பண்பினைக் காட்டும். காணிய என்ற எச்சமும் ஊக்கி விடுகோ என்ற வினையும் வெவ்வேறு எழுவாய்களைக் கொண்டிருப்பது காணத்தக்கது.

குறுந்தொகையிலும்

"காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாதலின் நாணிய வருமே (குறு. 10-4)

எனவரும் அடிகளில் இந் நிலையைக் காணலாம் "அக் கொடுமை செய்தோன் தானே நாணும்படி அவனை எதிர் கொள்ள வாரா நின்றாள்" என உரையாசிரியர் எழுதுவது காண்க.

"...காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை யுருத்தென்"
(சிலம்பு. 16-216)

(அக்காவலனுடைய செங்கோல் வளையும் வண்ணம் முன்னைத் தீவினை முதிர்தலான் கோவலன் வெட்டுண்டு வீழ்ந்தனன்) என்பதிலும்,

"நிரப்பின் றெய்திய நீணில மடங்கலும்
பரப்பு நீரால் பல்வளம் சுரக்கென
— ... ... ... ...ஆயிரங் கண்ணோன் "(மணி. 14-51)

(ஓராயிரம் கண்களையுடைய அத் தேவேந்திரன்..........—...... இந் நாவலந் தீவு முழுவதும் வறுமை சிறிதும் இன்றி இருக்கு மொரு நிலைமை அடையும் வண்ணம் தன்னுடைய முகில்கள்

குறையும் மிகையுமின்றிப் பொழிந்து பரப்புகின்ற நீரினாலே பல்வேறு வளங்களையும் பெருக்குக என்று முகில்களுக்குப் பணிக்குமாற்றாலே) என்பவற்றிலெல்லாம் இரு எழுவாய்கள் வருவது காணத்தக்கது. எனவே தாக்கப்பொருளில் இரு எழுவாய்கள் வருவதே காணக்கூடியதாக உள்ளது. சங்க இலக்கியங்கள் அனைத்திலும் இரு எழுவாய்களைக் கொண்ட நிலையே காணப்படுகிறது.

### 2.2.1.4.3 காரணப் பொருள்

காரணப்பொருளிலும் இவ்வெச்சம் வருவது குறித்து மேலே குறிப்பிடப்பட்டது. பழந்தமிழ் இலக்கியங்களில் இப் பொருள் மூன்று இடங்களில் வந்துள்ளது. என்பதும், அவற்றுள் இரு இடங்கள் வெவ்வேறு எழுவாய்களைக் கொண்டுள்ளன என்பதும், ஒரே ஒரு இடமே ஒரே எழுவாயைக் கொண்டு வந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன.

### 2.2.1.4.3.1 ஒரே எழுவாய்

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் இவ்வெச்சமும் இது கொண்டு முடியும் வினையும் காரணப்பொருளில் ஒரே ஒரு இடத்தில்தான் ஒரே எழுவாயைக் கொண்டு வந்துள்ளமையைக் காண்கிறோம்.

> "..........வேங்கை காணிய வெருவுற்று
> மையுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்
> செயதொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதர"
>
> (பதி. 10-46)

என வரும் பரிபாடல் அடிகளில் காணிய என்னும் எச்சமும், அது கொண்டு முடியும் வெருவுற்று என்னும் எச்சமும் மடப்பிடி என்னும் ஒரே எழுவாயையே கொண்டுள்ளமை காண்க.

### 2.2.1.4.3.2 இரு எழுவாய்கள்

இவ்வெச்சமும், இது கொண்டு முடியும் வினையும் பதிற்றுப் பத்து, அகநானூறு ஆகியவற்றில் இரு எழுவாய்களைக் கொண்டு நிற்கின்றன. பதிற்றுப்பத்தில்

"........அந்தண ரருங்கல மேற்ப நீர்பட்
டிருஞ்சே றாடிய மணன்மலி முற்றத்துக்
களிறுநிலை முனைஇய............ (பதி. 64-5)

என வருவதும், இதற்கு "அந்தணர்கள் அரிய கலன்களை நீர் வார்த்துக் கொடுக்கப் பெறுவதால் அந் நீரொழுகி மிக்க சேறாகியதால் களிறுகள் நிற்பதற்கு வெறுத்த மண் நிறைந்த முற்றம்" என ஆசிரியர் பொருள் எழுதுவதும், ஆடிய என்னும் எச்சத்தின் எழுவாயாக முற்றமும், அது கொண்டு முடியும் முனைஇய என்னும் பெயரெச்சத்தின் எழுவாயாகக் களிறும் வந்திருத்தலும் காண்க. இது போன்றே அகநானூற்றில்

"வேனில் நீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூரிய மண்ணீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு"
(அகம். 121-2)

(கோடை நீண்ட மிக உயர்ந்த நெறியில் நாளும் தன் வறுமை மிகக் குளிக்கும் நீராகிய சிறு குளத்தில் தோண்டப்பெற்ற குழியின்கல் உண்ணற்காகாத நீரால் கன்றினையுடைய இளமை வாய்ந்த பிடியின் தலையை முதலிற் கழுவிப்பின் எஞ்சிய சேற்றினைக் கொண்டு அளைந்துகொண்ட நிறம் வேறுபட்ட வலிய ஆண்யானை) என வரும் அடிகளில் கூரிய என்னும் எச்சத்தின் எழுவாயாக வறுமையும், அது கொண்டு முடியும் ஆடிய என்னும் பெயரெச்சத்தின் எழுவாயாகக் களிறும் வந்துள்ளமையையும் காண்கிறோம்.

### 2.2.1.4.4 பொருளும் எழுவாயும்

தொல்காப்பியர் செய்யிய வாய்பாட்டு எச்சம் ஒரு எழுவாயையோ இரு எழுவாய்களையோ கொண்டு வரும் எனக் கூறியது உண்மையாயினும் நோக்கப் பொருளில் வரும்போது பெரும்பாலும் ஒரே எழுவாயைக் கொண்டும், தாக்கப் பொருளில் வரும்போது பெரும்பாலும் இரு எழுவாயைக்

கொண்டும் வருவது குறிப்பிடத்தக்கது. காரணப் பொருளில் வரும் மூன்று இடங்களில் இரு இடங்கள் இரு எழுவாய்களைக் கொண்டுள்ளன.

### 2.2,1.5. காலம்

செய என்னும் வாய்பாட்டைப் போலவே இவ்வாய்பாட்டு வினையெச்சமும் காலம் காட்டி நிற்பது எனக் கூறுவர் உரையாசிரியர்கள். பொதுவாக இது எதிர் காலம் காட்டும் என்பதே அவர்கள் கருத்து. இளம்பூரணர் இதுபற்றி எதுவும் கூறாவிடினும் சேனாவரையர்

'இயர், இய என்பன, எதிர்காலம் பற்றி உண்ணியர், தின்னியர், உண்ணிய, தின்னிய என வரும்'' என்பார். (சூத். 228)

இந்த நிலையினைத்தான் நச்சினார்க்கினியரிடமும் காண்கிறோம்.

சேனாவரையரைப் பின்பற்றிச் செல்லும் இவர்

''இனி, இயர், இய என்பன, உண்ணியர், தின்னியர் எனவும், உண்ணிய, தின்னிய எனவும் எதிர்காலம் பற்றி வரும்'' எனக்குறிப்பிடுவார். (சூத். 230)

தெய்வச்சிலையாரோ இது மூன்று காலமும் காட்டும் என்ற கருத்துடையவர்.

மழை பெய்யிய மாதவர் அருளினர்.

என்ற உதாரணத்தைப் (225) பிற வாய்ப்பாட்டுக்குரிய உதாரணங்களோடு தந்து இது இறந்தகாலம் என்று கூறிநிற்பார்.

''மழை பெய்யிய எழுந்தது''

என்பதையும் இறந்தகாலம் என்றே குறிப்பிடுவார். பிற காலங்களுக்குச் செய வாய்பாட்டு வினையெச்சத்தைத் தருகின்றாரேயன்றிச் செய்யிய வாய்ப்பாட்டு வினையெச்சத்திற்கு உதாரணங்கள் தருவதில்லை. எனினும் செய வாய்பாட்டு வினையெச்சத்தைப் போலவே செய்யிய வாய்ப்பாட்டு வினை

யெச்சமும் மூன்று காலமும் காட்டும் எனக் கருதுவார் என்று எண்ணலாம். 221-ஆம் சூத்திரத்தில் செய்யியர், செய்யிய என்ற இரண்டு எச்சங்களையும் இவர் ஒன்றாகக் கருதுகிறார்.

"செய்யியர் என்பது எதிர்காலம் காட்டும். செய்யிய என்பது வாய்பாடு வேற்றுமை உடைத்தாதலான் பொருள் நோக்காது சொல் நோக்கிக் கூறப்பட்டது" என்று குறிப்பிடு வதிலிருந்து இது தெரியவரும். ஆனால் 225-ஆவது சூத்திரத்தில் இவை இறந்தகாலத்தையும் காட்டும் என்று குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. எனவே தெய்வச்சிலையாரிடம் ஒரு மயக்கநிலை காணப்படுவதை நம்மால் உணரமுடிகிறது.

தெய்வச்சிலையாரைப் போலவே கல்லாடரும் செய்யியர், செய்யிய என்ற இரண்டும் ஒன்றே எனக் கருதுகிறார். இவை எதிர்காலத்தில் வரும் எனவே இவர் கருதுகிறார்.

"இனி செய்யியர் என்பது முதலாகச் செயற்கு என்பது ஈறாக ஐந்தும் எதிர்காலத்தவாகலானும்" எனக் கூறிச்செல்வது குறிப்பிடத்தக்கது. எனினும்

"மழை பெய்யிய எழுந்தது
மழை பெய்யிய மாதவர் அருளினர்"

எனத் தெய்வச்சிலையார் இறந்தகாலம் காட்டும் என்று கூறிய உதாரணங்களையே இவரும் தந்து நிற்கிறார். இந்நிலையில் உரையாசிரியர்களிடையே ஒரு மயக்கநிலை இருப்பதை உணரலாம்.

பொதுவாக வினையெச்சங்கள் காலம் காட்டுமா என்பது ஆராயத் தக்கதாகும். செய்து என்னும் வாய்பாட்டு வினை யெச்சங்களில் கால இடைநிலை இருப்பினும், செய, செய்யியர், செய்யிய போன்றவற்றில் கால இடைநிலைகள் இல்லாமையும், இந்நிலையில் இவை வருகிற இடத்திற்கேற்ப காலத்தைச் காட்டி நிற்கும் என்பதும் உணரத்தக்கன.

பொதுவாகச் செய்யியர் வாய்ப்பாட்டு வினையெச்சத்தைப் போலவே காரணப் பொருளில் இது வரும்போது ஒப்புமை இறந்தகாலத்தைக் (Relative tense) இந்நிலையும் மிக மிக அருகியே காணப்ர்டுகிறது. முன்பழந்தமிழ் நூல்கள்

அனைத்தையும் நோக்கின் மூன்று இடங்களில் (பதி 1, அகம் பரி 1) மட்டுமே இந்நிலை உள்ளது.

'வேங்கை காணிய வெருவுற்று'' (பதி. 10-40)

என்பதில் காரணப் பொருளில் இவ்வாய்பாட்டு எச்சம் வருவ தும் அது இறந்த காலத்தில் வருவதும் முன்னர்க் குறிப்பிடப் பட்டது. பதிற்றுப்பத்து, அகநானூறு எடுத்துக்காட்டுகளும் இதே நிலையினைக் காட்டுவதும் முன்னரே குறிப்பிடப் பட்டுள்ளது.

பதிற்றுப்பத்தில்

''இருஞ்சே றாடிய மணன்மலி முற்றத்துக்
களிறுநிலை முனைஇய ... ... ... ... ... (பதி. 64-5)

எனக் காரணப்பொருள் உணர்த்தும் இடத்தில் இவ்வெச்சம் இறந்தகாலத்தைக் காட்டுவதைக் காண்கிறோம். ''சேறாகிய தால்'' என உரையாசிரியரும் இறந்தகாலத்தில் உரை எழுதுதல் காண்க. இதுபோன்றே அகநானூற்றில் வரும்

''வறுமை கூரிய ... ... ... ... ...'' (அகம், 121-3)

என்னும் அடிக்கு 'வறுமை மிக' (வறுமை மிகுந்ததால்) எனவும், பரிபாடலில் வரும்

'' ... ... ... வேங்கை காணிய வெருவுற்று'' (பரி. 10-46)

என்னும் அடிக்கு ''வேங்கையினது உருவத்தைக் கண்டவள விலே அஞ்சி'' எனவும் இறந்த காலத்திலேயே உரை எழுதிச் செல்லுதல் காணத்தக்கது.

### 2.2.1.5.2 எதிர்காலம்

ஆனால் நோக்கப்பொருள் (Purposive), தாக்கப் பொருள் (effective) ஆகியவற்றில் இவை எதிர்காலம் உணர்த்துதல் காணலாம். நோக்கப்பொருளில் வரும்

''... ... ...உணீஇய மண்டிப்
படிமுழம் ஊன்றிய நெடுநல் யானை''
நீர் உண்டற்கு விரைந்து சென்று மண்ணில் முழங்காலை
மடித்தூன்றிய நெடிய நல்ல யானை'' (அகம். 119-17)

"உப்பை மாறி வெண்ணெற் றரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள்........"

உப்பை விற்று வெண்ணெல்லை வாங்கி வரும் பொருட்டு
அவ்வுப்பு உண்டாகின்ற அளத்திற்குச் சென்றாள்"
(குறு. 269-5)

போன்ற இடங்களில் எதிர்காலத்தில் வருதல் உணரத்தக்கது. இதுபோன்றே தாக்கப் பொருளில் வரும்

"காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே"
"காஞ்சி மரத்தையுடைய ஊரனது கொடுமையை நாம்
தெரிந்துகொள்ளாதபடி மறைத்தாளாதலின் அவன் நாணும்படி
எதிர்கொள்ள வருகின்றாள்" (குறு' 10-4)

என்பதில் நாணும்படி என வருதல் காண்க.

எனவே இதுகாறும் கூறியவற்றால் இதன்கண் காலம் காட்டும் இடைநிலை இல்லை என்பதும், எனினும் அது பற்றிப் பேசும் உரையாசிரியர்களில் சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் இது எதிர்காலம் காட்டும் என்று கூறுவதும், ஆனால் தெய்வச்சிலையார் செய்யியர் என்பதோடு பொருத்திக் காட்டும் போது இது மூன்று காலமும் காட்டும் எனக் கருதினும் இறந்தகாலம் ஒன்றுக்கே உதாரணங்கள் தந்து நிற்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. பொதுவாக இது நோக்கப்பொருள் தாக்கப்பொருள், ஆகியவற்றில் வரும்போது எதிர்காலம் காட்டும் என்பதும், இந்நிலையில்தான் இவற்றிற்குப் பொருள் எழுதும்போது செய்யும் பொருட்டு, செய்யுமாறு, செய்ய வேண்டி என எழுதுவதும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும். ஆனால் காரணப்பொருளில் வரும்போது இறந்த காலத்தைக் காட்டும். இதனால்தான்

"மழை பெய்யிய குளம் நிறைந்தது"

போன்றவற்றில் மழை பெய்து குளம் நிறைந்தது எனக் கூறினும் பொருள் சிதைவுறாது நிற்கிறது.

# 2.3

# பழந்தமிழில் காலவெச்ச விகுதிகள்-3, —இயர்

### 2.3.1. —இயர்

—இய என்னும் உருபைப் போலவே குறையெச்ச உருபுகளில் ஒன்றாக இதுவும் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகிறது. காணியர், வாழியர் போன்ற இயர் வாய்பாட்டுச் சொற்களைப் பழந்தமிழ் நூல்களில் பரக்கக் காணமுடியும். எனினும் இது பின்பழந்தமிழ் நூல்களில் கலித்தொகையில் மட்டுமே வந்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். வேறு நூல்களில் காணப்படவில்லை. எனவே இதனை முன்பழந்தமிழ்க்கூறுகளில் ஒன்றாகக் கருதுவதில் வியப்பில்லை. —இய வாய்பாட்டுச் சொற்கள் எல்லா நூல்களிலும் காணப்பட இவ் வாய்பாட்டுச் சொற்களோ முன்னர்க் குறிப்பிட்டபடி காலப் போக்கில் மறைந்துவிடக் காணுகிறோம்.

இயர்

| | |
|---|---|
| பதி | 12 |
| ஐங் | 3 |
| அகம் | 16 |
| நற் | 13 |
| குறு | 7 |

| | |
|---|---|
| புறம் | 2 |
| பத்து | — |
| பரி | — |
| கலி | 2 |
| குறள் | — |
| சிலம்பு | — |
| மணி | — |

குறையெச்ச உருபுகளில் -இயர் ஈற்றுச் சொற்கள் மட்டுமே வல்வினைகளில் காணப்படுவதில்லை. செய, செய்யிய, செய்ம்மார் ஆகிய வாய்பாட்டு எச்சங்கள் மெல்வினைகளிலும் வல்வினைகளிலும் வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

### 2.3.1.1 உரையாசிரியர்கள்

முன்னரே குறிப்பிட்டது போன்று இளம்பூரணர் செயவென் வாய்பாட்டு எச்சத்தைத் தவிர பிற வாய்பாடுகளுக்கு எடுத்துக்காட்டுகள் எதுவும் தருவதில்லை.

சேனாவரையர் (228,232)

> உண்ணியர், தின்னியர், போகியர் ஆகியவற்றையும்,
> மழை பெய்யிய ரெழுந்தது
> மழை பெய்யியர் பலி கொடுத்தார்

என்பவற்றையும், நச்சினார்க்கினியர் (230, 234)

> உண்ணியர் தின்னியர், போகியர் எனவும்,
> மழை பெய்யியர் எழுந்தது
> மழை பெய்யியர் பலி கொடுத்தனர்

எனவும் சேனாவரையர் தந்த அதே உதாரணங்களையும் தந்து செல்வர். தெய்வச்சிலையார் (226)

> மழை பெய்யியர் மாதவரருளின்ர்

என்பதையும், கல்லாடனார் (230, 234)

மழை பெய்யியர் எழுந்தது

மழை பெய்யியர் மாதவர் அருளினர்

ஆகியவற்றையும் தந்து செல்வர். -இய, -இயர் என்ற இரு வாய்பாட்டு எச்சங்களையும் பொதுவாக ஒன்றாகவே கருதுவர். இதனால்தான் சேனாவரையர் இரண்டையும் இணைத்தே கூறுவது காணலாம்.

இவ்விரு ஈற்று எச்சங்களும் காலம், பொருள் ஆகியவற்றில் ஒன்றாகவே உள்ளன. பொருள் பற்றி உரையாசிரியர்கள் அதிகம் கூறாவிடினும் காலம் பற்றிக் கூறுதல் காணலாம்.

"இயர், இய என்பன எதிர்காலம் பற்றி உண்ணியர், தின்னியர், உண்ணிய, தின்னிய என வரும்" எனக் கூறிச் செல்லுதல் காணலாம். இதே நிலையினைத்தான் நச்சினார்க்கினியரிடமும் காண்கிறோம். தெய்வச்சிலையார் இன்னும் ஒருபடி மேல் செல்லுவார். "செய்யியர் என்பது எதிர்காலம் காட்டும், செய்யிய என்பது வாய்பாடு வேற்றுமை உடைத்தாதலின் பொருள் நோக்காது சொல் நோக்கிக் கூறப்பட்டது" எனத் தெளிவாகக் கூறிச் செல்லுவார். எனவே இவை இரண்டும் ஒரே காலம் காட்டும் என்பதும், ஒரே பொருளால் வரும் என்பதும் தெய்வச்சிலையார் கருத்தாகும். மேலும் இவர் இவ்விரு வாய்பாட்டு எச்சங்களுக்கும் ஒரே வகையான உதாரணங்களையே தந்து செல்வார்.

இது பற்றிக் கூறும் கல்லாடனாரோ "செய்யியர் செய்யிய என்னும் இரண்டும் வாய்பாட்டு வேற்றுமையல்லது பொருள் வேற்றுமை இன்மையின் உடன் வைக்கப்பட்டன"

என எழுதிச் செல்லுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் தெய்வச்சிலையாரைப் பின்பற்றி இவை இரண்டிற்கும்

மழை பெய்யியர் எழுந்தது

என்றும்

மழை பெய்யிய எழுந்தது

என்றும் ஒரே மாதிரியான உதாரணங்களையே தந்து செல்வதும் இதனை நன்கு காட்டும்.

இதே நிலையைத்தான் சுப்பிரமணிய சாஸ்திரியிடமும் காண்கிறோம். இவர் செய்யிய, செய்யியர், செயற்கு என்ற மூன்றினையும் ஒன்றாகக் கருதுவதோடு இவை நோக்கப் பொருள் ஒன்றையே காட்டும் என்றும் குறிப்பிடுவார் (தொல் காப்பியம் சொல்லதிகாரம் இரண்டாவது பதிப்பு). ஆனால் இவற்றுள் செய்யிய, செய்யியர் என்பவை நோக்கப் பொருளோடு பிற பொருள்களையும் தரும் என்பது இங்குச் கவனிக்கத்தக்கது.

### 2.3.1.2 சூழல்

இது

1. வினை அடிகளுக்குப் பின்னரும்
2. பிறவினை ஒட்டுகளுக்குப் பின்னரும்

வருதல் காணலாம்.

#### 2.3.1.2.1 வினை அடிகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| உணீஇயர் | உண்டற்பொருட்டு | பதி 36-7 |
| தரீஇயர் | வழங்கும்பொருட்டு | ஐங் 463 4 |
| செலீஇயர் | செல்லுதற்பொருட்டு | அகம் 55-14 |
| கடீஇயர் | ஓட்டும்பொருட்டு | நற் 134-4 |
| படீஇயர் | படியும் பொருட்டு | குறு 10-2 |
| உணீஇயர் | நுகரவேண்டி | புறம் 174-19 |

#### 2.3.1.2.2 பிறவினை ஒட்டுகளுக்குப் பின்னர்

இது இச்சூழலில் நற்றிணையிலும், குறுந்தொகையிலும் மட்டுமே ஒரு ஒரு இடத்தில் வரக் காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| பணீஇயர் | அடக்கும் பொருட்டு | நற் 10-6 |
| இறீஇயர் | செய்யும்பொருட்டு | குறு 255-6 |

### 2.3.1.3 பொருள்

பொதுவாகச் செய்யியர் வாய்பாட்டுக் குறையெச்சம் ஓரிரு இடங்களில் பிற பொருள்களில் வரினும் நோக்கப் பொருளிலேயே மிக அதிகமான இடங்களில் வருதல் குறிப்

பிடத்தக்கது. எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில்காணப்படும் பன்னிரண்டு இடங்களிலும் இது இப்பொருளிலேயே வருகிறது. இதே நிலையினைத்தான் பிற இலக்கியங்களிலும் காண்கிறோம். பெரும்பான்மை இடங்களில் இது இப்பொருளிலேயே வருதல் காணலாம்.

எனினும், தலைமை வினையாக இரு இடங்களிலும், தொழிற் பெயராக இரு இடங்களிலும் வருதல் காணத் தக்கது.

செய்யியர் வாய்பாட்டு எச்சம் பலவேறு பொருள்களிலும் வருவதைக் கீழ்வரும் பட்டியல் காட்டும்.

| | நோக்கப் பொருள் | வரிசைப் பொருள் | தலைமை வினை | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|
| பதி | 12 | — | — | — |
| ஐங் | 1 | 1 | — | — |
| அகம் | 15 | -1 | 1 | ... |
| நற் | 10 | 2 | 1 | 2 |
| குறு | 7 | ... | ... | ... |
| புறம் | 2 | ... | ... | ... |
| பத்து | ... | ... | ... | ... |
| பரி | ... | ... | ... | ... |
| கலி | 1 | ... | ... | ... |
| குறள் | ... | ... | ... | ... |
| சிலம்பு | ... | ... | ... | ... |
| மணி | ... | ... | ... | ... |

### 2.3.1.3.1 நோக்கப் பொருள்

முன்னரே குறிப்பிட்டது போன்று இவ்வெச்சம் நோக்கப் பொருளிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் வந்துள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் 54 இடங்களில் இவ்வெச்சம் காணப்படுகிறது. இவற்றுள் 49 இடங்களில் இது நோக்கப் பொருளையே உணர்த்தி நிற்கக் காணுகிறோம். எடுத்துக் காட்டாகப் பதிற்றுப்பத்தில்

''அருங்கலந் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம்.........'' (பதி. 52-3)

என வரும் அடிகளில் இவ்வெச்சம் நோக்கப் பொருளைக் காட்டுவதாகவே உள்ளது. இவ்வடிகளுக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் ''பிற நாடுகளினின்று அரிய பொருள்களைக் கொண்டு வருவதற்காகக் கடலின் மேல் மிதந்து செல்லும் பெரிய ஆரவாரத்தையுடைய கப்பல்கள்'' என் எழுதிச் செல்லுவார். இதுபோன்று ஐங்குறுநூற்றில்

''... ... ... ... ... ...நேரார்
நாடுபடு நன்கலந் தரீஇயர்
நீடினர் தோழிநங் காதலோரே'' (ஐங். 463-3)

(தோழீ, கேள்! நம்பால் பேரன்புடைய நம் பெருமான் தம்மால் வென்றடக்கப்பட்ட பகைவருடைய நாட்டின்கண் உருவாகின்ற அணிகலன்களை ஈட்டிக் கொணர்ந்து நமக்கு வழங்கும் பொருட்டே தாங் குறிப்பிட்ட பருவத்தே வராமல் சிறிது காலம் நீட்டித்திருப்பராயினர்)

எனவும், அகநானூற்றில்

பொரியகைந் தன்ன பொங்குபல சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிரல் அசைபுவந் திருக்குந்
துறை ......... ...... ... (அகம். 106-2)

(நெற்பொரி முதலியன தெறித்தாற் போன்று விளங்கும் பல சிறிய மீன்களை உண்ணும் பொருட்டு மணங்கொண்ட பசிய இலையில் பறத்தல் ஒழிந்த முதிய சிச்சிலிப் பறவை மெல்ல மெல்ல அசைந்து வந்திருக்கும் துறை)

எனவும், நற்றிணையில்

''செய்ய்ம்ம் மேவல் சிறுகட் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுண்ழையும் பொழுதின் ...... (நற். 98-2)

(சிறிய கண்ணும் வயலிற் சென்றுண்ணும் விருப்பமுமுடைய பன்றி உயர்ந்த மலையிடத்துள்ள இடமகன்ற தினைக் கொல்லையிலே சென்று மேயும் பொருட்டுப் பெரிய இயந்திர மமைந்த புழைவழியிலே சென்று புகும் பொழுது)

எனவும், குறுந்தொகையில்

"வளையுடைக் கைய ளெம்மோ டுணீஇயர்
வருகதில் அம்ம நானே" (குறு. 56-3)

(வளையணிந்த கையினையுடையளாய் ... எம்மோடு சேர்ந்து உண்டற்கு வருவாளாக)

எனவும், புறநானூற்றில்

"ஈண்டுச் செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தன னாகலின்"
(புறம். 174-19)

(இவ்வுலகத்துச் செய்யப்பட்ட நல்ல அறத்தின் பயனை ஆண்டாகிய தெய்வலோகத்துப் போய் நுகரவேண்டிப் போனானாதலின்)

எனவும், கலித்தொகையில்

"...நம்முள் நகுதல் தொடீஇயர் நம்முண்ணாம்
உசாவுவம்........" (கலி. 94-35)

(நம்முன்னே நாம் கூடி மகிழ்தற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்குக் குறியிடம் இன்ன இன்ன இடமாமென்று நம் முள்ளே நாம் உசாவக்கடவோம்) எனவும் வரும் இடங்களில் எல்லாம் இவ்வாய்ப்பாட்டு எச்சம் நேர்க்கூப்பொருளை உணர்த்தி நிற்றல் காண்க.

### 2.2.1.3.2 வரிசைப்பொருள்

நற்றிணையில் இரு இடங்களிலும், ஐங்குறுநூற்றில் ஒரு இடத்திலுமாக மூன்று இடங்களில் மட்டுமே செய்யியர் வாய் பாட்டு எச்சம் வரிசைப்பொருளில் வந்துள்ளது, நற்றிணையில்

"... ... ... ...கருங்கால்
பொன் இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடும்சினை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்றலைப் பாறுமயிர் திருத்துங்
குன்ற நாடன்........." (நற். 151-8)

என வரும் அடிகளில் செலீஇயர் என்னும் எச்சம் காட்டும் தொழில் முன்னரும், அது கொண்டு முடியும் நோக்கி என்னும் எச்சம் காட்டும் தொழில் பின்னரும் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கும் நிலையில் இவ்வெச்சம் வரிசைப்பொருளைக் காட்டு வதாக உள்ளது. இவ்வடிகளுக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் "கரிய அடியையும் பொன் போன்ற பூங்கொத்தினையுமுடைய வேங்கைமரத்தின் அழகிய கிளைமீது சென்று ஆழமாகிய சுனைநீரை நோக்கித் தலை கவிழ்ந்திருந்து தன் மெல்லிய தலையில் முன்பு புணர்ச்சியாலே குலைந்த முச்சிமயிரை அக் குலைவு தோன்றாதபடி திருத்தாநிற்கும் மலைநாடன்" என்று எழுதுவதும், செலீஇயர் என்பதற்குச் சென்று எனப் பொருள் எழுதுவதும் காண்க. இதுபோன்றே 322-ஆம் பாடலில் வரும்

"பன்மலர் சிதறியர் பரவுறு பலிக்கே" (நற். 322-12)

என்னும் அடியில் சிதறியர் என்னும் எச்சம் வரிசைப் பொருளையே காட்டி நிற்கிறது. "பலவாய பூக்களைத் தூவித் துதித்து இவ் யாட்டினை ஏற்றுக்கொள்" ளென்று அதனை அறுத்துக் கொடுக்கும் பலிக்காக" என்று இவ்வடிக்கு உரை ஆசிரியர் பொருள் எழுதுவார். இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

"கட்டளை யன்ன மணிநிறத் தும்பி
யிட்டிய குயின்ற துறைவயிற் செலீஇயர்
தட்டைத் தண்ணுமைப் பின்ன ரியவர்
தீங்குழ லாம்பலி னினிய விமிரும்
புதன்மலர் மாலையும்........" (ஐங். 215-1)

என்வரும் அடிகளிலும் இவ்வெச்சம் வரிசைப்பொருளை உணர்த்தி நிற்கிறது. இவ்வடிகளுக்கு உரை எழுதும் ஆசிரியர்" பொன்னுரைக்கும் கட்டளைக்கல் போன்று இடையிடையே

பொற்கோடு பொருந்திய நீலமணி போலும் நிறமுடைய தும்பிகள் இன்னிசைக் கருவியுடைய இசைவாணர் ஒருங்கியன வாக இயற்றப்பட்டுள்ள நீராடுதற் துறையிடத்தே (செல்லுங் கால் ஒன்றன் பின் ஒன்றாக) முழக்கும் தட்டையும் தண்ணு மையுமாகிய தோற்கருவிகளின் பின்னிடத்தே இனிமையுடைய ஆம்பற் குழலின் இனிய இசைபோல முரலா நிற்றற்கு இடனான பூம்புதர்கள் மலர்கின்ற மாலைப்பொழுதினும்)'' என எழுதிப் பின்னர் ''இயவர் இட்டிய துறைவயின் தட்டை, தண்ணுமை யிவற்றை முழக்கிச் செலீஇயர் (செல்லாநிற்ப அவற்றின் பின்னர்த் தும்பி எழுந்து ஆம்பற்குழல் போன்று இனிய இசையை முரலும் பூப்புதர்கள் மலராநின்ற மாலைப் பொழுது'' என விளக்கமும் எழுதுதல் காணத்தக்கது.

### *2.3.1.3.3* தலைமை வினை

செய்யியர் வாய்பாட்டு எச்சம் பழந்தமிழ் இலக்கியங்களில் நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றுமாக இரு இடங்களில் மட்டுமே தலைமைவினையாக வந்துள்ளது.

அகநானூற்றில்

''நலம்பா ராட்டி நடையெழிற் பொலிந்து
விழவிற் செலீஇயர் வேண்டும்...... (அகம். 316-7)

(அவளது அழகினைப் பாராட்டி அழகிய நடையால் விளக்க முற்று அவருடன் புனல் விழாவின் கண் செல்லுதல் நினக்குத் தகுவதாகும்)

என வரும் அடியில் செலீஇயர் தலைமை வினையாகவே வந்துள்ளது. இதுபோன்றே நற்றிணையில்

''விழவிற் செலீஇயர் வேண்டும் மன்னோ''
(நற். 390-6)

(விழாக்களத்தின் கண்ணே செல்ல வேண்டும்)

என வரும் அடியில் இவ்வெச்சம் தலைமைவினையாக வேண்டும் என்னும் துணைவினை கொண்டு முடிதல் குறிப்பிடத்தக்கது.

### 2.3.1.3.4 தொழிற்பெயர்

இவ்வெச்சம் குறுந்தொகையில் மட்டுமே இரு இடங்களில் தொழிற்பெயராக வந்துள்ளது. குறுந்தொகையில்

"பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே" (குறு. 27-4)

என வரும் அடிகளில் இப்பண்பினைக் காண்கிறோம்.

"தேமல் படர்ந்த அல்குலிடத்து எனது மணிநிற அழகினைப் பசலைதான் உண்ணுதலை விரும்பா நிற்கும்" என உரையாசிரியர் பொருள் எழுதுவது இதனை நன்கு காட்டும்.

இது போன்றே

"எந்தையும் கொடீஇயர் வேண்டும்" (குறு. 51-5)

(நம் தந்தையும் அவனுக்கு நின்னை மணஞ் செய்வித்தலை விரும்பா நின்றான்)

என வரும் குறுந்தொகை அடியும் இவ்வெச்சம் தொழிற்பெயர் போன்ற வரும் பண்பினைக் காட்டும்.

### 2.3.1.4 எழுவாய்

செய்யிய வாய்பாட்டு எச்சத்தைப் போலவே செய்யியர் வாய்பாட்டு எச்சமும் தனக்கே உரிய எழுவாயைக் கொண்டு அல்லது அது கொண்டு முடியும் வினைக்குரிய எழுவாயைக் கொண்டும் வருமென்றும் தொல்காப்பியர் கூறிச் செல்வார்.

முன்னரே குறிப்பிட்டது போன்று தொல்காப்பிய உரையாசிரியர்களில் சேனாவரையர் (232)

மழை பெய்யியர் எழுந்தது
மழை பெய்யியர் பலி கொடுத்தார்

என்ற உதாரணங்களைத் தருவார்.

நச்சினார்க்கினியரும் (234) இவரைப் பின்பற்றி இதே உதாரணங்களையே தந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

> தெய்வச்சிலையார் (225)
> மழை பெய்யியர் எழுந்தது
> மழை பெய்யியர் மாதவர் அருளினர்

என்ற உதாரணங்களையும், கல்லாடர் (234) தெய்வச்சிலை யாரைப் பின்பற்றி அதே உதாரணங்களையும் தருவர்.

இந்நிலையில் சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் செய்யிய வாய்பாட்டு எச்சத்தைப் போல செய்யியர் வாய்பாட்டு எச்சம் அவ்வளவு அதிகமாக வருவதில்லை என்பதும், குறிப்பாகப் பத்துப்பாட்டிலும், கலித்தொகை ஒழிந்த பிற பின் பழந்தமிழ் நூல்களிலும் இது காணப்படுவதில்லையென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இது நோக்கப் பொருள் போன்ற ஒரு சில பொருள்களில் வருவது முன்னரே குறிப்பிடப்பட்டது,

நோக்கப் பொருளில் வரும்போது, பெரும்பாலும் ஒரே எழுவாயைக் கொண்டு வந்திருக்கிறது என்பதும் 39:9 என்ற விகிதத்தில் இது உள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கன. ஆனால் வரிசைப்பொருளில் இரு இடங்களில் ஒரே எழுவாய் வர, ஒரு இடத்தில் இரு எழுவாய்கள் வந்துள்ளன.

### 2.3 1.4.1 நோக்கப் பொருள்

இப்பொருளில் 48 இடங்கள் சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன என்பதும், அவற்றுள் 39 இடங்கள் ஒரே எழுவாயையே கொண்டிருக்கின்றன என்பதும் இங்குக் குறிப் பிடத்தக்கன. பதிற்றுப்பத்தில் வரும் 12 இடங்களும் ஒரே எழுவாயையே கொண்டுள்ளன.

### 2·3.1.4.1.1 ஒரே எழுவாய்

''செல்லா மோதில் பாண்மகள் காணியர்'' (பதி. 60-3) என வரும் பதிற்றுப்பத்து அடியில் காணப்படும் காணியர் என்ற எச்சத்திற்கும் செல்லாமோ என்ற வினைக்கும் ஒரே

பெயர் (நாம் என்ற தோன்றா எழுவாய்) எழுவாயாக இருத்தல் காணத்தத்கது. இதே நிலையினைத்தான் பிற இலக்கியங்களி லும் காண்கிறோம்.

ஐங்குறுநூற்றில்

"... ... ... ... ... — ... நேரார்
நாடுபடு நன்கலந் தரீஇயர்
நீடினர் தோழிநங் காத லோரே" (ஐங். 463-3)

(தோழீ, கேள்! நம்பால்பேரன்புடைய நம்பெருமான் தம்மால் வென்றடக்கப்பட்ட பகைவருடைய நாட்டின்கண் உருவாகின்ற அணிகலன்களை ஈட்டிக் கொணர்ந்து நமக்கு வழங்கும் பொருட்டே தாங் குறிப்பிட்ட பருவத்தே வாராமல் சிறிது காலம் நீட்டித்திருப்பாராயினர்)

எனவும், அகநானூற்றில்

"படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்
சென்மோ... ... ... ... ..." (அகம். 222-11)

(ஒலிக்கும் கடலிற் புக்கு மன்றந்த பாடுதல் அமைந்த சிறப்பினை யுடைய மருதியையொத்த சிறந்த புகழைப்பெறும் பொருட்டு... செல்வோமாக)

எனவும், நற்றிணையில்,

"கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை"
(நற். 137-6)

(மெல்லிய தலையையுடைய இளைய பிடி யானையின்வருந்திய பசியைப் போக்குமாறு பெரிய களிற்றுயானை முறித்துத் த்ள்ளிய வளைந்த அடியையுடைய ஓமை மரம்) எனவும் குறுந்தொகையில்

"தங்கட னீறீஇய ரெண்ணி யிடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே" (குறு. 255-6)

(தமது கடமையைச் செய்யும்பொருட்டு நினைந்து ஈட்டற்குரிய இடங்கள்தோறும் தாம் விரும்பிய பொருளாசையாலே சென்ற யாம் விரும்பாநின்ற காதலையுடைய தலைவர்)

எனவும், புறநானூற்றில்

"நடுங்குபனி களைஇயர் நாரரி பருகி
வளிதொழி லொழிக்கும் வண்பரிப் புரவி
பண்ணற்கு விரைதி நீயே...... (புறம். 304-2)

(நடுக்கத்தைச் செய்யும் குளிரைப் போக்குதற்காக நாரால் வடிக்கப்பட்ட நறவையுண்டு காற்றின் கடுமையைத் தனக்கு நிகராகாமை செய்யும் வளவிய செலவையுடைய குதிரையைப் போர்க்கேற்பச் சமைத்தற்கு விரைகின்றாய் நீ)

எனவும் கலித்தொகையில்

"..... நம்முள் நகுதல் தொடீஇயர் நம்முணாம்
உசாவுவம் ........................................" (கலி. 94-35)

(நம்முள்ளே நாம் கூடி மகிழ்தற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்குக் குறியிடம் இன்ன இன்ன இடமாமென்று நம் முள்ளே நாம் உசாவக்கடவேம்) எனவும் வரும் இடங்களில் எல்லாம் இவ்வெச்சமும், இது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டிருக்கும் பண்பினை நன்கு காணலாம்,

## 2.3,1.4.1.2 இரு எழுவாய்கள்

முன்னரே குறிப்பிட்டதுபோன்று ஒன்பது இடங்களில் மட்டுமே இவ்வெச்சமும், இது கொண்டு முடியும் வினையும் நோக்கப்பொருளில் இரு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளன (அகம் 3, நற் 2, குறு 4). எடுத்துக்காட்டாக,

அகநானூற்றில்

> "அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
> மரஞ்செல மிதித்த மாஅல் போல" (அகம். 59-5)

என வரும் அடிகளில் உடீஇயர் என்னும் எச்சத்தின் எழுவாயாக அண்டர் மகளிரும், அது கொண்டு முடியும் மிதித்த என்னும் பெயரெச்சத்தின் எழுவாயாக மாலும் வந்திருத்தலைக் காண்கிறோம். இதற்கு உரை எழுதும் ஆசிரியர் "ஆயர் மகளிர் தண்ணிய தழையை உடுத்திக்கொள்ள குருந்தமரம் வளைந்திட மிதித்துத் தந்த கண்ணன் போல" என எழுதுதல் காண்க. இதுபோன்றே

நற்றிணையில்

> "அயர்ந்த ஆயங் கண்ணினிது படீஇயர்
> அன்னையுஞ் சிறிது தணிந்து உயிரினள்......"
> (நற். 115-2)

(துவட்சியால் வருந்திய தோழியர் குழாமெல்லாம் தம் மெய்ந் நோவொழிந்து இனிதாக வுறங்கவேண்டி அன்னையும் நம் மீது கொண்ட சினம் சிறிது தணிந்து உயிர்ப்புடையளாயி னாள்) என்பதிலும்.

> "பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
> உழவர் வாங்கிய கமழ்பூ........... (குறு. 10-2)

(பயற்றங் கொத்துக்கள் போன்ற பூங்கொத்துகளில் உள்ள பசிய பூந்தாதுக்கள் தம்மேற் படியும் பொருட்டு உழவர்கள் வளைத்த நறுமணங் கமழ்கின்ற பூக்களையுடைய மெல்லிய கிளைகளையுடைய காஞ்சி மரத்தையுடைய ஊரன்) என்பதி லும் இவ்வெச்சமும், இது கொண்டு முடியும் வினையும் இரு வேறு எழுவாய்களையே கொண்டிருத்தலைக் காண்கிறோம்.

**2.3.1.4.2 வரிசைப் பொருள்**

இவ்வெச்சம் பழந்தமிழ் இலக்கியங்களில் மூன்று இடங் களில் மட்டுமே வரிசைப்பொருளில் வந்துள்ளது என்று

முன்னரே கண்டோம். இவற்றுள் இரு இடங்களில் இவ்வெச்சமும் இது கொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயைக் கொண்டிருக்க ஒரு இடத்தில் இரு வேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளன.

### 2.3.1.4.2.1 ஒரே எழுவாய்

நற்றிணையில் இவ்வெச்சம் இரு இடங்களில் வந்துள்ளது. இரு இடங்களிலும் ஒரே எழுவாயே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக,

"... ... ... ... ... ... ... ...கருங்கால்
யொன் இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்

குண்டுநீர் நெடுஞ்சினை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்றலைப் பாறுமயிர் திருத்துங்
குன்ற நாடன் ... ... ... ... ..." (நற். 151-8)

என வரும் அடிகளில் செலீஇயர் என்னும் எச்சமும், அது கொண்டு முடியும் நோக்கி என்னும் எச்சமும் குன்றநாடன் என்னும் ஒரு எழுவாயையே கொண்டுள்ளன.

### 2.3.1.4.2.2 இரு எழுவாய்கள்

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் ஐங்குறுநூற்றில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே இவ்வெச்சமும், இது கொண்டு முடியும் வினையும் இப்பொருளில் இருவேறு எழுவாய்களைக் கொண்டு வந்துள்ளன.

"கட்டளை யன்ன மணிநிறத் தும்பி
இட்டிய குயின்ற துறைவயிற் செலீஇயர்
தட்டைத் தண்ணுமைப் பின்ன ரியவர்
தீங்குழ லாம்பலி னினிய விமிரும்
புதன்மலர் மாலையும்..........." (ஐங். 215-1)

என வரும் ஐங்குறுநூற்று அடிகளில் செலீஇயர் என்னும் எச்சத்தின் எழுவாயாக இயவரும், அது கொண்டு முடியும் இமிரும் என்னும் எச்சத்தின் எழுவாயாகத் தும்பியும் வந்திருத்தலைக் காண்கிறோம்.

### 2.3.1.5 காலம்

குறையெச்சங்கள் அவை உணர்த்தும் பொருளுக்கேற்பவே காலம் காட்டும் என்று முன்னரே கண்டோம். செய்யியர் வாய்பாட்டு எச்சத்திலும் இதே நிலையைத்தான் காண்கிறோம். இவ்வெச்சம் நோக்கப்பொருளில் வரும் இடங்களில் எதிர்காலத்தையும், வரிசைப்பொருளில் வரும் இடத்தில் இறந்த காலத்தையும் உணர்த்தி நிற்கும்.

இவ்வெச்சம் நோக்கப்பொருள் உணர்த்தி வரும் அனைத்து இடங்களிலும் எதிர்காலத்தையே உணர்த்தும் என்பதும், இது நோக்கப் பொருளிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் வந்துள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார்

(சூத். 222) "செய்யியர் என்பது எதிர்காலங் காட்டும்" என்று கூறிச் செல்வதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"... ... ... ... ... ... ... ...நின்
எறிய ரோக்கிய சிறுசெங் குவளை" (பதி. 52-22)

என வரும் பதிற்றுப்பத்து அடிகளில் இவ்வெச்சம் காட்டும் தொழில் பின்னரும், அது கொண்டு முடியும் வினை காட்டும் தொழில் முன்னரும் நிகழும் நிலையில் இது எதிர்காலத்தை உணர்த்தி நிற்கக் காண்கிறோம். இவ்வடிக்கு "நின்மேல் எறிதற்காக வோச்சிய சிறிய செங்குவளை மலரை" என உரையாசிரியர் எழுதியுள்ள உரை இதனை நன்றாகக் காட்டும். பிற பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதே நிலை காணப்படுவதை 2.3.1.3.1 பிரிவில் உள்ள எடுத்துக்காட்டுக்களினின்றும் தெளிவாக உணரலாம்.

#### 2 3.1.5.1 இறந்த காலம்

செய்யியர் வாய்பாட்டு எச்சம் வரிசைப் பொருளை உணர்த்தும் இடங்களில் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் காட்டும் நிலையில் இறந்தகாலத்தையே காட்டும். பழந்தமிழ் இலக்கியங்களில் மூன்று இடங்களில்

மட்டுமே இவ்வெச்சம் இப்பொருளில் வந்துள்ளது என்பதை முன்னரே கண்டோம். (நற் 2, ஐங் 1,) நற்றிணையில்

"... ... ... ... ... - ... கருங்கால்
பொன் இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சினை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்றலைப் பாறுமயிர் திருத்துங்
குன்ற நாடன் ... ... ... ..." (நற். 161-8)

என வரும் அடிகளில் வரும் செலீஇயர் என்னும் எச்சத்திற்கு உரையாசிரியர் 'சென்று' என இறந்தகாலத்திலேயே பொருள் எழுதுவார். இந்நிலையில் இவ்வெச்சம் இறந்தகாலத்தைக் காட்டிநிற்றல் தெளிவு.

### 2.3.1.5.2, எதிர்காலம்

இவ்வெச்சம் நோக்கப்பொருள் உணர்த்தி வரும் அனைத்து இடங்களிலும் எதிர்காலத்தையே காட்டும் என்பதும், இது நோக்கப்பொருளிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் வந்துள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

# 2.4

# பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள்-4 — மார்

## 2.4.1 —மார்

முன்னர்க் குறிப்பிட்டபடி (சங்கத்தமிழ் பகுதி 111) மாரீற்றுச் சொற்கள் குறையெச்சமாகவும் வரும் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. பழந்தமிழ் இலக்கியங்களில் எச்சமாக வருகின்ற இடங்கள் அனைத்திலும் இது நோக்கப் பொருளிலேயே வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. தொல் காப்பியர் இவ்வுருபை எச்சமாக வெளிப்படையாகக் கூறா விடினும் இதனை எச்சமாகவே கொள்ளவேண்டும் என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. இந்நிலையில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் 78 இடங்களில் இது குறையெச்சமாக வந்துள்ளமையைக் காணலாம். இதன்கண் காணப்படும் மகர ஒற்று காலம் காட்டுவதில்லை என்பதும், இதனை மாரீற்று எச்சமாகவே கொள்ளவேண்டும் என்பதும் முன்னரே குறிப் பிடப்பட்டன. முன் பழந்தமிழ் நூல்களில் ஐங்குறுநூற்றில் மட்டுமே இது காணப்படுவதில்லை. பின் பழந்தமிழ் நூல் களில் குறள், மணிமேகலை ஆகிய நூல்களில் இது வருவ தில்லை என்பதும், சிலம்பிலும் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே வந்துள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. எனவே இதனை ஒரு முன் பழந்தமிழ்க் கூறாகக் கருத இடம் உண்டு.

**—மார்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பதி | ஐங் | அகம் | நற் | குறு | புறம் |
| 2 | — | 24 | 6 | 6 | 10 |
| பத்து | பரி | கலி | குறள் | சிலம்பு | மணி |
| 14 | 2 | 12 | — | 1 | — |

### 2.4.1.1 உரையாசிரியர்கள்

வினையியல் 10-ஆம் சூத்திரத்தில் இளம்பூரணர் மார் ஈறு வினை கொண்டு முடிவதற்கு (கொண்மார் வந்தார்) என்ற உதாரணம் மட்டுமே தந்துள்ளார். சேனாவரையரும் பிறரும் பெயரையும் கொண்டு (பாடன்மார் எமரே)முடியும் உதாரணங் களையும் தந்துள்ளனர். சேனாவரையர் பெயர் கொண்டு முடிவனவற்றை ஆர்ஈறு 'ஒரு மொழிப்புணர்ச்சியான் மகரம் பெற்று 'நின்றது' என்றும், பாடாதுஒழிவார் என்ற பொருள் உணர்த்துகிறது என்றும் விளக்கியுள்ளார். தெய்வச்சிலையார் வினைகொண்டு முடியினும் பிற வினையெச்சங்கள்போல பால் தோன்றாது. இது பால் தோன்றலின் வினைமுற்று என்ற விளக்கம் தந்துள்ளார். கல்லாடர் 'எதிர்காலம் ஒன்று பற்றி வரும்' என்று குறிப்பிடுகிறார்.

### 2.4.1.2 சூழல்

மார் உருபு

1. வினையடிகளுக்குப் பின்னரும்
2. பிற வினை உருபுகளுக்குப் பின்னரும்

வரும். ஐங்குறுநூறு, குறள், மணிமேகலை தவிர்ந்த எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் இவ்வுருபின் வரவினைக் காண முடிகிறது.

#### 2.4.1.2.1 வினையடிகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| செய்ம்மார் | செய்தற்காக | பதி | 54-14 |
| காண்மார் | காணும்பொருட்டு | அகம் | 257 13 |
| கொண்மார் | கொள்ளும்பொருட்டு | நற் | 80-2 |

| | | | |
|---|---|---|---|
| தருமார் | கொணரும்பொருட்டு | குறு | **216-1** |
| இடுமார் | அளித்தற்பொருட்டு | புறம் | **325-8** |
| அறிமார் | அறியும் பொருட்டு | பத்து | **10-394** |
| கொண்மார் | நுகரும் பொருட்டு | பரி | **10-10** |
| ஆடுமார் | விளையாடவேண்டி | கலி | **92-66** |
| காண்மார் | காணும் பொருட்டு | சிலம்பு | **28-29** |

மாரீற்று எச்சங்கள் வரும் பல இடங்களில் பிறவினைப் பொருள் வருதல் காணலாம். எனினும் பிறவினை காட்டும் உருபுகள் இச்சொற்களில் காணப்படவில்லை. ஆனால் பிற எச்சங்களிலோ பிறவினை உருபுகளும் காணக்கிடக்கின்றன. இந்நிலையில் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பிற வாய்பாட்டு எச்சங்கள் எதுவும் இந்நிலையில் இல்லாமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வெச்சத்திற்கும் எச்சங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் இதனையும் ஒன்றாகக் கருதலாம்.

### 2.4.1.2.2 பிறவினை உருபுகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| முடிமார் | முடிக்கும் பொருட்டு | அகம் | **105-11** |
| | முடித்தற்கு | அகம் | **375-12** |
| அறுமார் | நீக்க வேண்டி | புறம் | **93-6** |
| புணர்மார் | கூட்டுதற்கு | பத்து | **7-67** |

### 2.4.1.3 பொருள்

பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அனைத்து இடங்களிலும் மாரீற்று எச்சம் நோக்கப் பொருளிலேயே வந்துள்ளது.

### 2.4.1.3.1 நோக்கப்பொருள்

அகநானூற்றில்தான் இது மிக அதிகமான எண்ணிக்கையில் 24 இடங்களில் வந்துள்ளது. இவ்விருபத்துநான்கு இடங்களும் நோக்கப் பொருளையே உணர்த்துவனவாக உள்ளன. பதிற்றுப்பத்தில் வரும் மூன்று இடங்களிலும் இவ்வெச்சம் நோக்கப்பொருளையே காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில்

"................................நிறுமார்
இடாஅ வேணி வியலறைக் கொட்ப" (பதி. 81-14)

என வரும் அடிகளில் நிறுமார் என்ற எச்சம் நோக்கப் பொருளிலேயே வந்துள்ளது. "வீரர்...........தாம் பிறந்த குடிக்குக் கெடாத நல்ல புகழை நிலை நிறுத்துதற்கு அளவிடப் படாத எல்லையால் அகன்ற பாசறைக் கண்ணே சுழன்று திரிய"

என உரையாசிரியர் பொருள் எழுதுவது காணத்தக்கது. இது போன்றே அகநானூற்றிலும்

"...............வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர்"
(அகம். 207-2)

என வரும் அடிகளுக்கு "வெள்ளிய உப்பாகிய அமிழ்தினை மேற்குத் திசையிலுள்ள இடங்களுக்குச் செலுத்தும்பொருட்டு நிமித்தம் பார்த்துப் படைக்கலன்களை அமைத்துக்கொண் டெழுந்த பெரிய வீரச்செயல்களைப் புரியும் ஆடவர்" எனப் பொருள் எழுதுதல் காண்க.

நற்றிணையில்,

"கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து
கிளையொடு மகிழும் குன்ற நாடன் (நற். 164-4)

என வரும் அடிகளுக்கு உரையாசிரியர் "அக் கடவுளை உயர்ந்த அம்மலை மேலே சென்று வழிபடும் பொருட்டு விரும்பி யெழுந்து தன் சுற்றத்தாரோடும் போய் அதற்குப் பலியிட்டு, நீர் வளாவிய பின்னர் அப்பலியை உண்ணா நிற்கும் மலைநாட்டினை உடைய நந் தலைவன்" என உரை எழுதுவதும் இப்பண்பினை நன்கு காட்டும். இவற்றைப் போன்றே குறுந்தொகையில் காணப்படும்

''மாலை நணிவிருந் தயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே'' (குறு 155-6)

(இம் மாலைக்காலத்தே மிகவும் விருந்து அயர்தற் பொருட்டு உதோ தலைவருடைய தேர் வாராநின்றது என்று கூறும் உரை இன்னும் வந்திலதே)

என்ற அடிகளும், புறநானூற்றில் வரும்

''அருங்கட னிறுமார் வயவ ரெறிய'' (புறம். 282-)

(தம்முடைய அரிய கடனியாற்றுதல் வேண்டிப் பகைவர் எறிதலால்)

என்ற அடியும், பத்துப்பாட்டில்

''நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை'' (பத்து. 10-325)

(காட்டாற்றின் நெடிய சுழியிலே வீழ்ந்து அகப்பட்ட தறு கண்மையை உடைய யானையினது வலிய சினத்தைத் தணியப் பண்ணி, பெரிய தூணிலே சேர்த்தற்குத் தமதேவற்றொழிலைச் செய்தற்குக் காரணமான வடமொழி விரவிய பேச்சுக்களைப் பேசி அவற்றிலே பயிலச் செய்யும் பாகருடைய ஆரவாரமும்) என்ற அடிகளும், பரிபாடலில்

''... ... ... ... ... ... ... ...நளிபுணர்மார்
காரிகைமது ஒருவரினொருவர் கண்ணிற் கவர்புற''
(பரி 11-65)

(இறுகப் புணர்தற்கு இரு பாலரும் ஒருவரிடத்து ஒருவர் அழகாகிய மதுவைக் கண்ணாலே கவர்ந்து பருகும்படி)

என வந்துள்ள அடிகளும், கலித்தொகையில்

''நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமார்
ஆனா விருப்போ டணியயர்ப ........'' (கலி. 92-65)

(கூடலின் மகளிரும் அவர் கணவருந் தேனினம் ஒலிக்கும் கானிலே கூடியிருந்து விளையாடவேண்டி அமையாத விருப்பத் தோடே அணிகளை அணிவார்)

என வரும் அடிகளும்,

"மாசில்வாள் முகத்து வண்டொடு சுருண்ட
குழலுங் கோதையுங் கோலமும் காண்மார்
நிழல்கால் மண்டிலம் தம்மெதிர் நிறுத்தி"
(சிலம்பு. 28—28)

(குற்றமற்ற ஒள்ளிய முகத்தினையும்,தேனுகர வந்த வண்டுடனே சுருண்டு கிடந்த கூந்தலையும் மாலையினையும் ஒப்பனை யையும் காணும்பொருட்டு உருவினை வெளிப்படுத்தும் கண் ணாடியைத் தமக்கு முன்னே நிறுத்தி)

என வரும் சிலப்பதிகார அடிகளிலும் பிறவற்றிலும் இது நோக்கப்பொருளிலேயே வந்துள்ளது.

மாரீற்று எச்சத்திற்கும் பிற எச்சங்களுக்குமிடையே ஒரு வேற்றுமையைக் காண்கிறோம். பிற குறையெச்சங்கள் வேறு பல பொருள்களிலும் வர, மாரீற்று எச்சம் நோக்கப்பொருளில் மட்டுமே வருதல் காணத்தக்கது. எனினும் இதனைக் குறை யெச்சமாகவே கொள்ள வேண்டும்.

### 2.4.1.4 எழுவாய்

இவ்வாய்பாட்டு எச்சமும் தனக்கே உரிய எழுவாயையும், இது கொண்டு முடியும் வினைக்குரிய எழுவாயையும் பெற்று வருவது இங்கு நினைவு கூரத் தக்கது. பொதுவாக-இய,-இயர் ஈற்றுக் குறையெச்சங்கள் நோக்கப்பொருளில் வரும்போது பெரும்பாலும் ஒரே எழுவாயையே கொண்டு வரும் என்பது முன்னர்க் காட்டப்பட்டது. இதே நிலையைத்தான் மாரீற்று எச்சங்களிலும் காணுகிறோம். ஒரு சில இடங்களைத் தவிர பெரும்பாலான இடங்களில் இவ்வெச்சமும், இதுகொண்டு முடியும் வினையும் ஒரே எழுவாயையே கொண்டிருத்தல் காணலாம். எடுத்துக்காட்டாகப் பதிற்றுப்பத்தில் காணப்படும்

3 இடங்களிலும் ஒரே எழுவாயே உள்ளது. அகநானூற்றில் காணப்படும் 24 இடங்களுள் 23 இடங்கள் ஒரே எழுவாயையே கொண்டுள்ளன. இதே நிலையைத்தான் பிற இலக்கியங்களிலும் காண்கிறோம். இதனைப் பட்டியல் 11 நன்கு காட்டும்.

### 2.4.1,4.1. ஒரே எழுவாய்

பதிற்றுப் பத்தில் காணப்படும்
''துறைநணி மருதத் தேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பின்'' (பதி, 27-6)

என வரும் அடிகளில் காணப்படும் தெறுமார் என்ற எச்சமும் அது கொண்டு முடியும் இசைப்பின் என்ற வினைச் சொல்லும் எல்வளை மகளிர் என்ற எழுவாயையே கொண்டு வருதல் காணலாம். இவ்வடிகளுக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் ''விளங்குகின்ற வளையினையணிந்த இள மகளிர் நீர்த்துறைக் கண்ணிற்கும் மருத மரத்தின் மேல் ஏறி நெற்கதிர்களை மேயும் புட்களை யோப்புதற்காகத் தெளிந்த தம் விளிக்குரலையெடுத்து இசைப்பாராயின்'' என் எழுதிச் செல்லுதல் காண்க. இது போன்றே அகநானூற்றில்

''உயிரினுஞ் சிறந்த ஒண்பொருள் தருமார்
நன்றுபுரி காட்சியர் சென்றனர் அவரென''
(அகம் 245-1)

(அவர் நன்மையினை விரும்பிய அறிவினையுடையவராகிய தலைவர் உயிரைக் காட்டினும் சிறந்த ஒள்ளிய பொருளைத் தருதல் வேண்டிச் சென்றனர் என்று)

என வரும் அடிகளில் தருமார் என்னும் எச்சமும், அது கொண்டு முடியும் சென்றனர் என்னும் வினைமுற்றும் காட்சியர் என்ற ஒரே எழுவாயைக் கொண்டு வருதலைக் காண்கிறோம். குறுந்தொகையில்

''அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே'' (குறு. 216-1)

(நந் தலைவரோ கேடில்லாத சிறந்த பொருளைக் கொணரும் பொருட்டுப் பசிய இலைகளையுடைய வாடாத வள்ளிக்கொடி படர்ந்த காட்டைக் கடந்து சென்றார்) என வரும் அடிகளிலும் இதே நிலையைத்தான் காண்கிறோம். தருமார் என்ற எச்சமும், அது கொண்டு முடியும் இறந்தோர் என்ற வினைமுற்றும் அவர் என்ற பதிலிடுபெயரையே எழுவாயாகக் கொண்டு வந்துள்ளன. இதுபோன்றே புறநானூற்றில் வரும்

"... ... ... ... ...துன்னரு மறவர்
வென்றிதரு வேட்கையர் மன்றங் கொண்மார்
பேரமரு ழந்த வெருவரு பறந்தலை" (புறம். 270-9)

(நெருங்குதற்கரிய மறவர் வென்றி பெறும் வேட்கையுடையராய் மன்றத்தைக் கொள்ளும் பொருட்டுப் பெரிய போரைச் செய்த அச்சம் பொருந்திய பறந்தலையின்கண்)

என்ற அடிகளிலும், பத்துப்பாட்டில்

"பணியார் தேஎம் பணித்துத்திறை கொண்மார்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வெடிபடக் கடந்து வேண்டுபுலத் திறுத்த
பணிகெழு பெருந்திறற் பல்வேல் மன்னர்"
(பத்து. 6-230)

(தம்மை வழிபடாதோருடைய நாடுகளைத் தம் ஏவல் கேட்கும்படி செய்து அவர்கள்பால் திறை கொள்ளற்பொருட்டு......... பகைவர் படைக்குக் கேடுண்டாகும்படி வென்று பின்னும் அழிக்க வேண்டிய நிலங்களிலே சென்று தங்கின வெற்றி முரசு பொருந்தின பெரிய வலியினையும் பலவேற்படையினையுமுடைய அரசர்கள்)

என வந்துள்ள அடிகளிலும்

"... ... ... ... நளிபுணர்மார்
காரிகைமது ஒருவரினொருவர் கண்ணிற் கவர்புற"
(பரி. 11-65)

(இறுகப் புணர்தற்கு இரு பாலரும் ஒருவரிடத்து ஒருவர் அழகாகிய மதுவைக் கண்ணாலே கவர்ந்து பருகும்படி)
என வரும் பரிபாடல் அடிகளிலும், கலித்தொகையில் வரும்

"... - ...............தாமெம்மை
எள்ளுமார் வந்தாரோ ஈங்கு) (கலி. 81-23)

(இவ்விடத்தே தாம் எம்மை இகழ்தற்கே வந்தார்)
என்ற அடியிலும், சிலப்பதிகாரத்தில்

"மாசில் வாள்முகத்து வண்டொடு சுருண்ட
குழலுங் கோதையுங் கோலமுங் காண்மார்
நிழல்கால் மண்டிலம் தம்மெதிர் நிறுத்தி
வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇ
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ...அகவன் மகளிரின்" (சிலம்பு. 28-28)

(குற்றமற்ற ஒள்ளிய முகத்தினையும் தேனுகர வந்த வண்டுடனே சுருண்டு கிடந்த கூந்தலையும் மாலையினையும் ஒப்பனையையும் காணும்பொருட்டு உருவினை வெளிப்படுத்தும் கண்ணாடியைத் தமக்கு முன்னே நிறுத்தி,வளைந்த தண்டினையும் இசை பொருந்துதலையுடைய நரம்பினையும் பத்தரினையுமுடைய சீறியாழை எடுத்தணைத்து......................... .......... ... பாடுதலையுடைய அகவல் மகளிரால்)

என வந்துள்ள அடிகளிலும் இப்பண்பினை நன்கு காண முடியும்.

#### 2.4.1.4.2. இரு எழுவாய்கள்

மாரீற்று எச்சம் மிகப் பெரும்பான்மையான இடங்களில் ஒரே எழுவாயைக் கொண்டு வரினும், ஒருசில இடங்களில் (அகம் 1, நற் 1, குறு 2, பத்து 2, கலி 2 ) இருவேறு எழுவாய்களைக் கொண்டு வருவதையும் காணமுடிகிறது. எடுத்துக் காட்டாக, அகநானூற்றில்

"திருந்துவேல் இளையர் சுரும்புண மலைமார்
மாமுறி ஈன்று மரக்கொம் பகைப்ப" (அகம் 345-12)

என வரும் அடிகளில் மலைமார் என்னும் எச்சத்தின் எழுவாயாக மரக்கொம்பும் வந்துள்ளன. இவ்வடிகளுக்கு உரை எழுதும் ஆசிரியர் "திருந்திய வேலினையுடைய ஏவலாளரும் வண்டுகள் உண்ணும்படி தரித்துக் கோடற்குச் சிறந்த தளிர்களை ஈன்று மரத்தின் கொம்புகள் தழைக்குமாறு" என எழுதுதல் இதனை நன்கு விளக்கும். இதுபோன்றே நற்றிணையில்

"வேங்கைக் கண்ணியர்..............
..................................................
மென்தினை நெடும்போர் புரிமார்
துஞ்சுகளிறு எடுப்புந்தம் பெருங்கல் நாட்டே"
(நற் 125-9)

என வரும் அடிகளில் புரிமார் என்னும் எச்சத்தின் எழுவாயாக வேங்கைக் கண்ணியரும், அது கொண்டு முடியும் எடுப்பும் என்னும் வினையின் எழுவாயாகக் களிறும் வந்துள்ளமையும், இவ்வடிகளுக்கு" வேங்கை மலர் மாலை சூடுகின்ற குறவர் மெல்லிய தினையைத் துவைத்து அதன் தாளை நெடிய போராக விடும் பொருட்டு வைகறையிலெழுமாறு துஞ்சுகின்ற களிறு முழங்கி எழுப்பாநிற்கும் தமது பெரிய மலைநாட்டகத்தே" என ஆசிரியர் பொருள் எழுதுவதும் காணத்தக்கன. குறுந்தொகையிலும்

"பொருகளிறு மிதித்த நெறிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய மலரும் நாடன்" (குறு 208-2)

என வரும் அடிகளில் பெய்ம்மார் என்ற மாரீற்றெச்சத்தின் எழுவாயாகக் குறவர் மகளிர் என்ற பெயர்ச்சொல்லும், அது கொண்டு முடியும் வினையான மலரும் என்ற பெயரெச்சத்தின் எழுவாயாக வேங்கை என்ற பெயரும் வந்திருத்தல் காணலாம். "மலையின்கண்ணே தம்முட் போர்செய்த களிற்றியானை

களாலே மிதிக்கப்பட்ட நெரிந்த அடியினையுடைய வேங்கை மரம் குறவருடைய மகளிர்கள் தங் கூந்தலிலே சூடும் பொருட்டாக ஏறவேண்டாமல் நிலத்தே நின்றபடியே பறித்துக்கொள்ளும்படி தாழ்ந்து மலராநிற்கும் நாட்டையுடைய தலைவன்'' என்று உரையாசிரியர் எழுதியுள்ள உரையினைக் காண்க. இதுபோன்றே பத்துப்பாட்டில்

''செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை'' (பத்து 10-394)

என வந்துள்ள அடிகளிலும் அறிமார் என்னும் எச்சத்தின் எழுவாயாக உலகோர் (தோன்றா எழுவாய்) என்ற பெயரும் அது கொண்டு முடியும் எழுதிய என்ற பெயரெச்சத்தின் எழுதிய யாரோ ஒருவர் என்ற சொல்லும் (தோன்றா எழுவாய்) வருதலைக் காண்கிறோம். இவ்வடிகளுக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் ''நீங்கள் போகும் இடத்தின்கண் இவ்வாறே பொருதுபட்ட இன்னான் என்று அம்மறவனின் பெயரை உலகறியும் பொருட்டுக் கல்லை அகழ்ந்து அதன்கண் எழுதப் பட்டதும், நல்ல அரையினையுடைய மராத்தின் நீழலிலே இருப்பதுமாகிய தெய்வத் தன்மை மிக்க மறக்கல்லையுடைமை யால் அது பெற்றிராத ஏனைய காடுகளை இகழ்கின்ற பல வழிகளில்'' என எழுதுவது இதனை நன்கு உணர்த்தும்

கலித்தொகையில்

''ஏறுதங், கோலஞ்செய் மருப்பினால் தோண்டிய வரிக்குடர்
ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் வாய்வழீஇ
ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட
மாலைபோல் தூங்குஞ் சினை''

(கலி-106-26)

(ஏறுகள் தம்முடைய அழகு செய்கின்ற கொம்பாலே தோண்டிய வரிகளையுடைய குடர்கள் நான்று விழும்படி எடுத்துக் கொண்டு உயர்ந்துபோம் பருந்தின் வாயினின்றுந் தப்பி ஆல மரத்தையுங் கடப்ப மரத்தையும் ஆண்டு உறையுந் தெய்வங்

கட்கு மகிழ்ச்சியுண்டாக வேண்டி அணிதலைச் செய்தற்கு இட்டு வைத்த மாலைகள் போலே கொம்புகடோறும் தூங்கா நிற்கும்)''

என வரும் அடிகளில் அணிமார் என்னும் எச்சத்தின் எழுவாய்களாக ஆறும் கடம்பும், அது கொண்டு முடியும் வினையான இட்ட என்னும் வினையின் எழுவாயாக யாரோ ஒருவர் (தோன்றா எழுவாய்) என்பதும் வந்துள்ளமை இப் பண்பின்னை நன்கு காட்டும்.

### 2.4.1.5 காலம்

பிற குறையெச்சங்களைப் போலவே இதிலும் காலம் காட்டும் இடைநிலை இல்லை என்றே கொள்ள வேண்டும். மகரத்தைக் காலம் காட்டும் இடைநிலையாகக் கொள்ளலாம் எனக் கருதுவதற்கு இடம் இருப்பினும் அதனை அவ்வாறு கொள்ள இயலாது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது, மாரீற்று வினைமுற்றுக்களைப் பற்றிப் பேசும் உரையாசிரியர்கள் கூட இதனைக் கால இடைநிலையாகக் கொள்ள மாட்டார்கள். இதனால்தான் வினைமுற்றாகக் கருதும்போது கூட இதனை மாரீற்று வினைமுற்று என்றே குறிப்பிடுவர்.

மேலும் உண்பான், காண்பான், ஆடுவான், செய்வான் போன்ற வான்பான் ஈற்று எச்சங்களில் காணப்படும் வகரத்தையும், பகரத்தையும் கால இடைநிலைகளாக யாரும் கொள்ளுவதில்லை. மாறாக இவற்றை வான், பான், ஈற்று எச்சங்களாகவே கொள்ளுவர். நன்னூலார்

''செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயுச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினையெச்சம்......'' (சூத்.343)

எனக் குறிப்பிட்டுச் செல்லுவார்.

பிற குறையெச்சங்களைப் போலவே இதுவும் கால இடைநிலையைக் கொண்டிராவிட்டாலும் எதிர்காலத்தில் இது வருதல் குறிப்பிடத்தக்கது. செய, செய்யிய, செய்யியர் ஆகிய குறையெச்சங்கள் மூன்று காலங்களிலும் வரும் என்பது முன்

னரே கூறப்பட்டது மட்டுமின்றி அவை காட்டும் பொருளுக்கும் காலத்திற்குமிடையே ஒரு தொடர்பு உண்டு என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. எடுத்துக்காட்டாக செய்யிய வாய்பாட்டு வினையெச்சம் நோக்கப் பொருளிலும் தாக்கப் பொருளிலும் வரும்போது எதிர்காலத்திலும், காரணப்பொருளில் வரும்போது இறந்த காலத்திலும் வருவது காணத்தக்கது. இதே நிலையைத்தான் செயவென்வாயபாட்டு எச்சத்திலும் காணுகிறோம். இவ்வாய்பாட்டு எச்சமும் காரணப் பொருளில் இறந்தகாலத்திலும், நோக்கப் பொருளிலும் தாக்கப் பொருளிலும் எதிர்காலத்திலும், உடன் நிகழ்ச்சிப் பொருளில் நிகழ் காலத்திலும் வருதல் குறிப்பிடத்தக்கது. இதே நிலைதான் மாரீற்றுக் குறையெச்சத்திலும் உண்டு. எனினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இவ் வாய்ப்பாட்டு எச்சம் நோக்கப் பொருளில் மட்டுமே வருவதும், எதிர்காலத்தை மட்டுமே காட்டுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்தில்

"தோமர வலத்தர் நாமஞ் செய்ம்மார்
ஏவல் வியங்கொண் டிளையரொ டெழுதரும்
ஒல்லார் யானை காணின்" (பதி 54-14)

(வலக்கையில் தண்டேந்திப் போரினைச் செய்தற்காக அம் முரசொலியின் ஏவலை மேற்கொண்டு அணிவகுக்கப்பெற்ற இளைய வீரருடன் செல்லும் தானைத்தலைவர் முதலாகிய பகைவேந்தருடைய யானைப்படையைக் கண்டால்)

என வரும் அடிகளிலும், குறுந்தொகையில்

"அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே" (குறு. 216-1)

(நந் தலைவரோ கேடில்லாத சிறந்த பொருளைக் கொணரும் பொருட்டு பசிய இலைகளையுடைய வாடாத வள்ளிக்கொடி படர்ந்த காட்டைக் கடந்து சென்றார்)

என வரும் அடிகளிலும், மேலும் மாரீற்று எச்சம் வரும் அனைத்து இடங்களிலும் இவ்வெச்சம் எதிர்காலத்தையே சுட்டி வருவதைக் காணலாம்.

# 2.5

## பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள்

### 2.5.1 —வான்

பழந்தமிழ் நூல்களில் காணப்படும் குறையெச்ச உருபுகளில் -வான் என்பதும் ஒன்றாகும். இது செய, செய்யிய போன்ற பிற உருபுகளைப் போல அதிகமாகக் காணப்படவில்லை என்பதும், முன்பழந்தமிழ் நூல்களில் ஐங்குறுநூற்றில் ஒரு இடத்திலும், நற்றிணையில் ஒரு இடத்திலுமாக இரு இடங்களில் மட்டுமே காணப்படுகின்றது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. ஆனால் முன்பழந்தமிழ் நூல்களில் பரிபாடல், கலித்தொகை (1), சிலம்பு (1) ஆகியவற்றில் காணப்படும் நிலையில் இதனுடைய வரவையும் ஒரு பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

இடைக்காலத் தமிழில் இது அதிகமாக வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக அப்பர் தேவாரத்தில் —இய 3 இடங்களில் காணப்பட -வான் 39 இடங்களில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனால்தான் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் இதனை ஒரு வினையெச்ச உருபாகக் குறிப்பிட்டுச் சென்றனர்.

#### 2.5.1.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்களில் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகிய மூவரும் பானீற்று எச்சத்திற்கு மட்டுமே

எடுத்துக்காட்டுகள் தந்து செல்கின்றனரேயன்றி வானீற்று எச்சத்திற்கு எடுத்துக்காட்டுகள் எதுவும் தருவதில்லை.

நச்சினார்க்கினியர் (231)

"கொள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்"

என்ற புறப்பொருள் வெண்பாமாலை (99) அடியினையும், கல்லாடனார் (231)

"கொள்வான் வந்தான்"

என்பதையும் தந்து செல்வர். இவ்வெச்சத்தினை வானீறாகக் கொள்வதா ஆனீறாகக் கொள்வதா என்பது பற்றியும், உரை யாசிரியர்களின் கருத்துக்களும் முன்னரே சங்கத்தமிழ் - பகுதி நான்கில் ஆராயப்பட்டுள்ளது.

### 2.5.1 சூழல்

1. இது வினையடிகளுக்குப் பின்னரும்
2. பிறவினைகளுக்குப் பின்னரும்

வரும்.

#### 2.5.1.2.1 வினையடிகளுக்குப் பின்னர்

இச்சூழலில் இது ஐங்குறுநூறு, நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, சிலம்பு ஆகிய நூல்களில் காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மலைவான் | போரிடற்பொருட்டு | ஐங் 248-2 |
| குழைவான் | வருந்துமாறு | நற் 229-9 |
| கொள்வான் | நுகரவேண்டி | பரி 16-51 |
| வருவான் | வருதற்கு | கலி 113-13 |
| மாய்வான் | மறைந்துபோகும்படி | சிலம்பு 7-8-1 |

#### 2.5.1.2.2 பிறவினைகளுக்குப் பின்னர்

நீக்குவான் விலக்கும் பொருட்டு (பரி.7-57)

முன்னர்க் குறிப்பிட்டபடி வானீற்றுக் குறையெச்சங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. முன் பழந்தமிழ்

இலக்கியங்களில் ஐங்குறுநூற்றிலும் நற்றிணையிலும் மட்டுமே காணப்படுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

## 2.5.3 பொருள்

இவ்வுருபு தாக்கப் பொருளிலும் நோக்கப் பொருளிலும் வருவதாக உள்ளது. நற்றிணை, சிலப்பதிகாரம் ஆகியவற்றில் தாக்கப் பொருளிலும், ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் நோக்கப் பொருளிலும் இது வந்துள்ளது.

## 2.5.1.3.1 நோக்கப்பொருள்

முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஐங்குறுநூறு(1), பரிபாடல் (2), கலித்தொகை (1) ஆகியவற்றில் காணப்படும் வானீற்று எச்சங்கள் நோக்கப்பொருளில் வந்துள்ளன, ஐங்குறுநூற்றில் வரும்

''மலைவான் கொண்ட சினைஇய வேலன்'' (ஐங்.248-2)

என்ற அடியில் மலைவான் என்னும் எச்சம் நோக்கப்பொருளிலேயே வந்துள்ளது. இவ்வடிக்குப் பொருள் எழுதும் ஆசிரியர் ''போரிடற்பொருட்டு முருகன் கைக்கொண்ட சினந்த வேலினை ஏந்திய இவ் வேன்மகன்''

என எழுதுதல் காண்க. இதுபோன்றே பரிபாடலில்

''... ... ... ... ... ... ... ... ... ஓர் பொன்னங் கொம்பு
பரிந்தவளைக் கைப்பிணை நீக்குவான் பாய்வான்''
(பரி. 7-56)

என வரும் அடிகளுக்குப் ''பொற்கொடி போல்வாள் ஒருத்தி அங்ஙனம் சிறையானவளுக்கு இரங்கி அவளைக் கையாற் பிணைக்கப்பட்ட அச்சிறையினின்றும் விலக்கும் பொருட்டுப் பாய்ந்தாள்''. என உரை எழுதுவது இவ்வெச்சம் நோக்கப் பொருளில் வருவதைக் காட்டும்.

இதே நிலையைத்தான் பரிபாடலின் 16-ஆம் பாடலில் வரும்

"கண்ணியர் தாரர் கமழ்நறுங் கோதையர்
பண்ணிய வினைப் பயன்கொள்வானாட லால்"

என்ற அடிகளிலும் காண்கிறோம். மைந்தர்களும் மகளிரும் "பொருள்களைத் தானம் பண்ணி அதன் பயனாகிய போகத்தை நுகரவேண்டி நாள்தோறும் நின்னிடத்தே நீராடுதலாலே" என இதற்கு உரை எழுதுவது கொள்வான் என்ற வானீற்று எச்சம் நோக்கப் பொருளில் வந்திருத்தலைக் காட்டும். இது போன்றே கலித்தொகையில் வரும்

"ஏதமன் றெல்லை வருவான் விடு"

(யான் நாளை வருதற்கு இப்பொழுது போகவிடு) என்பதிலும் இப்பொருளையே காண்கிறோம்.

### 2.5.1.3.2. தாக்கப்பொருள்

முன்னர்க் குறிப்பிட்டபடி தாக்கப்பொருளிலும் இவ்வாய் பாட்டு எச்சம் வந்துள்ளது. நற்றிணையில் காணப்படும்

"... ... ... ... ... ... ... ... ...தமியே
குழைவான் கண்ணிடத்து ஈட்டித் தண்ணென
வாடிய இளமழைப்பின்றை

வாடையுங் கண்டிரோ வந்துநின் றதுவே" (நற் 229-8)

என வரும் அடிகளில் தாக்கப் பொருள் புலப்படுவதைக் காணலாம். உரை எழுதுபவரும் "தனியே இருந்து வருந்து மாறு" என எழுதுவது காண்க.

இதே நிலையினைத்தான் சிலம்பில் வரும் மாய்வான் என்ற வினையெச்சத்திலும் காணுகிறோம்.

"துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல்உழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்தாது
போர்க்குங் கானல்" (சிலம்பு. 7-8-1)

எனவரும் அடிகளுக்கு "சுவடு மறைந்து போகும்படி ... ... ... தாதுக்கள் மூடுதற்குக் காரணமான இக் கடற்கானல்" என்று பொருள் எழுதுவது இங்கு உணரத்தக்கது.

எனவே இதுகாறும் கூறியவற்றால் வானீற்று எச்சம் பழந் தமிழ் நூல்களில் மிகமிகக் குறைவாகவே வந்துள்ளது என்ப தும் நோக்கப் பொருள், தாக்கப்பொருள் ஆகியவற்றையே இது உணர்த்தி நிற்கின்றது என்பதும் தெளிவாகும்.

### 2.5.1.4 எழுவாய்

வானீற்று எச்சம் ஒரே எழுவாயைக் கொண்டும், இரு எழு வாய்களைக் கொண்டும் வருதல் இங்கு உணரத்தக்கது.

### 2.5.1.4.1 தாக்கப்பொருள்

#### 2.5.1 4.1.1 இரு எழுவாய்கள்

தாக்கப்பொருளில் வரும்போது இது இரு எழுவாய்களைக் கொண்டே வந்துள்ளது. நற்றிணையில்

''உழையி ராகவும் பனிப்போள் தமியே
குழைவான் கண்ணிடத்து ஈண்டித் தண்ணென
வாடிய இளமழைப் பின்றை

வாடையுங் கண்டிரோ வந்துநின் றதுவே'' (நற்.229-8)

என வரும் அடிகளில் குழைவான் என்ற எச்சத்தின் எழு வாயாகப் பணிப்போள் என்ற வினையாலணையும் பெயரும், அது கொண்டு முடியும் வினையான வந்து நின்றது' என்ற வினைமுற்றின் எழுவாயாக வாடை என்னும் பெயரும் வந் துள்ளன. சிலம்பிலும் இதே நிலையைத்தான் காண்கிறோம்

''துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத
தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்தாது
போர்க்குங் கானல்'' (சிலம்பு. 7-8-1)

என வரும் சிலப்பதிகார அடிகளில் மாய்வான் என்னும் எச்சத் தின் எழுவாயாகத் தோற்றம் என்ற பெயர்ச்சொல்லும், அது கொண்டு முடியும் வினையான போர்க்கும் எனற பெயரெச்சத் தின் எழுவாயாக நுண்தாது என்ற பெயர்ச்சொல்லும் வந் துள்ளன.

### 2.5.1.4.2 நோக்கப்பொருள்

வானீற்று எச்சம் நோக்கப் பொருளில் வரும்போது மூன்று இடங்களில் ஒரே எழுவாயைக் கொண்டும் (ஐங். 248-2, பரி 7-57, 16-51) ஒரே இடத்தில் இரு வேறு எழுவாய்களைக் கொண்டும் (கலி. 113-13) வரக் காண்கிறோம்.

#### 2.5.1.4.2.1 ஒரே எழுவாய்

பரிபாடலில்

" ... ... ...ஓர் பொன்னங் கொம்பு
பரிந்தவளைக் கைப்பிணை நீக்குவான் பாய்வாள்"
(பரி. 7-56)

என வரும் அடிகளில் நீக்குவான் என்ற எச்சமும், அது கொண்டு முடியும் வினையான பாய்வாள் என்ற வினைமுற்றும் பொன்னங்கொம்பு என்ற ஒரே எழுவாயையே கொண்டு வருதல் காணலாம்.

#### 2.5.1.4.2.2 இரு எழுவாய்கள்

கலித்தொகையில்

"ஏதமன் றெல்லை வருவான் விடு" (கலி. 113-13)
(யான் நாளை வருதற்கு இப்பொழுது போகவிடு)

என வரும் அடியில் வருவான் என்ற எச்சத்தின் எழுவாயாக நான் என்னும் பதிலிடுபெயரும், அதுகொண்டு முடியும் வினையான விடு என்னும் ஏவல் வினையின் எழுவாயாக நீ என்ற பதிலிடுபெயரும் எழுவாய்களாக வந்துள்ளன.

### 2.5.2,5. காலம்

காலம் காட்டுவதில் பிற குறையெச்சங்களைப் போலவே இதுவும் காணப்படுகிறது. நோக்கப் பொருளிலும், தாக்கப் பொருளிலும் மட்டுமே இது வருகின்ற நிலையில் எதிர் காலத்தையே உணர்த்துகின்றது. முன்னர்க் குறிப்பிட்டது போன்று இதன்கண் காணப்படும் வகர ஒற்றினைக் கால இடைநிலையாகக் கொள்வது கடினம். இதனால்தான் இலக்கண அறிஞர்கள் இதனை வானீற்று எச்சம் எனக்குறிப்பிட்டுப் போந்தனர்.

# 2.6

# பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள் —6, -பான்

## 2.6.1. -பான்

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இவ்வுருபு ஒரே ஒரு இடத்தில்தான் காணப்படுகிறது. அதுவும் பின்பழந்தமிழ் நூல்களில் ஒன்றாகிய கலித்தொகையிலேயே வந்துள்ளது. எனினும் இது வானீற்று எச்சத்தோடு ஒன்றாகவே வைத்து எண்ணப்படவேண்டிய நிலையில் உள்ளது. வான் உருபு மெல்வினைகளில் வருவதும், இது வல்வினைகளிலும், இடை வினைகளிலும் வருவதும் குறிப்பிடத்தக்கது. பழந்தமிழ் இலக்கியங்களில் வல்லினைகளில் இது வாராமை ஒரு தற்செயல் விடுப்பேயாகும்.

### 2.6.1.1. உரையாசிரியர்கள்

பானீற்று எச்சத்திற்கு உதாரணம் கூற வந்த இளம்பூரணர் (224)

உண்பான் வந்தான்

என்பதையும், சேனாவரையர்(229)

உண்பான் வருவான்

என்பதையும், நச்சினார்க்கினியர் (231)

''அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்''

என்ற நான்மணிக்கடிகை (28) அடியினையும்,

''திருவிற்றான் மாரி கற்பான் துவலைநாட் செய்வதே போல்''

என்னும் சீவகசிந்தாமணி (2070) அடியினையும், தெய்வச் சிலையார் (226)

செவ்வன் தெரிகிற்பான்

என்பதையும், கல்லாடனார் (281)

செவ்வன் தெரிகிற்பான்
உண்பான் வந்தான்

ஆகியவற்றையும் தந்து செல்வர்.

### 2.6.1.2 சூழல்

பானீற்று எச்சம்

1. வினை அடிக்குப் பின்னர் வரும்

### 2.6.1.2.1 வினை அடிக்குப் பின்னர்

இவ்வெச்சம் கலித்தொகையில் மட்டுமே ஒரே ஒரு இடத்தில் வந்துள்ளது.

காண்பான் காண்பதாக (கலி. 97-7)

### 2.6.1.3 பொருள்

இது பழந்தமிழ் இலக்கியங்களில் ஒரே ஒரு இடத்தில் வந்து நோக்கப்பொருளை உணர்த்தி நிற்கும். கலித்தொகையில்

''முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான்யான் தங்கினேன்''
(கலி. 97-6)

என வரும் அடிகளில் இது நோக்கப்பொருளில் வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வடிகளுக்குப் பொருள் எழுதும் உரையாசி

ரியர் "முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நம் வலையிலே அகப்பட்டு வந்ததொரு புத்தியானை ஈண்டு வந்தது; அதனை ஏறிக் காண்பதாக யான் தங்கினேன்" என எழுதுதல் காண்க.

2.6.1.4 எழுவாய்

2.6.1.4.1 **நோக்கப்பொருள்**

2.6.1.4.1.1 **ஒரே எழுவாய்**

மேலே கண்ட எடுத்துக்காட்டில் நோக்கப்பொருளில் வரும் காண்பான் என்ற எச்சமும், அது கொண்டு முடியும் தங்கினேன் என்ற வினைமுற்றும் யான் என்ற எழுவாயையே கொண்டிருத்தலைக் காண்கிறோம்.

2.6.1 5 **காலம்**

2.6.1.5.1 **எதிர்காலம்**

இவ்வெச்சம் நோக்கப்பொருளில் மட்டுமே வந்துள்ள நிலையில் எதிர்காலத்தை மட்டுமேஉணர்த்தி நிற்கும். இதனை மேலே கண்ட கலித்தொகை அடிகள் நன்கு காட்டும்.

# 3

# நிபந்தனை எச்சம்

## 3.1 பழந்தமிழில் நிபந்தனை எச்சங்கள்

தற்காலத் தமிழைப் போலவே பண்டைத் தமிழிலும் நிபந்தனைப் பொருள் இருவகையாகக் கூறப்படும். தொடரியல் அடிப்படையிலும், சொல்லியல் அடிப்படையிலும் நிபந்தனைப் பொருள் கூறப்படுகிறது. பல்வேறு விதமான வாக்கியங்களுக்குப் பின்னர் எனின், ஆயின், எனில் போன்ற நிபந்தனை எச்சங்களை இணைத்துக் கூறுவது பண்டைத் தமிழில் பரவலாகக் காணக் கிடக்கின்ற ஒரு முறையாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் பெரும்பான்மையாக ஆயின், எனின் என்ற சொற்களே நிபந்தனை எச்சமாக நின்று நிபந்தனையைக் காட்டுவதைப் பல இடங்களில் காணலாம்.

%"அறிந்தனை யருளா யாயின்
யாரிவ ணெடுந்தகை வாழு மோரே" (பதி.71-26)

"அவ்வரை யிறக்குவை யாயின்
மைவரை நாட வருந்துவள் பெரிதே" (ஐங்.301-3)

"பரன்முரம்பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின் ... ... —" (அகம் 4-15)

இவற்றுள்ளும் ஆயின் என்ற சொல்லே அதிகமாகக் காணப்படுகின்றது. எனில் என்ற சொல்லோ கலித்தொகை

(இரு இடங்களிலும்),* மணிமேகலை (மூன்று) சிலப்பதிகாரம் (3 இடங்களில்) ஆகியவற்றில் மட்டுமே வரக் காண்கிறோம்.

''அருளறம் பூண்டங் காருயி ரோம்புநர்
உளரெனில் அவர்கைப்புகுவாய் ... ...'' (மணி:14-94

இச்சொற்கள் வாக்கியங்களை அடுத்தே வருவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனால்தான் இதனைத் தொடரியல் அடிபடை என்கிறோம்.

''மறந் தமைகுவ னாயி னாமறந்
துள்ளா தமைதலு மமைகுவ மன்னே'' (ஐங், 36-2)

போன்ற இடங்களில் இப்பண்பைக் காணலாம். மறந்தமைகுவன் என்பது தனி ஒரு வாக்கியமே. இதைப் போன்றே குறிப்பு வினைகளுக்குப் (appellative) பின்னரும் இவை வரும் நிலையினைக் காணலாம்.

''... ... ... ... — ... ....நின்மாட்
டிவளும் இனைய ளாயின் ... ... ...'' (அகம்,2-12)

என்பதில் இனையள் என்பது வினைப் பயனிலையாகும்.

''கதி ராயிற் றண்கலிழ் தந்து'' (ஐங். 45-1)

என வருதல் காண்க, இந்நிலையில் நிபந்தனைச் சொற்கள் வினைச்சொற்களோடு மட்டுமின்றிப் பெயர்ச் சொற்களோடும் இடைச்சொற்களோடும் வருதல் காணலாம். இவையனைத்தும் தொடரியலைச் சார்ந்தன.

சொல்லியல் அடிப்படையில் வரும் நிபந்தனைச் சொற்களே (வரின், செய்யின் போன்றவை) இந்நூலில் ஆராயப்படுகின்றன.

## 3.2 தொல்காப்பியமும் நிபந்தனை எச்ச விகுதிகளும்

நிபந்தனையைக் குறித்து வரும் சொற்கள் தமிழ் மரபிலக்கணங்களில் பொதுவாக வினையெச்சங்களாகவே கருதப்படு

(*கலி 140-13, 14 சிலம்பு; 5-115, 16-200: 28-179;
மணி 14-94, 29-209, 227).

கின்றன. இதனால்தான் தொல்காப்பியர் வினையெச்சங்களைக் கூறும் அதே சூத்திரத்தில் செயின் வாய்பாட்டு வினையெச்சத்தையும் கூறிச் செல்லுதல் காணலாம்,

"செய்து செய்யூ செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி"

(சூத்.713)

இச்சூத்திரத்திற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர்களும் இவ்வாய்பாடுகளைத் தந்து இவை வினையெச்சச் சொற்கள் என்று கூறி, இதற்குப் பின்னர் வரும் சூத்திரங்களின் அடிப்படையில் இவற்றின் முடிபுகளையும் கூறிச்செல்லுவர். அதாவது இவை தத்தம் வினைகளைக் கொண்டு முடியுமா அல்லது வேறு வினைகளைக் கொண்டு முடியுமா என்பன போன்ற செய்திகளையே கூறிச் செல்வர். ஆனால் இவை எப்பொருள் காட்டும் எனத் தொல்காப்பியரோ அல்லது இளம்பூரணரோ எதுவும் கூறுவதில்லை. ஆனால் சேனாவரையர் – இன் எதிர்காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் வரும் எனக்கூறி

"மழை பெய்யிற் குளம் நிறையும்"

போன்ற உதாரணங்களைத் தருவர். இவரைப் பின்பற்றியே நச்சினார்க்கினியரும் இன் எதிர்காலம் பற்றி வரும் காரணப் பொருட்டாய் வரும் என்று கூறுவார்.

செயின் வாய்பாட்டு வினையெச்சங்கள் உண்மையிலேயே காரணப் பொருளில் வருவனவா அல்லது நிபந்தனைப் பொருளில் வருவனவா என்பது ஆராயற்பாலது. காரணப் பொருளில் வருவன என்று கூறுவது பொருந்தாது.

"அவன் வந்ததால் நான் சென்றேன்"
"அவன் வருவதால் நான் செல்கிறேன்"

போன்றவையே காரணப்பொருள் காட்டுவன. காரணப் பொருள் வேறு; நிபந்தனைப் பொருள் வேறு. செயின் வாய்பாட்டு வினை யெச்சங்கள் நிபந்தனைப்பொருளைக் காட்டு

வணவாகும். இதனால்தான் தெய்வச்சிலையார் சேனாவரையரைப்பின்பற்றாமல் பொதுவாக, "பொருள் வேறுபாடு உடைத்தாதலான்" எனக் கூறிப்போந்தார் போலும்.

### 3.3 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியத்திலும் பலவேறு இடங்களில் நிபந்தனை எச்சங்கள் வருதல் காணலாம். சங்கத் தமிழில் நிபந்தனை எச்ச உருபுகளாகப் பல வரினும் தொல்காப்பியத்தில்-இன் உருபு ஒன்றே காணப்படுகிறது

| | |
|---|---|
| செப்பின் — உணர்த்து மிடத்து | எழுத்து 373-1 |
| கூறின் — கூறப்புகின் | எழுத்து 35-2 |
| தோன்றின் — தோன்றுமேயெனின் | சொல் 38-2 |

போன்றவை உதாரணங்கள்.

### 3.4 பெரும்பான்மை விகுதி

சங்க இலக்கியங்களில், —இன், —இல், —ஆல் ஆகிய மூன்று விகுதிகள் காணப்படினும் —இன் விகுதியே மிக அதிகமாக வந்துள்ளது. பதிற்றுப்பத்து, குறுந்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்களில் இவ்விகுதி மட்டுமே வந்துள்ளது. பிற விகுதிகள் எதுவும் காணப்படவில்லை. புறநானூறு, ஐங்குறு நூறு நற்றிணை ஆகியவற்றில் ஒரு இடத்தில்தான் பிற விகுதிகள் காணப்படுகின்றன. இந்நிலையில் இல்விகுதிகள் வாராமையை முன்பழந்தமிழ்க் கூறாகக் கருதுவதில் தவறில்லை.

| | —இன் | —இல் | —ஆல் | —ஏல் |
|---|---|---|---|---|
| பதி | 41 | — | — | — |
| ஐங் | 97 | — | 1 | — |
| அகம் | 268 | 5 | — | — |
| நற் | 90 | 1 | — | — |
| குறு | 145 | — | — | — |
| புறம் | 310 | — | 1 | — |
| பதது | 58 | — | — | — |

| | —இன் | —இல் | —ஆல் | —ஏய் |
|---|---|---|---|---|
| பரி | 15 | 1 | 2 | — |
| கலி | 136 | 4 | 4 | 11 |
| குறள் | 217 | 1 | 3 | 13 |
| சிலம்பு | 111 | 9 | 13 | 8 |
| மணி | 80 | 21 | 30 | 3 |

### 3.5 நிபந்தனை உருபுகள்

#### 3.5.1 —இன்

இவ்வுருபே பழந்தமிழில் அதிகமாகப் பயின்று வரும் உருபு. பதிற்றுப்பத்து, குறுந்தொகை, பத்துப்பாட்டு ஆகிய வற்றில் இவ்வுருபு மட்டுமே வருவது இப் பண்பினைக் காட்டி நிற்கும்.

#### 3.5.1.1 உரையாசிரியர்கள்

தொல்காப்பியர் செயின் வாய்பாட்டு வினையெச்சத்தைப் பற்றிக் குறிப்பிடினும் இளம்பூரணர் இதற்கு எவ்வித உதார ணத்தையும் தருவதில்லை.

ஆனால், சேனாவரையர்

> "மழை பெய்யிற் குளம் நிறையும்"
> "மெய்யுணரின் வீடெளிதாம்"

ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகத் தருவார். மேலும் இவர் நடப்பின், உரைப்பின் ஆகியவற்றையும் உதாரணங்களாகத் தந்து இவை பகரம் பெற்று வந்தன எனக் கூறுவார்.

இவரை அடியொற்றி நச்சினார்க்கினியரும் இதே உதார ணங்களையே தந்து நிற்பார். மேலும் இவர்

> 'நன்விற் புணர்ச்சி நடக்கலு மாங்கே',

போன்றவற்றில் வரும் உம் ஈறு நிபந்தனைப் பொருளைக் காட்டி நிற்கும் எனக் கருதுவார். ஆனால் இது ஐயத்திற் குரியது.

தெய்வச்சிலையார் இதற்குரிய எடுத்துக்காட்டுகள் எதுவும் தருவதில்லை.

கல்லாடனார் 'மழை பெய்யின் குளம் நிறையும்' என்ற உதாரணத்தையே தந்து நிற்பார்.

3.5.1.2 **சூழல்கள்**

இவ்வுருபு

1 வினையடிகளுக்குப் பின்னரும்

2 வல்வினையாயின் அவற்றிற்குப் பின்னரும் வரும் (அ) (-ப்)ப்- ஒற்றுகளுக்குப் பின்னரும், (ஆ) (-க்)க்- ஒற்றுகளுக்குப் பின்னரும் வரும்'

3.5.1.2 1 **வினையடிகளுக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| கருதின் | கருதினால் | பதி 33—11 |
| கடவின் | செலுத்துவாயாயின் | ஐங் 425—3 |
| அறியின் | அறியின் | அகம் 49—13 |
| கூறின் | கூறினால் | நற் 4—6 |
| அஞ்சின் | அஞ்சினால் | குறு 112—1 |
| உணின் | உண்ணுமாயின் | புறம் 184—3 |
| கெடின் | கெடுமாயின் | பத்து 8—14 |
| நாடின் | ஆராயின் | பரி 2—55 |
| செலின் | போகின் | கலி 10—21 |
| உணரின் | உணருமாயின் | குறள் 357 |
| ஆடின் | ஆடுவீராயின் | சில 11—131 |
| நின்றிடின் | நின்றால் | மணி 3—25 |

3.5.1.2.2 **ஒற்றுக்களுக்குப் பின்னர்**

**அ) —ப் (ப்) — ஒற்றுக்களுக்குப் பின்னர்**

| | | |
|---|---|---|
| இசைப்பின் | இசைப்பாராயின் | பதி 27—7 |
| இறப்பின் | செல்வாயாயின் | ஐங் 306—1 |
| இரப்பின் | இரந்து வேண்டின் | அகம் 249—14 |
| அறிகிற்பின் | அறியின் | அகம் 195—11 |
| இறப்பின் | செல்லின | நற் 171—6 |

| | | | |
|---|---|---|---|
| இருப்பின் | இருந்தால் | குறு | 370—3 |
| கேட்பின் | கேட்டால் | குறு | 94—4 |
| கிளைப்பின் | கிளறின் | புறம் | 176—2 |
| கேட்பின் | கேட்பின் | புறம் | 89—8 |
| இருப்பின் | இருப்பின் | பத்து | 10—290 |
| நிற்பின் | நின்றீராயின் | பத்து | 10—566 |
| நினைப்பின் | கருதில் | பரி | 3—46 |
| ஓர்ப்பின் | ஓர்ப்பராயின் | கலி | 53—20 |
| கேட்பின் | கேட்பின் | கலி | 7—3 |
| இமைப்பின் | இமைக்குமாயின் | குறள் | 775 |
| சாகிற்பின் | சாவப்பெறின் | குறள் | 780 |
| கரப்பின் | குறைந்தால் | சிலம்பு | 25—100 |
| கேட்பின் | கேட்கின் | சிலம்பு | 26—189 |
| மறப்பின் | மறந்தொழியின் | மணி | 1—20 |

**ஆ) —க்(க்)— ஒற்றுக்களுக்குப் பின்னர்**

| | | | |
|---|---|---|---|
| கழிக்கின் | கழிக்குமிடத்தே | ஐங் | 415—3 |
| கேட்கின் | கேட்டுவிடுவாளாயின் | ஐங் | 81—5 |

வல்வினைகளில் (ப்) ப் வருதலே பெரும்பான்மை — இந் நிலையை வேறு பல இலக்கணக் கூறுகளிலும் காணலாம்.

### 3.5.2 —இல்

சங்க இலக்கியங்களில் —இன் அதிகமாகக் காணப்படினும் சில இலக்கியங்களில் சில இடங்களில் —இல் வருதல் காண லாம். அகநானூறு (4) நற்றிணை (1), பரிபாடல் (1), கலித் தொகை (4), குறள் (௺) சிலப்பதிகாரம் (9), மணிமேகலை (21) ஆகிய நூல்களில் எல்லாம் இது வந்துள்ளது.[1] முன்பழந்தமிழ் இலக்கியங்கள் என்று கருதப்படுகின்ற பல இலக்கியங்களில்

---

1. அகம் 149-2, 160-9, 230-9, 280-10
   கலி 140-13, 14-22
   சிலம்பு 5-115, 6-200, 7-49-3, 16-152, 2௺.36
   26-15, 28, 179
   மணி 6-154, 7-5, 14-94, 29-344, 369, 445

இது காணப்படுவதில்லை. இந்நிலையில் இதனை ஒரு பின் பழந்தமிழ்க் கூறு எனக் கருத இடமுண்டு, (அகத்தியலிங்கம் 1983, 201-202) பின்பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் இது வந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது,

### 3.5.2.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் எவரும் இதற்குரிய எடுத்துக்காட்டுகள் தருவதில்லை.

### 3.5.2.2 சூழல்

இவ்வுருபும் - இன் உருபைப் போலவே உள்ளது. வல்வினையாயின் பகர அல்லது ககர ஒற்றுக்களை அடுத்து வரும் இந்நிலையில் இது —இன் உருபின் சூழலைக் கொண்டே அமையும். இவை இரண்டும் பதில்நிலை வழக்கில் உள்ளன இவ்வுருபு

1. வினை அடிகளுக்குப் பின்னரும்
2. வல்வினைகளுக்குப் பின்னர் வரும் -ப்(ப்) -ஒற்றுக் களுக்குப் பின்னரும் வரும்.

### 3.5.2.2 வினை அடிகளுக்குப் பின்னர்

| | | | |
|---|---|---|---|
| காணில் | ஆராயுமிடத்து | அகம் | 352-11 |
| ஆகில் | ஆதலால் | நற் | 350-9 |
| கன்றிடில் | மிகுவாயாயின் | பரி | 6-98 |
| அவைப்படில் | அவைப்படில் | கலி | 140-22 |

---

பரி. 20-42

கலி. 6-6, 62-18, 118-3

குறள் 333, 732

சிலம்பு 7-2-2, 3, 7-3-2, 3, 7-37-4, 11-71, 79, 107, 143, 19-11, 21-26, 24-15-3

மணி 3-24, 101, 6-24, 4-49, 21-84, 25-25, 42-226, 27-46, 142, 29-170, 177, 184, 219, 236, 30-238, 246, 284, 293, 309, 354, 392, 406, 416, 418 435, 453, 463, 467

| | | | |
|---|---|---|---|
| உணில் | உண்ண விரும்பினால் | குறள் | 922 |
| பெறில் | பெற்றால் | சிலம்பு | 21-27 |
| கூறில் | கூறுவானாயின் | மணி | 19-189 |
| தந்தருளில் | தந்தருள்வாயாயின் | மணி | 5-154 |

மேலே காட்டிய உதாரணங்களில் பரிபாடல், மணிமேகலை ஆகியவற்றில் துணைவினைகளுக்குப் பின்னர் இவ்வுருபு வருதல் கவனிக்கத்தக்கது.

### 3.5.2.2.2 -ப்(ப்)- ஒற்றுக்களுக்குப் பின்னர்

அகநானூற்றில் ஓரே ஒரு இடத்தில் மட்டுமே இதற்குரிய எடுத்துக்காட்டு காணப்படுகிறது,

இருப்பில் இருப்பில் (அகம். 280-10)

### 3.5.3 -ஆல்

இதுவும் பல முன்பழந்தமிழ் நூல்களில் வருவதில்லை இந்நிலையில் இதனையும் ஒரு பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம். பண்டைத் தமிழ் நூல்கள் அனைத்திலும ஐம்பத்து நான்கு இடங்களில் மட்டுமே இது வந்துள்ளது. ஐங்குறுநூறு (1), புறநானூறு (1), பரிபாடல் (2), கலித்தொகை (4) குறள்(3), சிலம்பு (13), மணிமேகலை (30) ஆகிய நூல்களில் மட்டுமே இது உள்ளது.[1] -இல் உருபினைப் போலவே இதுவும் எல்லாப் பின்பழந்தமிழ் நூல்களிலும் வரக் காணலாம். (அகத்திய லிங்கம் 1983: 202-203)

### 3.5.3.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்கள் நச்சினார்க்கினியரும், கல்லாடரும் மட்டுமே இதற்குரிய எடுத்துக்காட்டுக்களைத் தந்து செல்கின்றனர். நச்சினார்க்கினியர்

"அற்றால் அளவறிந் துண்க" சூத். 230

என்ற எடுத்துக்காட்டினையும், கல்லாடர்

"மழை பெய்தால் குளம் நிறையும்" சூத். 230

என்ற எடுத்துக்காட்டினையும் தந்து செல்வார்.

### 3.5.3.2 சூழல்

—இன், —இல் ஆகிய உருபுகளுக்கும், —ஆல் உருபுக்கும் இடையே முக்கியமான ஒரு வேறுபாட்டினைக் காணமுடியும். —இன், —இல் ஆகியவை வினையடிகளுக்குப் பின்னர் வர, —ஆல் உருபோ இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் வருதல் காணத்தக்கது.

இவ்வுருபு

1. இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர் வரும்

### 3.5.3.2.1 இறந்தகால இடைநிலைகளுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| என்றால் | கூறப்படுவதொன்றா யிருக்குமானால் | ஐங் 248-3 |
| கண்டால் | கண்டால் | புறம் 390-25 |
| அன்புற்றால் | காதல் கொண்டவிடத்து | பரி 12-53 |
| கேட்டால் | கேட்டால் | கலி 107-13 |
| கண்டால் | கண்டால் | குறள் 124 |
| கடந்தால் | கடந்து சென்றால் | சிலம்பு 11-79 |
| போனால் | சென்றால் | மணி 21-84 |

### 3 5.4 -ஏல்

இவ்வுருபு முன்பழந்தமிழ் இலக்கியங்கள் எதிலும் காணப் படுவதில்லை. பின்பழந்தமிழ் நூல்களாகிய கலித்தொகை (11), குறள் (13) சிலம்பு (8) மணிமேகலை (3) ஆகிய நூல்களில்

---

1. கலி 38-13, 17, 21, 60-21, 91-18, 93-33, 142-19, 144-43, 147-28, 50
   குறள் 18, 368, 386, 556, 573, 575, 976, 1014, 1075, 1118, 1144, 1151
   சிலம்பு 7-9-4, 7-10-4, 7-48,3. 14-57, 17-20-2, 17-21-2 19-13
   மணி 23-74, 76

மட்டுமே வந்துள்ளது. இந்நிலையில் இதனை ஒரு பின்பழந் தமிழ்க் கூறாகவே கருதலாம். (அகத்தியலிங்கம் 1983:203)

### 3.5.4.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியரும், கல்லாடரும் மட்டுமே இவ்வுருபுக்குரிய எடுத்துக்காட்டுக்களைத் தந்து சென்றுள்ளனர். நச்சினார்க்கினியர் (சூத். 230)

"அவா உண்டேல் உண்டாம்"

என்ற எடுத்துக்காட்டினையும், கல்லாடர் (சூத்.23.)

"மழை பெய்யுமேனும்"

என்ற எடுத்துக்காட்டினையும் தந்து செல்வர்.

### 3.5.4.2 சூழல்

—இன், —இல், —ஆல் ஆகிய உருபுகளுக்கும், —ஏல் உருபுக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாட்டினைக் காண்கிறோம். —இன், —இல் ஆகியவை வினையடிகளை அடுத்தும், —ஆல் இறந்தகால இடைநிலைகளை அடுத்தும் வர, —ஏல் உருபோ வினைமுற்றுக்களை அடுத்தே வரக் காணலாம். எனினும் ஆயின், எனின், எனில் ஆகியவற்றைப் போன்று —ஏல் தனித்து (தனிச்சொல்லாக) வருவதில்லை. ஆகவே இதுவும் ஒரு உருபாக இங்கு கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வுருபு

1. வினைமுற்றுக்களுக்குப் பின்னர் வரும்

#### 3.5.4.2.1 வினைமுற்றுக்களுக்குப் பின்னர்

| | | |
|---|---|---|
| துறப்பாயேல் | துறப்பாயாயின் | கலி 3-10 |
| வறக்குமேல் | பெய்யாதாயின் | குறள் 18 |
| ஒழிவனேல் | ஒழிவேனாயின் | சிலம்பு 19-13 |
| என்றியேல் | வினவுவாயாயின் | மணி 3-73 |

### 3.6 எதிர்மறை நிபந்தனை

தற்காலத் தமிழில்
வராவிட்டால்

வராமல் இருந்தால்
வராமல் போனால்

எனப் பல்வேறு வழிகளில் எதிர்மறை நிபந்தனைப் பொருள் உணர்த்தப்படுதல் காணலாம். எதிர்மறை வினையெச்சத் திற்குப் பின்னர் விடு, இரு, போ ஆகிய துணைவினைகளின் நிபந்தனை எச்சச் சொற்களை இணைத்துக் கூறுதல் ஒருவகை, மட்டுமன்றி எதிர்மறை முற்று வினைகளின் பின்னர், என்றால் என்ற சொல்லை இணைத்துக் கூறுதலும் காணலாம்.

அவன் வரவில்லை என்றால்

### 3.6.1 பழந்தமிழில் எதிர்மறை நிபந்தனை

பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்விரண்டு பண்புகளையும் காணமுடியும். எனினும் எதிர்மறை முற்று வினைகளுக்குப் பின்னர் ஆயின், எனின் ஆகிய நிபந்தனை எச்சங்களை இணைத்துக் கூறுவதே பெரும்பாலும் காணப்படுகிறது.

#### 3.6.1.1 எதிர்மறை முற்று நிபந்தனை உருபுகள்

இப்பண்பு பதிற்றுப்பத்து (2), ஐங்குறுநூறு (4), அகநானூறு (9). நற்றிணை (7), குறுந்தொகை (4), புறநானூறு (9), பத்துப்பாட்டு (1), கலித்தொகை (5), சிலம்பு (5), மணிமேகலை (5) ஆகிய நூல்களில் காணப்படுகிறது. பரிபாடல், குறள் ஆகிய இரண்டு நூல்களிலும் காணப்படாவிடினும் இதைத் தற்செயல் விடுப்பு எனவே கருதவேண்டும்.

''அறிந்தனை யருளா யாயின்
யாரிவணெடுந்தகை வாழு மோரே'' (பதி. 71-26)

''நேரிறைப் பணைத்தோள் ஞெகிழ
வாரா யாயின் வாழேந் தெய்யோ'' (ஐங். 239-4)

''மாலையும் உள்ளா ராயிற் காலை
யாங்கா குவங்கொல் பாண... ... ...'' (அகம். 14-12)

''... ... ... ... ... ... நெஞ்சம்
நீரடு நெருப்பில் தணிய இறைவர்
வாரா ராயினோ நன்றே... ... ...'' (நற். 154-8)

"எங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
படுபறி யலனே... ... ..." (புறம். 34-16)

"நகையென வுணரே னாயின்
என்னா குவைகொ னன்னுத னீயே" (குறு. 96-3)

"கெடுதியும் வீடீஇர் ஆயின் எம்மொடு
சொல்லரும் பழியோ மெல்லிய லீரென" (பத்து.8-144)

"பேணான், துறந்தானை நாடும் இடம்விடா யாயின்
பிறங்கிடு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலின் போக இறைப்பேன்......"
(கலி.144-45)

"அந்நெறிப் படரீ ராயின் இடையறு
செந்நெறி யாரும் தேம்பொழி லுடுத்த
ஊரிடை யிட்ட காடுபல கடந்தால்"
(சிலம்பு 11-141)

"இன்னுயி ரீவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்"
(மணி.2-44)

"ஆயின்" போன்றே "எனின்" என்ற நிபந்தனை வினை யெச்சமும் எதிர்மறைச் சொற்களுக்குப் பின்னர் வந்து நிபந்தனை காட்டி நிற்றல் உண்டு. ஆயின் என்ற சொல் பல இடங்களில் வர, எனின் என்ற சொல்லோ ஓரிரு இடங்களில் மட்டுமே எதிர்மறைச் சொற்களுடன் வருதல் காணத்தக்கது. மேலும் இது கலித்தொகை, சிலப்பதிகாரம் ஆகிய இரு நூல் களில் மட்டுமே வந்துள்ளது.

"என்னல்லல் தீரா யெனின்" (கலி 144 23)

"கடவு ளெழுதவோர் கல்தா ராரெனில்"
(சிலம்பு-25130)

**3.6.1.2 எதிர் மறை வினையெச்சம் + துணை வினை விடு' + நிபந்தனை எச்சம்**

முன்னர்க் குறிப்பிட்டபடி விடு என்ற துணைவினையினை இணைத்து எதிர்மறை நிபந்தனையைக் கூறும் பண்பும் பழந்-

தமிழ் இலக்கியத்தில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் கலித்தொகையிலும் குறளிலும் அதுவும் ஒரு ஒரு இடங்களில் மட்டுமே இத்தகைய ஆட்சியைக் காண முடிகிறது,

''...............செறுதக்காய்
தேறினேன் சென்றீநீ செல்லா விடுவாயேல்
நற்றா ரகலத்துக் கோர்சார மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கும்
முட்டுப்பா டாகலு முண்டு'' (கலி. 93-32)

என வருவதில்

செல்லா விடுவாயேல் (செல்வது ஒழிவை யாயின்) என வருதல் காணத்தக்கது. இதுபோன்றே குறளில்

''வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்'' (குறள். 238)

என வருவதும் குறிப்பிடத்தக்கது.

# 4

# நிபந்தனை (Concessive)

## 4.1 பழந்தமிழில் (Concessive)

பழந்தமிழில் (Concessive) என்ற இலக்கணக் கூறினையும் காணமுடியும். இவ்விலக்கணக் கூறுக்கும் நிபந்தனைக்கும் இடையே ஒற்றுமை பல உண்டு. ஒரு காரியம் அல்லது ஒரு செய்தி "நடந்தால்" எனக்கூறுவது நிபந்தனை எனக்கண்டோம் அச்செய்தி ,'நடந்தாலும்" எனக் கூறுவதே Concessive. இப் பொருள் நிபந்தனை காட்டும் சொற்களுக்குப் பின்னர் உம் என்ற இடைச்சொல்லை இணைத்துக் கூறுவதைப் பண்டைத் தமிழில் காணலாம். பண்டைத் தமிழில் பொதுவாக செய்யின் என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின்னரே உம் உரு பினை இணைத்துக் கூறும் பண்பு காணப்படுகிறது.

ஆயின், எனின் போன்ற சொற்களுக்குப் பின்னரும் உம் இணைத்துக் கூறுதல் காணலாம்.

> "மாரி பொய்க்குவ தாயினும்
> சேர லாதன் பொய்யல னசையே" (பதி. 18-11)
>
> "பகலே யினிதுடன் கழிப்பி யிரவே
> செல்வ ராயினும் நன்று ... ... ..." (அகம். 228-6)
>
> "... ... ... ... ... ... ... ...இவணம்
> பசலை மாய்தல் எளிதுமற் றில்ல

''சென்ற தேஎத்துச் செய்வினை முற்றி
மறுதரல் உள்ளத்தர் எனினும்
குறுகுபெரு நசையொடு தூ துவரப் பெறினே''
(அகம் 333-18)

நிபந்தனைப் பொருளைக் குறிக்கும் ஆயின், எனின் ஆகிய சொற்களுக்கும், Concessive—ஐக் குறிக்கும் ஆயினும், எனினும் ஆகிய சொற்களுக்கும் இடையில் முக்கியமானதொரு வேற்றுமை உண்டு. நிபந்தனைப் பொருளில் வினைமுற்றுகளின் கால இடைநிலைகள் இறந்தகாலத்தில் இருப்பினும், இறப்பின் காலத்தில் இருப்பினும் இறப்பில் காலத்தையே சுட்டி வரும்.

துறந்தனன் ஆயின் பிரிந்து விடுவானாயின்
ஐங். 108-3

மொழியுமாயின் கூறுவானாயின் ஐங் 245-3

Concessive-இல் வினைமுற்றுக்கள் இறந்தகால இடைநிலைகளை கொண்டிருப்பின் இறந்தகாலத்தையும் இறப்பில் கால இடைநிலைகளைக் கொண்டிருப்பின் இறப்பில் காலத்தையும் சுட்டி நிற்கக் காணலாம்.

வந்தனமாயினும் வந்துவிட்டோமாயினும். ஐங். 330-2
படர்குவன் ஆயினும் வருவான் ஆயினும். அகம் 153-3

## 4.2 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியத்திலும் இத்தகைய நிலையினைக் காண முடியும். ஆயினும் எனினும் ஆகிய சொற்களும் இப்பொருளில் வரக் காணலாம்.

''கைப்பட்டுக் கலங்கினும், நாணுமிக வரினும்
இட்டுப்பிரி விரங்கினும், அருமைசெய் தயர்ப்பினும்''
(தொல். 1057-5)

''... ... ... ... ... ... ... ... ... ... ...
சொல்லிய புள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்''
(தொல் 100-1)

''எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்''
(தொல் 518-1)

### 4.3 உரையாசிரியர்கள்

நச்சினார்க்கினியர் செயின் வாய்ப்பாட்டு வினையெச்சத்தைக் குறிப்பிடும்போது "அவன் எள்ளுமேனும் வரும்" எனவும் கல்லாடனார்

"மழை பெய்யுமேலும், மழை பெய்யுமேனும்" (சூத் 230) —என் ஆகியவற்றோடு உம் இணைத்துக் கூறியபோதிலும் பழந்தமிழ் இலக்கியங்களில் இத்தகைய நிலை காணப்படுவதில்லை. மேலும், செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சமே மிகப் பெருவாரியாக வருவதும், பிற வினையெச்சங்கள் மிகக் முறைவாக வருவதும் இங்தக் குறிப்பிடத்தக்கன

### 4.4 சூழல்

முன்னர்க் குறிப்பிட்டபடி பழந்தமிழ் நூல்களில் பண்பினைக் காட்டும் உம் நிபந்தனை காட்டும் எச்சத்திற்குப் பின்னர் வரக் காண்கிறோம்.

#### 4,4,1. நிபந்தனை காட்டும் -இன் எச்சத்திற்குப் பின்னர்

இப்பண்பினைப் பதிற்றுப்பத்து (7), ஐங்குறுநூறு (11), அகநானூறு (41), நற்றிணை (27), குறுந்தொகை (23), புறநானூறு (51), பத்துப்பாட்டு (23), பரிபாடல் (37), கலித்தொகை (32), குறள் (39), சிலம்பு (16), மணிமேகலை (12), ஆகிய எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் காணலாம்.

| | | |
|---|---|---|
| வளையினும் | வளைந்து நீளுமாயினும் | பதி 53-13 |
| நினைப்பினும் | நினைந்து பார்க்கினும் | ஐங் 374-1 |
| அகலினும் | பிரிந்திடினும் | அகம் 119- |
| செய்யினும் | செய்தாயெனினும் | நற் 247-6 |
| உள்ளினும் | உள்ளினாலும் | குறு 103-2 |
| தோற்பினும் | தோற்பினும் | புறம் 45-5 |
| ஏகினும் | போகினும் | பத்து 9-2 |
| தொடினும் | தொட்டு மொழியினும் | பரி 8-68 |
| சொல்லினும் | சொல்லிக் காட்டினும் | கலி 58-16 |
| கரப்பினும் | மறைத்தாயாயினும் | குறள் 1271 |
| கழியினும் | சென்றாலும் | சில 13-134 |
| செய்யினும் | செய்தாலும் | மணி 22-117 |

**4.5 எதிர்மறை**

பண்டைத் தமிழில் எதிர்மறை வினை முற்றுடன் ஆயின், எனின் போன்ற சொற்களை இணைத்து எதிர்மறை நிபந்தனைப் பொருள் காட்டப்படுவதை முன்னரே கண்டோம். இதைப் போன்றே Concessive இலக்கணக் கூறிலும் எதிர் மறை நிபந்தனையைக் குறிக்க எதிர்மறை வினை முற்றுக் களுடன் ஆயினும், எனினும் ஆகிய சொற்களை இணைத்துக் கூறுவதைக் காணலாம். இவ்வகை எதிர்மறைச் சொற்கள், பதிற்றுப்பத்து (2), ஐங்குறுநூறு (3), அகநானூறு (11), நற்றிணை (8), குறுந்தொகை, புறநானூறு (13), பத்துப் பாட்டு(1), கலித்தொகை, சிலம்பு (3), மணிமேகலை (5) ஆகிய நூல்களில் எல்லாம் வரக் காண்கிறோம். பரிபாடல், குறள் ஆகிய இரு இலக்கியங்களிலும் இவை காணப்படாவிடினும் இதனையும் தற்செயல் விடுப்பு எனவே கருதலாம்.

| | | | |
|---|---|---|---|
| வாராராயினும் | வாராதொழியினும் | பதி | 55—10 |
| உணராராயினும் | உணராராயினும் | ஐங் | 472—3 |
| அமையாராயினும் | தங்கியிராராயினும் | அகம் | 37—1 |
| முடியாதாயினும் | முற்றுப்பெறாதாயினும் | நற் | 208—10 |
| நயவாராயினும் | விரும்பாராயினும் | குறு | 60—5 |
| பெய்யாதாயினும் | பெய்யாதொழியினும் | புறம் | 105—4 |
| வாராராயினும் | வாராதொழியினும் | பத்து | 8—23 |
| தீர்க்கலாராயினும் | தீர்க்க மாட்டாராயினும் | கலி | 140—17 |
| உரையீராயினும் | கூறீராயினும் | சிலம்பு | 11-124 |
| ஒவ்வேனாயினும் | பொருந்தேனாயினும் | மணி | 5—43 |

எனினும் என்ற சொல் புறநானூறில் மட்டும் ஒரு இடத்தில் எதிர்மறை வினைமுற்றுடன் இணைந்து வருதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

நோவாய் என்னினும் வெறாய் என்னினும் புறம் 43—61

# 5

# கூட்டுக்காலவெச்சங்கள்

## 5.1 தொல்காப்பியமும் கூட்டுக் காலவெச்சங்களும்

வினையெச்சங்கள் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர்

''செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி'' (சூத் 713)

''பின் முன் கால் கடை வழி இடத்து என்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே'' (சூத் 714)

என்ற இரு சூத்திரங்களில் இவற்றின் வாய்பாடுகள் பற்றிப் பேசுவார் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. பொதுவாக இவ்வினையெச்ச வாய்பாடுகளை இரண்டு பெரும் பிரிவுகளுள் அடக்கலாம். செய்து, செய்பு, செய்யூ போன்றவை ஒரு பிரிவிலும், செய்தபின், செய்யுமுன், செய்தக்கால் போன்றவை மற்றொரு பிரிவிலும் அடங்கும். செய்து, செய்பு போன்றவை ஒரே சொற்கள். செய்தபின், செய்யுமுன் போன்றவற்றில் இரு சொற்களைக் காணுகிறோம். பெயரெச்சங்களை அடுத்து பின், முன், கால், கடை போன்றவை வர அவை ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று வினையெச்ச இயல்பினதாய் வரும் என்பது முன்னரே கூறப்பட்டது. (சங்கத்தமிழ், வினையெச்சம் (1) மேலும் இத்தகைய வினை

யெச்சங்கள் கூட்டு வினையெச்சங்கள் எனக் கருதப்படுகின்றன. (செ. வை. சண்முகம் ), இரு சொற்கள் ஒரு சொல் நீர்மைத்தாய்க் கலந்து வினையெச்சங்களாகப் பயன்படுகின்ற நிலையிலேயே இவை கூட்டு வினையெச்சங்கள் எனப்படுகின்றன என எண்ணலாம்.

## 5.2 செய்தென எச்சம்

இந்நிலையில் முதற் சூத்திரத்தில் கூறப்படும் செய்தென் வாய்பாட்டு வினையெச்சமும் கூட்டு வினையெச்சமா என்பது ஆராயற்பாலது. இது செய்து, செய்பு, செய்யூ போன்றவற்றைப் போலன்றி இரு சொற்களால் ஆனதா என்பது நோக்கத்தக்கது. இதனையும்

செய்து + என்

எனப் பிரித்துக் காண்பது முறையாகுமா என்பதும் எண்ணுதற்குரியது. இச்சூத்திரத்தில் குறிப்பிடப்பட்ட செயற்கு என்பது வினையெச்சமா அல்லது நான்கன் உருபேற்று நின்ற தொழிற்பெயரா என்ற வினா சேனாவரையர் முதல் இன்றைய இலக்கண ஆசிரியர்கள் வரை எழுப்பி நிற்கின்ற ஒரு வினாவாகும். (இது பற்றிப் பின்னர் கூறப்படும்). ஆனால் செய்தென என்பது பற்றி அதிகமாக ஐயம் இருப்பதாகத் தெரியவில்லை. தொல்காபபிய உரையாசிரியர்கள் எவரும் இவ்வினாவை எழுப்பியதாகக் கூற முடியவில்லை, இது பற்றிப் பேசும் சேனாவரையர்

> "எனவென்பது கடதற ஊர்ந்து இறந்தகாலம் பற்றி
> முடிக்குஞ் சொல்லா னுணர்த்தப்படுந் தொழிற்குத்
> தன் முதனிலைத் தொழில் காரணமென்பது பட வரும்"

எனக் கூறி செல்லுகின்றாரேயன்றி இதன் ஆக்கம் பற்றி எதுவும் கூறுவதில்லை. செய்தென என்பதில் என என்பதே வினையெச்சம் காட்டும் உருபாகக் கருதுகிறார் என வேண்டுமானால் எண்ணலாம். ஆனால் இது செய்து + என இரு சொற்களைக் கொண்டு ஆனதா என அவர் எண்ணுகிறாரா என்பது அறிய முடியாததாகும். இதே நிலையினைத்தான் பிற உரையாசிரியர்களிடமும் காணுகிறோம். அவர்களும்

இது காட்டும் பொருள், இது ஏற்கும் எழுவாய், இது காட்டும் காலம் ஆகியவற்றைப் பற்றி குறிப்பிடுகின்றனரே அன்றி இதனுடைய ஆக்கத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

எனினும் முன்னர்க் குறிப்பிட்டது போன்று இது செய்து என ஆகிய இரு சொற்களால் ஆனது எனக் கருதுவதில் தவறு எதுவுமில்லை. செய்தபின், செய்யும்முன் போன்றவற்றைப் போல இதுவும் ஒரு சொல் நீர்மைத்தாய், பிரிக்க முடியாதபடி நின்று கூட்டுவினையெச்சமாக வருகிறது எனக் கருதலாம்.

அவ்வாறாயின், தொல்காப்பியர் இதனையும் ''பின் முன்... ... ...'' என்ற சூத்திரத்தில் அடக்கியிருக்கலாமே என்ற வினாவும் நம் மனதில் எழாமல் இல்லை. அங்குக் கூறுபவை அனைத்தும் பெயரெச்சத்தை அடிப்படையாகக் கொண்டவை (செய்தபின், செய்யும்முன் போன்று) என்பதும், இது வினையெச்சத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதும் உணரத் தக்கன. மேலும், பின், முன், கால், கடை போன்றவை பெயராகவோ அல்லது இடைச்சொல்லாகவோ கருதப்பட வேண்டியவை, இதுபற்றிப் பேசும் கல்லாடனார் இவற்றைப் பெயர் என்றே கூறுவார். (சூத். 231) ஆனால் செய்தென என்பதில் வரும் என என்பது குறையெச்சமாகவோ அல்லது இடைச்சொல்லாகவோ கருதப்படுவது. இந்நிலையிலும் இது வேறுபட்டு நிற்கக் காணலாம். இதனால்தான் போலும் தொல்காப்பியர் பின் சூத்திரத்தில் இதனைக் கூறாது முன் சூத்திரத்தில் இதனைக் குறிப்பிட்டார் எனக் கருதலாம்.

### 5.2.1 தொல்காப்பியப் பயிற்சி

தொல்காப்பியர் இவ்வினையெச்சம் பற்றிக் குறிப்பிடினும் அவர்தம் நூலில் இது காணப்படவில்லை. ஒரு மொழிக்கு இலக்கணம் வகுக்கும்போது அம்மொழியில் காணப்படும் இலக்கணக்கூறுகள் அனைத்தையும் கூறவேண்டியது அவசியமே. ஆனால் எழுதப்படும் இலக்கண நூலில் எல்லா இலக்கணக் கூறுகளும் வரவேண்டும் என்ற கட்டாயமில்லை, என்பது மீண்டும் நினைவு கூறத்தக்கது.

### 5.2.2 உரையாசிரியர்கள்

இளம்பூரணர் இவ்வெச்சம் பற்றிக் குறிப்பாக எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் சேனாவரையரோ முன்னர்க் குறிப்பிட்டபடி இது இறந்தகாலம் பற்றியும், கொண்டுமுடியும் வினைச்சொல்லால் உணர்த்தப்படும் தொழிலுக்குக் காரண மாகி வருமென்றும் குறிப்பிடுவார். இவரைப் பின்பற்றியே நச்சினார்க்கினியரும்

> "என என்பது க், ட், த், ற் ஊர்ந்து இறந்தகாலம் பற்றி முடிக்கும் சொல்லால் உணரப்படுந் தொழிற்குத் தன் முதல் நிலைத் தொழில் காரணமாய விரைவுப்பொருள் உணர்த்தும்"

எனக் கூறுவார். தெய்வச்சிலையார்

> "செய்தென என்பது இறந்தகாலப் பொருட்டாயினும் விரைவு குறித்தலானும் திரிந்து முடிதலானும் பொருள் வேறுபாடுடைத்தாதலானும் வேறு ஓதப்பட்டது"

என்று கூறுவார்.

கல்லாடனார்

> "செய்தென என்பது அவற்றிற்கு எல்லாம் சிறுவழக்கிற்று ஆதலானும், பிறவினையும் கோடலானும் பின்வைக்கப்பட்டது" என்று கூறுவார்.

எனவே உரையாசிரியர்கள் கருத்துப்படி இவ்வெச்சம்

1. இறந்தகாலம் பற்றி வரும் என்பதும்
2. காரணப்பொருள் உணர்த்தும் என்பதும்
3. அதோடு விரைவையும் காட்டி நிற்கும் என்பதும்
4. சிறுவரவிற்றென்பதும்
5. திரிந்து முடியுமென்பதும்

புலனாகும்.

இதற்கு எடுத்துக்காட்டுக்கள் தர வந்த இளம்பூரணர் (227)

மழை பெய்தென வளம் பெற்றது.

மழை பெய்தென வுலகமர்ந்தது
மழை பெய்தென மரங்குழைத்தது

ஆகியவற்றையும், சேனாவரையர் (228, 232)

சோலைபுக்கென வெப்பநீங்கிற்று
உண்டெனப் பசிகெட்டது
உணர்த்தென உணர்ந்தான்
மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று
எஞ்சியென, உரிஞியென
மழை பெய்தெனப் புகழ் பெற்றது
மழை பெய்தென மரங்குழைத்தது

ஆகியவற்றையும், நச்சினார்க்கினியர் (230)

சோலை புக்கென வெப்ப நீங்கிற்று
உண்டெனப் பசி கெட்டது
உரைத்தென உணர்ந்தான்
மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று
எஞ்சியென உரிஞியென
மழை பெய்தென மரங் குழைத்தது

ஆகியவற்றையும், கல்லாடனார் (230, 234)

உழுதென உண்டென, தின்றென
புக்கென, ஓட்டென
மழை பெய்தென வளம் பெற்றது
மழை பெய்தென உலகமார்ந்தது

ஆகியவற்றையும் தந்து செல்வர். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் எஞ்சியென, உரிஞியென ஆகிய எடுத்துக்காட்டுகளைத் தந்து "எஞ்சியென எனவும், உரிஞியென எனவும் ஏனை எழுத்தோடும் வருமாறறிந் தொட்டிக்கொள்க" (சேனா.) எனவும் "எஞ்சியென எனவும், உரிஞியென எனவும் ஏனை எழுத்தோடும் ஒட்டுக" (நச்) எனவும் கூறிச் செல்வர். ஆயினும் இத்தகைய எடுத்துக்காட்டுகள் எதுவும் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படாமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் தரும் உதாரணங்கள் சில மிகப்பொருத்தமாக உள்ளன. காரணப்பொருளையும், அதோடு விரைவுப் பொருளையும் தருவனவாக அவை அமைகின்றன.

எடுத்துக்காட்டாக, நச்சினார்க்கினியர் தரும்

சோலை புக்கென வெப்பு நீங்கிற்று

என்பது சோலையில் புகுந்த உடனேயே அதன் காரணமாக வெப்பம் நீங்கிற்று எனப். பொருள்படுமாறு கருதலாம். பொதுவாக இலக்கியங்களில் வரும் இவ்வாய்பாட்டுக் கால வெச்சத்திற்குக் காரணத்தையும், விரைவையும் இணைத்துப் பொருள் எழுதாவிடினும் இவை இருப்பதாகக் கருதலாம். பல இடங்களில் காரணத்தையும, சில இடங்களில் விரைவையும் உணர்த்திப் பொருள் எழுதுவர் உரையாசிரியர்கள்.

''சோலை புகுந்ததால் வெப்பம் நீங்கிற்று''

என்பதற்கும்

''சோலை புக்கென வெப்பம் நீங்கிற்று''

என்பதற்கும் இடையில் வேறுபாடு உண்டு. புக்கென என்பதில் விரைவும் காரணமும் இருப்பதாகக் கருதலாம்.

விரைவையும், காரணத்தையும் ஒருசேரக் கூறுதல் சிறிது கடினமே.

''சோலையில் புகுந்தவுடன் அதனால் வெப்பம் நீங்கிற்று''

எனக் கூறலாமே யன்றி வேறு வழியில் கூறுவது சிறிது கடினமே. இன்றைய தமிழிலும்

அவன் வந்ததால் சென்றேன்

என்பது காரணப்பொருளையும்

அவன் வந்தவுடன் நான் சென்றேன்

என்பது விரைவுப்பொருளையும் உணர்த்தி நிற்கின்றன,

இன்றைய தமிழில்

"சோலை புக்கென வெப்பு நீங்கிற்று"

என்பன போன்றவற்றைக் காணமுடியாது. ஆனால்

தண்ணீர் குடித்தவுடன் தாகம் நீங்கிற்று

போன்றவை காரணப்பொருளையும், விரைவுப்பொருளையும் காட்டுவதாகக் கருதலாம். ஆனால்

அவன் வந்தவுடன் கண்ணன் சென்றான்

என்பது விரைவுப்பொருள்ளைக் கட்டாயமாக உணர்த்த, காரணப்பொருளை அவ்வாறு உணர்த்தவில்லை என எண்ணலாம். கண்ணன் செல்லுவதற்குக் காரணம் அவன் வரவுதான் என்பதை இது திட்டமாகக் கூறவில்லை.

இவ்வினையெச்சத்தின் வரவு பற்றிப் பேசும் கல்லாடனார் இது சிறு வழக்கிற்றாகலானும், பிறவினை கோடலானும் எனக் குறிப்பிடுவார். ஆனால் சங்க இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின் செய்யூ வாய்பாட்டு வினையெச்சமே மிகக் குறைவாக வந்துள்ளது எனக் கருதலாம். இதனைக் கீழ்வரும் பட்டியல் நன்கு காட்டும்

| | செய்பு | செய்யூ | செய்தென |
|---|---|---|---|
| பதி | 39 | 9 | 3 |
| ஐங் | 9 | 3 | 35 |
| அகம் | 115 | 13 | 37 |
| நற் | 53 | 4 | 29 |
| குறு | 32 | 1 | 14 |
| புறம் | 26 | 7 | 16 |
| பத்து | 63 | 15 | — |
| பரி | 52 | 5 | — |
| கலி | 123 | 2 | 3 |
| குறள் | — | — | — |
| சிலம்பு | 7 | 2 | 4 |
| மணி | 8 | 2 | — |

இந்நிலையில் இவ்வாய்பாட்டு வினையெச்சம் சிறுவழக்கிற்று எனக் கருத முடியவில்லை.

### 5.2.3 பழந்தமிழில் செய்தென எச்சம்

பொதுவாக, இவ்வெச்சம் முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாகவும், பின்பழந்தமிழ் நூல்களில் குறைவாகவும் வந்துள்ளமையும் இங்குக் கருதத்தக்கது. ஐங்குறுநூறு (35), அகநானூறு (37), நற்றிணை (29), குறுந்தொகை (14), புறநானூறு (16) ஆகியவற்றில் அதிகமாக வந்துள்ளமை காணத்தக்கது.

இவ்வினையெச்சம் முன்னர்க் குறிப்பிட்டபடி பதிற்றுப் பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, கலித்தொகை, சிலம்பு ஆகிய நூல்களில் காணப் படுகின்றது.

| | | |
|---|---|---|
| சொரிந்தென | பெய்ததாக | பதி 76-10 |
| பாய்ந்தென | பாய்ந்ததாக | ஐங் 53-2 |
| வந்தென | வந்தனனர்க | அகம் 76-2 |
| பட்டென | பட்டதாக | நற் 14-8 |
| வீழ்ந்தென | வீழ்ந்ததாக | குறு 151-2 |
| பாய்ந்தென | பாய்ந்தனவாக | புறம் 63-9 |
| மறைத்தென | மறைத்ததாக | கலி 70-2 |
| இறுத்தென | வந்ததாக | சிலம்பு 4-20 |

### 5.2.4 பொருள்

பொதுவாக, வினையெச்சங்கள் பலவேறு பொருள்களில் வரும் என்பது பற்றி முன்னர்க் கண்டோம். இவ்வாய்பாட்டு வினையெச்சமோ காரணப்பொருளில் மட்டுமே அதிலும் அப் பொருளில் விரைவு உணர்த்தி வரக் காணுகிறோம். இதனால் தான் உரையாசிரியர்கள் (நச்) காரணமாய விரைவுப்பொருள் எனக் கூறுகின்றனர். இதனால்தான் போலும் 'வந்தென' போன்றவை 'வந்தவுடன்' என விரைவு காட்டும் நிலையில் பொருள் எழுதப்படுகின்றன. நற்றிணையில் 'சினந்தென' (300-1) என்பதற்குச் சினங்கொண்டவுடன் எனப்பொருள் எழுதுதல் குறிப்பிடத்தக்கது. இதுபோன்றே

"தண்ணந் துறைவன் வந்தெனப்
பொன்னினுஞ் சிவந்தன்று கண்டிசி னுதலே"
(ஐங் 105-3)

என்ற அடிகளுக்கு "நின்மகள் நெற்றி பசலை தீர்ந்து குளிர்ந்த அழகிய துறையினையுடைய தலைவன் மகட்பேசி வந்தனன் என்று உணர்ந்த அளவிலேயே பொன்னினும் காட்டின் சிவந்து ஒளிவீசா நிற்றலைக் கண்டருள்க" எனவும், முன்னர் (து-ம்) "அவன் வந்தவுடனேயே தலைவியின் நெற்றி பசலை தீர்ந்து ஒளிவிடலாயிற்று" எனவும் எழுதுதல் இப்பண்பினைக் காட்டும்.

செய்து போன்ற வினையெச்சங்களும் காரணப்பொருளில் வரும் என்று முன்னரே கண்டோம். அவையும் காரணப் பொருள் காட்டுமாயினும் விரைவுப்பொருளை அதனோடு காட்டுவதில்லை, இதனால்தான் இவ்வினையெச்சத்திற்குப் பொருள் எழுதுகின்றபோது "பாய்ந்ததாக" (ஐங்.53-2), "வந்த னன் என்று உணர்ந்த அளவில்" (ஐங். 105-3), "பிரிந்த மாத் திரையே" (ஐங். 133-2, 219-3) "பிரிந்தபொழுதே" (ஐங். 140-2, 192-3), "சினங் கொண்டவுடன்" (நற். 300-1) என் றெல்லாம் பொருள் எழுதுதல் குறிப்பிடத்தக்கது.

"... ... ... கால்கொண்டு
கருவி வானந் தண்டளி சொரிந்தெனப்
பல்விதை யுழவிற் சில்லே ராளர்
பனித்துறை - பகன்றைப் பாங்குடைத் தெரியல்
கழுவுறு கலிங்கங் கடுப்பச் சூடி
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பி னாடுகிழ வோயே" (பதி.76-9)

என வரும் பதிற்றுப்பத்து அடிகளில் காணப்படும் சொரிந் தென என்னும் காலவெச்சம் இப்பொருளில் வந்துள்ளது. இதற்கு உரை எழுதும் ஆசிரியர் (உ. வே. சா. பதிப்பு) "மேகம் குளிர்ந்த துளியைச் சொரிந்ததாக, அதனால்" எனப் பொருள் எழுதுதலும் உளவை.-சு. து. "மழைமேகம் ... ... மழை பெய்

ததாக ... ... ஏர்களை உடைய உழவர் குளிர்ந்த நீர்த்துறை யிடத்தே மலர்ந்துள்ள பகன்றைப் பூவாற்றொடுத்த அழகு டைய மாலையை வெளுக்கப்பட்ட வெள்ளாடை போலத் தலையிற் சூடிக்கொண்டு உழும் படைச்சாலிடத்தே விளங்கு கின்ற கதிர்களையுடைய அழகிய மணிகளைப் பெறுகின்ற அகன்ற இடமுடைய ஊர்கள் பொருந்திய நாட்டுக்கு உரி யோனே'' என உரை எழுதுதலும் காண்க.

இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

''மெல்லம் புலம்பன் வந்தென
நல்லன வாயின தோழியென் கண்ணே'' (ஐங்.189-3)

என வரும் அடிகளிலும் வந்தென என்னும் எச்சம் நல்லன வாயின என்னும் வினைமுற்றில் காரணப்பொருட்டாய் வந் துள்ளமையைக் காணுகிறோம். ''நெய்தனிலத் தலைவன் நமக்களி செய்தற் பொருட்டு வரைவொடு வந்தனனாகலின் என்னுடைய கண்கள் அவன் வருகை கண்டு களிப்புற்றுப் புத்தெழில் படைத்தன காண்'' என உரையாசிரியர் பொருள் எழுதிச் செல்லுவார்.

இதுபோன்றே அகநானூற்றில்

''பரிவொடு வருஉம் பாணன் தெருவில்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதந் தோனே ... ...'' (அகம். 56-10)

(அவாவுடன் வந்த பாணன் தெருவில் ஈன்ற அணிமையுடைய தோர் ஆ தன்னைப் பாய்ந்தமையாற் கலக்கமுற்று யாழினைக் கீழே போகட்டு எம்மில்லின்கண் புகுந்தான்) எனவும், நற்றிணையில்

''அறிவும் உள்ளமு மவர்வயிற் சென்றென
வறிதால் இகுளையென் யாக்கை......'' (நற். 64-8)

(என் அறிவும் உளமும் அவரிடத்துச் சென்றொழிந்தனவா தலின் இகுளாய்! என் உடம்பு உள்ளில் யாதும் இல்லையாய் நின்றது காண்:) எனவும், குறுந்தொகையில்

"பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின்........." (குறு. 261-1)

(பழைய மழை பெய்ததாகச் செவ்வியழிந்து உள்ளுருகிப்போன குருட்டுக்காயையுடைய எட் செடிகளையுடைய) எனவும், புறநானூற்றில்

"களிறுபடிந் துண்டெனக் கலங்கிய துறையும்"
(புறம். 23-2)

(யானை படிந்து நீருண்டதாகக் கலக்கமுற்ற துறையையும்) எனவும், கலித்தொகையில்

"அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை"
(கலி. 70-2)

(தனது அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரையிலை மறைத்ததாக அதனைக் காணாமற் கதுமெனக் கலங்கி அந்த அறியாமையையுடைய பெடை) எனவும், சிலம்பில்

"மல்லல் மூதூர் மாலைவந் திறுத்தென
... ... ... ... ... ... ... ... — ... ... ...
அந்திவா னத்து வெண்பிறை தோன்றி'
(சிலம்பு. 4-20)

(வளம் பொருந்திய முதூரின்கண்ணே மாலைப்பொழுது வந்து விட்டதாக அந்திப்பொழுதிலே செவ்வானத்தின்கண் வெள்ளிய பிறை தோன்றி) எனவும் பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்வெச்சம் காரணப் பொருள் காட்டி வருதலைக் காணுகிறோம்.

### 5.2.5 எழுவாய்

காலவெச்சங்களையும் அவற்றின் எழுவாயையும் பற்றிப் பேசும் தொல்காப்பியம் செய்து, செய்யூ, செய்பு ஆகிய மூன்று வினையெச்சங்களும் அவை கொண்டு முடியும் வினைகளும் ஒரே எழுவாயைக் கொண்டு வரும் என்றும், பிற வினையெச்சங்கள் ஒரே எழுவாயையோ அல்லது இரு எழுவாய்களையோ

கொண்டு நிற்கும் என்றும் குறிப்பிட்டுப் போந்தமை பற்றி முன்னர்க் கண்டோம். இந்நிலையில் செய்தென என்னும் வினையெச்சமும் ஒரு எழுவாயையோ அல்லது இரு எழுவாய் களையோ கொண்டு முடியும் என்பது தொல்காப்பியர் கருத்து. இந்நிலையில்தான் உரையாசிரியர்கள்

''மழை பெய்தென வளம்பெற்றது''
''மழை பெய்தென வுலகமார்ந்தது, மரங் குழைத்தது''
''மழை பெய்தெனப் புகழ்பெற்றது''

போன்றவற்றைத் தந்து செல்வர். எல்லா உரையாசிரியர் களுமே இவ்வெச்சம் ஒரே எழுவாயையும் இரு வேறு எழுவாய் களையும் கொண்டு நிற்கும் எடுத்துக் காட்டுக்களைத் தந்துள்ள னர். தொல்காப்பியர் கருத்துப்படி இவ்வெச்சம் இந் நிலையிலேயே வரும் என்பது மீண்டும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

ஆனால் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் நோக் கின் இது இரு எழுவாய்களை மட்டுமே கொண்டு வந்துள்ளமை புலனாகும். பொதுவாகக் கால எச்சங்கள் காரணப்பொருளைக் காட்டும்போது பெருவாரியாக இரு எழுவாய்களையே எடுத்து வரும் என்பது முன்னரே கண்டோம். ஆனால் பிற வாய் பாட்டுக் காலவெச்சங்கள் காரணப்பொருளில் வரும்போது மிகப் பெருவாரியான இடங்களில் இரு வேறு எழுவாய்களையே எடுத்து வரினும் ஒருசில இடங்களில் ஒரே எழுவாயையும் கொண்டு வந்திருத்தல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் செய்தென் காலவெச்சமோ இருவேறு எழுவாய்களையே கொண்டிருத்தல் ஒரு சிறப்புப் பண்பாகும்.

மேலும் இவ்வெச்சம் காரணப்பொருளில் மட்டுமே (விரைவு குறித்து) வருவதும் நினைவுகூரத்தக்கது. பிற கால வெச்சங்கள் பிற பொருள்களோடு காரணப்பொருளையும் காட்டி நிற்கும். இதனால்தான் போலும் பல்வேறு உரை யாசிரியர்கள் அவ்வெச்சங்கள் காரணப்பொருளில் வரும்போது

அவற்றைச் செயவென்னும் வாய்பாட்டு எச்சமாகத் திரிக்க எனக் கூறிப் போந்தனர் போலும்.

பதிற்றுப்பத்தில்

> "வழங்குந ரற்றென மருங்குகெடத் தூர்ந்து
> பெருங்கவி னழிந்த வாற்ற —" (பதி. 23-12)

என வரும் அடிகளில் காணப்படும் அற்றென என்னும் எச்சமும் அது கொண்டு முடியும் தூர்ந்து என்னும் வினையும் முறையே வழங்குநர், ஆறு என்னும் பெயர்களை எழுவாய்களாக எடுத்து வருதல் காண்க.

இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

> "சிறையழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
> கழனித் தாமரை மலரும்
> பழன வூர" (ஐங். 52-2)

என வரும் அடிகளில் காணப்படும் பாய்ந்தென என்னும் காலவெச்சமும், அது கொண்டுமுடியும் கலங்கி என்னும் வினையும் முறையே புதுப்புனல, தாமரை என்ற இருவேறு எழுவாய்களை எடுத்து வருதல் காணத்தக்கது. இதற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் 'அணையை உடைத்துப் பாயும் புதிய நீர் பாய்ந்த அளவிலேயே கழனியிலுள்ள தாமரை மலர்கள் முதலிற் கலங்கிப் பின்னர் மலருதற்கு இடனானதும், பொது நிலங்களையுடையதுமாகிய ஊரையுடையோய்!" என எழுதுதல் காண்க.

உரையாசிரியர் பாய்ந்தென என்பதற்கு "பாய்ந்த அளவிலேயே" எனப் பொருள் எழுதுவது உணர்தற்குரிய ஒன்றாகும். விரைவுப் பொருளை உணர்த்த வேண்டிய நிலையிலேயே இவர் பாய்ந்த அளவிலேயே எனப்பொருள் எழுதுகிறார் எனக் காணலாம்.

அகநானூற்றில்

> "ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
> ஒளிறேந்து மருப்பின் களிறட்டுக் குழூஉம்
> பனியிருஞ் சோலை ... ... ... ... ..." (அகம் 112-5)

(குட்டியை ஈன்ற அண்மையின்னையுடைய வேட்கையையுடைய பெண்புலி பசித்ததாக, தறுகண்மையையுடைய ஆண்புலி ஒளி வீசுகின்ற ஏந்திய கோட்டினையுடைய ஆண் யானையைக் கொன்று முழங்குகின்ற குளிர்ந்த கரிய (சாலையில்) எனவும், நற்றிணையில்

''இல்லெழு வயலை ஈற்றா தின்றெனப்
பந்துநிலத்து எறிந்து பாவை நீக்கி
அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்''
(நற். 179-1)

(மனையகத்து முளைத்துப் படர்ந்த வயலைக்கொடியை ஆங்குக் கன்றையீன்ற பசுவானது சென்று தின்றதினாலே, அது கண்டவுடன் தான் விளையாட்டயர்ந்து கொண்டிருந்த பந்தை நிலத்தெறிந்து போகட்டு ஓரையாடும் பாவையையும் அவ்வயின் வைத்துத் தனது அழகிய வயிற்றில் அடித்துக் கொண்ட செய்யுங்காரியங்கள் வல்ல என் இளம்புதல்வி)

எனவும், குறுந்தொகையில்

''கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செருக்கும்
சாரல் நாட... ... ... ... ... ...'' (குறு. 69)

(கரிய கண்ணையும் தாவுந் தொழிலையும் உடைய ஆண் குரங்கு இறந்துபாடுற்றதாக, கைம்மைத் துயர் கொண்டு வாழ்தலாற்றாத கணவன்பால் விருப்பமிக்க பெண் குரங்கு தன் தொழிலைக் கற்றிலாத தன் வலிய குட்டியைச் சுற்றத் தினிடத்தே ஒப்படை செய்து உயர்ந்த மலைப்பக்கத்தே பாய்ந்து உயிரைப் போக்கிக் கொள்ளற்கிடனாகிய சாரல் பொருந்திய நாட்டையுடையோனே) எனவும், புறநானூற்றில்

''சாந்தமை மார்பி னெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்''
((புறம். 63-9)

(சாந்தமைந்த மார்பின்கண்ணே நெடிய வேல் பாய்ந்தனவாக அரசரும் பொறாது அக்களத்தின்கண்ணே மடிந்தனர்)எனவும், கலித்தொகையில்

"அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை"
(கலி. 70-2)

(அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரையிலை மறைத்த தாக அதனைக் காணாமற் கதுமெனக் கலங்கி அந்த அறியாமையையுடைய பெடை) எனவும், சிலம்பில்

"மல்லல் மூதூர் மாலைவந் திறுத்தென
... ... ... ... ... ... ... ... ... ... ... ...
அந்திவா னத்து வெண்பிறை தோன்றி"
(சிலம்பு. 4-20)

(வளம் பொருந்திய முதூரின்கண்ணே மாலைப்பொழுது வந்துவிட்டதாக... அந்திப்பொழுதிலே செவ்வானத்தின்கண் வெள்ளிய பிறை தோன்றி)

எனவும் வரும் இடங்களில் எல்லாம் இவ்வெச்சமும் இது கொண்டு முடியும் வினையும் இரு வேறு எழுவாய்களை அடுத்துவந்துள்ளமை கண்கூடு.

### 5.2.6. காலம்

காலவெச்சங்கள் காட்டும் காலம் பொருளின் அடிப்படையில் அமைந்தது என முன்னரே கூறப்பட்டது. செய்தென வாய்பாட்டு எச்சமும் காரணப்பொருளில் இவ்வெச்சம் வரும் இடங்களில் இது இறந்த காலத்திலேயே வரும் எனவும் முன்னரே கூறப்பட்டது (சங்கத்தமிழ், பகுதி 4)

செய்தென எச்சம் காரணப்பொருளை மட்டுமே காட்டும் எச்சமாக வரும் நிலையில் இது இறந்த காலத்தையே காட்டு கின்ற நிலையைக் காண்கிறோம்.

### 5.2.6.1. இறந்த காலம்

பதிற்றுப்பத்தில்

"... ... ... ... ... கால்கொண்டு
கருவி வானந் தண்டளி சொரிந்தென
... ... ... ... ... ஏரா்ளர்
... ... ... ... ... ... ... ... ...
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்" (பதி. 76-9)

என வரும் அடிகளில் சொரிந்தென என்னும் காலவெச்சம் உணர்த்தும் தொழில் அது கொண்டு முடியும் பெறூஉம் என்னும் பெயரெச்சம் உணர்த்தும் தொழிலுக்கு முன்னரே நிகழும் நிலையில் இவ்வெச்சம் இறந்த காலத்தைக் காட்டி நிற்றல் தெளிவு. இதுபோன்றே ஐங்குறுநூற்றில்

"வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை" (ஐங். 154-1)

என வரும் அடிகளிலும் செத்தென என்னும் எச்சம் உணர்த்தும் தொழில் அது கொண்டு முடியும் சென்ற என்னும் தொழிலுக்கு முன்னர் நிகழ்வதையும், ஆகவே இறந்த காலம் காட்டுவதையும் காண்கிறோம்.

பிற பழந்தமிழ் இலக்கியங்களிலும் இவ்வெச்சம் இறந்த காலம் காட்டி வருகின்ற நிலைமையினைப் பொருள் பிரிவில் தந்துள்ள எடுத்துக்காட்டுக்களில் காண்க.

பெரும்பாலான இடங்களில் விரைவும் காரணமும் உணர்த்தி வரினும் ஒருசில இடங்களில் வெறும் காரணப் பொருள் மட்டுமே உணர்த்தி நிற்றலும் உண்டு.

பதிற்றுப்பத்தில் காணப்படும்

"வழங்குநர் அற்றென மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவி னழிந்த வாற்ற" (பதி.23-12)

என வரும் அடிகளில் இது காரணப்பொருளை மட்டுமே உணர்த்தி நிற்றல காணலாம். உரையாசிரியர்கள் தரும் ஒரு சில உதாரணங்களிலும் இந்நிலைமையைக் காணமுடியும்.

## 5.3 பெயரெச்ச அடிப்படையில் காலவெச்சங்கள்

தொல்காப்பியர் வினையெச்ச வாய்பாடுகளைப் பற்றிப் பல சூத்திரங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். எனினும் அவற்றில் காணப்படும் காலவெச்சங்களில் செய்து, செய்யூ, செய்பு வாய்பாட்டு எச்சங்கள் ஒரு பிரிவின என்பதும், செய்தென இன்னொரு பிரிவைச் சார்ந்தது என்பதும் முன்னரே குறிப்பிடப்பட்டன. செய்தென என்பது செய்து, செய்யூ, செய்பு போலன்றிச் செய்து + என எனப் பிரிக்கத்தகுந்த நிலையில் இதனை ஒரு கூட்டுக் காலவெச்சமாகக் கருதலாம் என்பதும், இந்நிலையில் கூட்டுக் காலவெச்சமாகக் கருதப்படுகின்ற செய்த பின், செய்யும்முன் போன்றவற்றோடு ஒப்பவைத்து எண்ணக் கூடியது இது என்பதும், எனினும் செய்தபின், செய்யும் முன் போன்றவை அனைத்தும் பெயரெச்ச அடிப்படையைக் கொண்டவை என்பதும், இதனால்தான் செய்தென என்பதை இவற்றோடு அடக்காது முதற் சூத்திரத்தில் கூறினார் என்பதும் முன்னரே குறிப்பிடப்பட்டது.

மேலும், பின் முன் போன்றவை பெயரெச்சங்களோடு வரும் நிலையில்தான் காலவெச்சங்களாகக் கருதப்படுகின்றன என்பதும் முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. (சங்கத்தமிழ், பகுதி, நான்கு, பக். 30-34).

பின், முன் போன்றவை பெயரெச்சங்களோடு வந்து ஒரு சொல் நீர்மையனவாய் நிற்கும்போதுதான் இவை வினையெச்சங்களாகக் கருதப்படுகின்றன. (முன் குறிப்பிட்டது, பக்.-30) தொல்காப்பியர் இவ்வகை எச்சங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது

> ''பின் முன் கால் கடை வழி இடத்து என்னும்
> அன்ன மரபின் காலங் கண்ணிய
> என்ன கிளவியும் அவற்றியல் பினவே'' (சூத் 714)

எனக் குறிப்பிட்டுச் செல்வார், இந்நிலையில் பல்வேறு பெயரெச்சங்களுக்குப் பின்னர் பின், முன், கால், கடை, வழி இடத்து ஆகியவை வந்து ஒரு சொல் நீர்மையனவாய் நிற்கும்

போதுதான் இவற்றை வினையெச்ச இயல்பினவாகக் கொள்ள லாம்,

பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின், பின், பின்றை, பின்னர், முன், முன்னர், கால், காலை, கடை வழி, கண் ஆகிய இடைச்சொற்கள் பெயரெச்சத்தின் பின்னர் வந்து பிளவு பட்டு இசையாது ஒரு சொல் நீர்மையனவாய் நிற்கக் காணலாம். இந்நிலையில் இவை வினையெச்ச இயல் பினவாகக் கொள்ளத் தகுந்தன (சங்கத்தமிழ், பகுதி 4, பக். 28) எனக் கருதலாம்.

இவற்றுள் பின், பின்றை, முன்னர் ஆகியவை காலத்தை மட்டுமே குறித்து வருவனவாகக் கருதலாம். ஆனால் கால் காலத்தையும், நிபந்தனையையும் குறித்து வரக் காணுகிறோம். சொல் நீர்மையனவாய் நின்று காலவெச்ச இயல்பினவாக நின்று ஒரு நிகழ்ச்சியின் பின்னர் இன்னொரு நிகழ்ச்சி நடை பெறுவதைச் சுட்டி நிற்கின்றன. இம்மூன்றனுள் பின், பின்னர் ஆகிய இரண்டும் தனியாகவே நின்று பிறகு என்ற பொருளை யும் தர வல்லன. இந்நிலையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் காணலாம்.
பதிற்றுப்பத்தில் காணப்படும்

### 5.3.1 பின்

பழந்தமிழ் இலக்கியங்களில் பின், பின்றை, பின்னர் ஆகிய மூன்று இடைச்சொற்கள் பெயரெச்சத்தை அடுத்து வந்து ஒரு

"... ... .. — ... ... — — ...பின்னும
... .... — ... ... ... ... ... ... ...
சேர லாதன் பொய்யல னசையே" பதி 18-7

எனவும்,

"அருங்க ணொடைமை தீர்ந்துபின் மகிழ்சிறந்து"
(பதி. 68-11)

எனவும், ஐங்குறுநூற்றில் காணப்படும் அடிகளில்

"சினவுவென் றகைக்குவென் சென்றனென்
பின்னினைந் திரங்கிப் பெயர்தந் தேனே" (ஐங்.118-3)

எனவும் பின் தனித்து வருதல் காண்க. இங்கெல்லாம் பின் என்பது வினையைக் கொண்டு முடியினும் காலவெச்சமாகக் கருதப்படுவதில்லை. இதே நிலையினைப் பின்னர் என்ற இடைச்சொல்லிலும் காணலாம்.

முன்னர்க் குறிப்பிட்டபடி பழந்தமிழ் இலக்கியங்களில் பின் இடைச்சொல் பெயரெச்ச வாய்பாட்டிற்குப் பின்னர் நின்று ஒரு நீர்மைத்தாய் வருதல் காணப்படுகின்றது. அகம் (4), நற்றிணை (1), குறுந்தொகை (2), புறம் (5), கலித்தொகை (5), குறள் (1), சிலம்பு (20), மணி (26) ஆகிய இலக்கியங்களில் இவ்வாறு வந்துள்ளது. இவை அனைத்து இடங்களும் காலத்தைக் காட்டுவனவாகவே அமைந்துள்ளன.

> ''மறவல் ஓம்புமதி எம்மே ...
> ... ... ... ... ... ... ... ...
> இயங்காது வதிந்தநன் காதலி
> உயங்குசாய் சிறுபுறம் முயங்கிய பின்னே''
>
> (அகம்.19-9)

என வரும் அகநானூற்று அடிகளில் காணப்படும் முயங்கிய பின் என்பது இந்நிலையிலேயே உள்ளது. ''நம் காதலியின் மெலிந்த பிடரியைத் தழுவிய பின் எம்மை மறத்தலை நீக்குவாயாக'' எனப் பொருள் எழுதுவார் உரையாசிரியர். இதனைத் தொல்காப்பியர் கருத்துப்படி வினையெச்ச இயல்பினதாகக் கொள்ளலாம்.

இதைப் போன்றே

| | | |
|---|---|---|
| சென்ற பின் | சென்ற பின் | நற். 385-1 |
| கிளந்த பின் | கூறிய பின்னர் | குறு 374-2 |
| பிறந்த பின் | பிறந்த பின் | புறம் 222-3 |
| இறந்த பின் | வற்றிய பின்பு | கலி 34-2 |
| கண்ட பின் | கண்ட பின் | குறள் 1265 |
| திரிந்த் பின் | திரிந்த பின் | சிலம்பு 3-85 |
| போய பின் | போய பின்னர் | மணி 5-83 |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இத்தகைய வினையெச்ச இயல்பினைக் காட்டுவனவாக உள்ளன.

தொல்காப்பியர் இதனை வினையெச்ச வாய்பாடாகக் குறிப்பிடினும்

| | | |
|---|---|---|
| உண்டதற் பின் | உண்டபின் | புறம் 28-34 |
| சென்றதன் பின் | முடிவுற்ற பின்னர் | சிலம்பு 28-130 |
| முடித்ததன்பின் | முடித்த பிற்றை நாளில் | சிலம்பு 28-199 |
| போந்ததன் பின்னர் | போந்தபின் | சிலம்பு 26-104 |
| இறந்ததன் பின்னர் | இறந்ததன் பின் | சிலம்பு 27-149 |
| நடந்ததன் பின்னர் | கழிந்த பின்னர் | சிலம்பு 30-85 |

போன்றவை தொழிற்பெயருக்கும் இதற்கும் இடையே உள்ள தொடர்பினைக் காட்டும். இத்தகைய சொல்லாட்சி புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகியவற்றில் மட்டுமே காணப் படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பின் என்ற இடைச்சொல்லைப் போலவே பின்னர், பின்றை, பிற்பாடு ஆகிய இடைச்சொற்களும் காணப்படுகின்றன. இவற்றுள் பின்றை முன்பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் காணப்படுவதும், எண்ணிக்கையில் பின் என்ற இடைச் சொல்லை விடச் சிறிது அதிகமாகக் காணப்படுவதும், பின்னர் பிற்பாடு ஆகிய இடைச்சொற்கள் பின்பழந்தமிழ் நூல்கள் மட்டிலுமே காணப்படுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

| | பின் | பின்றை | பின்னர் | பிற்பாடு |
|---|---|---|---|---|
| பதி | — | 1 | — | — |
| ஐங் | — | 1 | — | — |
| அகம் | 4 | 6 | — | — |
| நற் | 1 | 2 | — | — |
| குறு | 1 | 1 | — | — |
| புறம் | 5 | 9 | — | — |
| பத்து | — | 8 | 1 | — |
| பரி | — | — | — | — |
| கலி | 5 | — | — | — |
| குறள் | 1 | 1 | — | — |
| சிலம்பு | 20 | 2 | 10 | 2 |
| மணி | 26 | — | 7 | — |

5.3.2 பின்றை

முன்னரே குறிப்பிட்டபடி பின்றை முன்பழந்தமிழ் நூல் களிலேயே அதிகமாக வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| களைந்த பின்றை | நீக்கிய பின்பு | பதி 12-20 |
| சென்ற பின்றை | சென்ற பின்னர் | ஐங் 234-3 |
| கூடிய பின்றை | கூடிய பிறகு | அகம் 70-8 |
| முடித்த பின்றை | முடித்த பின்பு | நற் 102-3 |
| நெகிழ்த்த பின்றை | இளகச் செய்த பின்னர் | குறு 176-3 |
| கண்ட பின்றை | கண்ட பின்பு | புறம் 69-19 |
| சென்ற பின்றை | இளகச் செய்த பின்னர் | பத்து 6-620 |
| நாடிய பின்றை | ஆராய்ந்து துணிந்தால் | குறள் 518 |
| மயங்கிய பின்றை | மயங்கிய பின்பு | சிலம்பு 3-153 |

5.3.3 பின்னர்

இது பத்துப்பாட்டு (1). சிலம்பு (10) மணிமேகலை (7) ஆகிய மூன்று நூல்களில் மட்டுமே காணக்கூடியதாக இருக் கிறது.

| | | |
|---|---|---|
| புறங்கொடுத்த பின்னர் | முதுகிட்டு ஓடிய பின்னர் | பத்து 8-174 |
| மண்ணிய பின்னர் | நீராட்டிய பின்பு | சிலம்பு 3-122 |
| நீங்கிய பின்னர் | போன பின்பு | மணி 6-1 |

5.3.1 பிற்பாடு

இச்சொல் சிலம்பில் மட்டுமே இரு இடங்களில் வரக் காண்கிறோம்

| | | |
|---|---|---|
| பெயர்ந்த பிற்பாடு | நீங்கிய பின்னர் | சிலம்பு 13-1 |
| இறந்த பிற்பாடு | இறந்த பின்னர் | சிலம்பு 15-182 |

பழந்தமிழ் இலக்கியங்களை ஆராயின் செய்தென வாய் பாட்டு எச்சத்தைப் போலவே செய்தாங்கு, செய்தன்ன ஆகிய

வையும் ஒருசொல் நீர்மைத்தாய் நின்று வினையெச்சம் போல வருதல் காணலாம். எனினும் இவை பற்றித் தொல்காப்பியம் எதுவும் குறிப்பிடுவதில்லை.

### 5.3.5 முன்

பின், பின்றை, பின்னர் போன்ற இடைச்சொற்களைப் போன்று முன், முன்னர், முன்னம் ஆகிய இடைச்சொற்களும் பெயரெச்சங்களை அடுத்து நின்று வினையெச்ச இயல்பின வாக வரக் காணலாம். எனினும் இவற்றின் வரவு எண்ணிக்கை மிக அருகியே காணப்படுகிறது. முன், முன்னர் ஆகியவை இரு இடங்களிலும், முன்னம் ஒரு இடத்திலும் வந்துள்ளன. இந்நிலையில் பின் போன்றவற்றைக் காட்டிலும் முன் மிகக் குறைவாகவே வந்துள்ளது கவனிக்கத்தக்கது. மேலும் நான்கு இடங்களில் இது எதிர்மறைப் பெயரெச்சத்திற்குப் பின்னரே வந்துள்ளது.

#### 5 3.5.1 உரையாசிரியர்கள்

உரையாசிரியர்களுள் சேனாவரையர்

"மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது"

என்ற உதாரணத்தைத் தந்து இது இறந்தகாலம் பற்றி வரும் என்று குறிப்பிடுவார். நச்சினார்க்கினியரும் இவரைப் பின் பற்றி

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை"

என்பதைத் தந்து இறந்தகாலம் பற்றி வரும் என்பார். தெய்வச்சிலையாரும்

தான் உண்ணாமுன் வந்தான்
பிறர் உண்ணாமுன் வரும்

என்பவற்றை உதாரணமாகத் தருவார். கல்லாடனாரும்

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை"

என்பதையே உதாரணமாகத் தந்து நிற்பார்.

### 5.3.5.2 சூழல்

பழந்தமிழ் இலக்கியங்களில் இவை எதிர்மறை எச்சங்களுக்குப் பின்னரே பெரும்பான்மையும் வந்துள்ளன. ஒரே ஒரு இடத்தில் தான் இது உடன்பாட்டுப் பெயரெச்சத்திற்குப் பின்னர் வரக் காண்கிறோம்.

#### 5.3.5.2.1 உடன்பாட்டுப் பெயரெச்சத்திற்குப் பின்னர்

வருமுன்னர் = வரக்கடவதாகின்ற முற்காலத்திலே
குறள் 435

#### 5.3.5.2.2 எதிர்மறைப் பெயரெச்சத்திற்குப் பின்னர் (உடன் பாட்டுப் பொருளில்)

| | | |
|---|---|---|
| மணவா முன்னும் | கலத்தற்கு முன்னும் | அகம் 290-10 |
| கொய்யா முன்னும் | கொய்வதன் முன்னும் | அகம் 28-2 |
| சொல்லா முன்னர் | கூறுதற்கு முன்பே | குறு 256-6 |
| ஈனா முன்னம் | ஈன்பதற்கு முன்னரே | மணி 15-7 |

பழந்தமிழ் இலக்கியங்களில் முன் சிறு வரவிற்றாக வருவதற்குக் காரணம்

| | | |
|---|---|---|
| வழங்கா அளவை = | பலியிடா முன்னரே | அகம் 242-11 |
| மணவா ஊங்கு = | மணத்தற்கு முன்பு | குறு 357-8 |

போன்ற பலவேறு சொற்களும் இப்பொருளில் வழங்கியமையே என எண்ணலாம்.

### 5.3,6 கால்

பல்வேறு பெயரெச்சங்களுக்குப் பின்னர் கால் என்ற இடைச் சொல்லும் வருதல் காணத்தக்கது, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, புறநானூறு, பரிபாடல்,- கலித்தொகை, குறள், சிலம்பு ஆகிய நூல்களில் இது காணப்படுகிறது. பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் ஆராயின் இவ்விடைச்சொல் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருவகைப் பெயரெச்சங்களுக்குப் பின்னரும் வருதல் காணலாம்,

| | | |
|---|---|---|
| பதி | — | — |
| ஐங் | — | — |
| அகம் | — | 1 |
| நற் | 1 | — |
| குறு | 1 | — |
| புறம் | 2 | — |
| பத்து | — | — |
| பரி | 1 | — |
| கலி | 52 | 12 |
| குறள் | 14 | 3 |
| சிலம்பு | 1 | — |
| மணி | — | — |

மேலும் இவ்வகையெச்சங்கள் காலப்பொருளையும் நிபந்தனைப் பொருளையும் காட்டுவனவாக உள்ளன. பொது வாக, இவ்விரு பொருள்களும் தம்முள் மயங்கி வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

### 5,3.6.1 காலப்பொருள்

இப்பொருளில், அகம் (1), நற்றிணை (1), குறுந்தொகை (1), புறம் (2), பரிபாடல் (1), கலித்தொகை (64), குறள் (17), சிலம்பு (1) ஆகிய இலக்கியங்களில் காணப்படுகின்றன,

அகநானூற்றில் வரும்

''வரையறை மகளிரின் அரியள்
அவ்வரி அல்குல் அணையாக் காலே'' (அகம்,342-12)

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இப்பண்பினைக் காட்டும்,

இதுபோன்றே காலை என்ற பெயர்ச்சொல்லும் காலப் பொருளையும் காட்டி வரும் எனினும் இதனை வினையெச்ச மாகவோ, அல்லது வினையெச்ச இயல்பினதாகவோ கொள்ள முடியாது, பெயரெச்சத்தோடு வரும் பெயராகவே கொள்ளுதல் பொருந்தும்

### 5.3.7 கடை

இவ்விடைச்சொல்லும் பெயரெச்சத்திற்குப் பின்னர் வந்து வினையெச்ச இயல்பினதாக நிற்கும். இதுவும், உடன்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சங்களோடு வருதல் காணத்தக்கது. இவ்வினைச்சொல் கலித்தொகை *(3)*, குறள் (10) ஆகிய இரு நூல்களில் மட்டுமே வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| வந்தக்கடை | புகுந்த இடத்து | கலி 22-22 |
| மேவாக்கடை | பொருந்தார்த இடத்து | கலி 62-3 |
| காணுங்கடை | காணுமிடத்து | கலி 87-2 |
| இழிந்தக்கடை | தாழ்ந்தவிடத்து | குறள் 964 |
| உற்றக்கடை | நேர்ந்தபொழுது | குறள் 372 |
| போற்றாக் | கடை காவாவிடத்து | குறள். 315 |

### 5.3.8 இடத்து

இவ்விடைச்சொல்லும் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருவகைப் பெயரெச்சங்களுடனும் வரக்காணலாம். பழந்தமிழ் இலக்கியங்களில் 13 இடங்களில் (புறம் 1, கலி 2, குறள் 9, சிலம்பு 1) மட்டுமே இவ்விடைச்சொல் வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| வேண்டிடத்து | வேண்டியவிடத்தே | புறம் 41-3 |
| கண்டவிடத்து | கண்ட இடத்தே | கலி 72-24 |
| செல்லுமிடத்து | செல்லும்போது | குறள் 250 |
| அறிவுறுத்தவிடத்து | அறிவுறுத்திய காலத்து | சிலம்பு 29-1-10 |

### 5.3.9 வழி

இவ்விடைச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் 8 இடங்களில் வந்துள்ளமையைக் காண்கிறோம். (அகம் 1, புறம் 2, குறள் 4, சிலம்பு 1).

| | |
|---|---|
| குறுவழி குற்றுங்கால் | அகம் 286-5 |
| வேண்டுவழி வேண்டியவிடத்து | புறம் 179-6 |

| | | |
|---|---|---|
| மறையாவழி | மறையாவிடத்து | குறள் 846 |
| வருவழி | வருங்காலை | சிலம்பு 28-52 |

### 5.3.10 கண்

இவ்விடைச்சொல் குறுந்தொகையில் ஒரு இடத்திலும், குறளில் 10 இடங்களிலும் வரக் காணலாம்.

மாரி படாஅக்கண்ணும் மழை தோற்றுமுன்பே
குறு 289-6

அற்ற கண்ணே அற்ற பொழுதே குறள் 349

மேலே காட்டிய தொல்காப்பியர் குறிப்பிட்ட இடைச் சொற்கள் தவிர வேறு பல இடைச்சொற்களும் பெயரெச்சத் திற்குப் பின்னர் வந்து ஒருசொல் நீர்மைத்தாய் நிற்றல் காணலாம். ஆனால் தொல்காப்பியர் இவற்றையெல்லாம் பற்றி எதுவும் கூறவில்லையென்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. எனினும் பழந்தமிழ் இலக்கியங்களில் இவை காணப் படும் நிலையில் அவை பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருந்தும்.

## கூட்டுக் காலவெச்சங்கள்

| | செய்தென | பின் | பின்னர் | பின்றை | பிற்பாடு | முன் உடன்பாடு | முன் எதிர்மறை | முன்பு | முன்னர் உடன்பாடு | முன்னர் எதிர்மறை | முன்னம் உடன்பாடு | முன்னம் எதிர்மறை | கால் காலம் | கால் நிபந்தனை | காலை காலம் | காலை நிபந்தனை | கடை காலம் | கடை நிபந்தனை | இடத்து | வழி | கண் உடன்பாடு | கண் எதிர்மறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | 3 | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | 2 | — | — | — | — | — | — | — |
| ஐங் | 35 | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | 2 | 3 | — | — | — | — | — | — | — |
| அகம் | 37 | 4 | — | 6 | — | — | 2 | — | — | — | — | — | 1 | — | 1 | 1 | — | — | — | 1 | — | — |
| நற் | 29 | 1 | — | 2 | — | — | — | — | — | — | — | — | 1 | 2 | 8 | 1 | — | — | — | — | — | — |
| குறு | 14 | 1 | — | 1 | — | — | — | — | — | 1 | — | — | 1 | 2 | — | — | — | — | — | — | — | 1 |
| புறம் | 16 | 5 | — | 9 | — | — | — | — | — | — | — | — | 2 | 1 | 15 | 3 | — | — | 1 | 2 | — | — |
| பத்து | — | — | 1 | 8 | — | — | — | — | — | — | — | — | — | — | 4 | — | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | 5 | — | — | — | — | — | — | — | — |
| கலி | 3 | 5 | — | — | — | — | — | — | — | — | — | — | 64 | 15 | — | — | 3 | 1 | 2 | — | — | — |
| குறள் | — | 1 | — | 1 | — | — | — | — | 1 | — | — | — | 17 | 17 | 3 | — | 10 | 5 | 9 | 4 | 10 | — |
| சிலம்பு | 4 | 20 | 10 | 2 | 2 | — | — | — | — | — | — | — | 1 | — | 14 | — | — | — | 1 | 1 | — | — |
| மணி | — | 26 | 7 | — | — | — | — | — | — | — | — | — | — | — | 15 | — | — | — | — | — | — | — |

பட்டியல்-1 **பழந்தமிழில் குறையெச்ச விகுதிகள்**

| | —அ | —இய | —இயர் | —மார் | —வான் | பான் |
|---|---|---|---|---|---|---|
| பதி | 326 | 7 | 12 | 3 | — | — |
| ஐங் | 276 | 19 | 2 | — | 1 | — |
| அகம் | 1270 | 41 | 16 | 24 | — | — |
| நற் | 609 | 17 | 13 | 6 | 1 | — |
| குறு | 256 | 15 | 9 | 6 | — | — |
| புறம் | 821 | 8 | 2 | 10 | — | — |
| பத்து | 736 | 3 | — | 14 | — | — |
| பரி | 361 | 1 | — | 2 | 2 | — |
| கலி | 762 | 30 | 1 | 12 | 1 | 1 |
| குறள் | 220 | 3 | — | — | — | — |
| சிலம்பு | 821 | 8 | — | 1 | 1 | — |
| மணி | 579 | 7 | — | — | — | — |

பட்டியல்-2

## -அ (சூழல்)

| | வினை அடிகள் | | | பிறவினைகள் | காரண வினைகள் |
|---|---|---|---|---|---|
| | மெல்வினைகள் | வல்வினைகள் | | | |
| | | -ப் (ப்)- | -க்(க்)- | | |
| பதி | 258 | 54 | — | 14 | — |
| ஐங் | 225 | 44 | 1 | 6 | — |
| அகம் | 1031 | 182 | 2 | 55 | — |
| நற் | 492 | 82 | 1 | 34 | — |
| குறு | 216 | 27 | 2 | 11 | — |
| புறம் | 638 | 117 | 11 | 55 | — |
| பத்து | 549 | 151 | 1 | 35 | — |
| பரி | 298 | 38 | 4 | 20 | 1 |
| கலி | 622 | 106 | 2 | 32 | — |
| குறள் | 189 | 19 | 9 | 3 | — |
| சிலம்பு | 665 | 95 | 12 | 49 | — |
| மணி | 453 | 68 | 12 | 45 | 1 |

பட்டியல்-3 —அ (பொருள்)

தாக்கப் பொருள் உடனிகழ்ச்சிப் பொருள் நோக்கப் பொருள் காரணப் பொருள் வரிசைப் பொருள் வினையடைப் பொருள் தலைமை வினை தொழிற் பெயர் இடைச் சொல் நோக்க வேற்றுமை

ஒரே எழுவாய் இரு எழுவாய்கள் ஒரே எழுவாய் இரு எழுவாய்கள் ஒரே எழுவாய் இரு எழுவாய்கள் ஒரே எழுவாய் இரு எழுவாய்கள் ஒரே எழுவாய் இரு எழுவாய்கள்

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதி | — | 122 | — | 130 | 7 | 1 | — | 32 | — | 7 | 17 | — | 6 | 4 | — |
| ஐங் | — | 152 | — | 59 | 10 | 6 | — | 28 | — | 4 | 4 | 3 | 8 | 2 | — |
| அகம் | — | 599 | — | 392 | 26 | 2 | 1 | 113 | — | 14 | 63 | 5 | 26 | 29 | — |
| நற் | — | 238 | — | 176 | 13 | — | — | 70 | — | 28 | 48 | 3 | 10 | 23 | — |
| குறு | — | 128 | — | 73 | 13 | — | — | 18 | — | 4 | 10 | 2 | 6 | 2 | — |
| புறம் | — | 264 | — | 340 | 18 | 1 | — | 67 | — | 28 | 56 | 5 | 25 | 17 | — |
| பத்து | — | 356 | — | 256 | 6 | — | — | 50 | — | 7 | 26 | 1 | 1 | 33 | — |
| பரி | — | 100 | — | 195 | 19 | 1 | — | 22 | — | — | 22 | — | — | 2 | — |
| கலி | — | 341 | — | 196 | 17 | — | — | 113 | — | 9 | 17 | 20 | 38 | 11 | — |
| குறள் | — | 64 | — | 43 | 1 | — | — | 15 | — | — | 17 | 56 | 24 | — | — |
| சிலம்பு | — | 209 | — | 260 | 23 | — | — | 69 | — | 204 | 21 | 3 | 28 | 3 | — |
| மணி | — | 122 | — | 111 | 29 | 5 | — | 72 | — | 142 | 23 | 64 | 9 | 2 | 1 |

பட்டியல் — 4 —இய (சூழல்)

| | வினை அடிகள் | | | பிற வினைகள் | காரண வினைகள். |
|---|---|---|---|---|---|
| | மெல் வினைகள் | வல்வினைகள் | | | |
| | | -ப்(ப்)- | -க்(க்)- | | |
| பதி | 5 | — | — | 2 | — |
| ஐங் | 16 | — | — | 3 | — |
| அகம் | 38 | — | — | 3 | — |
| நற் | 16 | — | — | 1 | — |
| குறு | 14 | — | 1 | — | — |
| புறம் | 6 | — | — | 2 | — |
| பத்து | | — | — | — | — |
| பரி | 1 | — | — | — | — |
| கலி | 20 | — | — | 8 | — |
| குறள் | 1 | — | — | 2 | 2 |
| சிலம்பு | 8 | — | — | — | — |
| மணி | 7 | — | — | — | — |

பட்டியல் — 5 —இய (பொருள்)

| | காரணப்பொருள் | | நோக்கப்பொருள் | | தாக்கப்பொருள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் |
| பதி | — | 1 | 5 | — | — | 1 |
| ஐங் | — | — | 19 | — | — | — |
| அகம் | — | 1 | 30 | 5 | — | 5 |
| நற் | — | — | 10 | 5 | — | 2 |
| குறு | — | — | 12 | 1 | — | 2 |
| புறம் | — | — | 8 | — | — | — |
| பத்து | — | — | 3 | — | — | — |
| பரி | 1 | — | — | — | — | — |
| கலி | — | — | 27 | 13 | — | — |
| குறள் | — | — | 3 | — | — | — |
| சிலம்பு | — | — | 6 | 1 | — | 1 |
| மணி | — | — | 6 | — | — | 1 |

பட்டியல்-6

-இயர் (சூழல்)

| | வினை அடிகள் | | | பிற வினைகள் | காரண வினைகள் |
|---|---|---|---|---|---|
| | மெல் வினைகள் | வல்வினைகள் | | | |
| | | -ப(ப்)- | -க்(க்)- | | |
| பதி | 12 | — | — | — | — |
| ஐங் | 2 | — | — | — | — |
| அகம் | 16 | — | — | — | — |
| நற் | 11 | — | — | 1 | 1 |
| குறு | 8 | — | — | 1 | — |
| புறம் | 2 | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — |
| கலி | 1 | — | — | — | — |
| குறள் | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — |
| மணி | — | — | — | — | — |

பட்டியல் - 7 —இயர் (பொருள்)

| | நோக்கப் பொருள் | | வரிசைப் பொருள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் | தொழிற் பெயர் | தலைமை வினை |
| பதி | 12 | — | — | — | — | — |
| ஐங் | 1 | — | — | 1 | — | — |
| அகம் | 12 | 3 | — | — | — | 1 |
| நற் | 8 | 2 | 2 | — | — | 1 |
| குறு | 3 | 4 | — | — | 2 | — |
| புறம் | 2 | — | — | — | — | — |
| பத்து | — | — | — | — | — | — |
| பரி | — | — | — | — | — | — |
| கலி | 1 | — | — | — | — | — |
| குறள் | — | — | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | — | — | — |
| மணி | — | — | — | — | — | — |

பட்டியல்-8 —மார் (சூழல்)

| | வினை அடிகள் | பிற வினைகள் |
|---|---|---|
| பதி | 3 | — |
| ஐங் | — | — |
| அகம் | 18 | 6 |
| நற் | 6 | — |
| குறு | 6 | — |
| புறம் | 7 | 3 |
| பத்து | 12 | 2 |
| பரி | 2 | — |
| கலி | 12 | — |
| குறள் | — | — |
| சிலம்பு | 1 | — |
| மணி | — | — |

பட்டியல்-9 —வான் (சூழல்)

| | வினை அடிகள் | பிற வினைகள் |
|---|---|---|
| பதி | — | — |
| ஐங் | 1 | — |
| அகம் | — | — |
| நற் | 1 | — |
| குறு | — | — |
| புறம் | — | — |
| பத்து | — | — |
| பரி | 1 | 1 |
| கலி | 1 | — |
| குறள் | — | — |
| சிலம்பு | 1 | — |
| மணி | — | — |

பட்டியல்-10 -பான் (சூழல்)

| | வினை அடிகள் | பிற வினைகள் |
|---|---|---|
| பதி | — | — |
| ஐங் | — | — |
| அகம் | — | — |
| நற் | — | — |
| குறு | — | — |
| புறம் | — | — |
| பத்து | — | — |
| பரி | — | — |
| கலி | 1 | — |
| குறள் | — | — |
| சிலம்பு | — | — |
| மணி | — | — |

பட்டியல்-11 (-மார் பொருள்)

| | நோக்கப் பொருள் | |
|---|---|---|
| | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் |
| பதி | 3 | — |
| ஐங் | — | — |
| அகம் | 23 | 1 |
| நற் | 5 | 1 |
| குறு | 4 | 2 |
| புறம் | 10 | — |
| பத்து | 12 | 2 |
| பரி | 2 | — |
| கலி | 10 | 2 |
| குறள் | — | — |
| சிலம்பு | 1 | — |
| மணி | — | — |

### பட்டியல்-12 — வான் (பொருள்)

| | நோக்கப் பொருள் | | தாக்கப் பொருள் | |
|---|---|---|---|---|
| | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் |
| பதி | — | — | — | — |
| ஐங் | 1 | — | — | — |
| அகம் | — | — | — | — |
| நற் | — | — | — | 1 |
| குறு | — | — | — | — |
| புறம் | — | — | — | — |
| பத்து | — | — | — | — |
| பரி | 2 | — | — | — |
| கலி | — | 1 | — | — |
| குறள் | — | — | — | — |
| சிலம்பு | — | — | — | 1 |
| மணி | — | — | — | — |

### பட்டியல்- 13 — பான் (பொருள்)

| | நோக்கப் பொருள் | |
|---|---|---|
| | ஒரே எழுவாய் | இரு எழுவாய்கள் |
| பதி | — | — |
| ஐங் | — | — |
| அகம் | — | — |
| நற் | — | — |
| குறு | — | — |
| புறம் | — | — |
| பத்து | — | — |
| பரி | — | — |
| கலி | — | — |
| குறள் | 1 | — |
| சிலம்பு | — | — |
| மணி | — | — |

# பயன்படுத்திய
# இலக்கிய இலக்கண நூல்கள்

**அகநானூறு**, *1968* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**இலக்கண விளக்கம்**, *1972* சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்.

**ஐங்குறுநூறு**, *1957* ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1903).

——— *1966* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**கலித்தொகை**, *1969* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**குறுந்தொகை**, *1962* ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1937)

——— *1965* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**சிலப்பதிகாரம்**, *1968* ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1892).

——— *1972* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**திருக்குறள்**, *1967* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**தொல்காப்பியம் மூலம்,** *1967* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — இளம்பூரணர் உரை,** *1971* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — சேனாவரையர் உரை'** *1981* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

**தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — கல்லாடனார் உரை,** *1964* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (முதல் பதிப்பு 1923).

**தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — தெய்வச்சிலையார் உரை,** *1974* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**தொல்காப்பியம் — சொல்லதிகாரம் — நச்சினார்க்கினியர் உரை,** *1952* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**நற்றிணை,** *1976* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும்,** *1953* ஸ்ரீ தியாக ராச விலாச வெளியீடு, சென்னை.

**நன்னூல் விருத்தியுரை,** *1972* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**நன்னூல் காண்டிகையுரை,** *1974* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**நேமிநாதம்,** *1973* திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**பத்துப்பாட்டு**, *1961* ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு *1889*).

——— *1971* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**பதிற்றுப்பத்து**, *1957* ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு *1904*).

——— *1968* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**பரிபாடல்**, *1980* டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம் சென்னை (முதல் பதிப்பு *1918*)

——— *1969* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**பிரயோகவிவேகம்**, *1973* சரசுவதி மகால் நூல் நிலையம், சென்னை.

**புறநானூறு**, *1956* ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு *1894*).

——— *1972* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (முதல் பதிப்பு *1951*).

**மணிமேகலை**, *1965* ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு *1898*).

——— *1972* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**முத்துவீரியம்**, *1972* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**வீரசோழியம்**, *1970* திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாத்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

———

# உதவிய நூல்களும் கட்டுரைகளும்


அகத்தியலிங்கம், ச. 1972, "வினையெச்சம் பற்றித் தொல் காப்பியர்", **தொல்காப்பிய மொழியியல்**, அண்ணாமலை நகர்.

——— 1979-80. "ஏவல் வினை" **மொழியியல்** 3, 2 & 3, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1982, **சொல்லியல்-2 வினையியல்-1** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1983, **சங்கத் தமிழ், பகுதி - 1**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1983, **சங்கத் தமிழ் பகுதி - 2** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1984, **சங்கத் தமிழ், பகுதி - 3** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1985, **தொல்காப்பியச் சிந்தனைகள்-1**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1985 & 86 "பழந்தமிழில் காலவெச்சங்கள்"

——— 1986, **சங்கத் தமிழ், பகுதி - 4** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

**மொழியியல்** 9,1 & 2,9,3 & 4, அனைத்திந்தியத் தமிழ்மொழி யியற் கழகம், அண்ணாமலை நகர்.

இசரயேல், மோ, 1965, "துணை வினைகள்", **தென் மொழி.**

——— 1976, **இலக்கண ஆய்வு — வினைச்சொல்,** மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை.

இளையபெருமாள், மா. 1974, "சங்க இலக்கியங்களில் வினையெச்சத் திரிபுகள்" இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்மன்றம் **ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை**, பாண்டிச்சேரி.

சண்முகம், செ. வை. 1978, 'தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு' **மொழியியல் 2.1** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1984, **சொல்லிலக்கணக் கோட்பாடு**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

சுப்பிரமணிய சாஸ்திரி, பி. எஸ். 1930, "தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு" **செந்தமிழ்**, மதுரை.

மாதையன், பெ. 1978 & "வினையெச்ச வாய்ப்பாடுகள்" **மொழியியல் 2.2** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

——— 1978 & வினையெச்சங்களில் காலம் **இந்தியப்பல்கலை தமிழாசிரியர் மன்றம், பத்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி-2.**

முத்துச் சண்முகன் & தாமஸ்லேமன், 1984 "இக்காலத் தமிழில் கலப்பு வாக்கியங்கள்" **மொழியியல் 7-3 & 4**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

Agesthialingom, S. 1961. *Description of the Language of Patiruppattu with Translation, Translation and Index* unpublished Ph.D. Dissertation, University of Kerala, Trivandrum.

——— 1968, "On Verbal Participles in Tamil", *Indian Linguistics*, Vol. 52, Deccan College, Poona.

——— 1970, "On Vinai-y-eccam" *Seminar on Tolkappiyam*, Annamalai University, Annamalainagar.

——— 1979. *A Grammar of Old Tamil with Special reference to Patitruppattu*, Annamalai University, Annamalainagar.

—— 1980a. "Imperatives in Old Tamil", *Indian Linguistics*, Vol. 41, Deccan College, Poona.

—— 1980b. "Auxiliaries and Main Verbs", *Auxiliaries in Dravidian* (Ed Agesthialingom, S. & Srinivasa Varma, G.), Annamalai University, Annamalainagar.

Andiappa Pillai, D. 1970. *Descriptive Grammar of Kalittokai*, Ph.D.Dissertation, University of Kerala, Trivandrum

Andronov, M. 1959. "On the uses of Participles and Participal nouns in Tamil" *Tamil Culture*, VIII, Madras.

—— 1969, *The Standard Grammar of Modern and Classical Tamil*, New Century Book House Pvt. Ltd. Madras.

Annamalai, E. 1968, *The So-called Adverbs in Tamil*, M.A. Dissertation, Department of Linguistics, University of Chicago, Chicago.

—— 1970. "On moving from a co-ordinate structure in Tamil" *Papers from the Sixth Regional meeting (of the) Chicago Linguistic Society*, 131-46, Chicago.

Arden, A.H. 1969. *A Progressive Grammar of the Tamil Language*, (Reprinted), The Christian Literature Society, Madras.

Balasubramaniyan, K. 1981. *A Descriptive Grammar of Tolka:ppiyam*, Ph.D. Dissertation, Department of Linguistics, Annamalai University, Annamalainagar.

Beschi, J. C. 1848. *A Grammar of the Common Dialects of the Tamil Language*, Madras.

Caldwell, R. 1856. *A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages* (Reprinted in 1956), Madras.

Chatterji, S.K. 1926. *The Origin and Development of Bengali Language*, Calcutta.

Chithira Puthira Pillai, H. 1983. *Historical Study of Verbal Suffixes from Early to Middle Tamil*, Ph.D. Dissertation Department of Linguistics, Annamalai University, Annamalinagar.

Elayaperumal, M. 1958. "The ma:r suffix in Early Tamil Literature", *Indian Linguistics*, Vol. 19, Deccan College. Poona.

—— 1975. *Grammar of Ainkurunu:ru with Index*, University of Kerala, Trivandrum.

Grierson, G.A. 1906. *Linguistic Survey of India*, Calcutta.

Ilakkuvanar, S. 1946. *The Making of Tamil Grammar*, The South India Saiva Siddhanta Works Publishing Society Ltd., Madras.

—— 1963. *Tolkappiam in English with Critical Studies* Kuralneri Publishing House, Madurai.

Israel, M. 1973. *The Treatment of Morphology in Tolkappiam* Madurai University, Madurai.

Jesperson, Otto, 1955, *A Modern English Grammar on Historical Principles*, George Allen & Urwin Ltd., London

Kamatchinathan, A. 1964. *Grammatical Study of Natrrinai with Translation, Transliteration and Index*. Ph.D. Dissertation, University of Kerala, Trivandrum.

Kandaswamy, S N. 1962. *Patipa:dal — A Linguistic Study - Part I Phonology; Part II Morphology and Syntax, Part III Dictionary*, M Litt. Dissertation, Annamalai University, Annamalainagar.

Krishnambal, S. R. 1974, *Grammar of Kurunthokai with Index*, University of Kerala, Trivandrum.

Lazarus, J. 1878. *A Tamil Grammar designed for use in Colleges and Schools*, Madras:

Lindholm, James, M, 1975. *The conceptual basis of the adverbial participles*, Ph.D. Dissertation, University of Chicago.

Lyons, John 1968, *Introduction to Theoretical Linguistics* Cambridge University Press, Cambridge.

Meenakshisundaram, T.P. 1965. A *History of Tamil Language* Deccan College, Poona.

Natarajan, R. 1959. *Manime:kalai as an Epic, Appendix-Akara:ti in Tamil*, M.Litt. Dissertation, Annamalai University, Annamalainagar.

Parameswari, T. 1976, *Language of Tirukkural*, M. Litt. Disertation, Annamalai University, Annamalainagar

Pope, G. V. 1859, *A Larger Grammar of the Tamil Language in its Dialects to which are added the Nannu:l, Ya:pparunkalam and other Native Aathorities*, Madras.

—— 1911, *A Hand Book of the Ordinary Dialeet of the Tamil Language* Oxford University Press, London.

Schiffman, Herold. 1969. *A Transformational Grammar of Tamil Aspectual System (Studies in Linguistics and Language Learning, Vol. VII)*, University of Washington; Seattle,

Schmerling, Susan 1975. "A Symmetric Conjunction and rules of Conversation", *Syntax and Semantics, Vol. 3*, Academic Press, New York.

Shanmugam, S. V. 1972. "Compound Verbal Participles in Tamil" *An Insight into Tamilology*, Coimbatore.

Subramanyam, P. S 1971. *Dravidian Verb Morphology (A Comparative Study)*, Annamali University, Annamalai nagar.

Subrahmanya Sastri, P. S. 1934. *History of Grammatical Theories in Tamil and their relations to the Grammatical Literature in Sanskrit*, The journal of Oriental Research, Madras.

——— 1945 *Tolkappiyam Collatikatram with an English Commentary*, Annamlai University, Annamalainagar.

Subramaniyam, S. V. 1965. *Grammar of Cilappatikaram*, University of Kerala, Trivandrum.

——— 1972, *Grammar of Akana:nu:ru with Index*, University of Kerala, Trivandrum.

Subramaniyam, V. I 1962. *Index of Purana:nu:ru*, University of Kerala, Trivandrum.

Sundaram. R. M. 1967. *Grammatical Study of Pattuppattu with Index and Translation*, Ph. D. Dissertation, University of Kerala, Trivandrum.

Venugopal. S. 1984. *The Syntactic Study of the various verbal Participles in Tamil*, Ph. D. Dissertation, Department of Linguistics. Annamalai University, Annamalai-nagar.

William, Edwin. 1975. "Small clauses in English". *Syntax and Semantics*, *Vol 4*, Academic Press. Newyork.

Zvelebil, K. 1961. *Lectures on Historical Grammar of Tamil*, Madras University. Madras.

Zvelebil, K , Glazov, J. J. & Andronov, M. 1967. *Introduction to the Historical Grammar of the Tamil Language*, Part I, Nauga Publishing House, Moscow.

# சொல்லடைவு


அகத்தியலிங்கம் 32, 177, 178, 180

அகம் 11, 15-17, 25, 26, 38-40, 42, 45, 81, 84, 88, 92, 94, 96, 99, 108, 110, 113—115, 117, 120, 123, 125, 126, 129, 131, 135, 136, 139, 142-144, 149,-151, 154, 156, 157, 170, 171, 173, 175-178, 181, 184-187, 194, 195, 197, 200, 207, 208, 210, 211, 214—222

அப்பர் தேவாரம் 34, 161

ஆர்டன் 3, 11, 22,

இராமஸ்வாமி அய்யர் 109

இலக்கண விளக்கம் 9

இளம்பூரணர் 24, 35, 36, 40, 107, 116, 127, 132, 149, 161, 167, 172, 174, 191

உடனிகழ்ச்சிப் பொருள் 10, 12—14, 16, 26, 28, 41, 44, 45, 48, 53, 83, 103, 160

ஐங்குறுநூறு 11, 12, 14-18, 20, 26, 27, 29, 30, 32, 38-42, 45, 46, 49, 52, 53, 57, 60, 63, 64, 77, 80, 83, 84, 88, 91, 95, 99, 103, 104, 105, 108, 110, 115, 117, 131, 135, 136, 138, 142, 145, 147, 149, 161, 163, 166, 170, 171, 173, 175, 176, 178, 179, 181, 185-187, 194-197, 200, 203, 205, 207, 208, 214-224

ஔவை சு.து. 196

கம்பராமாயணம் 34

கல்லாடனார் 5, 8, 24, 35, 37, 41, 45, 48, 52, 107, 128, 132, 133, 141, 149, 168, 175, 178, 180, 190-192, 194, 209

கலித்தொகை 15-17, 25,26, 32, 34, 38-40, 44, 47, 51, 55, 58, 62, 63, 66, 67, 71-73, 76, 78, 82, 86, 90, 93, 97, 101, 108, 111. 115, 117, 119, 120, 121, 131, 135, 137, 141, 144, 149, 150, 152, 156, 158, 161-164, 166-169, 171, 174-183, 186, 187, 194, 195, 198, 202, 206, 207, 211, 212, 214-224

காரணக் கிளவி 7

காரணப் பொருள் 11, 16, 17, 18, 26, 29, 36, 41, 52, 56, 94, 102, 103, 114, 115, 125, 127,

129, 130, 160, 172, 191, 193, 194, 195, 196, 198, 199, 202, 203
காரண வினை 37, 40, 71-74 108, 109
காரியப் பொருள் 36, 41,
கால எச்சம் 2-4, 10, 13, 16-19, 21, 25, 27, 31, 59, 106, 199, 200, 202-204, 206
கால்டுவெல் 3,11,21
குறள் 14-17, 26, 38-40, 44, 48, 51, 55, 58, 63, 66, 68, 69, 76, 78, 82, 86, 90, 98, 108, 112, 115, 119, 131, 135, 148, 149, 174-180, 183, 186, 187, 194, 206, 208, 210-212, 214-224
குறுந்தொகை 15-17, 25, 26, 38-40, 42, 45, 46, 50, 54, 58, 61, 63, 64, 78, 81, 85, 89, 92, 96, 100, 103, 105, 107, 108, 111, 113, 115, 117, 118, 120, 121, 124, 130, 131, 135, 137, 140, 142-144, 149, 150, 152, 154, 156, 157, 160, 162, 173, 176, 181, 182, 186, 187, 194, 195, 197, 198, 201, 206, 208, 210, 214 - 224
குறை எச்சம் 2-7, 10-13, 16, 18-21, 23-29, 31, 34, 40, 42, 49, 59, 102, 116, 146 148, 159, 166. 190
கூட்டுக்கால எச்சம் 188, 204, 214
கோல் 22
சங்கத்தமிழ் 1, 2, 6, 17, 19, 21, 148, 188, 202, 204, 205,
சண்முகம் செ. வை. 189,
சாஸ்திரி 2, 4, 6, 7, 9, 108, 109, 134
சிதம்பரநாதன் 21
சித்திர புத்திரபிள்ளை 32
சிலப்பதிகாரம் 12, 15, 17, 25, 26, 32, 38, 39, 40. 44, 48, 51, 56, 59, 62, 71, 72, 74, 75, 78, 82, 90. 93, 98, 101, 108, 112, 113, 115, 117. 119-121, 124, 131, 135. 148-150, 153, 156. 161-165, 171. 174-182, 186, 187, 194, 195, 198, 202, 206, 207, 208, 211, 213, 214- 224
சீவக சிந்தாமணி 168
சேனாவரையர் 4. 7,8, 24, 28, 35-37, 41, 44, 107, 116, 127, 130, 132, 133, 140, 149, 161, 167, 172-174, 189, 191, 192, 209
தலைமைவினை 11, 20, 41, 63, 74, 135, 139,
தாக்கப்பொருள் 6, 10, 14, 15, 25, 26, 28, 30, 41, 42, 53, 79, 103, 104, 112, 113, 115, 122, 126, 129, 130, 160, 164, 165. 166
தெய்வச் சிலையார் 5,8,24, 27, 28, 35-37, 44, 107, 108, 116, 127, 128, 130, 133, 141, 146,

149, 161, 168, 173, 175, 191, 209
தொல்காப்பியம் 6, 7, 9, 10, 22, 23, 31-33, 134, 173, 185, 198, 209
தொல்காப்பியர் 2, 6, 23, 31, 32, 35, 116, 126, 140, 148, 172, 174, 188, 190, 199, 204, 206, 207, 213
நச்சினார்க் கினியர் 5, 8, 24, 35-37, 41, 53, 107, 116, 127, 130, 132, 133, 141, 162, 167, 172, 174, 178, 180, 186, 191, 192, 209
நற்றிணை 15-17, 25, 26, 32, 38-40, 42, 45, 46, 49, 54, 57, 61, 63, 64, 71, 77, 81, 84, 88, 92, 96, 100, 108, 111, 113, 115, 117, 118, 120, 123, 131, 135, 136-139, 142, 143, 145, 147, 149, 151, 156, 157, 161-165, 173, 175-177, 181, 186, 187, 194, 195-197, 201, 206, 207, 208, 211, 214-224,
நன்னூல் 9
நான்மணிக் கடிகை 168
நிபந்தனை 182, 184-187
நிபந்தனை எச்சம் 2, 170, 173, 182.
நேமி நாதம் 9
நோக்கப் பொருள் 6, 11, 12, 26, 28, 41, 48, 49, 52, 87, 91, 103, 104, 109, 110, 112, 114, 115, 117, 120, 122, 126, 129, 130, 134, 135, 141, 146, 147, 150, 153, 160
நோக்கவேற்றுமைச் சொல், 79,
பதிலிடு பெயர் 91, 155, 166,
பதிற்றுப்பத்து 11, 13, 15-17, 25, 26, 33, 34, 38-41, 45, 49, 53, 56, 59, 63, 77, 80, 83, 87, 88, 91, 95, 99, 108, 113-115, 117, 122, 125, 126, 129, 131, 135, 136, 141, 146, 149, 150, 151, 153, 154, 160, 170, 173-175, 181, 184, 186, 187, 194-196, 200, 203, 205, 207, 208, 211, 214-224
பத்துப்பாட்டு 15-17, 26, 38-40, 43, 47, 50, 54, 58, 61, 63, 65, 78, 82, 85, 89, 93, 97, 101, 108, 111, 115, 118, 131, 135, 141, 149, 150, 152, 155, 156, 158, 173-176, 181, 182, 186, 187, 194, 207, 208 211, 214-224
பரணர் 38
பரிபாடல் 15-17, 25, 26, 32, 38-40, 43, 47, 50, 55, 58, 63, 82, 86, 93, 97, 108, 114, 115, 129, 131, 135, 149, 150, 152, 155, 161-163, 166, 174-179, 181, 186, 187, 194, 207, 211, 214-224

பாலசுப்பிரமணியன், க. 32
புறப்பொருள் வெண்பாமாலை 162
புறநானூறு 15-17, 26, 38-40, 43, 45, 47, 50, 54, 58, 61, 63, 65, 72, 73, 75, 78, 81, 85, 89, 92, 97, 101, 108, 111, 115, 118, 131, 135, 137, 144, 149, 150, 152, 155, 173, 175, 176, 178, 179, 181, 182, 186, 187, 195, 197, 198, 201, 206-208. 211-224
பெஸ்கி 3
போப் 3,22
மணிமேகலை 15, 17, 25, 26, 38-40, 48, 51, 56, 59, 62, 63, 66, 69, 70, 73, 74, 76, 78, 83, 87, 91, 94, 98, 102, 108, 112. 114, 115, 119, 124, 131, 135, 148, 149, 171, 174-182, 186, 187, 194, 206-208. 210, 211, 214—224
மாமூலனார் 38
மீனாட்சி சுந்தரம் 109
முத்து வீரியம் 9
மெல்லினை 37-39, 106, 108, 132, 167
வரிசைப் பொருள் 11, 19, 26, 29, 41, 59, 60, 63, 99, 102, 103, 137, 138, 144, 146
வல்லினை 33, 37, 38, 39, 106, 108, 109, 132, 167, 175, 177,
வினை எஞ்சு கிளவி 1,6
வினையடைப்பொருள் 11—19, 41, 56, 57
வீரசோழியம் 9
ஹோட்சன் 22

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாகதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| நவீன நாடகங்களும் ஊடகங்களும் | 50.00 |
| மொழிபெயர்ப்பு ஒரு கவின் கலை | 75.00 |

**659 சங்கத் தமிழ் – 5** **110.00**